
உன்
ரசிகன்
நானல்லவா
மேக வாணி

# உன் ரசிகன் நானல்லவா...?

மேகவாணி

மேகவாணி



# முன்னுரை

**தான் என்ற கர்வம்**

**தான் என்ற அகம்பாவம்**

**தானாய் நிமிர்ந்தாலும்**

**தளர்வில் முடியாதோ...?**

**நாம் என்ற அரவணைப்பு**

**நாம் என்ற ஆதரவு**

**நாணாய் வளைத்தாலும்**

**நிமிர்வாய் உயர்த்தாதோ...?**

# அத்தியாயம் - 1

1

எழுதுகோலும் எழுந்திடவே துடிக்கும்...

விரல் இடுக்கில் வேதனை மறைத்து

வெற்றுத் தாளில் வரைந்திடும்

உந்தன் வலிமிகு வலிமிகா

உணர்வுகளை ஏந்துகையில்

உன் எழுதுகோலும்

எழுந்து எழுதிடவே துடிக்குமடா!

இந்த வாசகத்தை எத்தனை முறை பார்த்தானோ, படித்தானோ, அதனை அவன் மட்டுமே அறிவான். மனம் பொங்கி, சீறி, சுனாமியாய் உருப்பெற்று, உணர்வலைகளை அடித்துச் சென்று, உயிரையும் உருக்குலைக்க இருந்த நேரம், ஆற்றாமை தாங்காது, அவனின் டைரியை எடுத்து வைத்து, ஏதோ எழுத ஆரம்பிக்க

விழைய, அவன் வாழ்வைப் போன்றே, அதுவும் வெற்றுத் தாளாய் காற்றில் அலைப் பாய்ந்தது.

அந்நேரம், அவன் கண்ணில் பட்ட கவிதை இதுவே. தன் மன உணர்வுகளைத் துல்லியமாய் உரைத்த வார்த்தைகள், அவனின் விரல் இடுக்கில் சிறைப்பட்டு இருந்த எழுதுகோலின் வலிகளையும் விளக்க, புன்னகைக்குக் கூட வலிக்குமோ என்ற ரீதி யில் அவன் கையில் இருந்த எழுதுகோலைக் கண்டு லேசாக இதழ் விரித்தான். பின், அதனை அத னின் இருப்பிடத்தில் வைத்து விட்டு, பெருமூச்சுடன் அறையை விட்டு வெளியில் வந்தான்.

அவனின் பல ஏக்கர்களை வளைத்துப் போட்ட அந்த பங்களாவே கூறும், அவன் பல கோடிகளுக் குச் சொந்தக்காரன் என்று. ஆனால், சில நேரம் அந்த கோடிகளே அவனுக்குக் கூண்டாகவும் ஆகியது.

பெயருக்கு கூட சிரித்து வைக்கக் கூடாது என சபதம் எடுத்தவன் போல, முகம் கடுகடுப்பைத் தாங்கி இருக்க, போர்டிகோ வந்தடைந்தவன், காரில் ஏறுகை யில் "தமிழ்" என அவனை அழைக்கும் தந்தையின் குரல் கேட்டது.

திரும்பிப் பார்க்காமல் அப்படியே நின்றவனிடம், "நாளைக்கு கல்யாணத்தை வச்சுக் கிட்டு, இப்போ எங்கே போற?" எனக் கேட்க, ஒரு நொடி திரும்பி, அவரை எரிக்கும் பார்வை பார்த்தவன், காரில் ஏறி, சீறிப் பறந்து விட்டான்.

உடனே, "இங்க பாருங்கப்பா, நாளைக்கு இந்த கல்யாணம் நடக்கணும், அவ்ளோ தான். அவன் கல்யா ணம் நடந்தா தான், என்னால நான் லவ் பண்ணுன

பொண்ணை கல்யாணம் பண்ணிக்க முடியும். அவனால என்னை என் லெளவர் வீட்டுல ஒரு மாதிரி பார்க்கி றாங்க. அவன் மட்டும் ஏதாவது தகிடு தத்தம் பண் ணினான். அப்புறம், உங்களுக்கு அவன் மட்டும் தான் பையனா இருப்பான்." என்று மிரட்டலை விட்டுச் சென் றான், பிரபாகரின் இரண்டாம் புதல்வன் லோகேஷ்.

"ப்ச்!" என அவர் நொந்திருக்க,

அவரின் தங்கை பத்மாவோ "என்ன அண்ணா யோசிக்கிறீங்க? தமிழ் கிட்ட புரியற மாதிரி எடுத் துச் சொல்லுங்க. அவன் வாழ்க்கை தான் வீணாப் போச்சுன்னா, அதுக்காக இன்னொருத்தன் வாழ்க்கை யையும் கெடுக்கணுமா? இதெல்லாம் அவனா தான் புரிஞ்சுருக்கணும்" என்று முணுமுணுப்புடன் முறைத்து விட்டுப் போக, இங்கு இந்த மாதிரி சம்பா ஷணை தான் நடக்கும் என ஏற்கனவே உணர்ந்திருந்த தமிழின்பன், அந்தக் கோபத்தையும் சேர்த்து காரில் தான் காட்டினான்.

..............................

மறுநாள் திருமணம். அதிலும் இரண்டாம் மனை வியாக என்ற நினைவே, அவளுக்கு வெகுவாகக் கசந் தது. அம்மா, அப்பா, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரி யப்பா சொந்தம் பந்தம் என அத்தனை இருந்தும், சில நேரங்களில் பாசத்தை விட பணமே ஜெயித்து விடுகி றது. சிலரோ சொந்தமற்று அனாதையாய்... ஒரு சில ருக்கு சொந்தமே ஆபத்தாய்....!

அரண்மனை போல் வீற்றிருந்த, சுற்றி தோட்டங் களாய் நிறைந்த அம்மாபெரும் பங்களா, மலர் அலங்கா ரத்தில் மிளிர்ந்து கொண்டிருந்தது.

சிறுவர், சிறுமியர் அங்கும் இங்கும் ஓடி விளையாடி சிரிப்பலைகளைப் பரப்ப, பெண் வீட்டார் முகத்தில் பெருமையும், ஆண் வீட்டார் முகத்தில் கர்வத்துடன் கூடிய மிதப்பும் மிதந்தன. அங்கிருந்த ஒவ்வொரு பொருளிலும் அவர்களின் பணச் செழுமையும், ஒவ்வோர் செயலிலும் அவர்களின் அதிகாரத் திமிரும் சேர்ந்தே இருக்க, இருவர் மனம் தான் சலனமற்ற நிலையில் இருந்தது.

'எப்போதடா இங்கிருந்து நகர்வோம்' என்று முகம் முழுதும் பூசிய கடுமையை அப்பட்டமாக வெளியிலேயே காட்டிக்கொண்டு, நின்றவனின் அடர்ந்த சிகை காற்றில் பறக்க, அவனின் நீண்ட கைகளுக்குச் சிக்காமல் அது வேறு அவனுக்கு எரிச்சலை மூட்டியது. கூடவே, எதிரில் பெயர்ப்பலகை தாங்கிய "தமிழின்பன் வெட்ஸ் தமிழரசி" என்ற அவனுடனான அவன் மனையாட்டியின் பெயரைக் கண்டு, மேலும் அவனுள் வெறுப்பு மூண்டது.

தமிழரசி மணப்பெண் அலங்காரத்தில் தேவதையாய் ஜொலிக்க, அவளின் மாநிறத்திற்கும் சற்று குறைவான நிறமும், அவள் சுற்றி இருந்த பச்சை நிறச் சேலைக்கு ஏற்ப மினுமினுக்க, இயல்பாகவே அவள் முகத்தில் இருக்கும் இறுக்கத் தன்மையா அல்ல, விரும்பத்தகாத திருமணத்தின் விளைவால் தோன்றிய மன இறுக்கமா என பிரித்தறிய இயலாது, அவள் விழிகள் யாரையும், முக்கியமாக அருகில் இருந்த தன் மணவாளன் முகத்தைக் காணாது தாழ்ந்திருந்தது. மாங்கல்யம் அணிவிக்கும் போது கூட, இருவரும் அறியாமல் கூட, ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

சம்பிரதாயத்தை எல்லாம், இருவரும் தன்னை நொந்து செய்து விட்டு, தனித் தனி அறையில் அடைய, அவன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டு, தன் னிச்சையாக அவன் போனில், அவன் நேசிக்கும் எழுத் தைக் கொண்ட, 'அவளின் கதை அறிவிப்பு வந்திருக்கி றதா?' என நோட்டம் விட்டான்.

வரவில்லை என்றதும், பால்கனிக்குச் சென்றவ னுக்கு, அவனைத் தீண்டிய மெல்லிய தென்றல் கூட, ஒரு வித எரிச்சலையே கொடுக்க, அந்த இயற்கையைக் கூட பார்வையால் சுட்டெரித்துக் கொண்டிருந்தான்.

'இந்த கருவாச்சிக்கு பெரிய உலக அழகின்னு நினைப்பு. நானே கல்யாணம் பண்ணி வச்சுட்டாங் கன்னு கடுப்புல இருந்தா, இவள் வேற, ஏதோ இவளை கடத்திட்டு வந்து கல்யாணம் பண்ண ரேஞ்சுக்கு என்னை முறைக்கிறா...! பேரப் பாரு தமிழரசி பச்சரி சின்னு...! மூஞ்சியும் மொகரையும்...!' என்று தன் போக் கில் மனதினுள் திட்டிக் கொண்டிருந்தான்.

தமிழின்பனின் பால்கனியை ஒட்டி இருந்த அடுத்த அறை பால்கனியில் இருந்து, தமிழரசி கோபத் தில் வானத்தை வெறிக்க, கூடவே 'இந்த மூஞ்சிக்கு ஒரு கல்யாணமே பெருசு. இதுல ரெண்டாவது கல்யா ணம் வேற...! அப்போக் கூட இவரு கல்யாணம் ஆன பொண்ண கல்யாணம் பண்ணிக்க மாட்டாரோ...?' என்று வறுத்து எடுத்தவளுக்கு, இருட்டத் தொடங்கிய நேரம், மெல்லிய பயம் ஆட்கொண்டது.

அங்கிருந்தவர்கள், அவளைக் கண்டு ஏதோ கிசு கிசுத்துப் பேசுவது போன்ற ஒரு மாயை தோன்ற, அப் பெரிய வீட்டில் இருந்த ஒரு புகுந்த வீட்டுச் சொந்தம்

கூட, அவளருகில் வந்து என்னவென்று கூடக் கேட் கவில்லை. இதில் இள வட்டங்களும், பெரியவர்களும் வயது வித்தியாசம் பாராமல் நகைகளையும், சல்வாரை யும் அணிந்து இருக்க, ஏதோ ஒரு செயற்கைத் தன்மை தான் அவளைச் சூழ்ந்தது. அதிலும் ஆண்கள் கோட் சூட் அணிந்து, முகத்தை கடுமையாக வைத்திருக்க, அதி லேயே அவளுக்கு திக் திக் என்ற உணர்வு தான்.

'ஒரு வேளை எல்லாரும் சைக்கோ கொலை காரங்களா இருப்பாங்களோ!' என்ற எண்ணம் வேறு, அவள் மனதோரத்தில் ஓட,

இறுதியில் பத்மா வந்தவர், "அவன் ரூம் மாடி யில இருக்கு" என்று வேலையாளை விட்டு, அவளை அழைத்துச் செல்லச் சொன்னார்.

அதில் அவளுக்குத் தான் சுள்ளென கோபம் வர, 'ஏன் இங்க இருக்குற மஹாராணிங்க கூட்டிட்டுப் போய், காட்ட மாட்டாங்களோ?' என அங்கிருந்த அவள் மண வாளனின் ஒன்று விட்ட அக்கா ஷெண்பாவையும், தங்கை கனிகாவையும் ஒரு பார்வை பார்த்தவள், பேசா மல் வேலையாள் காட்டிய அறை நோக்கிச் சென்றாள்.

ஆனால், உள்ளே செல்லத் தான் அவளுக்கு லேசாக நடுங்கியது. அவள் பார்த்த பல படங்களும், கேட்ட பல கெட்ட கதைகளும் காதில் ஓட, 'இதுக்குள்ள போனா நம்ம வாழ்க்கையே முடிஞ்சுதுல... எவளோ விட்டுப் போன சொந்தத்தை நம்ம தொடரனும்.' என்ற நினைவே அவளுக்கு ஒரு குமட்டலைக் கொடுத்தது. கூடவே, பொறுப்பற்ற தாய் தந்தையரின் மீதே கடுங் கோபமும் வர, தலையெழுத்தை எண்ணியபடி கதவைத் திறந்தாள்.

குனிந்த தலை நிமிராமல் உள்ளே சென்றவள் நிமிராமலேயே இருக்க, அவனோ அவள் வந்ததை ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டு, செல்போனில் மூழ்கி விட்டான். அவளும் கிட்டதட்ட பத்து நிமிடங்களாக அதே இடத்தில் நிற்க, அவன் என்னவென்று கூடக் கேட்கவில்லை.

அதிலேயே அவளுக்கு கண்கள் கரித்திருக்க, 'பெரிய இவன் இவன்... இவரு சொல்ற வரை, நம்ம இப்ப டியே நின்னுட்டு இருக்கணுமா? பாரு உட்கார்ந்து தான இருக்கான். ஆனால் இப்போக்கூட நான் நிமிர்ந்து தான் பார்க்கணும் போல இவனை, எரும மாடு!' என்று பல அர்ச்சனைகளைத் தெளித்துக் கொண்டிருந்தவளுக்கு, ஏனோ அந்த அறை மட்டும் செயற்கையாய் தோன் றவில்லை. பெரிய அறையாக இருந்தாலும், காசை இறைத்துக் கட்டி இருந்தாலும், அதில் உள்ள பொருட் களும், அவன் அப்பொருட்களை அடுக்கி இருந்த வித மும், சற்று ரசனையைக் கொடுத்தது அவளுக்கு.

பின், இதற்கு மேல் நிற்க முடியாது எனவும், அவன் கவனம் செல்போனை விட்டு எங்கும் வரவில்லை என வும் உணர்ந்தவளின் பார்வை அந்த அறையைச் சுழற்ற, அங்கு ஒரு சோஃபா கூட இல்லை. 'ம்ம்க்கும்... இவ்ளோ பெரிய பணக்காரன், இவ்ளோ பெரிய வீடு இருக்கு, கொய்யால இந்த படத்துல வர்ற மாதிரி, ஒரு சோபா போட்டுருக்கக் கூடாது. வெறும் தரையில படுத்தா சேராதே, இங்க பெட் சீட் எங்க இருக்கும்னு தெரியல.' என நொந்த படி, கட்டிலில் ஒரு ஓரத்தில் அமர்ந்தாள்.

அவனோ, அவள் அமர்ந்ததும், நன்றாகப் படுத்து, போர்வையை போர்த்திக் கொண்டு, விளக்கை அணைத்து விட்டு, படுத்தபடி போனில் மூழ்கினான்.

அவளுக்குத் தான் என்ன செய்யவென்று கூடத் தெரிய வில்லை. ஆனால், பிடிக்காத தொடுதல் இல்லை. அவ னின் பார்வை கூட, தன் மேல் தவறாகப் படவில்லை என்று சற்று நிம்மதி ஆனவளுக்கு, சிறிது தைரியம் வர, அவளும் ஒரு ஓரமாகப் படுத்து உறங்கியும் விட்டாள்.

மறுநாள், கண் விழித்தவளுக்கு சூரியன் சுள்ளென முகத்தில் அடிக்க, கண்ணைக் கசக்கியபடி விழித்த வள், ஜன்னல் திரை விலக்கப் பட்டிருப்பதைக் கண்டு, அருகில் பார்த்தாள். அங்கு அவன் இல்லை என்றதும், ‘இப்போ என்ன பண்றது’? காபி கொண்டு வந்து கொடுத்து, அவன் கால்ல விழனுமா?’ என்று அமர்ந்தபடியே வெகுவாகச் சிந்தித்தவள், குளியலறை யில் இருந்து தமிழ் வருவதைக் கண்டு, அவன் முகத்தை ஏறிட்டாள்.

பின், இறங்கி, “உங்களுக்கு காபியா டீயா?” எனக் கேட்க, திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்தவன், அங் கிருந்த சுவர் கடிகாரத்தைப் பார்க்க, குழப்ப முகத்துடன் அங்கு பார்த்தவள், அதிர்ந்தே விட்டாள். பின்னே நேரம் சரியாக ஒன்பது எனக் காட்டினால்...

‘ஐயோ இவ்ளோ நேரம் தூங்கிட்டோமே! சத்தம் போடுவானோ?’ என மிரண்டு பார்த்திருக்க, அவனோ எதுவும் பேசாமல் தலை துவட்டிக் கொண்டிருந்தான்.

தன்னை நொந்து குளியலறைக்குப் புகுந்தவளும், குளித்து முடித்து வெளியில் வர, அவன் கோட் சூட் சகி தம் வெளியில் கிளம்ப ரெடி ஆகி இருந்தான். இப்போது என்ன செய்வது என்று அவளுக்குச் சுத்தமாகப் புரிய வில்லை.

“உங்களுக்கு டிபன்” என்று மீண்டும் கேட்க, அவன் அதனை காதில் கூட வாங்காமல் வெளியேறி இருந்தான்.

அவளுக்குத் தான், ஏதோ சிறையில் அடைத்த உணர்வு. பிடிக்காத திருமணம் என்றாலும், அவள் கடமையைச் செய்தாக வேண்டுமே என்றெண்ணியே, அவள் அவனிடம் தானாகச் சென்று பேசினாள். ஆனால் அவன் பேசாதது அவளுக்கு கடும் கோபத்தைத் தான் கொடுத்தது.

பின், கீழே இறங்கி, தயங்கியபடி சென்றவளை, ஒருவர் கூட என்னவென்று கேட்கவில்லை. அவளைக் கண்டதும் வேலையாள் செல்வம் தான், காபி கொண்டு வந்து கொடுக்க, அதனைக் கையில் வாங்கியவள், நட்ட நடு ஹாலில் பேந்த பேந்த விழித்தபடி நின்றிருந்தாள்.

பிராபகர் தான் அவளிடம், “உனக்கு சாப்பிட என்ன வேணுமோ செல்வத்துக்கிட்ட கேளு. அவன் ரூம்ல வந்து கொடுத்து விடுவான்.” என்று விட்டு அவர் செல்ல,

அவளோ ஐம்பதைத் தொட்டிருந்த அந்த செல் வதை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ‘இவர் கிட்ட கேக்குற துக்கு, உன் பையனை ஏன்யா கல்யாணம் பண்ணனும்?’ என வாய் வரை வந்த கேள்வியை விழுங்கி விட்டு,

“எனக்கு எதுவும் வேணாம்.” என்று அறைக்குச் சென்றவளுக்கு, ‘அவர் பாசத்தில் சொல்லி விட்டுச் சென்றாரா? அல்லது அறையை விட்டு வரத் தேவை யில்லை என்று சூசகமாகச் சொல்லி விட்டுச் சென் றாரா?’ என சில நிமிடம் குழம்பினாள்.

ஆனால், அந்த வீட்டில் வெளியில் இருப்பதற்கு, அந்த அறையே அவளுக்கு மேல் என்று தோன்றியது. காலையிலும் சாப்பிடாமல் வெகு நேரம் பால்கனியில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த பால்கனியிலேயே அவன் தோட்டம் போல் அமைத்தி ருந்தான். அதோடு அங்கு ஒரு சேரும், டீபாயும் இருக்க, அங்கு அமர்ந்திருப்பது மனதிற்கு இதமாகவே இருந்தது அவளுக்கு.

மேலும், 'ஒருவேளை அவருக்கும் இந்த கல்யா ணம் பிடிக்கலையோ' என சிந்தித்திருக்க, அந்நேரம் அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்க, சட்டெனத் திரும்பினாள். அங்கு தமிழின்பன் தான் டையைக் கழற் றிய படி, உள்ளே வந்திருந்தான்.

வந்தவன் கோட்டை கழட்டி எறிந்து விட்டு, கையில் ஒரு ஆங்கில நாவலை எடுத்துக் கொண்டு, அவளைப் பார்த்தான். அவளோ இன்னும் அந்த சேரில் இருந்து எழும்பாமல் 'இவன் என்ன அதுக்குள்ள வந் துட்டான்... பிடிக்காத கல்யாணம் பண்ணா, நைட் லேட்டா தான வரணும்? ஒருவேளை நம்ம தான் தப்பா நினைச்சுட்டோமோ?' எனச் சொல்ல முடியாத பயத்தில் இதயம் துடித்திருக்க, அவனோ மெல்ல அவளருகில் வந்து அவள் கையைப் பிடித்தான்.

அதில் அவளுக்கு கோபமும், இயலாமையும், வெறுப்பும் மூழ்கி இறுகிய படி நிற்க,

தமிழின்பனோ அவளின் கையை பற்றி எழுப்பி, சற்று தள்ளி நிற்க வைத்து விட்டு, அவள் அமர்ந்த இடத் தில் அவன் சென்று அமர்ந்து, காலை டீபாயில் நீட்டிக்

கொண்டு. அந்த ஆங்கில நாவலில் மூழ்க, தமிழரசி தான் கொட்டக் கொட்ட விழித்த படி  நின்றாள்.

# அத்தியாயம் - 2

தன் கணவனின் செயலில் கடுப்பான தமிழரசி தான், ‘வாயைத் திறந்து பேசுனா என்ன முத்து கொட்டிடுமா? எந்திரின்னு சொன்னா எந்திரிக்கப் போறேன். அதை விட்டுட்டு கையைப் பிடிச்சு இழுக்கிறான்.’ என கண்டபடி திட்டியவள், ‘சே இந்த ரூம்ல எக்ஸ்டரா சேர் கூடவா இல்ல’ என நொந்து, கட்டிலில் சென்று அமர்ந்தாள். இதில் சாப்பிடாமல் இருந்ததில், தலை வேறு வலித்தது.

இங்கோ தமிழின்பன், ‘நேத்துல இருந்து என்னை மைண்ட் வாய்ஸ்லயே திட்டுறா போல. அவள் மூஞ்சியே சொல்லுது என்ன நினைக்கிறான்னு. ரூம்ல கூட நம்மளை நிம்மதியா விடாத மாதிரி, இந்த வாயாடியை இங்க இருக்க வச்சுருக்காங்க’ என தன்னுள் வெகுவாய் புலம்பியவன், அவள் தலையில் கை வைத்து அமர்ந்திருப்பதைக் கண்டு, சற்று சிந்தித்து விட்டு, எழுந்து வெளியில் சென்றான்.

தமிழரசிக்கு ஒரு வகையில் அவன் தன்னைச் சீண்டாமல் இருப்பது நிம்மதியாக இருந்தாலும், புகுந்த வீட்டில், கேட்கக் கூட நாதியற்று, சிறைவாசி போல் இருப்பது கண்களைக் கலங்க வைத்தது.

பின், 'நமக்கு என்ன இது புதிதா? சொந்த வீட்டுலயே இப்படித் தான் இருப்போம். இப்போ இனிமே வாழ்க்கை முழுக்க இதுதான்.' என வேதனையுடன் எண்ணியவளுக்கு தமிழின்பனை முதன் முறை பார்த்தது நினைவு வந்தது.

……………………………

சில வருடங்களாக தமிழின்பனின் வீட்டில் தான், அவளின் தந்தை கோபாலன் ஓட்டுநராக வேலை செய்தார். ஆனால், தமிழரசி பள்ளியும், கல்லூரியும் திருச்சியில் விடுதியில் தங்கியே படித்ததில், பெரியதாக சென்னைப் பக்கம் வந்ததில்லை. இரண்டு வருடம் முன்பு, கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கையில், மொத்தமாக 10 நாட்கள் விடுமுறை கிடைத்ததில் தான், அவள் இங்கு வந்தாள். அப்போது தான், தமிழின்பனைக் கண்டாள். அதுவும் தன் இந்நாள் கணவரின் முன்னாள் திருமணத்திற்குத் தானே சென்றோம் என்று எண்ணுகையில், மேலும் எரிச்சலும் கோபமும் பொங்கிக் கொண்டு வந்தது அவளுக்கு.

தமிழரசியின் பெற்றோர் இருவரும், சுற்றத்தார் சொந்தம் சொற்பேச்சை வேத வாக்காகக் கேட்பவர்கள். இது தான் சாக்கென்று, தந்தை வீட்டு சொந்தம், "பொம்பளைப் பிள்ளையை படிக்க எல்லாம் வைக்காத கோபாலா!" என அவள் ஒன்பதாவது படிக்கையிலேயே அவளின் படிப்பிற்கு முட்டுக்கட்டை போட, அதில் கடுப்பானவள், சுள்ளென நினைப்பதைப் பேசி விடுவாள்.

அதில் உறவினர்களுடன் சண்டை ஏற்பட, கோபாலனின் கோபத்திற்கு ஆளாவாள் பல நேரம். அவளின்

தாய் ரேவதியும், "பெரியவங்க நம்ம நல்லதுக்குத் தான் சொல்லுவாங்க. நீ படிக்கப் போக வேண்டாம்" என்றிட,

வீட்டை விட்டு சென்று விடுவேன் என்று இரு வரையும் மிரட்டி, பள்ளி ஆசிரியை வைத்துப் பேசச் சொல்லி, இறுதியில் அவளின் ஆசிரியர் உதவியுடன், திருச்சி சென்று படித்தாள். இங்கிருந்தால் தன்னைப் படிக்க விடாமல் ஏதாவது செய்வார்கள் என்று.

அவள் விடுமுறைக்கு வந்த சமயம், வீட்டினர் இவ னின் விஷேசத்திற்குத் தான் கிளம்பிக் கொண்டிருக்க, இறுதியில் அவர்களின் வற்புறுத்தலில் திருமணத்திற்கு முந்தைய நாள் ரிசப்ஷனிற்கு, அவளும் இதே வீட்டிற்கு வந்திருந்தாள்.

வந்தவளுக்கு பகட்டாய் இருக்கும் இக்குடும் பத்தை அப்பொழுதே பிடிக்காது. அதிலும் அவள் அணிந்து வந்த சாதாரண உடையை தமிழின்பனின் பெரியம்மா மகள் ஷெண்பா, ஒரு மாதிரியாகப் பார்த்து, "இதுங்கள வரச் சொல்லலைன்னு யார் அழுதா" என முணுமுணுத்தவள், தமிழரசிக்கு சில வேலையைப் பணிக்க,

அவளோ "ஹலோ! என் அப்பா தான் இங்க வேலை பார்க்குறாரு, நான் இல்ல. உங்களுக்கு தேவைன்னா நீங்க போய் பண்ணுங்க...! என்னமோ ஆர் டர் போடுறீங்க...?" என்று கேட்டு விட, ஷெண்பாவுக்கு சுறு சுறுவென கோபம் வந்தது. தமிழரசிக்கோ அப்படியே முகத்தில் குத்த வேண்டும் போல் இருந்தது.

பின், இதில் அவளின் தாய் தந்தை வேறு இழுத்துப் போட்டு அனைத்தையும் செய்து கொண்டி ருக்க, அப்படியே அங்கிருந்து நகன்றவள், அந்த பெரிய

நீண்ட தோட்டத்தில் இருந்த மரம், செடி, கொடிகளை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு பட்டாம்பூச்சி அவளைக் கடந்து செல்ல, அதன் வண்ணத்தில் கவரப் பட்டவள், அதனைப்பிடிக்க கையை மேலே தூக்கிக்கொண்டு செல்ல, எதிரில் வந்த தமிழின்பனின் மேல் மோதி விட்டாள்.

“சாரி சாரி!” என்று அவள் சட்டென விலகியவளுக்கு, அப்பொழுது அவன் யாரென்று தெரியவில்லை.

அவனோ அவளை மேலும் கீழும் பார்த்து முறைக்க, அவளோ “இல்ல, பட்டாம்பூச்சி பிடிக்கத் தான் போனேன். தெரியாம...” என்று இழுக்க, அந்த பட்டாம்பூச்சி அவனையும் சுற்றி வந்தது.

அவனோ கடுப்பாக “யாரு நீ?” எனக் கேட்க,

அவளோ அவன் மிரட்டல் குரலில் மிரண்டு, “அது அது... நான்” என்று திணற,

அப்போது அவனின் தங்கை கனிகா வந்து “அண்ணா என்ன ட்ரைவர் பொண்ணு கூட போய் பேசிக்கிட்டு இருக்க?”

“ஏய், நீ ஏன் இந்த பக்கம் வந்த” என்று முறைத்தவளை தீப்பார்வை பார்த்தாள் தமிழரசி. பின் யாரோ அழைத்ததும் கனிகா சென்று விட, ‘அதென்ன அவ்ளோ அலட்சியம் இவளுக்கு’ என கோபமானாள்.

ஆனால், தமிழின்பனோ "ஓ! நீ கோபாலன் பொண்ணா?” எனக் கேட்க, அவள் ம்ம் என தலையாட்டினாள்.

அதில் லேசாகப் புன்னகைத்தவன், "அந்த பக்கம் போய் பாரு. நிறைய பட்டாம்பூச்சி வரும். ஆனால் பட்டாம்பூச்சி புடிக்கிறேன்னு கீழ விழுந்து கையை காலை உடைச்சுக்காத சரியா..." என சிறு குழந்தைக்குக் கூறுவது போல் அறிவுரை கூற,

'ஹய்ய... இப்போ நான் இவன் கிட்ட அட்வைஸ் கேட்டேனாக்கும்...' என சிலுப்பிக் கொண்டவள், "எனக்குத் தெரியும். அப்படி ஒன்னும் விழுந்துட மாட்டோம்." என்று முறைத்து விட்டுப் போனாள்.

'ப்பா... கருவாச்சிக்கு வாய் கொஞ்சம் அதிகம் தான்.' என முணுமுணுத்து விட்டு, அவன் மேடை ஏற, அதன் பிறகே, அவன் யாரென்று தெரிந்தது தமிழரசிக்கு.

அவனுக்கு அருகில் சிரிப்பைத் தாங்கிய படி இருந்த அவனின் வருங்கால மனைவியையும் பார்த்தவள், அவன் அவளை மேடையில் நிற்கும் போதும், அவளுக்கு ஜூஸ் கொடுப்பதும், அமரச் சொல்வதும் எனத் தாங்குவதைப் பார்த்து, 'ப்பா ஓவர் லவ்ஸ் போல. ஆனால் இவங்க நல்லவங்களா தான் இருக்காங்க' என்று எண்ணிக்கொண்டவள், அதற்கு மேல் அந்த குடும்பத்தின் பகட்டைப் பார்க்க இயலாமல், வீட்டிற்குச் சென்று விட்டாள்.

மறுநாள், தோழியைப் பார்க்கச் செல்வதாகச் சென்றவள் திருமணத்திற்கும் செல்லவில்லை. அப்படியே திருச்சிக்குச் சென்றவள், படிப்பு முடிந்து, அங்கேயே வேலை தேடி விட்டு, அதனை வீட்டில் சொல்ல, இரண்டு நாள் முன்பு தான் இங்கு வந்தாள். ஆனால், வந்தவளுக்கு இடியாக, திருமணச் செய்தி கேள்விப் பட, ஒன்றுமே ஓடவில்லை.

அதிலும், 'அவன் திருமணத்திற்கு தானே தான் சென்றோம். இப்போது அந்த இடத்தில் நானா?' என்று எண்ணமே அவளுக்கு ஒப்பவே இல்லை.

ஆனால், இம்முறை அவளின் பிடிவாதம் வீட்டில் எடுபட வில்லை. சொந்தமும் பந்தமும், 'இப்படிச் சம்பந் தம், இந்த ஜென்மத்துல உன் பொண்ணுக்கு வருமா? சில நேரம் நம்ம தான் புத்திசாலித்தனமா முடிவெடுக் கனும்.' என்று ஏத்தி விட, அவளின் பேச்சு அங்கு யார் காதிலும் விழவில்லை.

இவள் இந்நினைவில் இருக்க, வெளியில் சென்ற தமிழின்பன் மீண்டும் உள்ளே வந்தான். முகத்தில் அதி கமான கடுகடுப்பு. இப்போது புத்தகத்தைத் தூக்கி அல மாரியில் வீசி விட்டு, பால்கனியில் சென்று அமர்ந்தான்.

அவள் தான் 'என்ன ஆச்சு இவருக்கு?' என்று புரி யாமல் பார்க்க,

அவனோ சில நொடிகளுக்கு முன் நடந்ததை கோபத்துடன் நினைத்தான்.

அவனின் அப்பா பிரபாகர், "தமிழ், அந்தப் பொண்ணு வெளிய எல்லாம் வர வேணாம். ரூம்லயே இருக்கட்டும். சாப்பாடு நான் ரூமுக்கே கொடுத்து விடச் சொல்றேன். உனக்கு கொடுத்து விடும் போது. அதோட, உன் தம்பிக்கு அடுத்த வாரம் நிச்சயம் வைச்சாலும் வைப்போம்."

'அதுக்கும் அவள் உள்ள இருக்குறதுக்கும் என்ன சம்பந்தம்...?' என்பது போல் அவன் கண்ணை சுருக்கிப் பார்த்தான்.

பத்மாவோ, "என்ன தான் கல்யாணம் பண்ணனு மேன்னு ட்ரைவர் பொண்ணை, கல்யாணம் பண்ணி வைச்சாலும், உன் தம்பி சம்பந்தி முன்னாடி, எப்படி அவளை நிறுத்துறது? அதோட அவங்க வேற ஆயி ரம் கேள்வி கேட்குறாங்க. என்ன இருந்தாலும் பொண் ணைப் பெத்தவங்க இல்லையா?" என்று எகத்தாள மாகக் கூறிட, அவன் அமைதியாகவே இருவரையும் முறைத்து விட்டு, அறைக்கு வந்தவனுக்கு கோபம் இன் னும் அடங்கவில்லை.

சில நிமிடத்தில், செல்வமும் மற்ற வேலை ஆட் களும் தமிழின்பனின் உத்தரவுப்படி ஒரு சிறிய சோஃ பாவை அறையில் போட்டதோடு, பால்கனியில் இருந்த மாதிரி, இன்னொரு சேரையும் அங்கு போட்டனர். பின், டிராலியில் கொண்டு வந்த உணவை ஒரு டேபிளில் அடுக்கி, தமிழரசி முன் வைக்க, அவளோ என்ன நடக் குது இங்க என்பது போல் முழித்தாள்.

செல்வம், "நான் பரிமாறவாம்மா?" எனக் கேட்க,

அவள் "இல்ல. வேணாம். எதுக்கு எனக்கு ரூமுக்கு கொண்டு வந்தீங்க. நானே வந்துருப்பேனே?" என்றதில்,

"அது... ஐயா தான் இங்க கொடுக்கச் சொன் னாங்க" என தயங்கிய படி கூறியதில்,

அவள் தமிழின்பனைப் பார்த்தாள். பின், "நான் எடுத்து வைச்சுக்குறேன்." என்று அவரை அனுப்பியவ ளுக்கு மேலும் தலை வலித்தது.

'நான் மட்டும் எப்படி சாப்புடுறது?' என நொந்த வள்,

அவனைப் பார்த்து, "நீங்க சாப்பிட வரலை" எனக் கேட்க, அவன் அழுத்தமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு, செல்போனை உபயோகித்துக் கொண்டிருந்தான்.

அதில் அவளுக்கு எரிச்சல் மூண்டது. பின், 'எப்ப டியோ போய் தொலைங்க எல்லாரும், இந்த லூசு குடும் பத்துக்காக நான் பட்டினி கிடக்க முடியாது.' என்று வேக மாக எடுத்து வைத்து சாப்பிட்டவள், சாப்பிட்ட தட்டை எடுத்துக் கொண்டு கீழே செல்லப் போக, தமிழின்பன் அவளைத் தடுத்தான்.

இவன் எப்போ பக்கத்துல வந்தான் என்பது போல் அவள் முழிக்க, அவன், அவள் சாப்பிட்ட தட்டை திரும்பி டேபிளில் வாங்கி வைத்து விட்டு, வேறு தட்டை எடுத்து அவன் சாப்பிட ஆரம்பித்தான்.

அவள் தான் 'இப்போ நான் பரிமாறணுமா? வேணாமா?' என குழம்பியபடி நிற்க,

அவளை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தவன், இன் னும் சாப்பிட்டு முடித்து, கழுவாத அவள் கையைப் பார்த்து விட்டு, வாஷ் பேசினை நோக்கி கண் காட்ட, 'ரொம்பத் தான் பண்றான்!' என்று கடிந்து விட்டு, கையைக் கழுவியவள் பால்கனியில் சென்று நின்றாள்.

அவள் நின்ற திசையைப் பார்த்தவனுக்கு, அவளை முதன் முறை பார்த்தது நினைவு வந்தது.

அவளுக்குத் தான், அவனை திருமணம் அன்று தெரியும். ஆனால், ஒன்பதாவது படிக்கும் போதே, அவ னுக்கு அவளைத் தெரியும். படிக்கச் செல்கிறேன் என்று வீட்டு வாசலில், அவள் தர்ணா போராட்டம் செய்ய,

அப்போது தான் கல்லூரி படித்துக் கொண்டிருந்தவன், காரை ஓட்டிக் கொண்டு கோபாலன் வீட்டிற்கு வந்தான்.

தோழர்களுடன் அவன் லாங் ட்ரிப் பிளான் செய்து இருந்தவன், அப்படியே அவரை கார் ஓட்டச் சொல்லி, போற வழியில் கூப்பிட்டுக் கொள்ளலாம் என அங்கு வந்தவன், இவளின் அலப்பறையைத் தான் பார்த்தான்.

கோபாலனோ அவளை திட்டிக் கொண்டிருக்க, "இப்போ படிக்க வைக்கல, நான் ஓடிப் போய்டுவேன். அப்புறம் உங்க மானம் தான் போகும்..." என அவரை மிரட்டியவளைக் கண்டவனுக்கு, சிரிப்பு தான் வந்தது.

பின், அவரை அழைத்து விசாரித்தவனுக்கு விவரம் தெரிந்ததும், "ஒரு பொண்ணு தான, படிக்க வைக்கிறதுல என்ன வந்துடப் போகுது உங்களுக்கு?" என அவள் விருப்பப்படி படிக்க வைக்கச் சொன்னான்.

முதலாளி மகன் ஆயிற்றே, அவன் சொல்லிற்காகத் தான் அவர் ஒப்புக்கொண்டது என அவளுக்கு இன்றளவும் தெரியாது.

ஆனால், அவன் திருமணத்தன்று பார்க்கும் போது, அவளை அடையாளம் தெரியவில்லை. அதன் பிறகே, அவனுக்கு அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்தது நினைவு வர, அவளிடம் மென்மையாகப் பேசி விட்டுச் சென்றான்.

அந்நினைவோடு, பழைய நினைவுகளும் ஆர்ப்பரிக்க, உண்ணும் உணவு தொண்டையில் இறங்காமல் சதி செய்தது.

இங்கோ தமிழரசி, கையில் வைத்திருந்த போனில், இலக்கில்லாமல் ஏதோ பார்க்க, அப்போது தமிழின்ப னின் போனில், ஒரு சத்தம் வந்து அமர்ந்தது. அதில் வேகமாக அதனை எடுத்துப் பார்த்தவனின் கண்கள் லேசாகக் கனிந்தது.

கடுங்கோபம் சூழ்ந்து

கடுமையான கடந்த காலம்

கட்டுக்கடங்காமல் தாக்கும் போதும்!

கடுந்தவம் கொண்டாவது

கடந்து விடு தோழா!

என்ற கவிதை அவனுள் இருக்கும் வலிக்கு ஆத ரவாக இருக்க, பெருமூச்சு விட்டவன், பிரின்ஸ் ஆஃப் ஹெவன் (சொர்க்கத்தின் இளவரசன்) என்ற பெயரில் இருந்த அந்த கவிதை எழுதிய நபருக்கு 'நைஸ்' என குறுஞ்செய்தி அனுப்பினான்.

ஆனால், எப்போதும் போல் பதில் வரவில்லை. அவனும் அதனைப் பெரியதாக எடுத்துக் கொள்ள வில்லை. பின், சாப்பிட்டு முடிக்கும் தருவாயில், செல் வமே வந்து அதனை எடுத்துக் கொண்டு போக, அவன் கட்டிலில் படுத்துக் கொண்டு, அவனுக்கு பிடித்த அந்த 'பிரின்ஸ் ஆப் ஹெவன்' எழுத்தாளரின் கதைகளை, முதலில் இருந்து படிக்க ஆரம்பித்தான்.

கடந்த ஒரு வருடமாக, இது மட்டுமே அவன் உயிர் மூச்சு. மொத்தமாக அவன் எண்ணங்களையும் வேதனைகளையும் கதைகளில் புதைத்துக் கொண்ட

வனுக்கு, அந்த ஆண் பெயர் கொண்ட எழுத்தாளரின், ஆண்களின் உணர்வுகளை துல்லியமாக பிரதிபலிக்கும், அத்தனை கதைகளும் அவனுக்கு ஒரு உயிர்ப்பைக் கொடுக்கும்.

இருவரும் இரு வேறு உலகத்தில், தனித் தனியாக சஞ்சரிக்க, அன்று முழுதும் பால்கனியிலேயே அவளுக்கு பொழுதும் போனது.

இப்படியே மறுநாளும் வந்திட, அன்றும் அவன் காலையிலேயே கிளம்பிச் சென்று விட்டான். இவளும் எதுவும் பேசவில்லை. பின், தோட்டத்திலாவது நடப்போம் என்று மெல்ல வெளியில் வர, அங்கோ ஹாலில் அமர்ந்து அனைவரும் எதையோ தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

தமிழின்பனின் குடும்பம் கூட்டுக் குடும்பம். பிரபாகரின் அண்ணன், தங்கை எல்லாரும் ஒரே வீட்டில் தான் வசிக்கின்றனர். சில வருடங்களுக்கு முன் அந்த வீட்டின் தூணாக இருந்தவர் தமிழின்பனின் தாய் இனியாள் தான். இனியாளின் நற்குணம் உணர்ந்த அவரின் மாமியாரும் மொத்தப் பொறுப்பையும் அவரிடமே விட்டிருந்தார். அதில் மூத்த மருமகளான ரேகாவுக்கு எப்போதும் கடுப்பு இருக்கும்.

அந்த வீட்டில் அன்பாய் அவர் வைக்கும் சட்டத்தை யாரும் மீறியதில்லை. ஆனால், ஒரு கட்டத்தில், பத்மாவிற்கும் மற்றவர்களுக்கும் அந்த அன்பும் பிடிக்கவில்லை. அதனை வெளிக்காட்ட முடியாது இருந்தவர்கள், அவரின் இறப்பின் பின், சிறிது சிறிதாக வெளிக்காட்டி, அவ்வீட்டில் அவர்கள் ராஜ்ஜியத்தை கொண்டு வர முயல, முட்டுக்கட்டையாய் தமிழின்பன் இருந்தான்.

தன் தாய் சொல்லிச் சென்றதை மீறி, அங்கு ஒரு அணு வும் அசையக்கூடாது என்பான்.

ஆனால், இறுதியில் தானே அனைவர்க்கும் ஒரு கை பொம்மை ஆவோம் என்று அவன் அறியவில்லை. அன்பைக் காட்டி, கட்டிக்காத்த குடும்பம், இப்போது வெறுப்பையும் பொறாமையையும் காட்டி, தறி கெட்டு எங்கோ ஓடுகிறது என்றெண்ணி, மொத்தமாக அறை வாசம் அடைந்து விட்டான்.

இங்கு தமிழரசியைக் கண்ட வீட்டினருக்கு எரிச் சல் வர, 'சே! முக்கியமான விஷயம் பேசும் போது, இவள் எதுக்கு வர்றா', என்று ஷெண்பா முணுமுணுக்க,

பிரபாகரன் "என்ன வேணும்? நீ ஏன் வெளிய வந்த?" என்று கேட்க, அவளுக்கு இப்போது கோபம் வந்து விட்டது.

"ஏன் மாமா, நான் என்ன வயசுக்கா வந்துருக் கேன். ரூம்லயே இருக்க..." என்று கேட்டுவிட, அவரோ ஒரு நொடி விழித்தார்.

'போயா யோவ்!' என மனதினுள் திட்டிக் கொண் டவள், எதையும் கண்டு கொள்ளாது தோட்டம் நோக்கி, செல்லப் போக,

பத்மா "இதுக்கு தான் வைக்க வேண்டியவங்களை வைக்க வேண்டிய இடத்துல வைக்கணும். தராதரம் தெரியாம நடு வீட்டுல வச்சா, இப்படி தான் அநாகரிகமா நடந்துப்பாங்க..." என்றதில்,

"இப்போ நான் என்ன அநாகரீகமா நடந்துட்டேன். நான் என்ன மருமகள் கொடுமை படுத்தினேனா? இல்ல

நீங்க தூங்கிட்டு இருக்கும்போது உங்க தலையில கல்லைத் தூக்கிப் போட்டேனா?" என அசட்டையாகக் கேட்க, இப்போது விழிப்பது அவரின் முறையாயிற்று.

ஷெண்பா, "ஏய் என்ன நீ ரொம்ப பேசுற? இப்பவே உனக்கு இவ்ளோ திமிருன்னா நல்ல வாழ்க்கை கிடைச்சுருந்தா எவ்ளோ திமிரு பண்ணுவ? உன் மூஞ்சிக்கு இவ்ளோ வாய் தேவையா?" என்றிட, தமிழரசியோ அங்கிருந்த தண்ணீரை எடுத்து ஷெண்பாவின் முகத்தில் ஊற்றி விட்டாள்.

அதில், அவள் முகத்தில் இருந்து அவள் போட்டிருந்த ரோஸ் பவுடர், ஐ லைனர், லிப்ஸ் ஸ்டிக் எல்லாம் வழிய, மேக் அப் அல்லாது அவள் முகத்தை காண முடியவில்லை.

அதில் நமுட்டு சிரிப்பு சிரித்த தமிழரசி, "இப்போ போய் உன் மூஞ்சை கண்ணாடில பாரு. நீயே செத்துருவ. என்னாலேயே பார்க்க முடியல. வந்துருச்சு இது மூஞ்சை பத்தி பேச... பே!" என நக்கலடித்ததில், அவள் கையை ஓங்கி விட, அதற்குள் தமிழரசி அவளை அடித்தே இருந்தாள். அதில் மொத்த குடும்பமும் இருக்கையில் இருந்து எழுந்து இருந்தது.

தமிழரசிக்கு, 'ஹப்பா கெட்டதுலயும் ஒரு நல்லது மாதிரி, இவ்ளோ நாள் இவள் மேல இருந்த கடுப்பை இப்போ காட்டியாச்சு. சட்டு புட்டுன்னு சண்டை போட்டு, என்னை வெளிய அனுப்புங்கடா. இங்க மூச்சு முட்டுது' என்று தனக்குள் எண்ணிக் கொண்டிருந்தவளை ஷெண்பா தீயாக முறைத்திருந்தாள்.

பிரபாகரோ "நீ என்ன பண்றன்னு தெரிஞ்சு தான் பண்றியா?" என்று அதட்ட,

“ஆமா மாமா, தெரிஞ்சு தான் பண்றேன். அவள் என்னை அடிக்க வந்தா, நான் அடிச்சுட்டேன் அவ்ளோ தான் வித்தியாசம்.” என்று தோளை குலுக்க,

அவர்களுக்கோ, ‘கோபாலன் ரேவதியின் மகள் அவர்களைப் போல் இருப்பாள் என்று தவறாக நினைத்து விட்டோமோ’ என்ற யோசனையே அப்போது தான் வந்தது.

இதில் பிரபாகர் பின்னால் நின்றிருந்த தமிழின்பனிடம் “தமிழ் என்ன நடக்குது இங்க?” என்று எரிச்சலாக,

அப்போது தான் ‘ஆத்தி இவன் எப்போ வந்தான்’ என்றவளுக்கு வேண்டும் என்றே பிரச்சனை செய்தாலும், அவன் பெயர் சொன்னதும் சற்று பயம் வரத் தான் செய்தது. அதில் மிரண்டு அவள் திரும்ப, அங்கோ அவள் பேச ஆரம்பிக்கும் முன்னே வந்திருந்தவன், அவள் செய்து கொண்டிருந்த அட்டூழியத்தை கதவில் சாய்ந்து, கை கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

லோகேஷ் தான், “அண்ணா, இவள் என்ன இப்படி நடந்துக்குறா? சே! டிஸ்கஸ்டிங். என்ன வளர்த்து இருக்காங்களோ, பணம் இல்லைன்னாலும் ஒழுக்கமாவது இருக்கணும்.” என்றிட, தமிழரசி தன் கொழுந்தனை தீப்பார்வை பார்த்தாள்.

தமிழின்பனோ 'ஓ! இப்ப தான் நான் அண்ணன்னு தெரியுதா?' என்பது போல், அவனை கண்ணை சுருக்கி அழுத்தமாக ஒரு பார்வை பார்க்க, அவனுக்கு சர்வமும் அடங்கி விட்டது.

இதில் தமிழரசி தான் ‘இவன் பாட்டுக்கு பேசுறான், அவன் என்னன்னா அப்படியே எருமை மாடு

மாதிரி நிக்கிறான். ஒரு வார்த்தை பேசுனா தான் என்ன? கடைசிவரை நமக்காக நம்ம தான் பேசணும் போல...' என நொந்தவளுக்கு கண் லேசாக கலங்கி விட, லோகேஷை சுள்ளெனப் பேச வருகையில், தமிழ் அவ ளருகில் வந்து அவள் கையைப் பிடித்து, அறை நோக்கி இழுத்துச் செல்ல முயன்றான்.

அவளோ கையை எடுத்து விட்டு, "அவன் என்னை ஒழுக்கம் இல்லாம வளத்துருக்காங்கன்னு சொல்றான். நான் எதுவும் பேசாம வரணுமா? விடுங்க!" என்று சற்று சத்தமாகவே பேசிவிட, திரும்பி அவளை அமைதியாக ஒரு பார்வை பார்த்தவன், அவள் உணரும் முன், லோகேஷை சப்பென அறைந்திருந்தான்.

அதில் மற்றவர்கள் திடுக்கிட, தமிழரசிக்கு விழி வெளியில் வந்து விழுந்து விடும் போல விரிந்தது.

தமிழ் 'ம்ம்...' என்பது போல் அவளை பார்த்து தலையாட்டி இழுத்து செல்ல, அவள் தான் தனக்கா கவா அடித்தான் என்பதை நம்ப இயலாமல், பேயறைந் ததைப் போலவே இருந்தாள்.

அவனோ இப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்பது போல், அறையில் நுழைந்ததும் பால்கனி யில் சென்று ஏதோ ஒரு புத்தகத்தில் மூழ்க, தமிழரசி அவனை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

# அத்தியாயம் - 3

'இவன் என்ன பொசுக்குன்னு அடிச்சுட்டான். உண்மையிலேயே நமக்கு சப்போர்ட் பண்ணி தான் அடிச்சானா? இல்ல, நம்மளை மாதிரி கிடைச்ச சான்சை யூஸ் பண்ணிக்கிட்டானா?' என தீவிரமாக சிந்தித்தவள்,

பின் 'சே சே இருக்காது' என்று மாற்றி மாற்றி சிந்திக்க, எதிரில் அவள் முன் தமிழின்பன், அவளுக்கு சற்று அருகில் நிற்பதை கண்டு மேலும் விழிக்க ஆரம்பித்தாள்.

அவனோ, புருவம் சுருக்கி அவளை பார்த்து விட்டு, கையை பிடித்து லேசாக நகர்த்தி நிற்க வைத்து விட்டு, அலமாரியில் வேறு ஏதோ ஒரு புத்தகம் தேடிக் கொண்டிருந்தான். அவள் தான்,

'அட லூசுப்பயலே! அலமாரிக்கு பக்கத்துல நிக்கிற... தள்ளுன்னு சொல்ல வேண்டியது தான...' என அவனை உறுத்து விழித்தவள், 'ஐயோ! மைண்ட் வாய்ஸ்ல பேசி பேசி, நமக்கு பேச்சு வராமல் போய்டும் போல' என்று நொந்து போனாள்.

அதன் பிறகு வந்த ஒரு வாரமும், இதே நிலை தான். அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை

அவன். பெண்ணை கட்டிக்கொடுத்த இடத்தில் எப்படி இருக்கிறாள் எனக் கூட, அவளை யாரும் வந்து பார்க்க வில்லை.

போன் செய்து விசாரித்தவர்கள், "அங்க உனக்கு என்ன குறை இருக்க போகுது..." என்று வேறு அவள் கோபத்தீயை மூட்டி இருக்க,

அவளோ 'பணத்தை திங்க முடியுமா?' என குமுறிக் கொண்டிருந்த வார்த்தையை கூறாமல் போனை வைத்து விட்டாள்.

அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாதவளாய், அன்றும் பால்கனியில் அமர்ந்து எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனின் முன் சென்று நின்றாள்.

அவளை ஒரு பார்வை என்னவென்று பார்த்தவனிடம், "இங்க பாருங்க எவ்ளோ நாள், இப்படி அடைஞ்சே இருக்குறது. இதுக்கு மேல என்னால இந்த ரூம்ல இருக்க முடியாது. நான் வேலைக்கு போறேன்..." என்று தீர்க்கமாகக் கூற, அவன் ஒரு நொடி அவளை அசையாமல் பார்த்தான்.

அதில் 'அய்யோயோ இவன் சும்மா இருக்கான்னு. கொஞ்சம் அதிகமா போறோமோ?' என உள்ளுக்குள் லேசாக உதற ஆரம்பிக்க,

அவன் சட்டென எழுந்ததில், அவள் பயந்து விருட்டென பின்னே நகர்ந்தாள்.

அதில், பூந்தொட்டியில் காலை வைத்தவளுக்கு கால் பிரண்டு விட, கீழே போனவளை, பிடிக்காமல் அவன் அப்படியே நின்றான். அவளோ தட்டுத்தடுமாறி

பால்கனி கம்பியைப் பிடித்து, நிலையாய் நிற்கவே சில நிமிடம் பிடித்தது.

அவன் அதற்குள் உள்ளேயே சென்றிருக்க, 'பாவி, விட்டா நான் ஸ்கிட் ஆகி பால்கனியில் இருந்தே விழுந் துருப்பேன். பிடிப்பானா? வேடிக்கை பார்த்துட்டு இருக் கான். எருமை மாடு' என அவனை கரித்து கொண்டு சேரில் அமர்ந்து, அந்த பூந்தொட்டியில் இருந்த மண், அவள் உடையில் இருந்ததை தட்டி விட்டுக் கொண்டி ருந்தாள்.

உள்ளே சென்றவன் மீண்டும் அங்கு வர, அவளே எழுந்து, அந்த சேரை காட்டி "உட்காருங்க..." என்று கடுப்பாகக் கூறினாள். எப்படியும் நம்மளை எழுப்பி விடு வான் என்று.

தமிழின்பனோ, அவளிடம் ஒரு பேப்பரைக் கொடுக்க, அவள் தான், 'ஹை டைவர்ஸ் பேப் பர்ஸ் எதுவும் குடுக்குறானோ. ஜாலி! நியாயமா இதை இவன் ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்கே கொடுத்துருக்க ணும். இப்போ நம்ம கையெழுத்து போடுவோமா, இல்ல, கொஞ்ச நேரம் பிகு பண்ணுவோமா?' என சிந்தித்த வள்...

பின் 'வேணாம். எப்படியும் ஒரு வருஷம் ஆகிடும் டைவர்ஸ் கிடைக்க, அதுவரை நம்ம இங்க இருக்குற வங்களை வைச்சு நல்லா டைம் பாஸ் பண்ணி, என் டர்டைன் பண்ணலாம்.' என பலவாறு யோசித்தவாறே, அந்தப் பேப்பரை கையில் வாங்கியவளுக்கு, ஒரு நொடி முகம் முழுதும் அதிர்ச்சி தோன்றி, மேலும் ஒரு மலர் வைக் கூட கொடுத்தது.

அது ஒரு புகழ்பெற்ற கல்லூரியில், அவள் எம்.ஈ படிப்பதற்கான விண்ணப்பப் படிவம். மேலும் மறுநாளில் இருந்து அவள் கல்லூரிக்கு செல்ல வேண்டும் என உறுதிப் படிவமும் இருக்க, அவள் தான் செய்வதறியாது நின்றாள். இளநிலைக் கல்வி முடிப்பதற்கே, அவள் வீட் டில் தலைகீழாய் நின்று தண்ணீர் குடித்து, பார்ட் டைம் வேலை செய்து என பல இடிபாடுகளைப் பட்டு தான் முடித்தாள்.

இதில் முதுநிலை படிப்பை பேச ஆரம்பிக்கும் போதே, வீட்டில் கல்யாண பேச்சை எடுக்க, அதோடு அப்பேச்சை நிறுத்தி இருந்தவள், வேலைக்கு செல்கி றேன் என்றிருந்தாள்.

ஆனால், 'இவனுக்கு எப்படி நான் படிக்க நினைத் தது தெரியும்...' என குழப்பமும், திகைப்பும், லேசாக மின்னிய மகிழ்ச்சியும் தோன்ற அப்படிவத்தையே பார்த் திருந்தாள்.

அவளின் ஆரம்ப நிலை முக மாற்றத்தில் இருந்து இப்போது வரை அனைத்தையும் கவனித்த தமிழின் பன், 'கருவாச்சி டைவர்ஸ் பேப்பர் குடுத்தேன்னு சந் தோஷப்பட்டா போல...' என உள்ளுக்குள் புன்னகைத் துக் கொண்டான்.

அவனின் முதல் திருமணம் முடிந்து சில நாட் களில், கோபாலனிடம் இவளை பற்றி எதேச்சையாக விசாரித்தான். அவர் தான் "இவள் மேல படிக்க ணும்னு சொல்றா. ஆனா பொம்பளைப் பிள்ளைக்கு இந்த படிப்பே ஜாஸ்தி தான்" என்று அவர் ஏதோ உளறி இருக்க, இவனும் அதனை அப்போது கண்டு கொள்ள வில்லை.

இப்போது, அதனை நினைவுப் படுத்தி, அவள் படிக்க ஏற்பாடு செய்திருந்தான்.

“நிஜமாவே நான் படிக்கப் போறேனா?” என விழி கள் மின்ன, அவனிடம் கேட்க, அவன் தலையை மட்டும் அசைத்து விட்டுச் சென்றான்.

‘அப்போ டைவர்ஸ் தரமாட்டானா?’ என நொடி உள்ளம் வாடினாலும், ‘சரி முதல்ல படிப்பை முடிப்போம். அப்புறம் பார்ப்போம்...’ என்று குதூகலமானவள், உள் ளுக்குள் “போடு ரகிட... ரகிட...” என்ற பாட்டை முகத்தில் வெளிக்காட்டாமல் பாடிக் கொண்டிருந்தாள்.

பின், ‘ஆனால் இந்த வீட்டுல இருக்குற லூசுங்க. சும்மாவே ஆடுங்களே! அதுங்களுக்கு தெரியுமான்னு தெரியல’ என சிந்தித்தவள், ‘தெரியலைன்னா நம்மளே தெரியப் படுத்துவோம்’ என்று அவள் கீழிறங்கிச் செல் லப் போக,

தமிழின்பன் எங்க போற என்பது போல் பார்த்தான்.

‘ப்பா! எப்படி தான் கண்ணாலேயே பேசுறானோ!’ என ஒரு நொடி வியந்தவள்,

“அது... வீட்டுல எல்லாருக்கும் தெரியனும்ல. அப் புறம் நான் காலேஜ் கிளம்பும் போது, ஏதாவது பிரச்சனை பண்ணுனா?” என நியாயமாய் கேள்வி கேட்க, அதில் இரு புருவத்தையும் உயர்த்தி விட்டு, அவனும் எழுந்து அவளுடன் சென்று, பிரபாகர் முன்பு நின்றான்.

அங்கோ, இவளைப் பார்த்ததும் அனைவர்க்கும் கடுப்பாக இருந்தது. ‘அதிலும் லோகேஷ் கடுங் கோபத் தில் இருந்தான். தனக்கு அடி வாங்கிக் கொடுத்து

விட்டாளே! இவளுக்காக இவனும் நம்மளை அடிச் சுட்டானே என்று. அதிலும் ஷெண்பாவோ சொல்லவே வேண்டாம்.'

இதனை எல்லாம் கண்டுகொள்ளாது, தமிழரசி, "மாமா, நான் நாளைல இருந்து படிக்கப் போறேன்" என்று விவரம் கூற,

ஷெண்பாவும், கனிகாவும் அவர்களுக்குள் பேசி சிரித்துக் கொண்டனர். இதில் அவளை நக்கல் பார்வை ஒன்றை வேறு பார்க்க, தமிழரசிக்கு அதன் அர்த்தம் புரி யவில்லை.

ஆனால் அருகில் இருந்தவனோ முகத்தில் எரிம லையையே காட்டி, அவர்களை முறைக்க, அதற்கு மேல பேச தைரியம் வராது, உள்ளே சென்றிருந்தனர்.

பிரபாகர் தான், "உங்க இஷ்டம்... இதுல நான் சொல்ல என்ன இருக்கு" என்று விட,

ஏற்கனவே 'என்ன நடக்குது இங்க. ஏன் எல்லா ரும் ஒரு மார்க்கமா இருக்காங்க. இவன் ஏன் இவ்ளோ கோபமாகுறான்.' எனப் புரியாது நின்றிருந்தவள், 'இது என்னய்யா பதிலு?' என எண்ணி,

"இப்போ நீங்க எதுவும் சொல்லுங்கன்னு நான் சொல்லவே இல்லையே மாமா. வீட்ல பெரியவங்க கிட்ட தகவல் சொல்லணும்ல, அதான் சொன்னேன். வீட்டுல வேற யாராவது பெரியவங்க இருக்காங்களா?" என சுற் றும் முற்றும் தேடினாள். அருகில் பத்மாவையும், ரேகா வையும் வைத்து விட்டு. அதில் பெண்கள் இருவரும் காண்டாகி விட்டனர்.

பிரபாகரோ அவள் மரியாதையற்று பேசியதில் பதில் பேச கூட முடியாமல் அமர்ந்திருக்க, தமிழின் பன் பொங்கி வந்த புன்னகையை முகத்தில் காட்டா மல் இருக்க அரும்பாடுபட்டு விட்டு, இறுதியில் சிரிப்பை அடக்க முடியாமல் விறுவிறுவென அறைக்குச் சென்று, வாயைப் பொத்தி சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

'இவள் கிட்ட போய் மொத்த குடும்பமும், வான்டட் ஆ போய் சிக்கிட்டீங்களே?' என எண்ணியவன், சற்று அமைதியாகி எங்கோ வெறிக்க ஆரம்பித்திருந்தான்.

தமிழின்பன் திடீரென அறைக்கு சென்றதில் இவ ளுக்கு தான் பயம் வந்து விட்டது.

'அய்யோயோ நம்ம பேசுனதுல கடி ஆகிட் டானோ? திட்டுவானோ?' என மிரண்டு கொண்டே அறைக்கு வந்தவள், அவன் அமர்ந்திருந்த கோலம் கண்டு மேலும் பயமாகி மெல்ல உள்ளே வர,

அப்போது செல்வம் வந்தவர், "அம்மா... நாளைக்கு காலையில 9 மணிக்கு கார் ரெடியா இருக்கும். சாயந் தரம் எத்தனை மணின்னு சொல்லிட்டா, திரும்ப கார் வந்துடும்." என்றதில் தமிழின்பன் நிமிர்ந்து ஒரு பார்வை பார்க்க,

அவர் சட்டென "இல்ல, நாளைக்கு ஒரு நாள் காலேஜ்லயே ட்ரைவர் இருக்கட்டும். காலேஜ் முடிச்ச தும் கூட்டிட்டு வந்துடுவார். அடுத்த நாள் மட்டும் டைம் சொல்லிடுங்க" என்றவர்,

"உங்களுக்கு காலேஜ் போக என்ன என்ன தேவையோ ஒரு லிஸ்ட் போட்டுக் குடுங்க, நாளைக்கு காலைல இங்க வந்துடும்..." என்று பேசிவிட்டுச் சென்

றவரை, ஏதோ கொரியன் சீரியல் பார்ப்பது போல் 'பே' வென பார்த்திருந்தாள்.

பின், 'சே, எவ்ளோ அக்கறை இந்த மனுசனுக்கு. பேசாம இவருக்கு மகன் யாராவது இருக்கானான்னு கேட்டு, இவர் வீட்டுல செட்டில் ஆகிடுவோமா?' என்ற வாழ்க்கையை பற்றிய சிந்தனையை மனதில் ஓட்ட, அவள் முன் சொடுக்கிட்ட தமிழின்பன், ஒரு பேப்பரை யும் பேனாவையும் கொடுத்து விட்டு வெளியில் சென் றான்.

அவள் தான், தன்னை நொந்து, சில பொருட்கள் எழுதி முடித்திருக்க, மறுபடியும் செல்வமே வந்திருந் தார். 'ப்பா... மனுஷன் எள்ளுன்னா எண்ணையா இருக் காரே! பா... கண்டிப்பா இவரு வீட்டுக்கு தான் மருமகளா போகணும். கடவுளே இந்த கதையில, படத்தில வர்ற மாதிரி டைவர்ஸ் வாங்கி கொடுத்துடு' என மானசீகமாக ஒரு வேண்டுதலைப் போட்டு விட்டு, அவரிடம் லிஸ் டைக் கொடுத்தாள் பவ்யமாக.

பின், மறு நாளில் இருந்து அவள் கல்லூரிக்கு கிளம்பி விட, தமிழின்பன் தான் 'சப்பா... ஒரு வழியா அவளை பேக் பண்ணியாச்சு. சாயந்தரம் வரை நிம்ம தியா இருக்கலாம்.' என்றெண்ணி கட்டிலில் தொப்பெ னப் படுத்தவன், ஏதேதோ நினைவில் சிக்கி சுழல் போல் வெளியில் வராமல் மூழ்கப் போக, சட்டென எழுந்து அமர்ந்தான்.

அப்போதென அவன் அலைபேசி அறிவிப்பைக் கொடுக்க, அவசரமாக அதனை எடுத்தவன், அவன் எதிர்பார்த்த அறிவிப்பு வராமல் சற்று சோர்வாகிப் போனான்.

பின், 'ஏன் அந்த ரைட்டர் கதையே எழுதல' என சிந்தித்தவன், அந்த ஐடிக்கு "நெக்ஸ்ட் ஸ்டோரி எப்போ?" என்ற குறுஞ்செய்தியை அனுப்ப,

அப்போது தான், கல்லூரியில் தோழி ஒன்றைப் பெற்றவள், கேன்டீனில் கும்மி அடித்துக் கொண்டிருக்க, அந்த குறுஞ்செய்தி அவளை வந்து தழுவியது.

'இது யாருடா அவன், நான் எழுதுற மொக்கை கதைக்கும், கவிதைக்கும் இவ்ளோ ரெஸ்பான்ஸ் பண்றான். நமக்குள்ளயும் ஏதோ இருக்கோ?' என தீவிர யோசனையில் இருந்தவள்,

பின், 'சரி ஒரு தடவையாவது ரிப்ளை பண்ணுவோம்' என்று "வில் பீ பேக் சூன்" என அனுப்ப,

'பிரின்ஸ் ஆப் ஹெவன்' என்ற ஐடியில் இருந்து அவனுக்கு வந்த பதில் குறுஞ்செய்தியில், அவன் விழிகள் ஒரு நொடி விரிந்து மின்னியது.

உடனே, 'வெயிட்டிங் ஃபார் தட் சார்...' என அனுப்பியவன் மீண்டும் கதைகளோடு இணைந்தான்.

தமிழரசி அதனை பார்த்து விட்டு, 'நீ வெய்ட் பண்ணி, என்ன ஆகப் போகுது. நான் இருக்கிறதே ஒரு பேய் பங்களால. கூட இருக்குறது ஒரு குட்டிச் சாத்தானோட. இதுல எங்கடா நான் எழுதுற லவ் ஸ்டோரி வரும். வேணும்னா ஹாரர் ஸ்டோரி எழுதுறேன்.' என அவளுக்குள் புலம்பிக்கொண்டு அடுத்த வேலையை பார்க்கலானாள், தன்னவனுடைய வேதனைகளின் இளைப்பாறுதலுக்கான எழுத்துக்களை கொண்ட பிரின்ஸ் ஆப் ஹெவன் என்னும் தமிழரசி.

பின், மனதில் ஏதோ ஒரு சலிப்பு தோன்ற,

சுகித்த மனமே

சங்கதிகள் பல எண்ணி

சுழற்றி எடுக்கும் சடுதிகளும் போதுமென

சரணடையுதே சலிப்பின் பிடியில்...

என எழுதி விட்டு, அவள் அடுத்த வேலையைப் பார்க்க, இதனைக் கண்ட தமிழின்பனின் விழியில் தான், ஒரு வெறுமை தோன்றி, அந்த வெறுமையுடனே 'நைஸ்' என குறுஞ்செய்தி அனுப்பி விட்டு, விட்டத்தைப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

இருவருக்கும், நாட்கள் ஒருவரை ஒருவர் பாராமலும் பேசாமலும் நகர, தமிழரசிக்குத் தான் பெரும் குழப்பம்.

'இவன் என்ன ரூமை விட்டே வெளிய வரமாட்டேங்குறான். வீட்ல அவன் தம்பிக்கு கூட நாளைக்கு நிச்சயம் இருக்கு. அதுக்கு கூட வீட்ல யாரும் அவனை கூப்பிட மாட்டுறாங்க' என குழம்பிக் கொண்டவள், எதையும் கண்டு கொள்ள வில்லை. அவன் கதைகளில் புதைந்தால் இவள் படிப்பில் மூழ்கினாள்.

அன்று, எப்போதும் போல் காலையில் எழுந்த தமிழின்பன், கண்ணைக் கசக்கியபடி, அருகிலிருந்த டேபிளில் இருந்த போனை எடுத்து, கை வந்த போக்கில் ஏதோ பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் குழப்பத்தை தாங்கி இருந்தது.

அப்போது தான் துயில் கலைந்து எழுந்த தமிழரசி, அருகில் இருந்த தமிழின்பனை முறைத்து, வெடுக்கென போனைப் பிடுங்கி, "இது என் போன்" என்று செல்பேசியின் மேல் அவளின் உரிமையை நிலை நாட்டினாள்.

மேலும் 'அவன் ஐ போனுக்கும், என் டப்பா போனுக்கும் கூட வித்தியாசம் தெரியாம எடுத்து நோண்டிட்டு இருக்கு பாரு' என முணுமுணுத்துக் கொண்டு அவனை முறைக்க, அவனோ பெரும் குழப்பத்தில் வேகமாக அவனின் போனை எடுத்து, ஏதோ பார்த்தான்.

தமிழரசி, 'என்ன பார்க்குறான்' என்று எட்டி அவனின் போனைப் பார்க்க, அவளும் சில நொடி பேச்சற்று திரு திரு வென விழிக்க ஆரம்பித்து விட்டாள். தூக்கக் கலக்கத்தில் தமிழரசியின் போனை எடுத்த தமிழின்பன், எப்போதும் போல் கதை அறிவிப்பு வந்திருக்கிறதா என அவன் கதை படிக்கும் செயலியில் சென்று பார்க்க, அங்கு பிரின்ஸ் ஆப் ஹெவன் ஐடி இருப்பதைக் கண்டு அதிர்ந்து விட்டான்.

இங்கு இவளோ, 'தனக்கு குறுஞ்செய்தி அனுப்பும் 'தமிழ்' என்ற ஐடி இவனா?' என உட்சபட்ச திகைப்பில் இருக்க, இருவரும் நம்பவே இயலாமல் வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தனர்.

அதிலும் தமிழின்பனுக்கு, 'இந்த கருவாச்சி தான் ரைட்டரா? அதுவும் ஆண்களோட உணர்வுகளை வெளிப்படுத்துறது ஒரு பொண்ணா?' என்பதை அவனால் நம்பவே இயலவில்லை. அவளோ, மெல்ல நகன்று குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

பின் அவனைப் பாராமலே கல்லூரிக்கு கிளம்பி ஓடியே விட்டாள். 'அய்யோயோ நம்ம வேற ரொமான்டிக் ஆ எழுதிருப்போமே, அதுவும் லவ்ஸ் அ பானை பானையா ஊத்திருப்போமே அதை வேற படிச்சுருப்பானோ? அய்யோயோ' என நொந்தவளுக்கு வெட்கம் வேறு வந்து தொலைத்தது.

இங்கோ தமிழின்பனுக்கு இன்னும் திகைப்பு மாறவில்லை. 'அதோடு பேசுவோமா? வேண்டாமா?' என்ற வெகு நேர யோசனைக்கு பிறகு, "ஹாய்" என அவனின் துணைவியாருக்கு குறுஞ்செய்தி அனுப்பினான்.

கல்லூரியில் இருந்தவளுக்கோ, இவனின் குறுஞ் செய்தியை கண்டு என்ன உணர்கிறோம் என்றே புரியாத ஏதோ ஒரு உணர்வு வர, இதுவரை யாரென்றே தெரியாத ஒருவனுக்கு எதற்கு ரிப்ளை செய்ய வேண்டும் என்றெண்ணி, அதனை தவிர்த்திருந்தவள், இப்போது 'இவனைத் தான் எனக்குத் தெரியுமே, அதுவும் என்னைக் கல்யாணம்...' என சிந்தித்தவள், அதற்கு மேல் சிந்திக்க பிடிக்காமல் அப்படியே அமர்ந்திருக்க,

அவனோ மீண்டும், "நான் உன் எழுத்துக்கு ரசிகன்" என்று அனுப்பி இருக்க, அவளுக்கோ குஷி தாங்கவில்லை. 'பார்றா! பயபுள்ள, ரூம்குள்ளேயே இருந்து இந்த வேலையத் தான் பாக்குதா!' என எண்ணியவள்,

"தேங்க்ஸ்" என திருப்பி அனுப்ப,

"ஆனாலும், இந்த கருவாச்சிக்குள்ள இப்படி ஒரு திறமை இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை..." என அனுப்பி இருந்ததில் வெறியாகி விட்டாள்.

“ஆமா, இவரு பெரிய அரவிந்த் சாமி கலரு. தார் எடுத்து ஊத்தி விட்டுருவேன்...” என கடுப்பாக அனுப்பிட, அதனைக் கண்டவனுக்கு மெலிதாய் புன்னகை அரும்பியது.

# அத்தியாயம் - 4

தமிழரசியின் பதிலில் புன்னகைத்த தமிழ் பின், “காங்கிராட்ஸ் அரசி” என அனுப்பி இருக்க,

அவளுக்கு தான் ஆச்சர்யமாய் இருந்தது. இது வரை, அவள் செய்தாலும் அதை செய்யாதே, படிக்காதே, பண்ணாதே என்றே சுற்றதார் மற்றும் வீட்டினரின் வார்த்தைகளும், அவளை சுற்றி வலம் வரும். அதனாலேயே ஒரு பொழுது போக்கிற்காக தன் மன ஆறுதலுக்காக எழுதுகிறாள் யாருக்கும் தெரியாமல்.

ஆனால் சிறு வார்த்தையாய் இருந்தாலும், அவளை ஊக்குவிக்கும் படியாய் அவன் பேசியது அவளுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

“ரொம்ப தேங்க்ஸ்...” என அவள் திருப்பி அனுப்ப, அதில் லேசாக சிரித்தவன், அதன் பிறகு எதுவும் அனுப்பவில்லை.

கல்லூரி முடிந்து வீட்டிற்குச் சென்றவளுக்கு எப்போதும் போல் அவன் புத்தகம் படித்துக் கொண்டிருந்ததிலும், தன்னை கண்டுகொள்ளாமல் இருந்ததி

லும், 'தனக்கு குறுஞ்செய்தி அனுப்பியது இவன் தானா?' என்றே சந்தேகம் வந்து விட்டது.

ஆனாலும் தானாய் சென்று அவனிடம் பேச முய லவில்லை. செல்வம் மட்டும் அவ்வப்பொழுது வந்து உணவு கொடுத்து விட்டுச் செல்வார். அவளுக்கு தான் இதற்கு விடுதி பரவாயில்லை என்ற எண்ணம் வர, நிம் மதியாய் கல்லூரிக்கு சென்று வந்து கொண்டிருந்தவ ளுக்கு, பெரிய இடியாக பத்து நாள் காலேஜ் ஸ்ட்ரைக் என்று சர்குலர் வர "நோ" என்று இருக்கையை விட்டு எழுந்து விட்டாள்.

அதில் அனைத்து மாணவர்களின் பார்வையும் அவள் மீது இருக்க, அவளின் பேராசிரியரோ "என் னம்மா?" என்று பார்த்தார்.

"சார்... இப்போ எதுக்கு ஸ்ட்ரைக் எல்லாம். அதும் பத்து நாள் லீவ் விட்டா போர்ஷன்லாம் எப்படி கவர் பண்ணி, எப்படி இண்டர்னலுக்கு படிச்சு செமஸ்டர் எழுதுறது. ப்ளீஸ் சார். ஸ்ட்ரைக் எல்லாம் வேணாம். காலேஜ் வைங்க சார்" என்று கெஞ்சிட அனைவரும் முக்கியமாக, சில நாட்களில் அவளுக்கு உயிர் தோழி யான சந்தனா அவளை முறைத்துப் பார்த்தாள்.

பேராசிரியரோ, சிலிர்த்துப் போய், "உன்னை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்குமா... உன்னை மாதிரி ஒரு பொறுப்பான ஸ்டுடெண்ட் பார்த்து எவ்ளோ நாள் ஆச்சு. உன்னோட கடமை உணர்ச்சி என்னை புல் லரிக்க வைக்குது" என்று உணர்ச்சி பொங்கப் பேச,

அவளோ மனதினுள் 'அட போங்க யா... நானே 10 நாள் அந்த பேய் பங்களால இருந்தா பைத்தியம் ஆகிடு

வேனோ என்ற கடுப்புல இருக்கேன். இதுல இவருக்கு புல்லரிக்குதாம்.' என நொந்து போனாள்.

பேராசிரியர் தான், "இது யூனிவர்ஸிட்டி ஆர்டர் மா... ப்ளீஸ் சிட்"

அவள் தான் 'அய்யோ சார் எனக்கு 10 நாள் உங்க வீட்லயாச்சு டியூசன் எடுங்க சார்... காப்பாத்துயா யோவ்...' என உள்ளுக்குள் பரிதாபமாக புலம்பிய படி, முகத்தில் காட்டாமல் அமர,

சந்தனா "அடியேய்! அவன் அவன் லீவ் விட மாட்டானான்னு இருக்காங்க. நீ என்னன்னா இவளோ அலும்பு பண்ற"

அவளோ முதல்வன் ரகுவரன் மாதிரி, "ஒரு நாள், ஒரு நாள் நீ என் இடத்தில இருந்து பாரு. எத்தனை கடுப்பு, எத்தனை வெறுப்பு, எத்தனை சலிப்பு, எத் தனை சமாளிப்புன்னு தெரியும்." என்றதில் மீண்டும் தன் தோழியின் தீப்பார்வைக்கு ஆளானாள்.

"ஈஈ... சரி சரி காண்டாவாத..." என தோளைத் தட்டி தேற்றியவளிடம்,

"நீ உன் ஹஸ்பண்ட் கிட்ட" என்று ஆரம்பிக்க, இப் போது அவளை முறைப்பது தமிழரசியின் முறையானது.

அதில் சந்தனா, "இல்லடி, அவர் கிட்ட பேச ட்ரை பண்ணலாம்ல. ஒருத்தருக்கொருத்தர் புரிஞ்சு" என்று பேசியதில்,

அவள் மேலும் பார்வையால் சுட, அதில் "ஐயோ" என நொந்த சந்தனா,

“இல்ல தமிழு உன் விருப்பப்படி விவாகரத்து கேட்க. பேசுனா தான கேட்க முடியும் அதான் சொன்னேன்...” என்று சமாளித்தாள்.

அதில் பெருமூச்சு விட்டவள், “ப்ச், அவன் தான் கல்லு மாதிரி இருக்கானே. அதுவும் அங்க இருக்கும் போது முள்ளு மேல இருக்குற மாதிரி இருக்கு சந்து. இதுல நான் அவன் ரிசெப்ஷன் வேற போயிருந்தேன். அவன் பொண்டாட்டியை எப்படி தாங்குனான் தெரியுமா? அவனைப் பார்த்தாலே இதான் ஞாபகம் வருது. நல்லவேளை அவன் கல்யாணத்துக்குப் போகல. இல்லைன்னா இன்னும் வெறி ஆகிருப்பேன்.” என்றவளின் முகம் வேதனையை பிரதிபலிக்க,

“கஷ்டமா இருக்கா?” என அதே வேதனை தன்னை தாக்கியது போல் கேட்டாள் சந்தனா.

“கஷ்டம்கிறத விட, கடுப்பா இருக்கு. ஆனால் இதுல ஒரு நல்ல விஷயம். அவன் என்கிட்ட அட்வான்டேஜ் எடுத்துக்கல. இல்லைன்னா என்னால நினைச்சுக் கூட பார்க்க முடியல...” என்றதில் சந்தனா,

“நீ அவர்கிட்ட பேச்சு கொடுத்து, அவரு பாஸ்ட்ல என்ன நடந்துச்சுன்னு தெரிஞ்சுக்கோ தமிழு. ஒரு வேளை...” என்று கூறும் முன்னே, அவள் பொங்கி விட்டாள்.

“அது சரி, இவன் பகுமானமா லவ் பண்ணுவான், கல்யாணம் பண்ணுவான், அப்புறம் சண்டை போட்டு டைவர்ஸ் பண்ணுவான். இந்த மொக்கை ஃபிளாஸ் பேக்க, நான் வேற கேட்கணுமா? அதும் அந்த பொண்ணை பார்த்தாலே தெரிஞ்சுது, பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணுன்னு. மிஞ்சி மிஞ்சிப் போனா,

ரெண்டு பேருக்கும் மிஸ்அண்டர்ஸ்டேண்டிங் ஆகியி ருக்கும். அதான் டைவர்ஸ் பண்ணிருப்பான். இந்த கரு மத்தை நான் வேற கேட்கணுமா?" என கோபமாகக் கூறிட,

"இல்ல டி, அது மூலமா அவனை, அவன் பர்ஸ்ட் வைப் கூட கோர்த்து விட்டுட்டு, நீ எஸ்கேப் ஆகிட லாம்ல, அதான் சொன்னேன்" என்று கண்ணடிக்க,

"ஓ இதுல சோசியல் சர்விஸ் வேற நாங்க பண்ண னும் தலையெழுத்து டி..." என்றாள் மேலும் கடுப்புடன்.

"நான் எழுதுற கதையில கூட ரெண்டாவது கல்யா ணத்தை அக்செப்ட் பண்ண மாட்டேன் சந்து. ஆனால், அது எனக்கே நடக்கும்னு நான் எதிர் பார்க்கவே இல்லை..." என்றவளின் குரல் லேசாக கமறிட,

"தமிழு, இந்த பத்து நாள் லீவ் இருக்குல்ல, இதை யூஸ் பண்ணி அவன் கிட்ட டைவர்ஸ் கேளு. நான் உனக்கு என் அத்தை பையனை கல்யாணம் பண்ணி வைச்சுடுறேன்." என்றாள் குறும்பாக.

அதில் தமிழோ, "உங்க வீட்லயாவது மனுசங்க இருப்பாங்களா சந்து?" என பாவமாகக் கேட்டிட, அதில் அவள் சிரித்து விட்டாள்.

பின் தமிழும் மென்னகையுடன், "ம்ம்... கேட்கு றேன். லீவ் முடிஞ்சு உன்னை பார்க்கும் போது, கண் டிப்பா விவாகரத்து பத்தி பேசிருப்பேன்." என்று உறுதி யாய் கூறியவளுக்கு, தமிழின்பனின் குறுஞ்செய்தி தழு வியது.

அவள் எழுதிய ஒரு கதையின் ஒரு வசனத்தை எடுத்து அவளுக்கு அனுப்பி "இந்த லைன் நல்லாருக்கு" என்றிருந்தான். அதில் அவள் முகம் மலர்ந்திருக்க, அவள் எழுதிய ஏதோ ஒரு தமிழ் வார்த்தைக்கு அர்த்தம் தெரியவில்லை என்று கேட்டிருந்தான். அவளோ வெகு சிரத்தையாய் அவனுடன் விவாதித்து, விளக்கம் சொல்லிட,

அவனும் "ம்ம்... ஓகே. ஒரு சின்ன சஜ்ஜஷன். எனக்கு இங்கிலிஷ் ரீடிங் அளவுக்கு தமிழ் ரீடிங் வேகமா வராது. சோ கொஞ்சம் கஷ்டமான தமிழ் வார்த்தை இருந்தா பக்கத்துல அர்த்தம் போடுறியா? ப்ளீஸ்... மே பீ மத்தவங்களுக்கும் யூஸ்ஃபுல் ஆ இருக்கும்"

அதில் "கண்டிப்பா இன்பா. அடுத்த தடவை எழுதும் போது இதை ஃபாலோ பண்றேன்." என்றவளுக்கு, அவன் இவ்வளவு ரசித்துப் படிப்பது மிகவும் உற்சாகம் அளித்தது.

அவனும் "ம்ம்..." என்றதோடு வேறு எதுவும் பேசவில்லை. தமிழும் அதன் பிறகே நிமிர்ந்து சந்தனாவைப் பார்க்க, அவள் தான் இவளை ஒரு மாதிரியாகப் பார்த்திருந்தாள்.

"என்னடி?" என தமிழ் புரியாமல் பார்க்க,

"விவாகரத்து கேட்பாங்களாம், நேர்ல பேசிக்க மாட்டார்களாம்.... ஆனால் மெஸேஜ் மட்டும் பறக்குமாம்" என்றாள் கேலி குரலில்.

அதில் அவளை முறைத்தவள், "அவன் பெர்சனல் ஆ ஏதாவது பேசுனா நான் பேசிருக்கவே மாட்டேன். ஆனால் ஜஸ்ட் ஒரு ரீடர் ஆ பேசுறான். அதான் நானும்

பேசுறேன். அவ்ளோ தான். அவன் இல்ல, யாரு இந்த மாதிரி அனுப்பி நல்லாருக்குன்னு சொன்னாலும், நான் இதே மாதிரி தான் எக்ஸைட் ஆவேன்.” என்று தீர்க்க மாக கூறியவளை கையெடுத்து கும்பிட்டவள்,

“சரிடி யம்மா... நான் எதுவும் கேட்கல. ஆனால் பாஸ்க்கு அப்போவே உன்மேல ஒரு கண்ணு இருந்து இருக்குமோ. பட்டாம் பூச்சிலாம் புடிச்சுருக்கீங்க” என்று நக்கலாகப் பேசியவளை மேலும் கடுமையாக முறைத்த வள்,

“சே! தப்பா பேசாத. அவரு அன்னைக்கு ஏதோ ஒரு சின்ன பொண்ணுட்ட பேசுன மாதிரி தான் பேசு னாரு. கண்டிப்பா தப்பான அர்த்தம் எதுவும் இல்ல. ஏன் இப்போ கூட நான் பாதுகாப்பா இருக்குற மாதிரி தான் பீல் பண்றேன். அதான் இன்னும் இங்க இருக்கேன். இல்லைனா எப்பயோ ஓடிருப்பேன்” என்றவளை பெரு மூச்சு விட்டுப் பார்த்த சந்தனா,

‘பயபுள்ள, ரொம்ப தெளிவா இருக்கு. இது கமிட் ஆகாது போலயே, உண்மையிலேயே டைவர்ஸ் வாங்கி டுவாளோ’ என வருத்தப்பட்டவள், பின் கிளம்பியும் விட் டாள்.

அவள் சென்ற திசையை பார்த்த தமிழரசி தான், ‘இவள் மட்டும் இல்ல நான் பைத்தியம் ஆக்கிருப் பேன்’ என நினைத்தவள், பேச ஒரு ஆள் கிடைத்ததும், அனைத்தையும் அவளிடம் கொட்டி இருந்தாள்.

பின், தன்னை நொந்து வீட்டிற்குச் சென்றவள், அறையினுள் அடைய, அன்றைய பொழுது பத்து நாளை எப்படி கடப்பது என்றதை சிந்தித்தபடியே செல்ல,

அடுத்த நாளோ, 'ஐயோ என்ன பண்றதுன்னே தெரியலையே' என்று முகத்தை சுருக்கி அமர்ந்து இருந்தவளைக் கண்டவன்,

"என்ன ஆச்சு? காலேஜ் போகல?" என்று குறுஞ்செய்தி அனுப்பினான்.

அதனைக் கண்டவள், 'அட நாசமாப் போனவனே! பக்கத்துல இருந்துகிட்டு மெஸேஜ் அனுப்புறானே' என நொந்து விட்டு,

"இல்ல. காலேஜ் 10 நாள் லீவ்" என விவரம் கூறியதும்,

"ஓ" என்றான்.

"அதுக்கு ஏன் தலையில கை வைச்சு உட்கார்ந்து இருக்க?" என்று மீண்டும் அனுப்பிட,

"ம்ம்... தலையெழுத்து. அதான் இப்படி உட்கார்ந்து இருக்கேன்." என்று அனுப்பினாள் கடுப்புடன்.

"போர் அடிக்குதா?"

"இல்ல, டைம் ரொம்ப ஃபாஸ்ட்டா ஓடுது. வேலை தலைக்கு மேல இருக்கு. டைமே இல்ல." என்று எடக்கு மடக்காய் பதில் அனுப்பிட, இப்போது அவளை நேராய் பார்த்து முறைத்தான்.

அவளோ அதனைக் கண்டு கொள்ளவே இல்லை.

பின், அவனே, "நீ ஏன் இப்போ கதை எழுதுறது இல்ல?" எனக் கேட்க,

“நான் முன்னாடி நல்ல மூட்ல இருந்தேன், எழுதி னேன். இப்போ நான் இருக்குற நிலைமைக்கு யாரை யாவது கொலை பண்ற மாதிரி தான் கதை எழுதணும்.” என்றாள் எரிச்சலை அடக்கிய படி.

“ஏன் இப்போ என்ன? இங்க உன்னை யாரும் டிஸ் டர்ப் பண்ணலையே. எழுத வேண்டியது தானே?”

அதற்கு மேல் அவளால் அவனிடம் கோபப்பட இயலவில்லை. “இல்ல இன்பா. கன்டென்ட் இன்னும் யோசிக்கல. எதுவும் வரமாட்டேங்குது.” என்றாள் பாவ மாக.

“ஓ...” என்றவன், சிறிது நேரம் எதுவும் பேச வில்லை. அவளோ, செய்வதறியாமல் சுற்றிக் கொண்டு வர,

அவளையே பார்த்தவன், பின் மீண்டும்... “நான் வேணா கன்டென்ட் தரவா?” என்ற கேள்வியுடன் குறுஞ்செய்தி அனுப்பினான்.

விழிகள் மின்ன, “உங்க கிட்ட கன்டென்ட் இருந்தா நீங்களே எழுத வேண்டியது தான...?” என எப் போதும் போல் வாரிட,

“எனக்கு எழுத எல்லாம் வராது. வேணும்னா மேலோட்டமா சொல்றேன். சீன்ஸ் கிரியேட் பண்ணி நீயே எழுது...”

சிறிது யோசித்தவள், “ம்ம் சரி. சொல்லுங்க. நான் வாட்ஸ்சப் நம்பர் அனுப்பவா?” என ஆர்வமாக கேட் டாள் எப்படியும் வாயை திறக்க மாட்டான் என்று.

“நான் உன் ரீடர் அவ்ளோ தான். ஆஸ் அ ஃபேன் ஆ உங்கிட்ட பேசுறேன். சோ எனக்கு உன் நம்பர் தேவை இல்ல. இதுலயே அனுப்புறேன்.” என்று பட்டெனச் சொல்லி விட, அவளுக்கு தான் ஒரு மாதிரி ஆகி விட்டது.

‘என்னம்மோ, நான் ஊர் பேர் தெரியாதவன் கிட்ட நம்பர் கேட்ட மாதிரி, மூஞ்சில அடிச்ச மாதிரி பேசிட்டான்.’ என கடுப்பானவள்,

“ஹெலோ, நானும் ஒன்னும் எல்லார் கிட்டயும் நம்பர் வாங்கி பேசுனது இல்ல. ஏதோ தெரிஞ்சவங்கன்னு தான் கேட்டேன். நீங்க ஜஸ்ட் என் ரீடர் தான். அதுக்கு மேல உங்களுக்கும் எனக்கும் எதுவும் இல்ல.” என்றாள் காரமாக.

அவள் முகத்தில் என்ன கண்டானோ, “ஐ நோ எழுத்தாளரே. நான் எதார்த்தமா தான் சொன்னேன்.”

“ம்ம்” என்றாள் இன்னும் கோபம் போகாமல்.

“சரி கருவாச்சி. மூஞ்சியை அப்படி வைக்காத. நான் கன்டென்ட் அனுப்புறேன்.” என்று அனுப்ப,

அவள் மேலும் கொலைவெறியுடன் அவனை முறைத்தாள். ‘கொய்யால இனிமே கருவாச்சின்னு சொல்லு, அப்புறம் இருக்கு உனக்கு’ என்ற படி.

ஆனால் அவன் இவளை நிமிர்ந்து பாராமல் தீவிரமாக டைப் செய்து கொண்டிருக்க, தமிழரசி தான் ‘ஒரு வேளை இவன் லவ் ஸ்டோரி சொல்லப் போறானோ?’ என சிந்தனையில் இருந்தவளுக்கு, சிறிது நேரம் கழித்து ஒரு குறுஞ்செய்தி வந்தது.

அதனைப் படித்தவள், “எல்லாம் ஓகே. ஆனால் என்ன இவ்ளோ தான் இருக்கு” என்று கேட்க,

“நான் கொஞ்சம் கொஞ்சமா அனுப்புறேன். நீ எழுதி முடிக்க முடிக்க” என்றிட,

தமிழரசி தான், “இந்தக் கதை எல்லாம் வேணாம். என்னால சஸ்பென்ஸ் தாங்க முடியாது. மொத்தமா அனுப்புங்க” என்றாள் பிடிவாதமாக.

அவனோ அதன் பிறகு, பதில் அனுப்பாமல் கிளம்பி வெளியில் சென்றிட, அவள் தான் ஐயோ என தன்னை நொந்தாள்.

பின், அவன் வெளியில் சென்று விட்டு வரும் வரையிலும் மடிக்கணினியில் புதைந்து விட்டவளை ஒரு நொடி பார்த்தவன், புத்தகம் படிக்க ஆரம்பித்து விட, இரவு வேளையில் அவனுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது.

அதனைக் கண்டவன் விழி விரித்தான். ‘தான் மேலோட்டமாகக் கூறியதை, தத்ரூபமாக எழுதி உள்ளாளே என்று.’ அதோடு, அவளை ஒருமுறை, முறைக்கவும் தவற வில்லை.

## பெயரிடப்படாத கதை!

## அத்தியாயம் 1:

அதிகாலை நேர பரபரப்பில், அந்த பங்களாவில் அனைவரும் அலுவலகத்திற்கும், கல்லூரிக்கும் கிளம்பிக்

கொண்டிருக்க, அவனோ, கண்ணாடி முன் நின்று தன் தலையை வாரி விட்டு, நீல நிற கோட் அணிந்து, அன்றைய மீட்டிங்கிற்காக ஃபைலில் தலையை புதைத்துக் கொண்டு, மாடியில் இருந்து இறங்கினான்.

அவன் இறங்கும் போதே, கீழே கல்லூரிக்குச் செல்லாமல் இன்னும் போனில் கடலை போட்டுக் கொண்டிருந்த அவனின் தம்பி லோகேஷ், சட்டென போனை வைத்து விட்டு, சாப்பிட ஆரம்பிக்க, அவனின் தங்கை கனிகா, இந்தச் சாப்பாடு வேண்டாம் என செல்வத்திடம் ,சண்டை போட்டுக் கொண்டிருந்தாள்.

தன் அண்ணன் வரவு அறிந்ததும் தட்டில் புதைந்து ரசித்து ருசித்து சாப்பிட, அவ்வளவு நேரம் உறங்கிக் கொண்டிருந்த ஷெண்பா, சட்டென எழுந்து வந்து வேலை செய்வது போல் நடித்தாள்.

அதோடு, பத்மா பூஜை அறையில் சாமிக்கு பூ வைத்துக் கொண்டிருக்க, "அத்தை" என்ற கடுமையான அழைப்பில் வெடுக்கென திரும்பியவர் அவனைப் புரியாமல் பார்த்தார்.

"ஏன் பூ மாலை இவ்ளோ சின்னதா இருக்கு. அம்மா பெரிய மாலை தான போடுவாங்க?" எனக் கேள்வி கேட்க,

அவரோ "அது அது... ரேகா இவ்ளோ தான் கட்டுனா..." என அவரை கோர்த்து விட்டிருந்தார்.

அதில் அவன் ரேகாவை திரும்பி, "ஏன் பெரிம்மா. தோட்டத்துல பூ பூக்கலயா என்ன?" என்று சற்று நக்கலாக கேட்க,

பேந்த பேந்த விழித்தவர், "அது ஒன்னும் இல்ல தமிழு. காலைல இருந்து ஒரே கை வலி" என்று கையைப் பிடிக்க, அதில் பதறியவன்,

'என்னாச்சு பெரிம்மா. ஏன் கை வலி. அதை ஏன் இவ்ளோ லேட்டா சொல்றீங்க. அதோட இதை வேற கட்டிருக்கீங்களா?' என்றவன், உடனே அவனின் பெரியப்பா சண்முகத்திடம் கூறி மருத்துவமனை கூட்டிச் செல்லச் சொல்ல, அவர்களுக்கோ ரொம்பத் தான் பாசம் என்றிருந்தது.

அவன் கண்டிப்பாய் இருப்பது தெரிந்த அளவு, அவன் பாசத்தை அங்கு யாரும் உணரவில்லை. ஏனென்றால், சொத்து முழுக்க அவன் பெயரில் தான் இருந்தது. அதோடு, இப்போது அவன் பார்த்துக் கொண்டிருக்கும் கட்டுமான தொழிலில், அவன் தான் ராஜா.

அதோடு, அவன் தம்பி தங்கைகளை, அதட்டி மிரட்டி கல்லூரிக்கு அனுப்பி விட்டு, பேப்பர் படித்துக் கொண்டிருந்த பிரபாகரிடம் சொல்லி விட்டு கிளம்ப எத்தனிக்க, அவரோ "தமிழ், நம்ம ஷேர் ஹோல்டர் நேசன் இருக்காருல. அவருக்கு உடம்பு சரி இல்ல. இனிமே அவருக்குப் பதிலா, அவரு பொண்ணு தான் வருவா. பார்த்துக்கோ!" என்றிட, அவன் சிறிது சிந்தித்து விட்டுக் கிளம்பினான்.

அவன் தொழிலில் அனைவரையும் விட அதிக பங்கு வைத்திருப்பது அவன் தான். அவனுக்கு அடுத்த ஒரு சதவீத குறைவுடன், அடுத்த நிலையில் இருப்பது நேசன் தான். கிட்டத்தட்ட முக்கிய பொறுப்பு எடுக்க வேண்டியதில் அவருக்கும் பங்கு இருக்கிறது. இதனை

யோசித்தபடி காரில் சென்று கொண்டிருந்தவன், 'ராங் ரூட்டில்' எதிரில் வந்த காரை கண்டு சட்டென நிறுத்தி விட்டான்.

அந்த காரும் நிறுத்தப்பட, அவனோ கோபமாக இறங்கி, "ஹெலோ, உங்களுக்கு அறிவில்ல. தப்பான ரூட்ல வர்றீங்க" என காரமாக சத்தம் போடும் போதே, காரில் இருந்து அவள் இறங்கினாள். சிவப்பு நிற குர்தா வும், நீல நிறத்தில் ஜீன்சும் அணிந்திருந்தவள், நகத்தை கடித்துக் கொண்டு,

"சாரி சார். பாரீன்ல லெஃப்ட் சைட் ஓட்டி பழகிட் டேன். இப்போ சட்டுன்னு ரோடு பிடிபடல. வெரி சாரி" என்று கண்ணைச் சுருக்கி மன்னிப்பு கேட்க, ஒரு நொடி அதில் வீழ்ந்தவன்,

"இட்ஸ் ஓகே. பட் எதிர்ல லாரி வந்தா அடிச்சு தூக் கிட்டு போயிடுவான். அங்க மாதிரி இங்க யாரும் டிரா பிக் ரூல்ஸ் லாம் பாலோ பண்ண மாட்டாங்க மிஸ். சோ இனிமே கேர்புல்லா ஓட்டுங்க. பழகுற வரை ட்ரைவர் ஆவது வச்சுக்கோங்க" என பொறுமையாகப் பேசிட,

"ஸுயூர். இப்போ நான் எப்படி போறது...?" எனக் கேட்டாள் குழப்பமாக.

அவனோ "இது ஒன் வே. இப்போ நீங்க எங்க போகணும்?" என புருவம் உயர்த்திக் கேட்டதில், அவள் முகவரி கூறியதும் ஒரு நொடி முகத்தில் மின்னல் வெட்ட, "அங்க எதுக்கு நீங்க?" என்றான் புரியாமல்.

அவள் தான், "நான் அங்க ஒரு ஷேர் ஹோல்டர்" என்றதில்

'நேசன் அங்கிள் பொண்ணு, இவள் தானா?' என எண்ணியவன் "சரி என்னை ஃபாலோ பண்ணுங்க..." என்றான் மொட்டையாக.

"வாட்?" என முறைத்துப் பார்க்க,

"ஹெலோ, என் காரை ஃபாலோ பண்ணுங்க. நான் அங்க தான் போறேன்." என்றதில் 'ஓ' என்று அசடு வழிந் தாள்.

பின், இருவரும் அலுவலகம் சென்று விட, "ஆமா நீங்க இங்க என்ன வேலையா வந்தீங்க?" எனக் கேட் டாள் உள்ளே நுழைந்த படி, அவள்.

"என் வேலையே இங்க தான. நான் இங்க எம்டி"

"வாவ். தமிழின்பன் ரைட்? அப்பா உங்களைப் பத்தி சொல்லிருக்காரு. நைஸ் மீட்டிங் யூ..." என்றாள் கை கொடுத்த படி.

அவனும் புன்னகையுடன், கை குலுக்கி விட்டு, "நீங்க?" என்று கேட்க,

"ஐ ஆம் சுஹானா!" என்றதில்,

"நைஸ் நேம்" என குறுநகை பூத்தான் தமிழின்பன்.

..........................................

**இதனைப் படித்தவன், எங்கோ வெறித்திட, கூடவே "சுஹானா பேரைத் தவிர, நான் வேற யாருக்கும் பேர் போடவே இல்லை. எதுக்கு என் பேரை போட்ட?" என்று குறுஞ்செய்தி அனுப்பி விட்டு அவளை முறைத் தான்.**

அவளோ, "இது உங்க மொக்கை ஃபிளாஸ் பேக்'னு உங்க தம்பி, தங்கச்சின்னு சொன்னதுமே தெரிஞ்சுருச்சு. அதுங்களுக்கு எல்லாம் இருக்குற பேரே போதும். புதுசா எல்லாம் யோசிக்க முடியாது..." என்று நக்கலாக குறுஞ்செய்தி அனுப்பிட, அவன் மேலும் முறைத்தான்.

அவள் அசட்டையாக, "சரி சரி அப்புறம் என்ன ஆச்சுன்னு சொல்லுங்க!"

"ஒரே நாள்ல எழுதிட்டா அப்போ மீதி 9 நாளும் என்ன பண்ணுவ? நான் நாளைக்கு சொல்றேன். சஸ் பென்ஸ் உடனே தூங்கு கருவாச்சி." என கேலியாக அனுப்பியவன், கட்டிலில் சென்று படுத்து உறங்கி விட,

அவள் தான் "அடேய்!" என இடுப்பில் கை வைத்து பார்வையால் சுட்டெரித்தாள்.

# அத்தியாயம் - 5

'அய்யோ கதை பாதியில நிக்குதே' என புலம்பியபடி இரவு தாமதமாக உறங்கிப் போன தமிழரசி, மறுநாள் நெளிப்பு விட்டபடி எழுந்து அமர்ந்தாள்.

திரைச்சீலை இன்னும் எடுத்து விடப் படாமல் இருக்க, அறை இன்னும் இருட்டு பூசியே இருந்த தில் 'என்னடா இது நம்ம இவளோ சீக்கிரம் எந் திரிச்சுட்டோம். இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கு வோமா?' என சிந்தித்தவள் மணி 10.10 ஆகிருப்பதை கண்டு, 'அய்யோ இவ்ளோ நேரம் தூங்கிட்டோமா?' என் றெண்ணி வேகமாக எழும்ப, அப்போது தான் அருகில் தமிழின்பன் இல்லாததைக் கண்டாள்.

'எங்க போனான் இவன்?' என எண்ணியபடியே வேலைகளை முடித்தவள், அறையை அளக்க ஆரம் பித்தாள்.

'இன்பா இன்னைக்கு கதை?' என்று அவனுக்கு குறுஞ்செய்தி அனுப்ப, அவனோ பதிலே அனுப்ப வில்லை. சே! என நொந்தவள்,

‘சரி, நம்ம கொஞ்ச நேரம் டைம் பாஸ் பண்ணு வோம். ஒருவேளை, இன்பாக்கு டைவர்ஸ் ஆனதுக்கு காரணம் இந்த குடும்பமா இருக்குமோ? இருக்கும். இதுங்க மூஞ்சியை பார்த்தாலே தெரியுது, நல்லா நாரதர் வேலை பார்க்குங்கன்னு...’ என நினைத்த படியே கீழி றங்கிச் சென்றாள்.

போன வாரம் தான், லோகேஷுக்கு நிச்சயம் வீட்ட ளவில் நடந்திருந்தது. அதற்குக் கூட தமிழின்பன் கீழே வரவே இல்லை. அன்று காலையிலேயே தமிழரசியை வேகமாக கல்லூரிக்கு அனுப்பியவன், தாமதமாகவே ஓட்டுனரை அனுப்பி அழைத்திருந்தான்.

லோகேஷ் போனில் அவனின் மணப்பெண்ணு டன் பேசிக் கொண்டிருக்க, பிரபாகரோ பத்மாவிடம் பேசிக் கொண்டிருக்க, ஷெண்பாவும் கனிகாவும் இவள் வந்ததைக் கண்டு முறைத்தனர். இவளோ வேகமாக அடுக்களைக்குச் சென்று,

“ஹாய் அங்கிள்...” என்று செல்வத்தை அழைக்க,

“என்னம்மா வேணும்? கூப்பிட்டு இருந்தா நான் வந்துருப்பேனே! நீங்க ஏன்மா வந்தீங்க?” என்று பதறி னார்.

அவளோ, கிட்சன் மேடையில் ஏறி அமர்ந்து, “நான் என்ன பாகிஸ்தான் பார்டர்ல தீவிரவாதி கூட சண்டையா போட்டுட்டு இருக்கேன். சாப்பிடக் கூட கீழ வராம, பிசியா இருக்க. இன்னைக்கு என்ன சமையல்?” என்று பாத்திரத்தை உருட்டினாள்.

அவரோ விழித்தபடி நிற்க, ஷெண்பா “ஏய்! நீ ஏன் இங்க வந்த?” எனக் கேட்டாள் அதட்டலாக.

"இதோடா... இந்த வீட்டில மனுசங்க நடமாடக் கூட பெர்மிஷன் லெட்டர் வேணுமா என்ன? என்ன மாமா? இந்த ரூல்ஸ்லாம் கல்யாணம் பண்ணும்போது சொல் லவே இல்ல" என்று இழுத்தபடி, பின்னால் நின்ற பிர பாகரிடம் கேட்க, அவரோ மரியாதையை காப்பாற்றும் பொருட்டு அமைதியாகவே நின்றார்.

கனிகா, "ஏய்?" என்று கத்தி, ஒரு விரலை நீட்டி, "உனக்கு இந்த வீட்டுக்கு வரவே தகுதி கிடையாது. இங்க வந்ததும் இல்லாம அதிகாரம் வேற பண்றியா?" என்று மிரட்டலாய் கேட்க, தமிழரசி தான், கனிகாவை விட்டு விட்டு ஷெண்பாவின் கையைப் பிடித்துத் திருகி னாள்.

அதில் ஷெண்பா "என்ன பண்ற கையை விடு" என்று கத்திட,

"அக்கா தான நீ? இவளுக்கு நல்லது கெட்டது லாம் சொல்லித் தரமாட்டியா? அண்ணின்னு கொஞ்சம் கூட மட்டு மரியாதை இல்லாம, அவள் இஷ்டத்துக்குப் பேசுறா? நீயும் பார்த்துட்டு இருக்க?" என்றும் மேலும் வளைக்க,

பத்மாவும் ரேகாவும் பதறி, "இப்போ விட போறியா இல்லையா அவளை? விடல அறைஞ்சுடுவேன் உன்னை?" என்று மிரட்டிட,

அவளோ "அய்யயோ ஆண்ட்டீஸ் எனக்கு பயமா இருக்கு...! உங்க லிப்ஸ்டிக் அழியாம பேசுங்க. பார்க்க முடியல" என்று பயந்ததைப் போல் கேலி செய்தவள், இன்னும் ஷெண்பாவின் கையைப் பிடித்துத் திருக, கனிகா மிரண்டு கையை பின்னால் மறைத்துக் கொண் டாள்.

அதன் பிறகே அவளை விட்ட தமிழரசி, "அது... இனிமே நான் வெளிய வர்றப்ப கும்பலா வந்து ஏதாவது சீன் போட்டீங்க..." என்று மிரட்டும் போதே, அழுத்தமான காலடியோசையுடன் தமிழின்பன் அங்கு வர, அவள் மேடையில் இருந்து இறங்கி இருந்தாள்.

ஏனோ அவன் எதுவும் சொல்வதில்லை என்றாலும், அவனை கண்டதும் ஒரு சிறு பயம் மனதில் முளைப்பதை அவளால் தடுக்க இயலவில்லை. 'அதுவும் கண்ணா அது...? ஃபயர் பேக்டரின்னு சொல்லலாம்...' என்று தனக்குள் புலம்பியவள்,

"அது இல்ல இன்பா... பசிச்சுச்சு சாப்பிட வந்தேன். அதுக்கு எல்லாரும் என்னை சுத்தி நின்னு, திட்டுறாங்க. என்னை அடிக்க கூட செஞ்சாங்க இன்பா... மாமா கிட்ட கூட கேளுங்களேன்..." என்று உதட்டை பிதுக்கி அழுவது போல் பாவனை செய்ய, பிரபாகர்க்கு தலை சுற்றியது.

தமிழின்பனோ அவளை முறைத்து, "மூடு" என்பது போல வாயை விரல்களால் மறைத்து நக்கலாக பாவனை செய்ய, 'பயபுள்ள, ஆக்டிங்ன்னு கண்டுபிடிச்சுட்டானோ?' என நொந்தவளை, அவன் மேலும் முறைத்து செல்வத்தைப் பார்க்க, அவரோ...

"நான் ரெண்டு நிமிஷத்துல சாப்பாடு கொண்டு வரேன்ய்யா..." என்று பவ்யமாய் கூறியதும், இப்போது மீண்டும் அவனின் தீப்பார்வை அவளைத் தொடர்ந்ததில், அவளுக்குத் தான் சில்லிட்டது.

'ரொம்ப தான் முறைக்கிறான்' என பயந்து கொண்டு அவள் அறைக்கு ஓடிட, அவள் பின்னே வந்

தவன், கோட்டை கழட்டி எறிந்து விட்டு, வேகமாக போனை எடுத்து,

"இன்னொரு தடவை நீ கீழ போன... அன்னைக்கு அவனுக்கு விழுந்த அறை உனக்கு விழும்... எப்போவும் பொறுமையா இருக்க மாட்டேன்." என்று அனுப்பினான் அவளை கடுமையாக பார்வையால் எரித்த படி.

ஏனோ, அவனின் கோபம் அவளுக்கு கண் ணைக் கலங்க வைக்க, "அதுக்காக கீழ கூட போகக் கூடாதா? இது என்ன ஜெயிலா? அவங்க தான் என்னை ரொம்ப மோசமா நடத்துறாங்க. பேசுறாங்க. அப்போ நான் சும்மா இருக்கணுமா?" என்று நியாயமாய் கேள்வி கேட்டு குறுஞ்செய்தி அனுப்பியவளுக்கு, ஒரு சொட்டு கண்ணீர் அவளறியாமல் வெளியில் சிதறிட, அவனோ தன்னை நொந்து பால்கனிக்குச் சென்றான்.

பின் சில நொடிகள் கழித்து, "உனக்கு அவங்களை டீஸ் பண்ணனும்னா நான் இருக்கும்போது கீழ போய் என்ன அளப்பறை வேணா பண்ணு. நான் இல்லா தப்போ போகாத... ப்ளீஸ்!" என அவன் அனுப்பி இருக்க,

அவளுக்கு தான் மேலும் தலை வலித்தது. 'இப்போ இவன் என்னை பேசுன்னு சொல்றானா? பேசாதேன்னு சொல்றானா? ஒரு எழவும் புரியல.'

அதே கோபத்திலும் குழப்பத்திலும், "இனிமே இந்த ரூமை விட்டுப் போனா, என்னைச் செருப் பாலேயே அடிங்க..." என்றவள் போனை டொம்மென வைத்து விட்டு, சோபாவில் அமர, உடனே அவளை வேறு ஒரு குறுஞ்செய்தி தழுவியது.

அதனைக் கண்டவளுக்கோ மேலும் கோபம் வந்தது. “தேவையில்லாம சபதம் விட்டு, என்கிட்ட செருப்படி வாங்காத. உன்னால உன் வாயை வச்சுக்கிட்டு சும்மா இருக்க முடியாது. அப்படி இதான் டீல்ன்னா புது செருப்பு ரெண்டு வாங்கி வச்சுருக்கேன், எப்படி வசதி?” என நக்கலாய் அனுப்பி இருக்க, அவள் வெறியாகி விட்டாள்.

பின், செஞ்சாலும் செய்வானோ? என மிரண்டவள், மெதுவாக, “நான் டீலை வாபஸ் வாங்கிக்கிறேன்.” என்று அனுப்பியதில் அவன் சிரித்து விட்டான்.

அதே நேரம், செல்வமும் உணவு கொண்டு வர, இருவரும் எப்போதும் போல் தனித் தனியாக சாப்பிட்டவர்கள், ஆளுக்கொரு மூலையில் இருக்க, சரியாக தமிழின்பனும் அவளுக்கு குறுஞ்செய்தி அனுப்பினான். அடுத்து சில நிகழ்வுகளை...!

அதனைக் கண்டவள், அவனுக்கு பதில் கூடக் கூறாது மடிக்கணினியில் ஐக்கியமாக, அதோ இதோவென இரவு நேரத்தில் முடித்து விட்டு, அவனுக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

## பெயரிடப்படாத கதை!

## அத்தியாயம் 2

“ஐ ஆம் சுஹானா!” என அவள் தன்னை அறிமுகப் படுத்தியதும்,

“நேசன் அங்கிள் பொண்ணு தான?” எனக் கேட்டான் தலை சாய்த்து.

அவளும் 'ம்ம்' என புன்னகைத்துக் கொள்ள, இருவரும் பங்குதாரர்களுக்குள் நடக்கும் மீட்டிங்கிற்கு விரைந்தனர்.

மிடுக்காய், தோரணையாய் மீட்டிங்கில் தமிழின் பன் பேசிய விதமும், அவன் பேசியதற்கு எதிராய் சில யோசனைகளை கூறிய மற்ற பங்குதாரர்களுக்கு புரியும் படி எடுத்துரைத்த அழுத்தமும், சுஹானாவை கவரத் தவறவில்லை. அவனின் கூர் விழிப்பார்வையும், மற்றவ ரின் கண்ணைப் பார்த்துப் பேசும் பாவனையும், அவன் இதழ்களை விட, அவன் கண்களே அதிகம் பேசுகி றதோ என்றே அவளுக்கு ஒரு சந்தேகம் கூட வந்தது.

“மிஸ். சுஹானா?” என இரண்டாம் முறையாய் தமி ழின்பன் அழுத்தி அவள் பெயரை அழைத்ததுமே நிகழ் காலத்திற்கு வந்தவள்,

“யூ கால்டு மீ?” என்று கேட்டாள் விழி உயர்த்தி. அதுசரி! என மனதினுள் நக்கலடித்துக் கொண்டவன்,

“ஐ கால்டு யூ டுவைஸ்! டு யூ ஹேவ் எனி சஜ்ஜ சன்?” என கேட்டிட,

“நத்திங்!” என்று தோளைக் குலுக்கினாள்.

அவனும் தோளைக் குலுக்கி, மீட்டிங்கை முடித்து வைத்து விட்டு, அவன் அறைக்குச் சென்று விட,

“எக்ஸ்கியூஸ் மீ” என கதவைத் தட்டி விட்டு, சுஹானா உள்ளே வந்தாள்.

“வெல்கம்” என மடிக்கணினியைப் பார்த்தபடி, அவளை வரவேற்றவனை,

“சோ, இங்க எனக்கு வேற எதுவும் வேலை இருக்கா?” எனக் கேட்டாள் கேள்வியாக.

“முதல்ல உட்காருங்க” என்று இருக்கையை காட்ட,

புன்னகைத்த படி அமர்ந்தவள் “ஆக்சுவல்லி இன்னைக்கு என்ன பேசுனீங்கன்னு நான் கவனிக்கவே இல்ல. எனக்கு இதுல இன்டரெஸ்ட்டும் இல்ல. அப்பாவுக்கு பதிலா கண்டிப்பா யாராவது மீட்டிங் அட்டெண்ட் பண்ணனும்னு சொன்னதால வந்தேன். ஏதாவது இம்பார்ட்டண்ட் ஆ பேசிருந்தா, நீங்களே அப்பா கிட்ட சொல்லிடுங்களேன் ப்ளீஸ்” என அவள் பாட்டிற்குப் பேச, அவளை ஒரு நொடி ரசித்தவன்,

“நான் பேசிக்கிறேன் சுஹானா கூல். சோ, நீங்க என்ன பண்றீங்க?” எனக் கேட்டான்.

“நான் ஒரு ஆர்ட்டிஸ்ட். பெயின்டிங் ரொம்பப் பிடிக்கும். சோ, என் கரியரும் அது தான்”

“ஓ! தட்ஸ் நைஸ்!” என இதழ் விரித்தவனை சற்று ரசனையாகப் பார்த்தவள்,

“ம்ம்... கொஞ்சம் ஒர்க் இருக்கு, நான் கிளம்பலாமா?” எனக் கேட்டிட,

“ஸுயூர்...” என்றான் கையைக் கட்டி அவளைப் பார்த்தபடி.

அதில் அவனை விட்டு கண்ணெடுக்காமல் அவள் எழுந்து, “பை தமிழ்” என்று விட்டு வெளியில்

செல்ல, தனக்குள் புன்னகைத்துக் கொண்டு வேலை யைத் தொடர்ந்தான்.

இப்படியே ஒரு வாரம் கடக்க, அன்றும் அலுவல கத்தில் தமிழ் வேலையாக இருக்க, “ஹெலோ தமிழ், மே ஐ கமின்” என்ற சுஹானாவின் குரலில், விருட்டென நிமிர்ந்தவனின் விழிகள் மின்னிட, “

ஹே! கம் கம். என்ன ஒரு அதிசயம்! இன்னைக்கு மீட்டிங் கூட இல்ல. ஆனால், ஆஃபீஸ் வந்துருக்கீங்க?” எனக் கேட்டான் கேலியாக.

“ப்ச், நான் ஒன்னும் மீட்டிங்காக வரல. உங்களை பார்க்கத் தான் வந்தேன்.”

“ரியலி!”

“ம்ம், நாளைக்கு என்னோட பெயின்டிங் எக்சிபி ஷன் அரேஞ்ச் பண்ணிருக்கேன். நீங்க கண்டிப்பா வர ணும்.” என்றவள் அவனுக்கு இன்விடேஷனை நீட்ட,

“வாவ்! கண்டிப்பா வருவேன். ட்ரீட் லாம் இல் லையா?” எனக் கேட்டான் கண் சிமிட்டி.

அதில் குறுஞ்சிரிப்புடன், “அதுக்கு என்ன, பெரிய ட்ரீட் வைச்சுட்டாப் போச்சு” என்றாள் குறும்பாக.

பின் மறுநாள், அவளின் பெயின்டிங் கண்காட் சிக்கு சென்ற தமிழின்பனுக்கு, அவள் வரைந்திருந்த ஓவியங்கள் ஒன்று கூடப் புரியவில்லை. வெளிநாட்டுக் கலாச்சாரத்தை முன்னிறுத்தி ஏதோ வரைந்திருந்தாள். அவள் எதை எதையோ விவரிக்க, இதெல்லாம் முன் னப் பின்ன நம்ம பார்த்ததே இல்லையே... என்று தலை

யைச் சொறிந்தவனுக்கு, அப்போது, தொழிலைத் தவிர, புத்தகம் படிப்பதில் கூட நாட்டம் இருந்தது இல்லை.

வெகு நேரம் மூச்சைப் பிடித்து அங்கிருந்தவன், ஒருவழியாகக் கிளம்பி விட, சுஹானா,

“ஹெலோ தமிழ் சார். என்ன நீங்க பாட்டுக்கு போறீங்க?” எனக் கேட்க,

அவனோ, ‘இப்போ என்ன பண்ணனும்’ என்று விழித்தான்.

அதில் சிரித்து விட்டவள், “ட்ரீட் கேட்டீங்கல்ல? இன்னைக்கு உங்களுக்கு லன்ச் என் கூடத் தான்.” என் றதும்,

“உங்களுக்கு இங்க வேலை...” என்று ஆரம்பித்த தில்,

“கமான் தமிழ். இந்த பார்மாலிட்டி எல்லாம் வேணாம். அண்ட் இங்க மத்த வேலைக்கு ஆள் வச் சுருக்கேன். சோ... நோ ப்ராப்ளம். இங்க இருக்குற பெயிண்டிங்ஸ் பார்த்து உங்களுக்கு தலைவலி வந் துருக்கும். முதல்ல சாப்பிடலாம்.” என கிண்டலாய் உரைத்தவளை, ‘பே’ வெனப் பார்த்தான்.

“இல்ல, இதுக்கு முன்னாடி இந்த மாதிரி எங்கேயும் வந்தது இல்லையா...” என இழுத்தவனிடம்,

“நோ ப்ராப்ளம் தமிழ். என் அப்பாவே இங்க வந்தா, கடுப்பாகிடுவாரு. உங்க மீட்டிங்க்கு நான் வந்து இரிடேட் ஆன மாதிரி...” என்றவளின் பேச்சில் வீழ்ந்தவன், அவள்

விழியுடன் விழிகளை மோத வைக்க, அதில் அவள் தான் திணறி விட்டாள்.

இருவரும் எதுவும் பேசாமலேயே ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட, அப்போது தான் ஏதோ ஞாபகம் வந்தவனாக, “ஆமா, நீ இன்னும் காருக்கு ட்ரைவர் போடலயா?” எனக் கேட்டான்.

“நான் முதல்ல ட்ரைவர் வைக்கலாம்னு தான் நினைச்சேன். அப்புறம் அப்பாவும் அம்மாவும், நானே ஓட்டிப் பழகுனாத் தான் ஊர் பழகும்னு சொன்னாங்க. சோ ஐ அக்ரீட் தட்” என்று தட்டைப் பார்த்து சாப்பிட்டவளுக்கு,

“ஓ” என்ற பதிலைக் கொடுத்தவன், “அப்பா, அம்மா வார்த்தைக்கு இவ்ளோ மரியாதையா? கிரேட்!” என்றான் பாராட்டும் விதத்தில்.

அதற்கு அவளோ, “அம்மா, அப்பான்றதுனால இல்ல. யார் என்ன அட்வைஸ் பண்ணாலும் எனக்கு அது சரியில்லைன்னு தோணுனா, உடனே அப்போஸ் பண்ணுவேன். ஒரு வேளை எனக்கும் ஓகே மாதிரி தோணுச்சுன்னா, அமைதியா யோசிச்சு அக்செப்ட் பண்ணிப்பேன். அது யாரோட அட்வைஸா இருந்தாலும்.” என்றவளை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தவன், எதுவும் பேசாமல் சாப்பிட ஆரம்பித்தான்.

.............................................

**“கருவாச்சி, மீட்டிங் நடக்கும் போது, அவள் என்னை பார்த்தான்னு தான் சொன்னேன். நீயா எக்ஸ்ட்ரா ஃபிட்டிங் போடுற. கண்ணு பேசுது காது பேசு**

துன்னு...” என தமிழரசிக்குக் குறுஞ்செய்தி அனுப்பி னான் முறைப்புடன்.

அவளோ அப்போது தான் உறங்கலாம் எனச் செல்ல, இதனைப் பார்த்து, “அவள் மனசுல என்ன நினைச்சுருப்பான்னு கெஸ் பண்ணேன்... ஏன் தெரி யுமா?” என வினவினாள்.

அவனோ புரியாமல் “ஏன்?” எனக் கேட்க, “ஏன்னா, ஒரு பொண்ணோட மனசு இன்னொரு பொண்ணுக்கு தான் தெரியும்...” என கிண்டலாக அனுப்பியதில், அவனின் முறைப்பு மேலும் அதிகமாகி யது.

அவளோ நேராகவே சென்று “சும்மா முறைக்கா தீங்க. லவ் ஸ்டோரின்னா, இப்படித் தான் மானே தேனே பொன்மானே போட்டு எழுதணும். அதுவும் ட்விஸ்ட்டே இல்லாம, லவ் ஸ்டோரி மொக்கையா இருக்கும், இன்பா. அட்லீஸ்ட் இது கூட இல்லைன்னா...” என்று இழுத்தவளை நோக்கி தலையணையை எறிந்தவன், உறங்கச் சென்று விட,

அவன் விட்டெறிந்த தலையணையை கோபமாக முறைத்தவள், பின், அங்கிருந்த ஒரு பேனாவை எடுத்து அவன் தோளைச் சுரண்டினாள்.

அவன் அதனை தட்டி விட்டு மீண்டும் உறங்க முயல, அவள் மீண்டும் சுரண்டினாள். அவன் அப்போ தும் அதனைத் தட்டி விட்டு, குப்புறப் படுக்க, தமிழரசி விடாமல் சுரண்டியதில் கடுப்பாகத் திரும்பியவன், இப் போது தீயாய் முறைக்க,

அவளோ பாவமாக, "அடுத்து என்ன ஆச்ன்னு இப்போவே சொல்லிடுங்க இன்பா, ப்ளீஸ். நான் வேணா கீழயே போக மாட்டேன். ப்ராமிஸ்!" என்று அவள் தலை யிலேயே கை வைத்து சத்தியம் செய்ய, அவனோ அவளின் செயலில் விளைந்த புன்னகையை அடக்கிக் கொண்டு, அவளுக்கு முதுகு காட்டிப் படுத்தான்.

அதில் வெறியானவள், மீண்டும் நன்றாக பேனாவை வைத்து அவன் முதுகை சுரண்ட, இப்போது, பேனாவோடு சேர்த்து அவள் விரல்களை இறுக்கிப் பிடித்தவன், கண்ணை மூடிக் கொள்ள,

அவள் "ஆ... அம்மா... என் விரலு..." என்று கத்திட, அவனோ அவன் பிடியை விடவே இல்லை.

"ஐயோ! இன்பா வலிக்குது விடுங்க!" என்று கத்தி யவள்,

"சரி, சுரண்ட மாட்டேன். விடுங்க!" என்றதும் தான் கையை விட்டு விட்டு, போர்வையை போர்த்தி உறங்கி விட்டான்.

தமிழரசி தான், 'என்னமோ பெரிய லைலா மஜ்னு... ஜாக் ரோஸ்... இந்த ஒன்னும் இல்லாத காதல் கதைய, பிட்டு பிட்டாச் சொல்றாரு. ஒரு எழுத்தாளருக்கே சஸ் பென்ஸ் கொடுத்து டார்ச்சர் பண்றான்.' என்று முணுமு ணுத்தவள்,

'அடுத்து என்ன ஆகியிருக்கும்? எப்படி டைவர்ஸ் ஆகியிருக்கும்? அந்தப் பொண்ணைப் பார்த்தாலும் நல்ல பொண்ணா தான் தெரியுது. என்ன ஆனாலும் சரி, இவனை அவள் கூட கோர்த்து விட்டுட்டு, நான் இங்க இருந்து எஸ்கேப் ஆகுறேன் டாட்.' என குதூகல

மாக நினைத்தவள், அறியவில்லை 'மனம் ஒரு குரங்கு' என்று.

# அத்தியாயம் - 6

தன்னுள் தமிழின்பனை எப்படியாவது அவனின் முதல் மனைவியுடன் சேர்த்து வைத்து விட்டு, தான் இங்கிருந்து தப்பித்து விட வேண்டும் என பலவா றாக சிந்தித்து, உறங்கிப் போனவள் மறுநாளும் தாமத மாகவே எழுந்திருக்க, அன்றும் அவன் வெளியில் சென் றிருந்தான்.

அதில் “ப்ச், இவன் எப்போ வந்து எப்போ கன் டென்ட் சொல்ல...” என்று சலித்தவள் முகத்தை சுருக் கிக்கொண்டு போனை எடுத்துப் பார்க்க, அதில் வந்த குறுஞ்செய்தி கண்டு விழி விரித்தாள்.

‘வாவ்... காலையிலேயே அனுப்பிட்டானா?’ என உற்சாகமாகி, அதனை வாசித்தவள், அடப்பாவி என்று வாயில் கை வைத்தாள்.

பின் கடுப்பாக, “ஹெலோ, உங்க ரொமான்ஸ் எல் லாம் நாங்க இப்போ கேட்டோமா?” என குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அதற்கு அவனோ, “நீ தேவை இல்லாமல் மானே தேனே பொன்மானே போட்டு எழுதுறதுக்கு, நானே

என்ன நடந்ததுன்னு சொல்லிட்டா, நீ யோசிக்கிற வேலை மிச்சம் தான எழுத்தாளரே!" என்று பதில் அனுப்பி விட,

"அதுக்கு?" என்றவள், தலையில் அடித்துக் கொண்டாள்.

ஆனால் சிறிதும் மனதளவிலும் அவனை அவள் கணவனாக எண்ணவே இல்லை. அதனாலேயே மிக வும் சாதாரணமாக எடுத்துக் கொண்டவளுக்கு, அவன் காதல் கதை சுவாரஸ்யமாகவே இருந்தது.

பின் கொடுமைடா, என்று சலித்துக் கொண்டவள் அடுத்த அத்தியாயத்தை எழுத ஆரம்பித்தாள்.

## பெயரிடப்படாத கதை!

## அத்தியாயம் 3

அந்த சந்திப்பின் பிறகு, சுஹானாவும் தமிழின்பனும், வேண்டும் என்றோ அல்லது எதேச்சையாகவோ சந் திப்பை ஏற்படுத்திக் கொண்டு நட்பாகி விட்டனர். அவள், அவன் வீட்டிற்கு வந்து, அவனுடன் சாப்பி டும் அளவுக்கு வர, அனைவரிடமும் நன்முறையிலேயே பழகினாள். அதுவும் தொழிலின் பங்குதாரரின் மகள் ஆயிற்றே என்று, வீட்டினரும் அவளை விழுந்து விழுந்து கவனிக்க, அவள் நாசுக்காக அனைவரிடமும் தள்ளியே இருந்தாள்.

வெளிநாட்டில் படித்தாலும், பணக்காரியாய் இருந் தாலும் சற்று எளிமையாகவே இருப்பவளிடம் தமிழின்ப னின் மனம் விழ ஆரம்பித்தது.

அவளும் தான், அவனுடனான முதல் சந்திப்பிலேயே தமிழின்பனின் மேல் மையல் கொள்ள, அதனை உணர்ந்தவன்,

"அப்புறம் சுஹா, நெக்ஸ்ட் என்ன பிளான்?" எனக் கேட்டான் எதார்த்தமாகக் கேட்பது போல்.

"ம்ம், நெக்ஸ்ட் என்ன? இப்போதைக்கு ஃபாரீன் போற ஐடியா இல்ல. மேல படிக்கப் போறதும் இல்ல. கரியர் ஒரு பக்கம் போயிட்டு இருக்கு... அப்புறம்" என்று இழுக்க,

"ம்ம்... அப்புறம்..." என்றான் குறும்பாக.

"அப்புறம் என்ன...? யாராவது ஒரு இளிச்சவாயன் கிடைச்சா லவ் பண்ணி, கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தான்!" என்றாள் அவனைப் பாராமல்.

அவன் பதில் கூறாமல் புருவத்தை மட்டும் உயர்த்தி கேலியாகப் பார்க்க,

அவள் நகத்தை கடித்துக்கொண்டு, "அப்புறம், நீங்க என்ன பண்ணப் போறீங்க...?" என்றாள் கேள்வியாக.

"ம்ம்... நான் என்ன பண்ண... எனக்கும் ஒரு இளிச்சவாய் கிடைக்காமையா போய்டுவா? அவளை லவ் பண்ணி, கல்யாணம் பண்ணி..." என்று இழுத்தபடி அவளை காதலாய் பார்க்க,

முகம் சிவந்தவள், "யூ... நான் உனக்கு இளிச்ச வாயா?" என்று அடிக்க ஆரம்பிக்க,

அவனோ குறுஞ்சிரிப்புடன், அவள் கரங்களை வளைத்து அவளுக்கு பின்னால் வைத்து,

"ஆமா, எனக்கு கிடைச்ச இளிச்சவாய் நீ தான் சுஹா..." என்று கண்ணடித்தவன், அவள் உணரும் முன் அவள் கன்னத்தில் இதழ் பதித்திருந்தான்.

..............................

"கருமம் கருமம்... எவ்ளோ பெரிய எழுத்தாளர் ஆகலாம்னு நினைச்சோம். கடைசியில இப்படி ஒரு இத்துப்போன கதை எழுதுவோம்னு நினைக்கவே இல்ல. ஆனால் சும்மா சொல்லக் கூடாது, ரொம்ப ரசிச்சு லவ் பண்ணிருக்கான்..." என்று பெருமூச்சு விட்டவள்,

ஆனால், 'ஏன் டைவர்ஸ் ஆச்சு...?' என்று தான் குழம்பினாள்.

'இவன் சொல்றதைப் பார்த்தா, வீட்ல இருக்குறவங்க இவளை தாங்கத் தான் செஞ்சுருக்காங்க. அப்போ வீட்டுல இருக்குறவங்களால விவாகரத்து ஆகலையா?' என்று குழம்பி,

"இன்பா" என குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அவன் "ம்ம்" என்றிட,

"அடுத்து என்னன்னு சொல்லுங்க ப்ளீஸ்." என்றாள் பாவமாக.

"மீதி நாளைக்கு... இன்னைக்கு எனக்கு ஒர்க் இருக்கு" என்று அவன் அனுப்பிய குறுஞ்செய்தியை வெறியாய் முறைத்தாள். பின் அவனும் இல்லாமல் பால்

கனியிலேயே அவளின் அந்நாள் பொழுது ஓடிட, வந்தவன் அவளைப் பாராமல், சாப்பிடவும் செய்யாமல் அப்படியே உறங்கி விட்டான்.

மறுநாள், வெகுநேரம் கழித்தும் அவன் எழாமல் இருக்க, அன்றென்று பார்த்து சீக்கிரமாய் விழிப்பு தட்டியவளுக்கு, 'என்னை குழப்பத்துல சுத்த விட்டுட்டு, இவன் நல்லா தூங்குறான்...' என்று மனதில் வறுத்தாள். ஜன்னல் திரைச்சீலையை நன்றாக திறந்து விட்டு, வெளிச்சத்தை அவன் முகத்தில் படர விட, அவன் அப்போதும் உறக்கம் கலையவில்லை.

'என்ன இவன் எந்திரிக்க மாட்டேங்கிறான்?' என கடுப்பானவள், சிறிது நீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்து விட,

அதில் சட்டென எழுந்தவன், "ப்ச்" என உச்சுக் கொட்டி, அவளைக் கொலை வெறியுடன் பார்த்தவன், பின் தலையில் இரு கை வைத்து அழுத்தினான்.

அவன் கண்கள் சிவந்து, முகம் களைப்பாக இருப்பதை உணர்ந்தவள், 'சே! நல்லா தூங்கும் போது எழுப்பிட்டோமோ?' என வருந்தி,

"சாரி... நீங்க தூங்குங்க!" என்றதில்,

'எழுப்பி விட்டுட்டு தூங்கவாம் கருவாச்சி...' என உள்ளுக்குள் அவளை வெகுவாய் திட்டியவன், குளியலறைக்குள் புகுந்து கொள்ள,

'போனா போகுதுன்னு சாரி கேட்டா ரொம்ப தான்...' என சிலுப்பிக் கொண்டவள், அவன் குளியலறையில் இருந்து வந்ததும், செல்வம் கொண்டு வந்த

காபியை கப்பில் ஊற்றி அவன் முன் நீட்ட, தமிழின்பன் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து, அதனை வாங்கிக் கொண்டான்.

காபியுடன் பால்கனியில் சிறிது நேரம் நின்றவனை, "இன்பா" என அழைக்க, அவன் திரும்பி என்னவென்று பார்த்தான்.

"டிபன் சாப்பிடல..." என்றவள்,

"சாப்பிடுவோமா?" எனக் கேட்க,

'என்ன இன்னைக்கு கவனிப்பு எல்லாம் பலமா இருக்கு!' என அவளை யோசனையாய் பார்க்க,

"ஈஈ... அது ஒன்னும் இல்ல இன்பா. நீங்க அன்னைக்கு சொன்னீங்கள்ள... நீங்க இருக்கும் போது கீழ போகலாம்னு. காலைல நீங்க தூங்கிட்டு இருந்தீங்களா! அப்போ எனக்கு போர் அடிச்சுச்சா... சோ நான் கீழ போனேனா!" என கதையாய் அளக்க,

அவனோ கையை கட்டி, தலையை சாய்த்து 'என்ன பண்ணி தொலைச்சான்னு தெரியலையே?' என்று நொந்து அவளை பார்த்திருந்தான்.

"நான் ஒன்னும் பண்ணல இன்பா. உங்க தம்பி இருக்காருல்ல. அவரு பேரு கூட என்னமோ..." என்று யோசித்தவளை,

'அடிப்பாவி கதைல எல்லார் பேரையும் புட்டு புட்டு வைச்சுட்டு, ஒன்னும் தெரியாதவ மாதிரி நடிக்கிறதப் பாரு!' என்று நக்கலடித்துக் கொண்டவன், என்ன தான் சொல்றான்னு பார்ப்போம் என்று அமைதி காத்தான்.

‘இப்போவாச்சு என்ன நடந்துச்சுன்னு வாயை திறந்து கேட்குறானா பாரேன்...? வாயில கொழுக்கட்டையா வச்சிருக்கான்...’ என்று அவன் கேட்கும் படியே முணுமுணுக்க, அவனோ அசையாமல் நின்றிருந்தான்.

இறுதியில் அவளே, வேறு வழியில்லாமல், “காலைல உங்க தம்பி லோகேஷ் தோட்டத்துல போன் பேசிட்டு இருந்தாரா, நான் அங்க வாக்கிங் போனேனா? அதுக்கு அவரு என்னை நீ எதுக்கு இங்க வந்தன்னு எப்போவும் போல டயலாக் பேசுனாரா!” என்று இழுக்க, அவனோ ஊஃப் என பெருமூச்சு விட்டு, நெற்றியை தேய்த்தான்.

கூடவே, அவளை கூர்மையாகப் பார்க்க, “சரி சரி நான் நேரடியா விஷயத்துக்கு வரேன். அப்போ எனக்கும் அவருக்கும் பேச்சு வார்த்தை அதிகமாகி, நான் அவரை நல்லா திட்டி விட்டுட்டேன். அதுக்கு என்னமோ... என் அப்பாகிட்ட சொல்ல போறேன், என் அம்மா கிட்ட சொல்ல போறேன்னு ஏதோ ஸ்கூல் நடத்துற மாதிரி பேசுறாங்க. எப்படியும் என் அப்பா கிட்ட பேசுனா பெரிய பிரச்சனை வரும். அப்புறம் சண்டை வரும். அந்த சண்டையில என்ன ஆகும்? என்னை வீட்டை விட்டு அனுப்பிடுவாங்க. அப்புறம் கதை பாதியில நிக்கும். சோ இப்போவே மொத்த கதையும் சொல்லிடுறீங்களா? அட்லீஸ்ட் இங்க வந்ததுக்கு ஒரு கதையாவது பிரயோஜனமா இருக்கணும்ல...” என்று வெகு சிரத்தையாய் நியாயமாய் தலையை ஆட்டிப் பேசியவளை,

‘ப்பா... இது வாயா இல்ல ரேடியோ வா... நிறுத்தாம பேசுது... கருவாச்சிக்கு எவ்ளோ கொழுப்பு பாரு’ என நொந்தவன், தலையில் அடித்துக் கொண்டு கீழிறங்கிச் சென்றான்.

'ஐயோ இவன் எங்க போறான்? ப்ச்!' என்று கன்னத்தில் கை வைத்து அமர்ந்தவளுக்கு, அவளின் அப்பாவே போன் செய்ய "போச்சா..." என்று போனை எடுத்து காதில் வைத்தாள்.

அவரோ காது ஜவ்வே கிழியும் படி திட்டிட, இதில் ரேவதி வேறு புகுந்த வீட்டில் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுரை வேறு கூறினார்.

இவள், "புகுந்த வீடுன்னா வாழலாம், இது ஏதோ ஆல்ரெடி புதைஞ்ச வீடு மாதிரி இருக்கு. இங்க எப்படிடா வாழ முடியும்..." என்று நொந்தவள்,

இறுதியாக, "மாப்பிள்ளை, வீட்ல இருக்குறவங்களை உன்னை ஒன்னும் சொல்லக் கூடாதுன்னு அதட்டி வச்சுருக்கிறதுனால தான், எல்லாரும் சும்மா இருந்தாங்க. இல்லைன்னா, உன்னை இங்க வச்சுருக்கவே மாட்டாங்க. இனிமேயாச்சு பார்த்து பக்குவமா நடந்துக்க" என்று போனை வைக்க,

அப்போது தான் உள்ளே நுழைந்த தமிழின்பனை அவள் முறைத்துப் பார்த்தாள், 'இந்த சோசியல் சர்விஸ் எல்லாம் உன்னை பண்ணச் சொன்னேனா?' என்று.

அவனோ அதை கண்டுகொள்ளாமல், பால்கனியில் சென்று அமர, 'இவன் தான் இவன் மனசுல என்ன தான் நினைச்சுட்டு இருக்கான்.' என்று சரமாரியாக திட்டியவளுக்கு, அவனின் குறுஞ்செய்தி ஒன்று தழுவியது. அது அவன் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்வுகள் தான்.

அதனைக் கண்டவள், மற்றவை மறந்து புருவம் சுருக்கி அவன் இருந்த திசையைப் பார்க்க, 'ஓ ஒரு வேளை இதுனால தான் சண்டை வந்துச்சோ?' என்று

தீவிர சிந்தனையில் இருந்தவள், அடுத்த அத்தியாயத் திற்கு ஆயத்தமானாள்.

## பெயரிடப்படாத கதை!

## அத்தியாயம் 4

தமிழின்பனும் சுஹானாவும் காதலை பகிர்ந்து, காதல் ஜோடிகளாக வலம் வர ஆரம்பித்தனர். அவளுக் காக இவனும், இவனுக்காக அவளும் என்று இருவரும் மிகவும் அன்புடனே இருந்தனர். அவனின் வீட்டு நில வரம், அவனின் தாய் பற்றி என அனைத்தும் அவளிடம் பகிர்ந்து கொண்டவனிடம்,

"உன் வீட்ல செட் ஆகுறது கொஞ்சம் கஷ்டம் தான். பட் கொஞ்சம் வருஷம் ஆகலாம். அது வரை அட் ஜஸ்ட் பண்ணிக்கணும்." என்றாள் கட்டளையாக.

அதில் புன்னகை புரிந்தவன், "தாராளமா!" என் றான் அவளை ரசித்தபடி.

அதன் பின், இரு வீட்டிலும் கூறி, அடுத்த மாதத்தி லேயே திருமணமும் வைத்தனர். 'நேசனுக்கு தன் மக ளும், மருமகனுமே, தனக்கு பிறகு தனது பங்கை பார்த் துக் கொள்வர்' என்றெண்ணி அவரும் சம்மதித்தார்.

பிரபாகர் பெரியதாக தன் மகன் செய்யும் எதிலும் தலையிடுவது கிடையாது. இனியாள் இருக்கும் போதும் சரி, சென்ற பிறகும் சரி, அங்கு ஒரு வேடிக்கையாளராய் தான் இருப்பார். ஒரு விதத்தில் சரியான முடிவு எடுக்க முடியாது என்ற எண்ணமும், மேலும் அவன் எது செய்தா லும் சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையும்.

பண விஷயத்திலும் எல்லாமே அவன் பெயரிலேயே இருந்தது. முதலில் யார் எப்போது பணம் கேட்டாலும் உடனே கொடுத்து விடுவான் என்றாலும், அதன் பிறகு, அதையே காரணமாய் வைத்து, அங்கிருந்த அனைவரும் பணத்தை தேவையில்லாததற்கு தண்ணியாக செலவழிப்பதை உணர்ந்து, ஆயிரம் கேள்விகளை கேட்டு விட்டே கொடுக்கலானான். அதுவும் தம்பி தங்கைகளிடம் மட்டும். ஷெண்பா திருமணம் ஆகியதும், கணவன் வேலைக்காக வெளிநாடு சென்று விட, புகுந்த வீட்டில் சண்டை இட்டு விட்டு, அங்கேயே தான் இருக்கிறாள். அதற்காக அவளை கடிந்து கொள்ளவும், அவன் தவறவில்லை.

“மச்சான், நீ இப்படி பொசுக்குன்னு கல்யாணம் பண்ண போறேன்னு, பேச்சுலர் பார்ட்டி கொடுப்பன்னு நான் நினைக்கவே இல்லைடா. அதுவும் இவ்ளோ லேட்டாவாடா சொல்லுவ? முன்னாடியே சொல்லிருந்தா ஒரு வாரத்துக்கு முன்னாடியே வந்துருப்போம்ல. இப்போ கடைசி நேரத்தில அடிச்சு பிடிச்சு ஓடி வந்தோம். லாஸ்ட் மினிட்ல பிளைட் கான்செல் ஆகிருந்தா என்ன ஆகியிருக்கும்?” என்று மூச்சிரைக்க, அந்த மாடர்ன் பாரில் அமர்ந்து, தமிழின்பனை முறைத்திருந்தான் அவனின் உயிர் நண்பனில் ஒருவனான மகத்.

“அட! அதான் வந்துட்டீங்கள்ல அப்புறம் ஏண்டா பீர் அடிக்கிறதுக்கு முன்னாடியே புலம்புற?” என்றவனை மகத் முறைக்க,

அவனின் மற்றொரு தோழன் ஷ்யாம் “பேசுடா பேசு. ஏன் பேச மாட்ட. உனக்கு பேசச் சொல்லியா தரணும். இருந்தாலும் லவ் பண்ணதைக் கூட, எங்க

கிட்ட சொல்லணும்னு தோணலையா?” என்று மேலும் முறைத்தான்.

அதில் தமிழின்பன் தான், “ஐயோ எல்லாம் சடனா நடந்துருச்சுடா... அதோட, மேரேஜ் உடனே வச்சதால” என்று பேசும் போதே,

மகத், “போதும் உன் விளக்கம்” என்றான் சிலுப்பிக் கொண்டு.

“சரிங்க டாக்டரே. கோபப்படாம இதை குடிங்க” என்று பீரை அவன் வாயில் ஊற்றப் போக,

“அட சே! இந்தக் கருமத்தை, நான் எப்போ குடிச் சுருக்கேன்.” என்றான் முகத்தைச் சுளித்து.

அதில் ஷ்யாம், “ஹேறா! அப்போ நாங்க மட்டும் என் னவாம். டெய்லி தண்ணி அடிச்சுட்டா இருக்கோம். அது வும் வெளிநாட்டு ஃபிகரை கல்யாணம் பண்ணிக் கூட, நான் ஒரு டீ டோட்டலர் டா...” என்றான் சட்டை கால ரைத் தூக்கி விட்டு.

மகத் ஆஸ்திரேலியாவில் மருத்துவனாக பணி புரிய, ஷ்யாம், ஒரு கம்ப்பியூட்டர் நிறுவனத்தில் வேலை செய்கிறான் அதே ஆஸ்திரேலியாவில். அங்கேயே இருக்கும் வெளிநாட்டு பெண்ணான ரேச்சலை திரும ணம் செய்து 12 மாதங்கள் ஆகிறது.

தமிழின்பனோ, “அப்புறம் நான் மட்டும் என்ன குடி காரனா?” இருவரையும் முறைக்க,

மகத், “நீ ஒரு பச்சை மண்ணுடா...” என்றான் நக்க லாக. அதில் மூவரும் சிரித்து விளையாடிட,

தமிழ் "நான் மத்த ஃப்ரெண்ட்ஸ்காகத் தான் இந்த பிளேஸ் பிக்ஸ் பண்ணேன். அவங்க என்ஜாய் பண்ணட்டும் நம்ம வெளிய போகலாம்." என மற்ற நண்பர்களிடம் வெளியில் செல்வதாகக் கூறி விட்டு, மூவரும் தள்ளு வண்டியில் குல்பி ஐஸ் வாங்கி சாப்பிட்டுக் கொண்டே, யாருமற்ற சாலையில் தங்கள் நட்புலகில் சஞ்சரித்தனர்.

பின், மறுநாள் ரிசப்ஷனிலும் தன் நண்பனை கேலி செய்து ஒரு வழி ஆக்கினர். அவனோ இவர்களை கண்டு கொள்ளாது,

சுஹானாவிடம், "கால் வலிக்குதா சுஹா. கொஞ்சம் நேரம் உட்காருறீயா?" என்று தாங்க,

அவள் "பரவாயில்ல தமிழ். ஐ ஆம் ஓகே. ட்ரெஸ் தான் கொஞ்சம் வெயிட் ஆ இருக்கு" என்றதில், உடனே வேறு ஆடையை உடுத்தச் சொல்லி அனுப்பினான்.

"ஆஅஹ்ஹான் ஆஆஅஹ்ஹான்..." என்று மகத்தும், ஷ்யாமும் மேடையில் நின்று, இவர்களின் அலும்பில் கத்தி கூச்சல் போட என்று அந்நாள் சிறப்பாகக் கழிந்து, மறுநாள் தன் காதல் துணையை, அவனின் துணைவி ஆக்கினான்.

ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்தவளுக்கு முதலில் பெரிய குடும்பத்தைக் கொண்ட அவ்வீட்டில் பொருந்த, சற்று தடுமாற்றம் இருந்தாலும், நாட்கள் செல்லச் செல்ல ஒருவாறாக பழகிக் கொண்டாள். தமிழின்பனின் மேல் இருக்கும் பயத்தில், அவளை யாரும் தொந்தரவு செய்யவும் இல்லாததால், அவர்களின் கொஞ்சலும் மிஞ்சலும் சீராகவே சென்றது.

யார் என்ன செய்தாலும், மனைவியின் முன்பு ஒரு நாளும் அவன் குடும்பத்தை விட்டுக் கொடுத்ததில்லை. அடுத்த ஆறு மாதங்களும் காதல் ஜோடிகளுக்கு நாட்கள் மின்னல் வேகத்தில் நகர்ந்தது. சில நேரத்தில் சில விஷயங்களுக்கு அவள் பிடிவாதமாக இருந்தாலும், அவன் அதனையும் ஏற்றுக் கொள்வான். ஆனால் இருவருக்குள்ளும் முதல் சண்டை அன்று தான் வந்தது.

தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த சுஹானாவை கண்டவன் பதறி,

"என்ன ஆச்சு சுஹா? ஏன் இப்படி உட்கார்ந்துருக்க?" எனக் கேட்க,

"தலைவலிக்குது தமிழ். யூ நோ, நாள் தள்ளி போயிருக்கு."

அவன் விழி விரித்து, "நிஜமாவா? அப்போ வா ஹாஸ்பிடல் போய் கன்பார்ம் பண்ணலாம்." என்று துள்ளிக் குதித்தான்.

"கடுப்பைக் கிளப்பாத தமிழ். கல்யாணம் ஆகியே ஆறு மாசம் தான ஆகுது. அதுக்குள்ள..." என்று புருவம் சுருக்கிப் பேசியவளைக் கண்டவன்,

"என்ன பேசுற சுஹா. இதெல்லாம் பிளான் பண்ணி லைஃப்ல வராது. கடவுளா கொடுக்குறது. அதை நம்ம அக்செப்ட் பண்ணி தான் ஆகணும்." என்றான் பொறுமையாக.

பின், "உனக்கு உடம்பு சரி இல்லாததால் இப்படித் தோணுது. ஹாஸ்பிடல் போய் டேப்லெட்ஸ் வாங்கிச்

சாப்பிட்டா, சரி ஆகிடும். வா!" என்று அவளை பரிவாய் அழைக்க,

"ப்ச், ஹாஸ்பிடல் வரேன். ஆனால் அப்படி கன் பார்ம் ஆனா அபார்ஷன் பண்ணிடுவேன்." என்றதில், சுள்ளென எழுந்த கோபத்தில் சட்டென அடித்து விட் டான்.

அவனிடம் இருந்து இதனை எதிர்பாராதவள் கன் னத்தில் கை வைத்துத் திகைத்துப் பார்க்க,

அவனோ ஐயோ என தன்னை நொந்து, "சாரி சாரி சாரி சுஹா. நீ படிச்ச பொண்ணு தான. என்ன பேசுறன்னு தெரிஞ்சு தான் பேசுறியா? வெரி சாரிடா..." என்று அவள் கன்னத்தை வருட,

அதில் விருட்டென எழுந்தவள், "என்னையவே அடிச்சட்டல்ல... உன் அத்தையும் என் அம்மாவும் சொன்னது கரெக்ட் தான்..." என்றாள் சம்பந்தம் இல்லா மல்.

அவனோ இப்படி அடித்து விட்டோமே என வருந் தியிருந்தவன், இப்போது புரியாமல் "அவங்க என்ன சொன்னாங்க?" என்றான் கூர்மையாக.

"உன் பத்மா அத்தை தான், குழந்தை எல் லாம் இப்போ வேணாம். ரெண்டு வருஷம் போகட்டும். அப்போ தான் ஒருத்தருக்கொருத்தர் புரிஞ்சுக்க முடி யும். அதோட குழந்தை பிறந்தா, நீ அப்படியே மாறிடுவ. இப்போ மாதிரி நீ இருக்க மாட்டன்னு சொன்னாங்க!" என்று அவள் கூறியதைக் கேட்டவனுக்குத் தான், அழு வதா சிரிப்பதா என்றே புரியவில்லை.

அவளை நெருங்கி அவள் கன்னத்தைத் தாங்கியவன், "லூசு பொண்டாட்டி, அவங்க தான் ஏதோ உளறுறாங்கன்னா... நீயும் கேட்டுட்டுகிட்டு இருக்க. சொந்தமா யோசிக்க மாட்டியா? குழந்தை வந்தா, உன் மேல இருக்குற பாசம் எப்படி கம்மியாகும். அதோட இப்போ என்ன, நம்ம புரிஞ்சுக்காமயா இருக்கோம். அவங்க சும்மா எதையாவது சொல்லுவாங்க. அதெல்லாம் பெரிய விஷயமா எடுத்துக்கக் கூடாது..." என அவளுக்கு எடுத்து உரைத்தவனுக்கு பத்மாவின் மேல் கடுங்கோபம் வந்தது.

அவளோ, அவனைத் தள்ளி விட்டு, "ப்ச், சொந்தமா கூட யோசிக்கத் தெரியாத முட்டாள்னு சொல்றியா, தமிழ் என்னை? நான் ஏற்கனவே இப்போ குழந்தை வேணாம்னு தான் யோசிச்சு வச்சுருந்தேன். அதோட, நான் ஒன்னும் அவங்க சொன்னதை உடனே கேட்கல. என் அம்மாகிட்ட கேட்டப்போ, அவங்க கூட அதையே தான் சொன்னாங்க. அவங்க சொன்னதும் உண்மையா தான போச்சு. குழந்தைனு பேர் சொல்லவும் என்னை அடிக்கிற அளவுக்கு போயிட்டல்ல..." என்றவளை,

"இங்க பாரு சுஹா, யாரு என்ன வேணா சொல்லட்டும். ஆனால் குழந்தையை பத்தி முடிவெடுக்க வேண்டியது நீயும் நானும். அதெப்படி என்கிட்ட கேட்காம, இதை பத்தி நீயா முடிவெடுக்கலாம்..." என்றான் கடுப்புடன்.

"நீயா பெத்துக்கப் போற. நான் தான பெத்துக்கப் போறேன். அப்போ நான் தான் முடிவெடுப்பேன்..." என்றவள் கோபமாக வெளியில் சென்றிட,

தமிழின்பனுக்கு தான் தலை சுற்றியது. அவனுக்கு சில நொடிகளில் என்ன நடந்தது என்று கூட புரிய வில்லை. ஆனால், 'இவள் எப்படித் தான் வெளிநாடு சென்று படித்தாளோ? தானாக சிந்திக்கும் அறிவற்று, இப்படி குழம்புகிறாளே...? இதில் உடன் இருப்பவர்கள் வேறு...' என்று நொந்தவன் தான் இப்போது செய்வதறி யாது திகைத்திருந்தான்.

..............................

இதனை எழுதி முடித்தவளுக்கோ, மேலும் தலை சுற்றியது. 'லூசுப்பயலே! அந்தப் பொண்ணை எடுத்த தும் அடிச்சுட்டு, அப்புறம் சாரி சுஹா, பூரி சுஹான்னு சொல்லிட்டு இருக்கான். பொறுமையாதான் பேசுனா என்னவாம். சரி, இதுக்கு அப்புறம் என்ன ஆச்சுன்னு அவன் கிட்ட கேட்போமா? இல்லை நம்மளே எழுதிடு வோமா? எப்படியும், அடுத்து அவள் அபார்ஷன் பண்ண ட்ரை பண்ணிருப்பா, இவன் சண்டை போட்டு கடை சியில டைவர்ஸ் ஆகியிருக்கும். அட போங்கடா... இது ஒரு கதைன்னு இதை வேற நான் எழுதணும்!' என்று நினைத்தவள், தமிழின்பன் இருந்த திசையைக் காண, அவன் இறுக்கத்துடன் பால்கனியில் இருந்த பூச்செடி களை வெறித்துக் கொண்டு இருப்பதைக் கண்டாள்.

'ஆனால், இவனைப் பார்த்தா, இதுக்காக டைவர்ஸ் பண்ற மாதிரியும் தெரியல.' என்றெண்ணிய வள், அவனுக்கு அந்த அத்தியாயத்தை அனுப்பி விட்டு விட்டு, அவனை சாப்பிட அழைக்க, அன்று மறுக்காமல் அவனும் வந்து விட்டான்.

இருவரும் சாப்பிடும் போது, தமிழரசியின் போன் அலற, "நிம்மதியா சாப்பிட விடாம யாருடா அது?" என்

றவள், போனை லௌட் ஸ்பீக்கரில் போட்டத்தில், எதிர் முனையில் சந்தனா,

"தமிழு, உனக்கு ஒரு குட் நியூஸ். நீ அந்த பேய் பங்களால பத்து நாள் இருக்க வேண்டிய அவசியமே இல்லை. கிரேட் எஸ்கேப்..." என்று கூறிக்கொண்டே செல்ல, தமிழரசிக்கு, தான் உண்ணும் உணவு, தொண்டையில் சிக்கி லொக்கு லொக்கு என இரும ஆரம்பித்தாள்.

தமிழின்பனோ, விழி உயர்த்தி அவளை முறைத்துப் பார்க்க, அவள் தான் 'அடிப்பாதகத்தி, கோர்த்து விட்டுட்டாளே!' என புலம்பிக்கொண்டு, போனை அணைத்து வைத்து விட, அவன், 'கருவாச்சி இதை பேய் பங்களான்னு எல்லார்கிட்டயும் சொல்லி வைச்சுருக்கியா?' என்று மனதினுள் அவளை வறுத்திருந்தவன், மீண்டும் அவள் போன் அடிப்பதைக் கண்டு, அவள் எடுக்கும் முன் அவன் எடுத்திருந்தான்.

போனை லௌட் ஸ்பீக்கரில் போட்டு விட்டு, எதுவும் தெரியாதவன் போல் சாப்பிட, அவளோ பெக்க பெக்க என விழித்தாள்.

மீண்டும் சந்து தான், "தமிழு, உன் வீட்டுப் பிசாசு, காட்டேரி, குட்டி சாத்தான் கிட்ட இருந்து எல்லாம் சீக்கிரம் தப்பிக்க ஒரு வாய்ப்பு. ஹி ஹி... ஸ்ட்ரைக்க வாபஸ் வாங்கி விட்டாங்க. நாளைல இருந்து காலேஜ் ஓபன் ஆகுதாம். நாளைக்கு சீக்கிரம் வந்து சேரு. நம்ம கேன்டீன் போய் இதை என்ஜாய் பண்றோம்.'

தமிழ் "ம்ம்ஹும்...?" என்று வில்லாய் வளைந்த புருவத்தை தூக்கி நக்கலாய் வினவ, அழுத்தமாய் ஒரு

ஆண் குரல் கேட்டதில், சந்தனா தான் மிரண்டு போனை பட்டென வைத்து விட்டாள்.

தமிழரசியோ, அவன் "ம்ம்" யிலேயே அரண்டு அவனையே பார்த்திருந்தாள்.

# அத்தியாயம் – 7

உணவை வாயில் வைத்து விட்டு தமிழரசி திருதிருவென விழிக்க, அவளை ஆழமாய் ஒரு பார்வை பார்த்த தமிழின்பன், முறைத்தபடி போனை டேபிளில் டொம்மென வைத்து விட்டு, கிளம்பி வெளியில் சென் றான்.

‘ப்பா... நல்லவேளை இவன் பேசல. ஒரு ம்ம் க்கே, எனக்கு ஹார்ட் வெளிய வந்து  விழுந்துடும் போல பயத் துல...’ என்றெண்ணியவள், சிறிது நேரத்தில் சற்று சாந்த மாக,

அதன் பிறகே ‘என்னது நாளைக்கு காலேஜா’!’ என்று அதிர்ந்து.

“இன்பா” என குறுஞ்செய்தி அனுப்பினாள்.

“ம்ம்” என அவனிடம் இருந்து பதில் வரவும்,

“நாளைக்கு காலேஜ்...” என்றாள் அமைதியாக.

“ரொம்ப நல்லது போயிட்டு வா” என்று அவன் கும் பிடு போட்ட ஸ்மைலி ஒன்றை அனுப்ப, அதில் கடுப்பா னவள்,

“ப்ச், நாளைக்கு காலேஜ் போய்ட்டா எப்படி கதை கேட்க? என்னால சஸ்பென்ஸ் ஓட க்ளாஸ்ல கான் சென்ட்ரேட் பண்ண முடியாது. இது உங்க கதை பிரச் சனை மட்டும் இல்ல. என் படிப்புப் பிரச்சனை. அப்படியே மொத்தக் கதையும் சொல்லிடுங்க இன்பா. ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ்...” என்று அனுப்ப, அவன் சில நிமிடம் சிந்தித்து விட்டு,

“ம்ம்” என்றான்.

“ஐ! தேங்க்ஸ் தேங்க்ஸ்... சீக்கிரம் பொறுமையா அனுப்புங்க. இல்லைனா ஒரு வாய்ஸ் மெஸேஜ் கூட அனுப்புங்க, நான் கேட்டு எழுதிக்கிறேன்...”

“நான் இதுலயே அனுப்புறேன்...” என்றான் விடாப் பிடியாக.

பின் எப்படியோ அனுப்பினால் சரி தான், என் றெண்ணி அவள் கன்னத்தில் கை வைத்து அமர்ந்தி ருக்க, கிட்டதட்ட இரண்டு மணி நேரம் கழித்து அனுப் பினான். அதனை ஆர்வமாகப் படிக்க ஆரம்பித்தவளின் முகம், முதலில் சுவாரஸ்யமாகி... பின், திடுக்கிட்டு, இறு தியில் கண்ணீர் முத்தொன்று அவள் கண்ணை விட்டு பிரிந்து வந்தது.

## பெயரிடப்படாத கதை

## அத்தியாயம் 5

சுஹானா பேசியதில், செய்வதறியாமல் திகைத்திருந்த தமிழின்பன், வெகு நேரம் அப்படியே அமர்ந்திருக்க, சுஹானா மீண்டும் உள்ளே வந்தாள். அவனை முறைத்து விட்டு, அவளின் கைப்பையை எடுத்துக் கொண்டவள் மீண்டும் வெளியில் செல்லப் போக, அவன் அவள் கையைப் பிடித்தான்.

"சுஹா, ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி சாரி. நீ அபார்ஷன்னு சொன்னதும் தான் எனக்கு கோபம் வந்துடுச்சு. ப்ளீஸ் சுஹா நான் சொல்றதை ரெண்டு நிமிஷம் கேளேன்" என பரிவாய் கூறிட, அவள் அமைதியாக நின்றாள்.

"இங்க பாரு சுஹா. எனக்கு உன்னைத் தவிர வேற எதுவும் முக்கியம் இல்ல. குழந்தை எல்லாம் ரெண்டாம் பட்சம் தான். உனக்கு இப்போ வேணாம்னு தோணுனா, நம்ம பேசி டிசைட் பண்ணலாம். எனக்கு உன் முடிவு தான், என் முடிவும். நீ மென்டலா பேபிக்கு ப்ரிப்பேர் ஆனதும், நம்ம பேபி பெத்துக்கலாம். ஆனால், இது எல்லாமே, நம்ம ரெண்டு பேர் மட்டும் எடுக்குற முடிவா இருக்கணும். உன் அம்மா, என் அத்தை கூட இதுல மூணாவது மனுசங்க தான். சொல்ற அட்வைஸ் எடுத்துக்கலாம். ஆனால், எல்லாத்தையும் தலையில ஏத்த கூடாது." என்று அவளிடம் சமாதானம் பேசிட,

சற்று சிந்தித்தவள், "ம்ம்... நானும் கோபத்துல அப்படி பேசியிருக்க கூடாது. திடீர்னு ரொம்ப தலை வலிக்கவும் கொஞ்சம் டிஸ்ட்ரெஸ் ஆகிட்டேன். சாரி..." என அவளும் தலையை குனிந்து கொண்டு பேச,

மென்மையாய் புன்னகைதவன், "இந்த டைம்ல இது ரொம்ப நார்மல் தான். நான் தான் புரிஞ்சுக்காம

விட்டுட்டேன்... இப்போ என்ன பண்ணலாம்னு நீயே சொல்லு" என்று தலை சாய்த்துக் கேட்க,

அவள் "ம்ம்ம்..." என யோசனையுடன்,

"ஹாஸ்பிடல் போலாம். கன்பார்ம் பண்ண..." என்று சிறு சிரிப்புடன் கூற, அதில் மகிழ்ந்தவன், உடனே அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

வீட்டினர் யாரும் அப்போது கண்ணில் தட்டுப்படாததால், அப்போதைக்கு பத்மா தலை தப்பியது.

சுஹானாவோ, "நான் தான் கார் ஓட்டுவேன்." என்று கூற, ஒரு நொடி சிந்தித்தவன், 'இதுக்கு வேற எதுக்கு ஒரு பிரச்சனை' என்று சரி என தலையசைத்தான்.

இருவரும் ஏதேதோ பேசிக்கொண்டு வர, சட்டென தமிழ்,

"சுஹா இது ஒன் வே... இங்க ஏன் காரை விட்ட?" என்று பதற,

"ஐயோ தெரியாம இந்த ரோட்டுல வந்துட்டேன்." என்று புருவம் சுருக்கிட,

"ஓகே ரிலாக்ஸ். காரை அந்த பக்கம் நிப்பாட்டு" என்றான் கட்டளையாக.

அவளோ, பிரேக்கை அழுத்தி விட்டு, "தமிழ் பிரேக் பிடிக்கல..." என்றாள் பதட்டமாக,

"வாட்?" என அதிர்ந்தவன், எதிரில் காண, தூரத்தில் லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது.

“சுஹா நான் ஸ்டியரிங்க பிடிச்சுக்குறேன். நீ இந்தப் பக்கம் வா!” என அவசரமாக கட்டளையிட,

“என்ன சொல்ற? ரன்னிங்ல எப்படி?” என்று புரியாமல் கேட்டதில்,

“ப்ச், சீக்கிரம் வா...” என்றவன் அவளை இந்த பக்கம் மாற்றி அமர வைத்து விட்டு, அவன் ஓட்டுநர் இருக்கைக்கு சென்று, காரை பாலன்ஸ் செய்ய முற்பட, அது முடியாமல் போனதில், ஒரு பக்கமாக வளைத்தான். அதில் லாரி சரியாக அவன் இருக்கைக்குப் பக்கம் வந்து டங்கென மோதிட, சில பல நொடிகளில், அங்கு ஒரு கோரமான விபத்து ஒன்று அரங்கேறி இருந்தது.

அதன் பிறகு தமிழின்பன் கண் விழித்தது மூன்று வாரங்கள் கழித்து தான். உடலெல்லாம் கட்டு போடப் பட்டிருக்க, முதலில் அவனுக்கு என்ன நடந்தது என்று பிடிபடவே சில நிமிடம் பிடித்தது. கண்ணைச் சுழற்றி அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டிருக்கும் போது தான், மகத் உள்ளே வந்தான்.

தன் நண்பன் விழித்திருப்பதைக் கண்டு, மகத், “மச்சான்” என்று மகிழ்ச்சியில் கலங்கிய படி கத்த,

‘நீ எப்போ வந்த’ என்ற படி புரியாமல் பார்த்தான். அவனால் அசையக் கூட முடியவில்லை.

அதனைப் புரிந்து கொண்ட மகத், “உனக்கு ஆக்சிடென்ட் ஆனதுன்னு தெரிஞ்சதும், நானும் ஷ்யாமும் வந்துட்டோம் டா. தலையில அடிபட்டதுனால, நீ மூணு வாரமா டெம்பரரி கோமாவுல இருந்த... காட்... நான் எவ்ளோ பயந்துட்டேன் தெரியுமா?” என குதூகலித்தான்.

பின்னே, மூன்று வாரங்களாக, இரவு பகல் உறக்கமின்றி, 'தன் நண்பன் கண் விழிப்பானா?' என தவித்திருந்தவர்கள் ஆயிற்றே. அப்போது தான் சத்தம் கேட்டு ஷ்யாமும் வர, அவனும் அவனைப் பார்த்து கலங்கி விட்டான்.

தமிழின்பனோ ஏதோ பேச வர,

மகத் "மச்சான், நீ நல்லா ரெஸ்ட் எடுக்கணும், பேச ட்ரை பண்ணாத. சீக்கிரம் எல்லாம் சரி ஆகிடும்..." என்றவனை நோக்கி,

புருவம் சுருக்கி "சுஹா" என பதட்டத்துடன் வாயசைக்க,

அவன் "அவள் நல்லாருக்கா டா... லேசான அடி தான்" என்றதில் அவன் கண் கலங்கி நம்பாமல் பார்க்க,

"ப்ச், அடேய், நிஜமாவா டா... மச்சான் அவளை கூப்புடுடா" என்றதில்,

ஷ்யாமும் வேகமாக அருகில் இருந்த ரூமில் காலில் அடி பட்டு அப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக சரியாகிக் கொண்டிருந்த சுஹானாவிடம் விவரம் கூற, அவளும் உடனே வந்து விட்டாள்.

அப்போது அவனுக்கு மருத்துவம் பார்த்த வேறொரு மருத்துவர் வந்து, அவனை ஒரு முறை செக் செய்து விட்டுப் போக, மகத்தும் ஷ்யாமும் அவர் பின்னே சென்றனர்.

தன்னவளைக் கண்ணில் கண்டதும் தான் நிம்மதி ஆனவன், 'நீ ஓகே தான' என்று மேலிருந்து கீழ் வரை பரிவாகப் பார்க்க,

"எனக்கு ஒன்னும் இல்ல தமிழ். உங்களுக்கு தான் ரொம்ப அடி பட்டுடுச்சு. நீங்க முழிக்கலைன்னதும், நான் எவ்ளோ பயந்துட்டேன் தெரியுமா?" என வருத்தத்துடன் பேசியவளைக் கண்டு, அவள் கையைப் பிடித்து ஆறு தல் படுத்தியவன்,

'பேபி' என்று அவள் வயிற்றை பார்க்க,

"ப்ச், பேபி எல்லாம் இல்ல. சும்மா தான் பீரியட்ஸ் வர்றதுக்கு லேட் ஆகியிருக்கு. நீ ரெஸ்ட் எடு... மூணு வாரமா, அப்பா தான் வேலை எல்லாம் பார்த்துட்டு இருந்தாரு. நான் இன்னைக்கு வரேன்னு சொல்லிருந் தேன். இப்போ அப்பா கூப்பிட வரேன்னு சொன்னாரு" என்று நகரப் போனவளின் கையைப் பிடித்தவனுக்கு, ஒன்றும் புரிய வில்லை. ஆனால், அவள் அருகில் இருக்க வேண்டும் போல் இருக்க, 'போகாதே' என்று பார்வையால் கெஞ்சினான்.

அதோடு 'இப்போ இது ரொம்ப முக்கியமா?' என்ற எண்ணம் வேறு தோன்ற,

அவள் "நான் போயிட்டு சீக்கிரம் வந்துடுறேன்..." என்று அங்கிருந்து செல்ல,

சிறிது நேரம் கழித்து, அவனின் மொத்தக் குடும் பமும் அங்கு வந்தது. பிரபாகர் "இப்போ எப்படி பா இருக்கு?" என்று கேட்க, அவன் 'ம்ம்' என தலையசைத் தான்.

மற்றவர்களும் பெயரளவில் அவனிடம் நலம் விசாரிக்க, அவனின் பெரியப்பாவோ “நீ இல்லாம, இங்க எல்லாமே லாக் ஆகியிருக்கு. பணம் கூட எடுக்க முடியல. உனக்கு பதிலா, சுஹானா தான் எல்லாம் பார்த்துட்டு இருந்தா. ஆனா பிசினெஸ் ஷேர்ஸ்ல” என்று ஆரம்பிக்க, அவனுக்கு தலை வலித்தது.

‘இப்போது இங்க என்ன நடக்குது. என்று அவனுக்கு கண்ணை கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது. உடனே அவனுக்கு எதையும் யோசிக்கக் கூட முடியவில்லை. இவர்கள் என்னவென்றால், கொஞ்சம் கூட இடைவெளி இல்லாமல் இப்படி வந்து பேசிக்கொண்டு இருக்கின்றனரே?’ என்று நொந்தவன்,

இதில் அவன் வீட்டு இளசுகள் வேறு, அவனை நக்கலாய் பார்ப்பது போன்று இருக்க, மேலும் குழம்பினான்.

அவர்களோ அவனிடம் எதிலோ கையெழுத்து மட்டும் வாங்கி விட்டுச் செல்ல, ஏனோ அனைவரும் சென்றால் போதும் என்ற நிலைக்கு வந்தவனுக்கு, அனைவரின் பார்வையும் வித்தியாசமாகப் பட்டது. சற்று இளக்காரமும் கூட.

இதற்கு சிறிது நேரம் முன்பு, “அடேய்ய்ய்... என்னடா சொல்லிட்டு இருக்காரு அந்த டாக்டர்? எனக்கு ஒண்ணுமே புரியல. ஏதோ வோகல் கார்ட் பாரலைசிஸ்னு சொல்றாரு. போஸ்ட் டிராமா ஸ்ட்ரெஸ்ன்னு சொல்றாரு... என்னடா ஆச்சு தமிழ் க்கு...” என்று மகத்தை உலுக்கினான் ஷ்யாம்.

அந்த மருத்துவர் கண்ணனோ, “மகத் நீங்க டாக்டர் தான. நான் சொல்றது உங்களுக்கு புரியும்னு

நினைக்கிறேன்" என்றிட, அவனோ பேச்சற்று கண்ணீ ருடன் அமர்ந்திருக்க,

அவரே ஷ்யாமிடம், "மிஸ்டர் ஷ்யாம், உங்களுக்கு புரியிற மாதிரி சொல்லனும்னா, தொண்டையில் இருக் குற நெர்வ் கட் ஆனதுனால தமிழ் அவரோட குரலை இழந்துட்டாரு. ஹீ ஐஸ் மியூட் நவ். அதோட அவருக்கு இந்த ப்ராப்ளம்னால உடம்பு சரி ஆனாலும், கொஞ்ச மாசத்துக்கு அவரால பேமிலி ரிலேஷன் ஷிப்ல இருக்க முடியாது.

'பட்' அது தற்காலிகம் தான். ஆனால், வாய்ஸ் வர் றதுக்கு 90 பெர்ஸன்ட் சான்ஸ் கிடையாது. அதுவும் இப் போதைக்கு அவர் பேச முயற்சி கூட பண்ணக் கூடாது. கிட்டத்தட்ட ஆறு மாசத்துக்காவது கம்ப்ளீட் பெட் ரெஸ்ட் இருக்கணும். அதுக்கு அப்புறம் தான் இதெல் லாம் எந்த அளவு சீக்கிரம் கியூர் ஆகும்னு சொல்ல முடி யும். மே பீ பியூச்சர்ல வாய்ஸ் தெரபி கொடுக்கலாம். பட் ஹோப் இல்ல..." என்று அவர் போக்கில் சொல்ல, இரு நண்பர்களும் உயிரற்று அமர்ந்திருந்தனர்.

பள்ளியில் இருந்து அவனுடன் படித்து, அதன் பிற கும், அவனுடனான நட்பை தொடர்பவர்களுக்கு என் றுமே அவன் சிறந்த நண்பன் ஆயிற்றே. பதில் கூட பேசா மல் அவர்கள் அப்படியே அமர்ந்திருக்க, மருத்துவரிடம் பேச வந்த, நேசனும், தமிழின்பனின் தம்பி லோகேஷும் இதனைக் கேட்டு விட்டனர்.

லோகேஷுக்கு எப்போதும் தமிழின்பனின் ஆளு மையில், சற்று பொறாமை தான். அவன் கம்பீரமாய் நடந்து வந்து அவனிடம் கட்டளை இடுவதும், அவனின்

நண்பர்கள் அவனிடம் 'உன் அண்ணா, செம்ம மேன்லி...' என்று கூறுவதும், கடும் கோபத்தைத் தான் கொடுக்கும்.

இப்போது 'ஓ! பியூஸ் போன பல்புன்னு சொல்லுங்க...' என அனைத்து எரிச்சலுக்கும் வடிகாலாய் அவனின் தற்போதைய இயலாமையை எடுத்து மனதில் எக்களித்துக் கொண்டவன், அனைவரிடமும் அவன் ஒரு ஊமை எனவும், ஆண்மையற்றவன்(இம்போடென்ட்) எனவும் பரப்பி இருக்க, நேசனோ ஏற்கனவே அவன் கோமாவில் இருந்ததாலும், அந்த நேரத்தில் அவனின் தொழிலில் சறுக்கல் ஏற்படத்திலும், எப்படி தன் மகளை அவனிடம் இருந்து பிரிப்பது என்று சிந்தித்திருந்தவருக்கு, இது வரப்பிரசாமாக அமைந்தது.

இதில் திகைத்த நண்பர்கள் இருவரும் தான், லோகேஷை அதட்டி, இது வெறும் தற்காலிகம் தான். என்று புரிய வைக்க முயல, எதையும் யாரும் காதில் வாங்கவே இல்லை. இதில் பெரியதாக அதிர்ந்தது சுஹானா தான். அவனின் ஆண்மை தன்மையிலும், கம்பீரமான குரலிலும் ஈர்க்கப்பட்டுத் தானே, அவனைக் காதலே செய்தாள்.

அவளோ ஏதோ குழப்பத்தில் இருக்க, முதல் இரு நாட்களில் தமிழின்பனுக்கு, என்ன நடக்கிறதென்றே புரியவில்லை.

இதில் நொடிக்கொரு முறை, 'சுஹாவை பார்க்கணும்' என்று மகத்திடம் கூற,

அவனோ அவள் இவனை எப்படி நினைக்கிறாளோ என்று நொந்து, "அவளுக்கு அடி பட்டுருக்குடா. ரெஸ்ட் எடுக்கட்டும். நீ பேச ட்ரை பண்ணாத. சரியா?

கொஞ்ச நாளில் சரி ஆகிடும்..." என்றவனுக்கு குரல் கம றியது.

ஷ்யாமோ, விட்டால் அழுது விடுவேன் என்ற ரீதி யில் நிற்க, மகத்தின் கையைப் பிடித்த தமிழின்பன், அவனை அழுத்தமாகப் பார்த்தான்.

அதில் திணறியவன், "உனக்கு ஒன்னும் இல்ல மச் சான். சீக்கிரம் சரி ஆகிடும்." என்றிட, அவன் நம்பாமல் மேலும் பேச முயற்சி செய்ய, அதில் அவனுக்கு ஏற்பட்ட வலியில் முகம் சுருங்கியது.

"ஏண்டா, பேச ட்ரை பண்ற. ப்ளீஸ் நீ லேசா கூட ட்ரை பண்ணாத! காயம் ஆறுற வரை.." என்று அவனின் அருகில் அமர்ந்து, சமன் செய்ய முற்பட, தமிழின்பன் அவனை தீயாக முறைத்தான். பதில் சொல்லவில்லை என்றால் பேச முயற்சி செய்வேன் என்பது போல் அவனை அவன் வருத்திக் கொள்ள, அதில் நொந்த நண்பர்கள் இருவரும் தான், வேறு வழியற்று நடந்ததைக் கூற வேண்டியதாகப் போயிற்று.

அதில் அதிர்ந்து சிதைந்தவன் உணர்ந்து கொண் டான், ஏன் அந்த கேலி பார்வை என்று. அதோடு, மனம் முழுக்க பெரிய வலி ஒன்று தோன்றி, அவனை அழுத்த, 'சுஹாவும் என்னை அப்படி தான் நினைக்கிறாளா?' என்று ஏக்கத்துடன் நினைத்தவன்,

'சே சே அவள் அப்படி எல்லாம் நினைக்க மாட்டா...' என்று மாறி மாறி சிந்தித்தவன் எழ முற்பட,

அவனைத் தடுத்த ஷியாம், "எங்கடா போற?" எனக் கேட்டான்.

அவன் "சுஹா" என வாயசைக்க,

மகத் "நான் அவளை வரச் சொல்றேன்" என்றதில்,

'வேணாம்' என்றவன் "நான் போய் பாக்குறேன்" என்று சைகை செய்தான். அவனை அப்படிப் பார்க்க இயலாது தவித்தவர்கள், வீல் சேரில் அமர வைத்து, அவனை அழைத்துச் செல்ல, அங்கோ,

"இங்க பாரு சுஹானாம்மா, அப்பாவும் அம்மாவும் உன் நல்லதுக்குத் தான் சொல்லுவோம். எப்படியும் நீயும் இதை பத்தி யோசிச்சுருப்ப. லவ் பண்ணி மேரேஜ் பண் ணது வரை ஓகே தான். ஆனால், இப்போ இந்த நிலை யில, நீ ஒரு ஊமைக்கு அதுவும் ஒரு இம்போடென்ட்க்கு மனைவியா இருக்குறது எங்களுக்கு எவ்ளோ பெரிய கஷ்டம்னு உனக்குச் சொல்ல வேண்டியது இல்லை." என்று சொல்ல, இதனைக் கேட்ட தமிழ், அதிர்ந்து இறுகி விட்டான்.

வார்த்தைகளின் வீரியம் என்பது எந்த அளவு வலியைக் கொடுக்கும் என்பதையும் உணர்ந்தவன், அப்படியே இருக்க, மகத்தும் ஷ்யாமும், அவனை அங்கி ருந்து அழைத்துச் செல்ல முற்பட்டனர். ஆனால் அவன் அசையாமல் அங்கேயே நிற்க, சுஹானாவின் முகத்தில் சிந்தனை ரேகைகள்.

"ஒருவேளை உனக்கு இந்த ஆக்சிடென்ட் ஆகி, இதே ப்ராப்லம் வந்துருந்தா, அவன் உன் கூட இருந்து ருப்பான்னு நினைக்கிறியா சுஹானா. கண்டிப்பா இருந் துருக்க மாட்டான். குழந்தை விஷயத்துலயே அவன் உன்கிட்ட எவ்ளோ ரூடா நடந்துக்கிட்டான். அவன் அடிச்சான்னு நீ சொன்னப்போவே எனக்கு பயங்கர கோபம். அவன் கோமாவுல இருந்ததால் விட்டேன்.

அவனால தான் இந்த ஆக்சிடென்ட்டும். ஹாஸ்பிடல் போகலாம், மண்ணாங்கட்டி போகலாம்னு உன் உயி ரோட விளையாடப் பார்த்துட்டான். ஒன்னு நீயே சுமூ கமா பேசி, வந்துடு. இல்ல அவன் டைவர்ஸ் தர மாட்டேன்னு சொன்னா, கோர்ட்டுக்குப் போய் அவன் ஆண்மை தனத்தை ஊர் முழுக்க பரப்புறேன்." என்று பேசிக் கொண்டே போக,

அவன், அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் அறைக்கு வந்து விட்டான்.

கண்ணில் இருந்து நீர் சிந்தக் கூட தெம்பற்று, சிவந்து காய்ந்து போய் இருக்க, 'சே, என்ன மனுஷங் கடா இவனுங்க. இவளும் இவ லவ்வும்...' என்று ஷ்யாம் வார்த்தைகளைத் துப்ப, மகத்தோ கொலை வெறியில் இருந்தான்.

தமிழின்பன் எந்த பாவனையும் அற்று, அப்படியே அமர்ந்திருக்க, சுஹானா அவன் அறைக்கு வந்தாள். இதற்கு மேல் அவனுடன் வாழ முடியாது என்ற முடிவு டன். "தமிழ்..." என்று அவள் பேச வர, அவன் அவள் முகத்தையும் பாராமல், பேச வருவதையும் கேளாமல், கையை 'போதும்' என்பது போல், அவள் முன் காட்டி விட்டு, உடனே அறை வாசலை நோக்கி கை நீட்ட, அவள் தோளை குலுக்கி விட்டு சென்றே விட்டாள்.

..............................................

அறையை அங்கும் இங்கும் அளந்த தமிழரசிக்கு, கண்ணில் நீர் மட்டும் வந்த படி இருக்க, "ஐயோ! அவனுக்கு பேச முடியாதுன்னு தெரியாம, லூசு மாதிரி திட்டிட்டோமே, இதுல மெஸேஜ்ல பேசுனவனையும், வாய்ஸ் மெஸேஜ் கேட்டு சே... அன்னைக்கு நான்

காலேஜ் போறேன்னு சொன்னப்ப, அவன் அக்காவும், தங்கச்சியும் ஒரு மாதிரி சிரிச்சுச்சுங்களே...? அவனை கல்யாணம் பண்ணுனா, நீ காலேஜ் தான் போகணும். வேற எதுவும் பண்ண முடியாதுன்னு மாதிரி தான அது. சே ராட்சசிங்க! இந்த வார்த்தையை கேட்கும் போது எப்படி இருந்துருக்கும் அவனுக்கு. கடவுளே!" என தன்னுள் வெகுவாய் தோன்றிய பாரத்தை குறைக்க வழியின்றி, அங்கும் இங்கும் நடந்தவளுக்கு, மற்றொரு குறுஞ்செய்தியை அனுப்பி இருந்தான் தமிழின்பன்.

"என்ன எழுத்தாளரே... கதை நீ நினைச்சது விட மொக்கையா இருந்துச்சா? இன்னும் கொஞ்சம் இருக்கு. ஆனால் இப்போதைக்கு இதுவே போதும்னு நினைக்கிறேன். கதை முடிஞ்சுது. சீக்கிரம் புக் போடு. அண்ட் ஐ ஆம் சாரி. என் தம்பி கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு வீட்டுல, அவனும் என்னை மாதிரி... இருப்பானோன்னு ஏதோ பேசிருக்காங்க போல. அதான், நான் கல்யாணம் பண்ணிட்டா, அந்த பேச்சு ஸ்டாப் ஆகும்னு, வீட்ல எல்லாரும் என்கிட்ட சண்டை போட்டாங்க. நான் நினைச்சுருந்தா, இந்தக் கல்யாணத்தை நிறுத்தி இருக்கலாம். ஆனால், உன் அப்பா என்னை பத்தி தெரிஞ்சும், எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கச் சம்மதிச்சு இருக்காருன்னா, கண்டிப்பா ஏதாவது ஒரு பாழுங்கிணத்துல உன்னைத் தள்ளி விட்டுருப்பாரு. அதான்...

நீ எனக்கு பிடிச்ச எழுத்தாளர்னு தெரிஞ்சதும், நான் ரொம்ப ரொம்ப ஹேப்பி ஆகிட்டேன். என் மனசுல இருக்குறதை வாய் விட்டுச் சொல்ல முடியல... எதுலையாவது எழுதணும்னு நினைச்சாலும், என்னால எழுத முடியல. அதான் உன்னை எழுத வச்சேன். இப்போ

கொஞ்சம் பெட்டர். தேங்க்ஸ் எழுத்தாளரே!" என்றவன், பின்

"கொஞ்ச நாள் பொறுத்துக்கோ அரசி, உனக்கு நல்ல வாழ்க்கை அமைச்சு தர வேண்டியது என் பொறுப்பு. அதுவரை, அந்த வீட்டுல இருக்குறவங் களை வச்சு என்டர்டைன் பண்ணு. இல்ல, உனக்கு இப்போவே போகணும்னு நினைச்சாலும் தாராளமா கிளம்பு. நான் உனக்கு ஹாஸ்டல் அரேஞ்ச் பண்றேன். சாரி கருவாச்சி. என்னால உன் லைஃப்ல இப்படி ஒரு சிக்கல். அதை கூடிய சீக்கிரம் நானே சரி பண்றேன்... மை ஸ்ட்ரெஸ் பஸ்டர்..." என்று அனுப்பி இருந்தவ னுக்கு, மனதில் இருந்ததை யாரிடமோ வாய் விட்டுக் கூறிய நிம்மதி.

ஓங்கி உயர்ந்த அடுக்கு மாடி கட்டடத்தில், இருந்த அவளின் அலுவல் அறையில் ஜன்னல் வழியே தெரிந்த மனிதர்களை இலக்கற்று பார்த்துக் கொண்டிருந்த தமி ழன்பனுக்கு மனம் மரத்துப் போய் இருந்தது.

'இம்பொடென்ட்...' என்ற வார்த்தை தான் எத் தனை பெரிய காயங்களை மனதினுள் புகுத்தி விட் டது. ஆசையாய் காதலித்த மனைவிக்கு கூட... என்று தொண்டையை அடைக்க மேலும் சிந்திக்க திராணி யற்று, மீண்டும் எங்கோ வெறிக்க ஆரம்பித்தான்.

தமிழரசிக்கோ அவன் அனுப்பியதில், பாதி அவள் தலையில் ஏறவே இல்லை. "அச்சோ... பேச முடியாம கஷ்டப்பட்டுருக்கான். மனசுல இருக்கிறதை வெளிய கூட சொல்ல முடியாமல் சே..." என்று நொந்தவளுக்கு மொக்கை கதை என்று கூறியது, குற்ற உணர்ச்சியைக் கொடுத்தது.

கூடவே அனைவரின் மேலும் பயங்கர கோபம் வந்தது. அதோடு தமிழின்பனின் மேலும். இதில் சுஹானா தான் என்ன மாதிரி பெண் என்று அவளுக்கு புரியவே இல்லை. 'ஆரம்பத்தில் நன்றாகத் தானே இருந்தாள். தான் சரியாக புரிந்து கொள்ளவில்லையா? அல்லது அவன் என்னிடம் அரை குறையாக கூறி இருக்கிறானா?' என்று குழம்பினாள்.

மீண்டும் வெகு நேரம் அறையில் அங்கும் இங்கும் நடந்தவளை, அப்போது தான் உள்ளே வந்த தமிழின்பன் காண, அவளோ அவனைக் கண்டதும் திரண்ட கண்ணீரை கட்டுப்படுத்திக் கொண்டு, அவசரமாக அவன் முன் நின்றவள், "நீங்க ஏன் இப்படி பண்ணீங்க?" எனக் கேட்டாள் நேரடியாக.

அவனோ 'என்ன பண்ணேன்?' என்று புரியாமல் பார்க்க,

"நீங்க ஏன் உங்க வைஃபை போக சொன்னீங்க? அவங்க ஒருவேளை பாசிட்டிவா பேச வந்துருக்கலாம்ல. ஒரு ரெண்டு நிமிஷம் பேச விட்டுருக்கலாம்ல. அவங்க அவங்களோட அப்பா சொன்னதை அமைதியா கேட்டா, உடனே ஒத்துக்கிட்டாங்கன்னு அர்த்தமா?" என்று சற்று பரிவாகவும், இப்படி அவசரப்பட்டு விட்டானே என்ற ஆதங்கத்துடனும் கேட்டவளுக்கு, இப்போதும் அவன் மேல் காதலோ, வேறு எந்த எண்ணமோ இல்லை. ஆனாலும், சட்டென அவன் மேல் பாசம். ஒரு அக்கறை தொற்றிக் கொண்டுள்ளதை, அவளும் உணரவே செய்தாள்.

அவளை அமைதியாகப் பார்த்த தமிழின்பன், அவளைக் கடந்து சென்று, குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பினான்.

அதில் "பேசுன வார்த்தைகள் மட்டும் இல்லை, தேவையான நேரத்துல பேசாத வார்த்தைகள் கூட அதே அளவு காயத்தைத் தான் கொடுக்கும்." என்ற அவனின் வலியுடன் கூடிய வார்த்தைகளைக் கண்ட தமிழரசி, மலைத்து நின்றாள்.

# அத்தியாயம் - 8

8 தமிழன்பன் அனுப்பிய குறுஞ்செய்தியை கண்டு திகைத்தவளுக்கு, அவனின் வலி புரியவே செய் தது. ஒரு வார்த்தை அவள் அவனுக்கு ஆதரவாகப் பேசி இருக்கலாம்! என வருந்தியவளுக்கு, அவனைப் பார்க் கவே என்னவோ போல் இருந்தது.

அதிலும் அவன் முதன் முறை அவளிடம் குழந் தையிடம் பேசியது போன்று அக்கறையாக பேசியது இப் போது நினைவில் வர, இன்று வரையிலும் கூட, அந்த சிறிய உரையாடலில் அவனின் குரல் இன்னும் தன் னுள் ஆழமாய் பதிந்திருப்பதை வியப்புடன் எண்ணிக் கொண்டாள்.

இவள் இவ்வாறு பல யோசனையில் இருக்க, தமிழின்பன் அவன் முகத்தின் முன் சொடுக்கிட் டான். அதில் 'பே' வென விழித்து, அவனை என்ன வென்று பார்த்தவளை "தள்ளு" என்பது போல் கையை அசைக்க, அவளும் சட்டெனத் தள்ளி நின்றாள்.

இவ்வளவு நேரம் சாப்பாடு வைத்திருந்த டேபிளை மறைத்து நின்றிருந்ததில், அவனும் இவள் எப்போது நகருவாள் என்று பார்த்திருக்க, இப்போது அமர்ந்து

சாப்பிட ஆரம்பித்தான். அவளோ இன்னும் அதிர்ச்சியில் இருந்து வெளியில் வரவே இல்லை. நடந்ததை ஜீரணிக்கவும் இயலவில்லை. அப்படியே அவனையே அவள் பார்த்திருக்க, உணவு உண்டு கொண்டிருந்தவன், நிமிர்ந்து அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு, "ம்ம்" என்று சேரை கண்ணைக் காட்டினான்.

அவளோ அப்போதும் அசையவே இல்லை என்றதும், டேபிளைக் கரம் கொண்டு ஒரு தட்டு தட்டினான். அந்த சத்தத்தில் தான், நிகழ்வுக்கு வந்தவள்,

"எ எ என்ன?" என அதிர்ந்து கலைந்தவளை,

அவன் சாப்பிடச் சொல்லி சைகை செய்தான். அதில் அவளுக்கு கண் கலங்கி விட்டது. ஆனால், அதனை அவனுக்குக் காட்டாமல் மறைக்க அரும்பாடு பட்டவள், குனிந்த படி சேரில் அமர்ந்து சாப்பிட, அதன் பிறகு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவே இல்லை.

மறுநாள், துயில் கலைந்தவளுக்கு இரவு வெகு நேரம் கழித்து உறங்கியதில் எழும்பவே சோம்பேறித்தனமாக இருந்தது. 'ப்ச், இன்னைக்கு போய் காலேஜ் வச்சுருக் கானுங்களே' என்று நொந்தவள்,

ஜன்னல் திரைச்சீலையை எடுத்து விடப் போக, இன்னும் உறக்கம் கலையாமல் உறங்கி கொண்டிருந்த தமிழின்பனை சில நொடிகள் பார்த்து விட்டு, அதனை திறந்து விடாமலே, கல்லூரிக்கு கிளம்பலானாள்.

கீழே இறங்கி வந்தவளுக்கு, அங்கிருந்த ஒருவரின் முகத்தைக் கூடப் பார்க்கவே பிடிக்கவில்லை. இன்னும் யாரும் வெளியில் வராமல் இருந்ததில், 'இன்னைக்கு

தாண்டா நீங்க எல்லாம் நல்லாத் தூங்குற கடைசி நாளு. உங்களை எல்லாம் வச்சு செஞ்சுட்டு தான், நான் இங்க இருந்து போவேன்...' என்றவளுக்கு சற்றும் இதனை ஏற்றுக் கொள்ளவே சிறிது நேரம் தேவைப்பட்டது.

கல்லூரியில் நுழைந்தும் இதே யோசனையில் இருக்க, சந்தனா வந்தவள், "ஹாய் தமிழு, எப்படி இருக்க? உன் ஹஸ்பண்ட் கிட்ட பேசுனியா?" என ஆர்வமாய் கேட்டவள்,

'ஐயோ ஹஸ்பண்ட்ன்னு சொன்னா திட்டுவாளே!' என விழித்து விட்டு, "அது... அவன் கிட்ட பேசுனியா?" எனக் கேட்க, அவளோ தீவிர சிந்தனையில் இருந்தாள்.

"அடியேய்! உன்னை தான். ஏன் இப்படி பேய றைஞ்ச மாதிரி இருக்க?" என்று அவள் உலுக்கியத்தில் தான் சந்தனாவைக் கண்ட தமிழரசி,

"ஆஆ! ஏண்டி இப்படி உலுக்குற? ஆமா நீ எப்போ வந்த?"

"சரியாப்போச்சு..." என தலையில் கை வைத்தாள்.

பின் மீண்டும், "டைவர்ஸ் பத்தி பேசுனியா?" எனக் கேட்டிட,

தமிழரசிக்கு அப்போது தான் இந்த நினைவே வந்தது. "இல்லடி, மறந்துட்டேன். சீக்கிரம் பேசுறேன். வா கிளாசுக்கு போகலாம்." என்று இழுத்துக் கொண்டு செல்ல,

சந்தனாவுக்கோ நம்ம காலேஜ் எதுவும் மாறி வந்துட்டோமா என்று குழப்பமாக இருந்தது.

முதல் இரண்டு பாட வேளையில் பல்லைக்கடித்துக் கொண்டு வகுப்பறையில் அமர்ந்திருந்தவள், பேராசிரியர் சென்றதும், 'வேகமாக போனை எடுத்து குறுஞ்செய்தி எதுவும் வந்திருக்கறதா? என பார்க்க, எதுவும் வராமல் இருக்கவும், என்ன பண்றான் இன்னும் தூங்குறானோ?' என எண்ணி,

"ஹாய்" என அனுப்பினாள்.

அவள் கிளம்பியதுமே விழித்திருந்தவன், எப்போதும் போல் ஏதோ ஒரு புத்தகத்தில் மூழ்கி இருக்க, தமிழரசியிடம் இருந்து வந்த குறுஞ்செய்தியைக் கண்டு, "ம்ம்" என்று அனுப்பினான்.

அதனை கண்டதும் அவள் வேகமாக, "என்ன பண்றீங்க? எந்திரிச்சுட்டீங்களா? சாப்டீங்களா?" என்று வரிசையாக கேள்வி கேட்டு அனுப்பிட, அவன் அதற்கு பதிலே கூறவில்லை. அவளும் மதியம் வரை போனைப் பார்த்துக் கொண்டே காத்திருக்க, மாலை வரையிலும் பதிலேதும் வரவில்லை என்றதும், அவளுக்கு கடுப்பாகி விட்டது.

'ஏன் சார் ரிப்ளை பண்ண மாட்டீங்களோ!' என உள்ளுக்குள் பொரிந்திட, சந்தனா தான் பாவம் ஏதோ ஊமைப் படம் பார்க்கும் ரீதியில், நடப்பது புரியாது தலையை பிய்த்துக் கொண்டாள்.

மாலையில் வீட்டிற்குச் சென்றவள், அவன் பால்கனியில் அமர்ந்திருப்பதைக் கண்டு, தமிழின்பன் முன் சென்று நின்றாள். முகத்தில் லேசாக கோபம் ஜொலிக்க,

"நான் கேட்டதுக்கு ஏன் பதில் சொல்லல?"

அவனோ புருவம் சுருக்கி அவளைப் பார்த்து விட்டு, "நான் ஏன் சொல்லனும்?" என்று சைகை செய் தான் அவளை முறைத்தபடி.

பின், அவளையும், அவனையும் காட்டி, ஏதோ எழுதுவது போல் சைகை காட்டி, ஏதோ கூற விழைய, அவளுக்குத் தான் ஒன்றுமே புரியவில்லை.

முகத்தை சுருக்கி, "புரியல..." என்றவள், டேபிள் மீதிருந்த அவன் போனை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள் பாவமாக.

அவள் பாவனையில் என்ன கண்டானோ, லேசாக கோபம் குறைந்த விழிகளுடன் அவளை பார்த்து விட்டு, "இந்த அக்கறை எல்லாம் வேணாம். இப்போ வரை உனக்கும் எனக்கும் ரைட்டர் - ரீடர் ரிலேஷன்ஷிப் தான். அதைத் தவிர, உங்கிட்ட பேச எனக்கு எதுவும் இல்ல." என்று டைப் செய்து அவள் முன் காட்டிட, அவள் உதட் டைக் கடித்தபடி அதனைப் படித்து விட்டு, இப்போது அவனை முறைத்தாள்.

பின், கோபமாக போனைப் பிடுங்கி, அவள் ஏதோ டைப் செய்யப் போக, அவனோ எழுந்து அந்த போனை வெடுக்கெனப் பிடுங்கி, "காது கேட்கும்..." என்று கடுப்பு டன் சைகை செய்திட,

'ஐயோ! அவன் டைப் பண்ணவும், நானும் அந்த பழக்கத்துல டைப் பண்ணிட்டேனே...' என நொந்தவள், அசடு வழிந்தாள்.

"இப்போ என்ன? ஒரு ரைட்டர் ரீடர் கிட்ட சாப் பிட்டியான்னு கேட்டது ஒரு குத்தமா? இதென்ன கொடு

மையா இருக்கு. இதை நான் வன்மையா கண்டிக்கி றேன்...” என்று இடுப்பில் கை வைத்து நியாயம் பேச,

அவனோ இரு புருவத்தையும் உயர்த்தி விட்டு, “உள்ளே போ!” என்று கண் காட்டினான் எச்சரிக்கை யாக.

“ஏன் இங்க நான் நின்னா, உங்களுக்கு என்ன பிரச்சனை? வேணும்னா நீங்க போங்க!” என்று பிடிவாத மாக அங்கேயே நிற்க,

அவன் தான் ‘என்ன ஆச்சு இந்த கருவாச்சிக்கு?’ என்று புரியாது குழம்பிய முகத்துடன் அவன் உள்ளே சென்றிட,

‘என்ன இவன் சொன்னதும் போயிட்டான்.’ என சிந்தித்தவள்,

‘இவன் மனசுல இருக்கறதை முழுசா வெளிய கொண்டு வரணும்னா இவனுக்கு ஃப்ரெண்ட் ஆனாத் தான் முடியும். அப்போதான் இன்னும் நிறைய டீடைல்ஸ் கலெக்ட் பண்ணி, வீட்டு ஆளுங்களை ஒரு வழி பண்ண லாம். ஆனால் இவன் மெஸேஜ்ல பேசவே காசு கேட் பான் போலயே... இவனை எப்படி ஃப்ரெண்டு பிடிக்கி றது...’ என்று பலவாறு யோசித்தாள்.

பின், “ஐடியா!” என குதூகலித்தவள், போனை எடுத்து டைப் செய்தாள்.

காதலாகி கரைந்திடும் நேசமும்

ஓர் நாள் கரையக்கூடும்...!

உறவாகி உறைந்திடும் சொந்தமும்

ஓர் வலியை உருவாக்கிச் செல்லும்...!

நஞ்சை சுமக்கும் நெஞ்சில்

தீர்க்கயியலா காயங்களும்

நட்பின் பிடியில் தீருமடா...!

என் ரசிகா...!

என்ற கவிதையை எப்போதும் போல் செயலியில் போட்டு விட்டு, எதார்த்தமாக பார்ப்பது போல் வேடிக்கை பார்க்க, இதனை கண்ட தமிழின்பன் தான் வெகு நேரம் அந்த கவிதையையே திரும்ப திரும்ப படித்துக் கொண்டிருந்தான்.

'என்னடா இவன்! எந்த பதிலும் சொல்ல மாட்டுறான். ஒரு 'நைஸ்'ன்னு சொன்னா தான் என்னவாம்...' என்றவளுக்கு, அவனை சிறிதாகவாவது மாற்றியாக வேண்டும் என்ற எண்ணம் மனம் முழுக்க ஓடியது.

தமிழின்பன் அவள் நின்ற திசையை ஒரு முறை பார்த்து விட்டு, எப்போதும் போல் "நைஸ்" என்று அனுப்ப, உடனே "தேங்க்ஸ் இன்பா..." என்றாள் உற்சாகமாக.

அதன் பிறகு, அவன் அமைதியாகிட, அவளோ மீண்டும்,

குறுகலான அறையும்

கையளவு புத்தகமும்

கண்ணில் வெறுமையும்

கணங்களை கரைக்காதடா...!

பரந்த வெளியுலகில்

பறந்திருக்கும் சிட்டுக் குருவியாய்

பாரங்கள் பல மறந்து சிறகடித்திடு...!

நின் சுபாவங்கள் யாவையும்

பாவங்கள் சூழ்ந்த மானிடர் உணராவிடினும்

நித்தியமாய் உன்னிடம் சேர்ந்த

என் தோழமை உணர்ந்திடும்...!

எழுத்துக்களை மட்டுமல்ல...!

எந்திர வாழ்வையும் துறந்து

எழிலியையும் ரசித்திடு...!

என் ரசிகா!

என அனுப்பி இருக்க, அவன் கண்ணில் மீண்டும் ஒரு வெறுமை. அவள் அவனுக்காக தான் அனுப்பி இருக்கிறாள் என உணர்ந்தும்,

அதனை மறைத்துக் கொண்டு, "என்ன கருவாச்சி? ஓவர் ஃபார்ம்ல இருக்க போல... நைஸ் ஒன்!" என்று அனுப்பினான்.

அதனைக் கண்டு விட்டு, 'உன் ரியாக்ஷன் இவளோ தானா?' என்பது போல தலையில் அடித்துக் கொண்டவள்,

"நாக்கு தள்ள எழுதி இருக்கேன். ஒரு நைஸ் மட்டும் தானா... ரசிகரே? டு பேட்!" என நக்கலாக கூற,

"எனக்கு இதுல ரெண்டு வார்த்தை புரியவே இல்ல. அதான் கூகிள் பண்ணிட்டு இருக்கேன் கரு வாச்சி. நித்தியம், எழிலி அப்டின்னா என்னன்னு தெரியல?" என்றவன், போனில் தீவிரமாகத் தேட, இதான் சாக்கென்று வேகமாக அவனருகில் வந்தாள் தமிழரசி.

"நான் சொல்றேன் இன்பா. இதுக்காக ஏன் இன்டர்நெட் எல்லாம் வேஸ்ட் பண்றீங்க?" என்று அவன் முன் நின்றவளை "நீ மெசேஜ்லையே பேசு!" என்றான் சைகையில்.

ஆனால், அவன் விழி மொழிகளே அவளுக்கு, அவன் பேச நினைப்பதை உணர்த்த,

"ஏன்? நேர்ல சொன்னா கேட்க மாட்டீங்களா?" என்று எகத்தாளமாய் கேட்டவளை, கண்கள் இடுங்க முறைத்தான். அதில் குரலை கணைத்தவள் "சரி சரி... உடனே முறைக்காதீங்க. நித்தியம்ன்னா... ஃபார் எவர்... ம்ம்... எப்போவுமே உங்க ஃப்ரெண்டா இருப்பேன்னு அர்த்தம்" என்றதில்,

அவன் அர்த்தத்துடன் கூடிய அழுத்தத்தில் அவளை கூர்மையாக பார்க்க, 'ப்பா... மனுசன் பாப்பானா இந்த கண்ணை' என மிரண்டவள், சட்டென அவன் கண்ணைப் பாராது, "அது அது.. அந்த கவிதைல வந்தத சொன்னேன்." என்று சமாளித்தாள்.

அவளின் சமாளிப்பில் லேசாக புன்னகை தோன்ற, "ஹ்ம்ம்..." என்றவனைக் கண்டு, "அப்புறம் எழிலின்னா... மழை நீரை சுமந்து போற மேக கூட்டம்னு அர்த்தம். ம்ம்... இங்கிலீஷ்ல "cumulus" ன்னு சொல்லுவாங்க" என்று விளக்கம் கொடுக்க, அவன் சற்று வியப்புடன் விழி உயர்த்தி, பாராட்டும் விதத்தில் பார்த்தவன், இரு விரலை மடக்கி, சூப்பர் என்று கை காட்ட, இதுவரை யாரும் பாராட்டி அறிந்திராதவள், துள்ளிக் குதிக்காத குறை தான்.

சிறிதாக வெட்கம் வேறு வந்ததில் அவள் ஈஈ என்ற படி நெளிந்திட, அவனுக்கும் புன்னகை வந்தது. "ரொம்ப நெளியாத..." என்று வாயசைத்தவனின் அசை வுகளைக் கண்டு கொண்டவள்,

"ஹெலோ! நான் ஒன்னும் நெளியல!" என்று வீரப் பாகப் பேசியவளைக் கண்டு,

"ம்ம்ஹூம்...?" என்று கேள்வியாய் முனங்கியவன்,

"ரொம்ப கேவலமா இருக்கு. வெட்கம் மட்டும் படாத!" என்று நிறுத்தி, நிதானமாக அவளுக்குப் புரியும் படி வாயை அசைத்தான். கிட்ட தட்ட ஒன்றரை வருடம் கழித்து, வாய் திறந்து பேசுகிறான் அவனே அறியாமல்.

வெறும் காற்று மட்டுமே வந்தாலும், அவனின் விழி மொழியுடன், காற்றில் மிதக்கும் அவனின் வெளிவராத சொற்கள், அவளின் கண்களில் புகுந்து செவி வழி செல்ல, அவன் அவளுடன் பேசியது மிகவும் மகிழ்வைக் கொடுத்தது. அதில், கண்டிப்பா இவனை மாத்திட்டு தான் இங்க இருந்து போறோம்... என்றே தனக்குள் முடி வெடுத்துக் கொண்டாள்.

பின், கோபமாக, "நான் வெட்கப்பட்டா கேவலமா இருக்கா?" எனக் கேட்டவள் சிலுப்பிக்கொள்ள, அந்நேரம் செல்வம் அவர்களுக்கு உணவு கொண்டு வந்தார்.

தமிழரசி ஏதோ சிந்தித்து விட்டு, "அங்கிள்" என்று கத்த, அவரோ என்னவோ ஏதோ என்று பதற்றமாகப் பார்த்தார்.

தமிழின்பனோ, என்ன என்று விழிகளால் வினவ, அவள் "அங்கிள், உங்களுக்கு பீவரா?" எனக் கேட்டாள் செல்வத்திடம்.

"இல்லையேம்மா எனக்கு காய்ச்சல்லாம் இல்லையே?" என்று குழம்ப,

"என்னது, 105 டிகிரியா? என்ன அங்கிள் இப்படியா கேர்லெஸா இருக்குறது? நீங்க ஒன்னு பண்ணுங்க, நாளைக்கு லீவ் எடுத்து வீட்டுல நல்லா ரெஸ்ட் எடுங்க. ஓகே வா?" என்று சம்பந்தம் இல்லாமல் பேச,

"ஐயோ எனக்கு காய்ச்சலே இல்லம்மா" என்றான் தலையை சொரிந்து.

"அதெல்லாம் இல்ல. நாளைக்கு உங்களுக்கு காய்ச்சல். சோ நீங்க லீவு. இப்போவே லைட்டா இருமிக் காட்டுங்க பார்ப்போம். கமான்..." என்று அவரை குரங்காட்ட, அவர் தான் விக்கித்துப் போய் தமிழின்பனைப் பார்த்தார். அவன் இவளை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு, அவரிடம் கண்ணை மூடித் திறக்க,

அவர் மேலும் புரியாமல் "சரிம்மா, நாளைக்கு நான் லீவு" என்று லேசாக இருமியபடியே வெளியில் சென்றார்.

“ஐயோ பாவம்... ரொம்ப காய்ச்சல் போல. இல்ல இன்பா?” என்று அவனிடமே வினவ, அவளை முறைத்துப் பார்த்தவன்,

“லூசாகிட்டியா?” என்பது போல் பாவனை செய்திட,

“அய்ய... யாரு லூசாகுறான்னு நாளைக்கு பாருங்க...” என்றவளைக் கண்டு, தலையை ஆட்டி புன்னகைத்துக் கொண்டான் உள்ளுக்குள்.

மறு நாள், “ப்ச், இன்னும் ஏன் செல்வம் வரல” என்று பத்மாவும், ரேகாவும் வாசலைப் பார்க்க,

கனிகா, “ஐயோ யாராச்சு சமைச்சு குடுங்க!” என்றாள் பசியில்.

பத்மா ரேகாவைப் பார்த்து சமைக்கச் சொல்ல, ரேகா பத்மாவிடம் சமைக்கச் சொல்ல, ஆக மொத்தம் அவர்களுக்குள் இருக்கும் ஈகோவில் யாரும் சமைக்கவில்லை.

லோகேஷ், “ப்ச், நான் ஸ்விக்கில ஆர்டர் பண்றேன்.” என்று கடுப்பாக போனை எடுக்க,

அந்நேரம், “அத்தை” என்ற அடக்கமான குரல் அருகில் கேட்டதில், அனைவரும் நிமிர்ந்து பார்க்க, அங்கு தமிழரசி தான் நின்றிருந்தாள்.

லோகேஷ் அவளைக் கண்டதும் கண்ணில் வெறுப்பை உமிழ, அவளோ அதனைக் கண்டு கொள்ளாது, ரேகாவிடம்

“அத்தை… நான் சமைக்கிறேன். உங்களுக்கு எதுக்கு கஷ்டம். அதுவும் கடையில சாப்பிட்டா உடம்பு என்ன ஆகுறது” என அக்கறையாய் கூறியதில்,

பத்மா, “நீ சமைச்சு நாங்க சாப்பிட வேண்டிய அவசியம் இல்ல” என்றார் சுள்ளென்று.

ஷெண்பாவோ உடனே ஏதோ முடிவெடுத்து, பத்மாவின் காதில் “ஐயோ அத்தை, அவளே பலியாடா, நம்ம கிட்ட வந்து மாட்டுறா. இன்னைக்கு இவளை வேலை வாங்கி உண்டு இல்லைன்னு ஆக்கணும்.” என்று முணுமுணுக்க,

அவளோ முகத்தில் பாவத்தை தேக்கி, “ஷெண்பா அண்ணி, உங்களுக்கு என்ன வேணும்னு சொன்னீங்கன்னா…” என்றதில் அவள் தான் பேந்த பேந்த விழித்தாள்.

இவள் உண்மையிலேயே பேசுறாளா? இல்ல ஏதாவது உள்குத்து இருக்கா என்றதை கூட யோசிக்க முடியாதவாறு அனைவரும் பசியில் இருக்க, ஷெண்பா இது தான் சாக்கென்று, ஹோட்டலில் உள்ள அத்தனை மெனுவையும் ஒரு வேளைக்கு கொடுக்க, அவள் வேகமாக தலையாட்டி விட்டு அடுக்களைக்குள் புகுந்தாள்.

பசியில் யோசிக்கக் கூடாது என்றே, சரியாக காலை உணவு வேளை தாண்டிய பிறகு கீழிறங்கி வந்தவள், “கொய்யால, மெனு சொல்றியா மெனு…” என்று மனதினுள் வறுத்துக் கொண்டு, சாம்பார், ரசம், பொரியல் என சில பதார்த்தங்களை சமைத்தவள், அவளுக்கும் தமிழின்பனுக்கும் ஒரு ட்ரேயில் எடுத்து தனியாக வைத்து விட்டு, மற்ற அனைத்திலும், உப்பையும், மிளகாய் தூளையும் அள்ளிப் போட்டவள்,

“இந்த உப்பு... கொஞ்சம் கூட சூடு சொரணை இல்லாம இருக்குறதுக்கு... இந்த மிளகாய் தூளு, கொஞ்சமாவது தானும் மனித பிறவி தான் அப்படின்னு உரைக்கிறதுக்கு...” என்று நக்கலுடன் அனைத்து உணவையும் வீணாக்கியவள், டைனிங் டேபிளில் அடுக்கி விட்டு, சாப்பிட அழைக்க,

லோகேஷ் “வரமாட்டேன்” என்று முரண்டு பிடித்தான்.

“அட! வாங்க கொழுந்தனரே! நான் ஒன்னும் விஷம்லாம் கலக்கல... வேணும்னா, உங்க முன்னாடி சாப்பிடவா...?” என்று சிறிது சாதத்தை எடுத்து வாயில் வைத்துக் காட்ட, அவன் கடுப்புடன் முறைத்தான்.

பின் அனைவரும் அழைத்ததில், அவனும் வந்திட, பிரபாகரனுக்கு தான் ஏதோ தவறாகப் பட்டது. ஆனாலும், யோசியாமல் அனைவரும் வாயில் சாம்பாரை வைக்க, வாய் எல்லாம் எரிய ஆரம்பித்து விட்டது. அதில் ஸ்ஸ் ஸ்ஸ்... என்று தண்ணீரை எடுத்துக் குடித்தவர்கள், தமிழரசியைத் தேட, அவள் எப்போதோ அவள் அறைக்கு உணவுடன் சென்றிருந்தாள்.

“இன்னைக்கு முழுக்க பட்டினி கிடைத்து, வாயும் வயிறும் வெந்து கிடங்கடா... ஸ்விக்கில ஆர்டர் பண்ணாக் கூட, எவனும் உள்ள கொண்டு வர முடியாது. வாட்ச்மேனை நான் ஃப்ரெண்டு பிடிச்சு வைச்சுட்டேன்... எப்புடி? ட்ரைலரே சும்மா வயிறு கலங்குதா... டண்டணக்கா னக்கா னக்கா டண்டணக்கா...” என மனதினுள் குத்துப் பாட்டு பாடிக் கொண்டிருந்தவளை, தமிழின்பன் தான் சுவற்றில் சாய்ந்து நக்கலாக பார்த்திருந்தான்.

அவள் செய்த அனைத்தையும் அவனும் கவனித்துக் கொண்டு தானே இருந்தான். 'சீரியல் வில்லிய எல்லாம் மிஞ்சிடுவா போல...' என்று ஏற இறங்க அவளைப் பார்த்தவனைக் கண்டு, அசடு வழிந்தவள்,

"வாங்க சாப்பிடலாம் பசிக்குது..." என்று டேபிளில் உணவை வைக்க, அவனும் வந்து அமர்ந்து விட்டு, சாப்பிடும் முன், அவளை சந்தேகமாகப் பார்த்தான்.

அவளோ "சே! சே! இதுல எல்லாம் எதுவும் கலக்கல. நம்பி சாப்பிடுங்க ரசிகரே!" என கேலியாகக் கூறியதில், அந்த உணவை எடுத்துச் சாப்பிட்டவன், வேகமாக போனை எடுத்து டைப் செய்ய ஆரம்பித்து விட்டான்.

'என்ன பண்ணுறான் இவன்? நமக்கு தான் எதுவும் அனுப்புறான் போல' என்றெண்ணி அவள் போனை எடுத்துப் பார்க்க, அதில் அவன் தான் குறுஞ்செய்தி அனுப்பி இருந்தான்.

"நீ உப்பு மிளகாய் தூள் போடாம, சாதாரணமா செஞ்ச சாப்பாடை கொடுத்துருந்தாலே, இங்க எல்லாரும் சூசைட் பண்ணிருப்பாங்க. இனிமே உன் தண்டனை எல்லாம் அவங்களுக்கு மட்டும் குடு கருவாச்சி" என்று அனுப்பி இருக்க, அதில் வெறியானவள், மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, அவனைத் தீயாக முறைத்தாள்.

தமிழின்பனோ அவள் செயலில், இதழோரத்தில் பூத்த குறுஞ்சிரிப்புடன், கண்ணை சிமிட்டி, "சும்மா" என்று வாயசைக்க, அவனின் முதல் புன்னகையில், அவள் தான் கண்ணெடுக்காமல் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

# அத்தியாயம் - 9

தமிழின்பனின் சிரிப்பில் அவனையே பார்த்துக் கொண்டிருந்த தமிழரசியைக் கண்டவன், சொடுக்கிட்டு அழைத்தான்.

“ஹான்... என் என்ன?”

“அப்போ அப்போ ஃபிரீஸ் மோட் போய்டுவியா நீ?” என விழிகளை விரித்து, உதட்டசைவுடன் சிறிதாக சைகையிலும் பேச, ஓரளவு அவன் பேசுவது இப்போது புரியத் தொடங்கியது.

உடனே தமிழரசி, “நான் ஒன்னும்... ஃபிரீஸ் ஆக லையே” என தோளைக் குலுக்கி சாப்பிட அமர்ந்தவள், ஒரு வாய் எடுத்து வைத்து விட்டு,

“இன்பா... பேசாம இதையே அவங்களுக்கு கொடுத்து இருக்கலாம் போல...” என்று முகத்தைச் சுருக்கினாள்.

அதில் பக்கென சிரித்து விட்டவன், “அத தான் நானும் சொன்னேன்...” என்றான் நக்கலாக.

"முன்ன பின்ன சமைச்சுருந்தா தான தெரியும். நான் ஹாஸ்டல்லேயே தான் இருந்தேன். ஒன்பதாவது படிக்கையில் இருந்து..." என்று உதட்டைப் பிதுக்கிய வள்,

"நான் ஆன்லைன் ஆர்டர் பண்றேன்." என் றாள், இவ்ளோ கொடூரமா சமைச்சுருக்கோமே என்று நொந்து.

அதில் கனிவாய் பார்த்தவன், "வேணாம்..." என மறுப்பாய் தலையாட்டி விட்டு, "இதுவே போதும்... அவ்ளோ மோசம் இல்ல" என சமாதானமாய் சைகை செய்தவன், அதனைச் சாப்பிடத் தொடங்க, அவளும் அவனை ஒரு நொடி பார்த்து விட்டு, தட்டில் புதைத் தாள்.

சாப்பிட்டு முடித்து எழுந்தவன் தான், போனில் "ஆபரேஷன் சக்சஸ்... பட் டாக்டர் டெட்..." என்று டைப் செய்து அவள் முன் சிறு புன்னகையுடன் காட்ட,

அதில் தீயாக முறைத்தவள், "அப்படி யாரு உங் களை கஷ்டப்பட்டு சாப்பிட சொன்னதாம்..." என சிலுப் பிக் கொண்டாள்.

அதற்கு அவனோ, அவள் புறம் லேசாகக் குனிந்து, நெற்றியில் கட்டை விரலை வைத்து, "தலையெழுத்து" என பாவனை செய்ய, மேலும் கடுப்பானவள்,

"போங்க..." என முறைத்தபடி, கோபமாக கையைக் கழுவி விட்டு, பால்கனியில் சென்று நின்றாள்.

சில நொடிகள் அவள் கோப முகத்தை பார்த்த வன், "எழுத்தாளரே...! இனிமே உங்க கைத் திறமையை

எழுத்துல மட்டும் காட்டுங்க. சரியா?" என கேலியாய் குறுஞ்செய்தி அனுப்பிட,

அதனைக் கண்டவள் ரொம்பத் தான் கலாய்க்கி றான்... என மனதினுள் வறுத்துக் கொண்டு, கல்லூரிப் பையை எடுத்து, வேகமாக வெளியில் செல்ல விழைய, தமிழரசியின் கையைப் பிடித்தான்.

ஒரு கையால் அவனின் காதை பிடித்துக் கொண் டவன், "சாரி!" என வாயசைக்க, அவனின் அந்த ஒரு பாவனையிலேயே மொத்தமாக அவளின் கோபம் வடிந் திருந்தது, இருந்தும்...

"தெரியாதவங்க சாரி சொன்னா என்னால அக் செப்ட் பண்ணிக்க முடியாது..." என்று எங்கோ பார்த்துப் பேச, அவன் புருவத்தை சுருக்கி புரியாமல் பார்த்தான்.

அவளோ, அவன் முன் கை நீட்டி, "பிரெண்ட்ஸ்..." என கேட்க,

அவளை அமைதியாகப் பார்த்தவன், "ரீடர் - ரைட் டர் ரிலேஷன் ஷிப் தவிர உனக்கும் எனக்கும் வேற எதுவும் இல்ல. தேவையில்லாம உன்னை இந்தப் பிரச் சனைல இழுத்து விட்டதுனால தான், இந்த வீட்டுல இருக்குற ஆளுங்க கிட்ட உன் இஷ்டத்துக்கு நடந்துக் கச் சொன்னேன். மத்தபடி, உன்னை வச்சு, நான் அவங் களை அடிக்கணும்னு இல்ல. காட் இட்... ஐ டோன்ட் வாண்ட் யுவர் கன்செர்ன்" என அவளை முறைத்தபடி குறுஞ்செய்தி அனுப்பி விட்டு வெளியில் சென்றிட, அத னைக் கண்டவளுக்கு மனம் வாடி விட்டது.

'ப்ச்! அவன் பேசுறதே பெரிய விஷயம். இந்த அள வுக்காவது பேசுறானே... ஆனால், உன்னை ஃப்ரெண்டு

பிடிக்காம விடமாட்டேன். இது என் மாமியார், இனியாள் மேல சத்தியம்!' என தனக்குள் சபதம் எடுத்துக் கொண் டவள், கீழே செல்ல,

அங்கோ பத்மா அவளைப் பிடி பிடி என பிடித்து விட்டார்.

"உனக்கு அவ்ளோ திமிரா? எவ்ளோ தைரியம் இருந்தா..." என பேசும் முன்,

"ஹெலோ பத்து, இப்போ என்ன நான் சாப்பாடுல விஷத்தை கலக்குனேனா? கொஞ்சமா உப்பும் மிளகா தூளும் போட்டேன். இப்படியே பேசுனீங்க... அப்புறம் நான் எதை எதையோ கலக்குவேன்... கலக்கட்டுமா?" என விழி உயர்த்தி திமிராய் கேட்க, அவர் கோபத்தின் உச்சியில் இருந்தார்.

"ஓகே பத்து, இன்னைக்கு நல்லா எல்லாரும் ரெஸ்ட் எடுங்க. நாளைக்கு காலையே சீக்கிரமே எந் திரிச்சு, தோட்டத்துல பூ பறிச்சு, கட்டி வச்சிருக்கணும். அதுக்கு அப்புறம் என்ன டாஸ்க் ன்னு நான் சொல் றேன்..." என்றதில் ரேகா பொங்கி,

"நீ சொல்றதை நாங்க செய்யணுமா? ஏதோ ஒரு ஓட்டு வீட்ல இருந்தவளுக்கு, நாங்க பணிவிடை பண் ணனுமா?" எனக் கோபமாக கேட்க,

"ஆமா ரேக்ஸ்... பண்ணி தான ஆகணும். நீங்க எல்லாம் இருக்குறது என் புருஷன் வீட்டுல தான. இங்க இருக்கணும்னா, நான் என்ன சொல்றனோ அதை தான் நீங்க கேட்கணும்!" எனக் கண்டிப்பாய் பேசிட, அதில் திகைத்தார்கள்.

அதில் ஷெண்பா தான், "அது சரி புருஷனா? எந்த விதத்துல அவன் உனக்கு புருஷனா இருந்தான்..." என நக்கலாகக் கேட்டாள்.

தமிழரசிக்கு சுள்ளென கோபம் வர, அவளை கொலைவெறியுடன் பார்த்தவள், "என்னை தொட்டு தாலி கட்டிருக்குறதை விட, வேற எந்த விதத்துல புருஷனா இருக்கணும்? பொண்டாட்டியை பொறந்த வீட்டுக்கு அனுப்பி, சொறி நாய் மாதிரி இங்க திரிய விட்டுட்டு, வெளிநாட்டுல எவ கூடையோ கும்மி அடிக்குறவனை நீ புருஷன்னு சொல்றப்போ..." என்று பல்லைக் கடித்துக் கொண்டு இழுத்துப் பேசியதில், ஷெண்பா அதிர்ந்திட, கூடவே முகம் கருத்து விட்டது.

இதற்கு மேல் கோபத்துடன் அங்கு நிற்க இயலாதவளுக்கு, 'இவளுங்களுக்கு எல்லாம் இன்பாவை வச்சு தான், செய்ய வைக்கணும். அப்போ தான் என் மனசு ஆறும். முதல்ல அவரை சரி பண்றேன்...' என்று எண்ணிக்கொண்டவள், மின்னல் வேகத்தில் அங்கிருந்து நகர,

லோகேஷ் தான், 'போ போ... ஆனா, திரும்பி நீ இங்க வரவே மாட்ட. நாளைக்கு நீ இங்க இருந்தா தான?' என்று மனதினுள் கறுவிக் கொண்டான்.

முகத்தில் ரௌத்திரம் தாண்டமாட கல்லூரிக்குள் நுழைந்தவளைக் கண்ட சந்தனா தான், அரண்டு அவள் முகத்தையே பார்க்க,

தமிழரசி "என் மூஞ்சியை ஏன் பார்த்துட்டு இருக்க? வா கிளாசுக்கு போகலாம்..." என்று முன்னேறப் போகையில், அவளுக்கு கோபாலனிடம் இருந்து போன் வந்தது.

அதனைக் கண்டவளுக்கு ‘கடவுளே! இன்னைக்கு எனக்கு பொறுமையைக் கொடு!’ என வேண்டிக் கொண்டு, போனை எடுத்தவள்,

“ம்ம்” என,

அவரோ, உடனே கிளம்பி வீட்டிற்கு வரச்சொன்னார். அவள் கடுப்புடன் பேச வருகையில், அவர் குரலில் கோபம் இல்லாமல், தொய்ந்து போயிருப்பதை உணர்ந்து, “வரேன்” என்று கூறி வைத்து விட்டாள்.

கார் வேறு அவளை விட்டு விட்டு சென்று விட, தமிழின்பனுக்கு “அப்பா கால் பண்ணாரு. உடனே வர சொல்லி. நான் போயிட்டு அங்க வரேன்.” என்றவள் சந்தனாவிடம் விடுமுறைக்கு சொல்லி விட்டு, ஆட்டோ பிடித்தாள்.

அவள் அனுப்பிய செய்தியில் யோசனையில் ஆழ்ந்தவன், “நான் வந்து கூட்டிட்டு போகவா?” என கேள்வியாய் வினவி இருக்க,

“இல்ல. நான் ஆட்டோல போறேன் இன்பா. நான் பாத்துக்குறேன்.”

“ம்ம் ஏதாவது ப்ராப்ளம்னா கூப்பிடு...” என்றான் அவன் வீட்டு ஆட்கள் ஏதாவது பிரச்சனை இழுத்து விட்டனரோ என்றெண்ணி.

“ஹோ... நீங்க என் ஃப்ரெண்ட் கூட இல்ல. அப்புறம் ஏன் நான் உங்ககிட்ட சொல்லணும்?” என்ற குறுஞ்செய்தியை அனுப்ப,

“இப்போ நீ என் பொறுப்புல இருக்கன்றது ஞாபகம் இருக்கட்டும்.” என சற்று கடுமையுடன், ஆங்கிரிஸ்மைலியுடன் கூறியதில், அவள் பதிலே கூறவில்லை.

அதற்குள் அவள் வீடும் வந்திருக்க, கோபாலனும், ரேவதியும், முகத்தில் சோகத்தை காட்டி அமர்ந்திருப்பதை கண்டு, கோபத்தை அடக்கிக் கொண்டவள்,

“எதுக்கு வரச்சொன்னீங்க? அதான் கல்யாணம் பண்ணி கொடுத்துட்டீங்களே என் விருப்பத்தை கூட கேட்காம. அப்புறம், எதுக்கு இப்போ மட்டும் பாசம் பொங்குது? ஊரான் பேச்சை கேட்டு, கேவலம் காசை பார்த்து ரெண்டாந்தாரமா கட்டிக்கொடுக்க, எப்படி மனசு வந்துச்சு உங்களுக்கு? இதுல ஏதோ இடி விழுந்த மாதிரி உட்காந்துருக்கீங்க!” என்று இவ்வளவு நாள் மனதில் இருந்ததை இப்போது கொட்டி விட, ரேவதி அவளை அறைந்திருந்தார்.

“என்னடி ரொம்ப பேசுற? யாருடி உனக்கு காசப் பார்த்து கல்யாணம் பண்ணிக் குடுத்தது. அதுவும் ஊரான் பேச்சை கேட்டு, கேவலம் காசுக்காக உன்னைக் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்ல. அப்படியே காசுக்காக உன்னை கட்டிக் கொடுத்தாலும், நாங்களும் காசு பணத்தோட தான இருந்துருக்கணும். இதுனால எங்களுக்கு என்ன லாபம்? ஏதோ, என் பொண்ணு எந்த கஷ்டமும் இல்லாம இருக்கான்னு மன நிம்மதி எங்களுக்கு அவ்ளோ தான். ஏன் உன் அப்பாவே பொண்ணை கட்டிக் கொடுத்த இடத்துல, வேலை பார்க்கக் கூடாதுன்னு வேற வேலைக்கு போய் ராத்திரி பகலா அலைஞ்சுட்டு இருக்க, அவருக்கு என்ன தலையெழுத்தா?” என்று

கடுங்கோபத்தில், தன் மகளிடம் வாக்கு வாதம் செய்ய, அவளோ திகைத்திருந்தாள்.

கோபாலன் தான் "ரேவதி!" என்று அவரை அடக்கி விட்டு, தமிழிடம்,

"எனக்கு அந்தத் தம்பியை அது ஸ்கூல் படிக்கையில் இருந்து தெரியும் தமிழு. அது படிப்பு முடிக்கிற வரை, நான் தான் ஸ்கூலு காலேஜுக்கு எல்லாம் கூட்டிட்டு போவேன். அந்த தம்பிக்கு, கார் ஓட்ட சொல்லிக் கொடுத்தது கூட நான் தான். அந்த வீட்டுல இருக்குற மத்த ஆளுங்க மாதிரி இல்ல அவரு. அங்க வேலை பார்க்குற ஆளுங்க கிட்ட கூட மரியாதையா நடந்துப் பாரு.

அந்த தம்பி, ஒரு இடத்துல அடைஞ்சு நான் பார்த்ததே இல்ல. விபத்து நடந்து ரூமுக்குள்ளயே அடைஞ்சு கிடைந்தவரைப் பார்த்து எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்துச்சு. அது மட்டும் இல்ல. நீ படிக்க போவேன்னு அடம்பிடிச்சப்போ, அந்த தம்பி தான் உன்னை படிக்க வைக்க சொல்லி, உன் படிப்பு முடியிற வரை, எல்லா செலவும் பண்ணுச்சு." என்று நிறுத்திட, அவள் தான் விழி விரித்தாள்.

'பயபுள்ள, என்கிட்ட சொல்லவே இல்ல...' என வறுத்தவள் பின் கோபாலன் பேசியதை கவனிக்க ஆரம்பித்தாள்.

"அவருக்கு வாய் பேசமுடியாதுன்னு தெரிஞ்சும், ரெண்டாவது கல்யாணமா இருந்தாலும், என் பொண்ணை கட்டிக் கொடுத்ததுக்கு காரணம், அவரோட குணம் மட்டும் தான். நான் பார்த்து வளர்ந்த பையனுக்கு எனக்கு ஏதாவது செய்யணும்னு

தோணுச்சு...” என்று குரல் கமறக் கூறிட, அவளுக்கு அவர்களின் மனநிலை துல்லியமாகப் புரிந்தது.

‘சே! இதப் புரிஞ்சுக்காம இப்படி நினைச்சுட் டோமே’ என இருவரையும் பார்க்க தயங்கியவள், பேச வரும் முன்,

“ஆனால் கடைசியில என் பொண்ணுக்கு நானே துரோகம் பண்ணிட்டேன். முழுசா விசாரிக்காம கல்யா ணம் பண்ணி வைச்சுட்டேன்...” என்று குலுங்கியவரைக் கண்டு அதிர்ந்தவள்,

“அப்பா, என்ன ஆச்சு? என்ன சொல்றீங்க எனக்கு புரியல?” என்றாள் குழப்பமாக.

“அந்த வீட்டு ஆளுங்க என்ன ஏமாத்திட்டாங்க...! எல்லாத்தையும் சொன்னவங்க, அவரு ஆண்மை இல்லாதவருன்னு சொல்லாம விட்டுட்டாங்க. என் பொண்ணை நானே கிணத்துல தள்ளிட்டேன்...” என்று கண்ணைக் கசக்க,

‘என்ன பிரச்சனைன்னு தெரியலேயே’ என்று அவள் வரும்போதே, தமிழின்பனும் அங்கு வந்து அவர் கள் பேசுவதை கேட்டவன், இந்த வார்த்தையைக் கேட்டு மேலும் இறுகி விட்டான்.

கூடவே, தன் முன்னாள் மனைவி கூறி விட்டுச் சென்ற வார்த்தைகளும் அவன் காதினுள் எதிரொ ளிக்க, வலி மிகுந்த கண்களுடன், அதற்கு மேல் அங்கு நிற்கத் தெம்பின்றி நகரப் போனவன்,

“போதும் நிறுத்துறீங்களா?” என்ற தமிழரசியின் கத்தலில் அப்படியே நின்றான்.

இங்கோ அவள் காளி அவதாரம் எடுத்திருந்தாள்.

"இன்னொரு தடவை அந்த வார்த்தையை யாராவது சொன்னீங்க... நான் மனுசியாவே இருக்க மாட்டேன்" என்று கோபத்தில் பெருமூச்சு வாங்கியவள், கண்கள் இடுங்க,

"அப்பா அம்மா கிட்ட பேசக்கூடாத வார்த்தை தான். ஆனாலும், நான் பேசி தான் ஆகணும். தெரியாம தான் கேட்குறேன், படுத்து பிள்ளை பெத்துக்குறது மட்டும் தான் ஆண்மைத் தனமா?" என்று கேட்டிட, கோபாலன் அதிர்ந்தார்.

ரேவதி, "தமிழு" என்று அதட்ட, அவளோ அதனைக் கண்டுகொள்ளாது,

"தாம்பத்யங்கிறது, இந்த உலகத்துக்கு நம்ம மூலமா ஒரு உயிரைக் கொண்டு வர்ற ஒரு புனிதமான விஷயம். ஆனால், இங்க யாரு அதை புனிதமா பார்க்குறா...? சரி, நான் இவ்ளோ நாள் ஹாஸ்டல்ல தான் இருந்தேன். ஒரு வேலை நான் அங்க கற்பை இழந்துட்டு வந்து, ஊர்ல இருக்குறவங்க உன் பொண்ணு கன்னித் தன்மையை இழந்துட்டான்னு சொன்னா, உங்களுக்கு எப்படி இருக்கும்... இல்லை, அதை கேட்குற எனக்கு தான் எப்படி இருக்கும்?" என்றவள் குரல் கம்ம,

"வலிக்கும்ல. அதே மாதிரி தான் அந்த வார்த்தை அவருக்கு..." என்று பேச முடியாமல் நிறுத்தினாள்.

பின் அவளே, "ஆணா இருந்தாலும், பொண்ணா இருந்தாலும் உணர்வுகள் ஒன்னு தான மா... சரி, எதை வைச்சு ஒருத்தரை ஆம்பளைன்னு டிசைட் பண்றீங்க? ஒரு பொண்ணோட கன்னித் தன்மையை

சிதைச்சு, காலம் முழுக்க அந்த வலியோட வாழவைக்கிற எத்தனையோ ஆம்பளைங்க, இங்க உலகத்துல இருக்காங்க. வெறும் தாம்பத்தியம் மட்டும் தான் ஒரு ஆம்பளையா இருக்குறதுக்கு அடிப்படைத் தகுதின்னா, அப்போ, அந்த தாம்பத்யத்தை கொச்சப் படுத்துறவனுங்களும் ஆம்பளை தானா...? இல்லமா... உண்மையிலேயே இம்போடென்ட் அவனுங்களை மாதிரி ஆளுங்க தான்.

இவ்ளோ கஷ்டத்துலயும், இவ்ளோ மன வேதனையிலயும், இவ்ளோ கோபத்துலயும் நான் இத்தனை நாள் கூட இருந்ததுக்கு, இன்பா அவரோட மொத்த கோபத்தையும் என்மேல காட்டிருக்கலாம்! அவரோட இச்சைகளை என்னை வச்சு தீர்த்துருக்கலாம். ஆனா, அங்க இருக்குற ஒவ்வொரு நிமிஷமும் நான் ரொம்ப பாதுகாப்பா இருக்கேன். சொல்லப்போனா நான் நானா இருக்கேன். எத்தனை ஆம்பளையால, ஒரு பொண்ணை, அவளோட இயல்போட வாழ விட தைரியம் இருக்கும்? அப்படிப் பார்த்தா, என் இன்பாவை விட, ஒரு ஆம்பளை இந்த உலகத்துலயே கிடையாது." என்று பேசி முடித்தவளுக்கு இன்னும் கோபம் அடங்கவில்லை. அங்கிருந்த தண்ணீரை எடுத்து மடக் மடக் என குடித்தவள்,

"ஒரு விஷயம் புரிஞ்சுக்கோங்க பா. அந்த விபத்துல அவருக்கு தற்காலிகமா தான் அந்த பிரச்சனை இருந்துருக்கு. அப்படி அது நிரந்தரமா இருந்தாக் கூட, அதை குத்திக் காட்டிப் பேசவோ, கேலிப்பொருளாக்கவோ அதுல ஒண்ணுமே இல்ல.

இப்போவும், நான் ஒன்னும் பரிதாபத்துல அவரை என் ஹஸ்பண்டா நினைக்கல. அவர் மேல எனக்கு

காதலும் கிடையாது. ஆனால், ஒரு ஃப்ரெண்டா, என் னைக்குமே நான் அவரு கூடத் தான் இருப்பேன். அவரை யாராவது ஏதாவது சொன்னா, என் அப்பா அம்மாவா இருந்தாக் கூட பார்க்க மாட்டேன்..." என்று முடிவாய் உரைத்தவளை, இருவரும் உறைந்து பார்த்தி ருக்க, தமிழின்பனோ கண்ணைக் கூட அசைக்காமல் அவளையே பார்த்திருந்தான்.

அவளிடம் இருந்து இப்படியான வார்த்தைகளை அவன் எதிர்பார்த்து இருக்கவில்லை.

அதிலும் 'எப்போதும் தோழியாய் இருப்பேன்.' என்ற வாசகம் அவனுள் சிறு  மலர்ச்சியைக் கொடுக்க, மனதில் அழுத்தி இருந்த ஏதோ ஒரு பாரம் இறங்குவது போல் உணர்ந்தவன், அவனை மீறி தோன்றிய குறுஞ்சி ரிப்புடன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

தமிழரசி தான், அவளின் பெற்றோரைப் பார்த்து, "நீங்க எனக்கு ரெண்டாவது கல்யாணம் பண்ணி வச் சதுல, எனக்கு கோபம் இருந்தது தான். ஆனால், ஒரு நல்ல மனசு வருத்தப்படக் கூடாதுன்னு தான, பொண்ணை அவருக்கு கல்யாணம் பண்ணி வச்சீங் கல்ல. அது எனக்கு ரொம்ப பெருமையா இருக்குப்பா. ஏதோ சொந்தக்காரங்க பேச்சை கேட்டு மட்டும் முடி வெடுத்தீங்கன்னு, நான் தான் தப்பா நினைச்சுட்டேன். நீங்க சுயமா யோசிச்சு, எடுத்த முடிவுன்னு நினைக் கும் போது, ரொம்ப சந்தோசமா இருக்கு. ஆனால், அப்போ இருந்த பெருந்தன்மை இப்போ ஏன் இல்லா மப் போச்சு..." என லேசாக கலங்கிய கண்களில் இருந்து வழிந்த நீருடன் கேட்டாள்.

பின், கன்னத்தை அழுந்த துடைத்துக் கொண்டு, "அந்த வீட்டுல இருக்குறவங்க கிட்ட நிறைய பணம் இருக்குறதால பாசம் கண்ணுக்குத் தெரியல. நம்மல் லாம் பணத்தை தேடி ஓடுறதுனால, பாசத்தை வெளிக் காட்டிக்க முடியல... அத நான் தப்பா நினச்சு... சாரி ப்பா! சாரிம்மா...!" என்றவள் முடிவாக,

"ஆனால், இது என் வாழ்க்கை. தயவு செஞ்சு இனிமே இந்த விசயத்துல நீங்க தலையிடாதீங்க, ப்ளீஸ்...' என்று விட்டு, வாசல் நோக்கிச் சென்றாள்.

அவள் பேசியது வருத்தத்தைக் கொடுத்தாலும், பெற்ற மனம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனா லும், கோபாலன் "தமிழு" என்று அழைக்க, அவள் என் னவென்று பார்த்தாள்.

"காசு இருக்கிறவங்களுக்கு, நாலு கல்யாணம் பண்றது கூட ரொம்பச் சாதாரணம். ஆனால் நம்மளை மாதிரி ஆளுங்களுக்கு கல்யாணமே கனவு தான்...! அந் தக் கனவு கலைஞ்சுட்டா, அதுக்கு அப்புறம், தூக் கம் கூட இருக்காது." என பெருமூச்சுடன் கூறியவரைக் கண்டவளுக்கு பாவமாக இருந்தது.

ஆனாலும், இதில் தான் எதுவும் செய்ய முடியாது என உணர்ந்தவள், "நான் பாத்துக்குறேன் பா...!" என்று விட்டு, புகுந்த வீட்டிற்கு வந்தாள்.

அங்கோ, தமிழின்பன் வராமல் இருந்ததை கண்டு, 'எங்க போனான்... இந்நேரம் பால்கனியில் தான உட் கார்ந்து இருப்பான்' என்றெண்ணிய படி, அங்கு சென்று சிவந்திருந்த கீழ் வானத்தை வெறித்தவளுக்கு, மனதில் இருந்த ஆற்றாமை சற்று அடங்கியது. சில நிமிடங்கள், அந்த மேகம் செல்லும் திசையையே வெறித்தவள், பின்

னால் விரல்கள் சொடுக்கிடும் சப்தம் கேட்ட பின் தான் திரும்பினாள்.

அங்கு தமிழின்பன் லேசான புன்னகையுடன் நிற்க, அவளும் சிறிதாய் புன்னகைத்தாள்.

பின், உதட்டை சுளித்து, "நீங்க தான கோபமா இருந்தீங்க?" என்று கையை கட்டி கொண்டு கேட்க,

கண்ணைச் சுருக்கி சிந்தித்தவன், "எப்போ?" என் பது போல் பார்த்தான் கண்ணில் குறும்புடன்.

"அது சரி, நீங்க தான கோபமா இருக்குற ஸ்மைலி எல்லாம் அனுப்புனீங்க?" என கேள்வியாய் கேட்டவ ளுக்கு,

"எனக்கு ஞாபகம் இல்ல..." என்ற பாவனையை கொடுத்தவனை, அவள் முறைத்தாள்.

பின் அவனே, பின்னால் மறைத்து வைத்தி ருந்த, கையில் இருந்த ஒரு ஐஸ் க்ரீமை அவளிடம் கொடுக்க, அதில் கண்கள் மின்ன அதனை வாங்கிய வள், "எனக்கா?" என ஆச்சர்யமாய் கேட்க,

அவன் "ம்ம்" என கண்ணை மூடித் திறந்தான்.

"ஹை!" என அதனைப் பிரித்து சாப்பிட்டவள்,

"உங்களுக்கு?" என்று நீட்ட,

அவன் தொண்டையை பிடித்து "சாப்பிட கூடாது" என்று இடவலமாக தலையசைத்தான்.

“ஓ” என்றவள், தீவிரமாக ஐஸ் க்ரீமை பதம் பார்க்க, அவளையே கீற்றுப் புன்னகையுடன் பார்த்திருந் தவன்,

அவளை நோக்கி கை நீட்டினான், “ஃப் ரெண்ட்ஸ்?” என்ற வாயசைவுடன்.

அவளுக்கோ உண்மையிலேயே எதிரில் இருப்பது இன்பா தானா என்றே சந்தேகம் வர, “நிஜமா? ஃப் ரெண்ட்ஸ் ஆ?” என்று விழிகள் தெறிக்கக் கேட்டவ ளைக் கண்டு, அழகாய் வெள்ளிப் பற்கள் தெரிய புன்ன கைத்தவன்,

“ம்ம்” என்று மேலும் கீழும் தலையாட்டினான்.

அவளுக்கோ, குஷி தாளவில்லை. வேகமாக கை குழுக்க வந்தவள், சட்டென நின்று, “ஆனால் நமக் குள்ள ரைட்டர் - ரீடர் ரிலேஷன் ஷிப் தான ரசிகரே!” என குறும்புடன் கேட்டிட, இப்போது முறைப்பது அவனின் முறையாயிற்று.

“கருவாச்சி” என்றவனின் உதட்டசைவை அறிந்து கொண்டவள்,

“ஆமா, இவரு மட்டும் எம் ஜி ஆர் கலரு...” என்று முணுமுணுத்தவள்,

அவன் இன்னும் கை நீட்டிக் கொண்டே இருப்பது உணர்ந்து, இதழோரப் புன்னகையுடன் “ஃப்ரெண்ட்ஸ்” என்று கை குலுக்கினாள் தலையைச் சாய்த்து.

# அத்தியாயம் - 10

இருவரும் நண்பர்களாகி கை குலுக்கிய நேரம், மெலிதான சாரலுடன் மிதமான மழை பொழிய, அதனைக் கண்டு "வாவ்! இன்பா, செம்ம கிளைமேட்ல" என அவள் அந்நேரம் தோன்றிய குளிரை அனுபவித்து, ஐஸ் கிரீமை ரசித்து ருசித்துச் சாப்பிட,

அதுவரை புன்னகைத்திருந்தவனின் முகம் இப்போது கறுத்திருந்தது. "ம்ம்" என்ற பதிலை மட்டும் கூறியவன், அறைக்குள் சென்று விட மனதினுள், சுஹானாவுடன் இம்மாலை நேர மழையை, அவனுக்கு பிடித்த ஐஸ் கிரீமுடன், கூடவே அவளை சீண்டிக் கொண்டே ரசித்தது நினைவு வர, மனதிலோ ஏமாற்றத்தில் பெரும் புயலே அடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது.

கடந்த கால நினைவுகள்

கசப்பான கரும்பாகியதில்...

நிகழ் கால நிகழ்வுகள்

இனிப்பான பாகற்காயானதோ ரசிகா...?

என்ற கவிதை அவனைத் தேடி ஓடி வர, அதனை புருவம் சுருக்கிப் படித்தவன், சட்டென திரும்பிப் பார்த் தான். அவனுக்குப் பின்னால், அவனைப் பார்த்தபடி தமிழரசி தான் நின்றிருந்தாள். கூடவே, அவன் பழை யதை நினைத்து மறுகுவதும் புரியவே செய்தது.

'எப்படி இவள், தான் மனதில் நினைத்ததை துல் லியமாகக் கூறினாள்' என சற்று வியந்தவன், விழி உயர்த்தி மெச்சுதலாய் பார்த்து விட்டு, அலமாரியில் ஒரு புத்தகத்தை தேடி எடுத்தான்.

அவளைப் பாராமல் மெத்தையில் சாய்ந்து அமர்ந்த படி அதில் மூழ்கிட, இதில் அவனும் அவள் வீட் டிற்குச் சென்று வந்ததைப் பற்றி கேட்கவில்லை. அவன் கேட்காதது நல்லது தான் என, அவளும் அதனை பற்றி பேச தவிர்த்து விட்டவள், சிறிது நேரம் அங்கும் இங்கும் உலாவினாள்.

இங்கு, லோகேஷோ கோபாலனிடம் போனில் கத் திக் கொண்டு இருந்தான்.

"ஒரு அப்பாவா நீங்க எடுக்குற முடிவு இது தானா? அவள் இஷ்டத்துக்கு விட்டுட்டேன்னு சொல்றீங்க...? ஏதோ உங்க பொண்ணு வாழ்க்கை வீணாகிடக் கூடா துன்னு, என் வீட்டுல இருக்குற மத்தவங்க மாதிரி உண் மையை மறக்காம சொன்னேன்ல. என்னைச் சொல்ல ணும்! காசப் பார்த்ததும் பொண்ணை வித்துட்டீங்க அப் படி தான!" என்றதில் அவருக்கு நெஞ்செல்லாம் வலி எழ,

"போதும் தம்பி. இவ்வளவு நல்ல மனசு இருக்கு றவரு, கல்யாணத்துக்கு முன்னாடியே ஏன் சொல்லல? அப்போவே சொல்லிருந்தா, நான் கல்யாணம் பண்ணிக்

கொடுத்துருக்க மாட்டேனே...! இப்போ மட்டும் உங்க ளுக்கு ஏன் இவளோ அக்கறை...?" எனக் கோபத்துடன் கேட்டதில், அவன் சிறிது திணறி விட்டு,

"யோவ்...! எனக்கு என்னய்யா அக்கறை? உன் பொண்ணு இங்க இருந்து சீரழியுறதை நீயும் பார்க்கத் தான போற! அவள் இங்க பண்ற ஒவ்வொரு திமிருக்கும் அதிகமாவே அனுபவிப்பா...! திடீர்னு ஒரு நாள் கேஸ் வெடிச்சு செத்துட்டா, இல்ல கார்ல அடிபட்டு செத்துட் டான்னு தகவல் வரும், வந்து அள்ளிட்டு போ...!" என கடுமையான வார்த்தையில் அவரை தாக்கியதில் பெற்ற மனம் பயப்படவே செய்தது.

ஆனாலும், "தம்பி, எனக்கு உங்களைப் பத்தியும் தெரியும், என் பொண்ணை பத்தியும் தெரியும். நீங்க செய்ற சதிய உங்களுக்கே திருப்பி விடுறதுல கெட்டிக் காரி. எதுக்கும் நீங்க பார்த்து இருந்துக்கோங்க." என்று எகத்தாளமாகப் பேசிவிட்டு, போனை வைத்து விட்டவர் யோசனையில் ஆழ்ந்தார்.

லோகேஷ் தான் "கிழவனுக்குத் திமிரு தான். என் கிட்டேயே சவால் விடுறான்..." என்று பல்லைக் கடித்தவ னிடம்,

கனிகா, "ப்ச், லோகேஷ்... இவளை ஒன்னுமே பண்ண முடியாதா? இதுல அண்ணா வேற, அவளுக்கு ஓவர் சப்போர்ட். இவளுக்கு சுஹானாவே பெட்டர். நம் மளை டிஸ்டர்ப் பண்ண மாட்டா" என்று வறுத்திட,

அவனோ, "அவள் இங்க இருந்து போவா... போக வைப்பேன்." என்றான் கடுப்புடன், தானே அவளுக்காக வாதிடப் போவது அறியாமல்.

வெகுநேரமாய், இவனிடம் எப்படி பேச்சை ஆரம் பிப்பது எனத் தெரியாமல், அவனும் புத்தகத்தை வைத்து விட்டுப் பேசுவான் என எதிர்பார்த்திருக்க, அவன் நிமிராமல் இருக்கவும், வேகமாகச் சென்று புத்த கத்தை வெடுக்கெனப் பிடுங்கினாள்.

அதில் தமிழின்பன், “ம்ம்?” என்று வினவ,

“எவ்ளோ நேரம் நானும் சும்மாவே இருக்கு றது...? நீங்க ஃப்ரெண்ட் ஆனது, மறுபடியும் புக்கு படிக் கத் தானா?” என முறைப்புடன் கேட்டவளைக் கண்டு மெலிதாய் புன்னகைத்தவன்,

“வேற என்ன பண்ணனும்?” என்று கேட்டான் கன் னத்தில் கை வைத்து.

“ம்ம்ம்... ஏதாவது பேசுங்க!” என தமிழரசி கூறிட, அதில் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

“சரி” என போனை கையில் எடுக்க, அதனை வெடுக்கென பிடுங்கியவள்,

“போன்ல வேணாம் நேர்ல” என்றதில் இப்போது முறைத்தான்.

“நான் பேசுனா, அதுல பாதி உனக்குப் புரியாது...” என அழுத்தமாகப் பார்த்து சைகை புரிய,

“புரியுதா இல்லையான்னு நான் சொல்றேன். அப் படி புரியல்லைன்னா, திரும்பச் சொல்லுங்க...” என்றாள் அதே அழுத்தத்துடன்.

பெருமூச்சு விட்டவன், "என்ன பேசணும்?" என கேட்க சட்டென பேச வராது,

"என்ன பேச..." என்று சில நிமிடமாக சிந்தித்த வளை உதட்டைக் கடித்து சிறு சிரிப்புடன் பார்த்தவன்,

"நீ அப்புறம் யோசிச்சு பேசு..." என நக்கலடித்து விட்டு, புத்தகத்தை கையில் தூக்க,

"இல்ல இல்ல இல்ல. நான் இப்போவே பேசு றேன்..." என அவள் பதறினாள்.

அதில் கடுப்பானவன், "கருவாச்சி..." என பல் லைக்கடித்துக் கொண்டு இதழசைக்க,

அவள் முறைத்தபடி பேச வரும் முன், செல்வம் உணவு கொண்டு வந்திருந்தார்.

அவரைப் பார்த்து, "ஆமா நீங்க எப்போ வந்தீங்க?" எனக் கேட்டவளிடம்,

"அய்யா தான், சாயந்தரமே வீட்டுக்கு வந்து நைட்டு வரச் சொன்னாரும்மா..." என்றதில், அவள் இன் பாவைப் பார்க்க,

"ஒரு நாளைக்கு ஒரு தண்டனை தான், அனுப விக்க முடியும்..." என கண் சிமிட்டினான்.

பார்வையால் அவனை சுட்டெரித்தவள், செல்வத் திடம், "சாப்பாடு வேணாம். நீங்க கொண்டு போங்க!"

அவர் புரியாமல் "ஏன்மா என்ன ஆச்சு?" என்று பதற,

“அட, நீங்க கீழ கொண்டு போங்க. நாங்க கீழ வந்து சாப்புடுறோம்னு சொன்னேன் அங்கிள்.” என்றாள் ஓரக் கண்ணால் தமிழின்பனைப் பார்த்தபடி.

அவன், மறுப்பாய் தலையசைக்க, “நம்ம கீழ போறோம், டாட். நீங்க போங்க அங்கிள்...” என உத்தர விட,

தமிழின்பன் அவரை முறைக்க, அவர்தான் இருவ ருக்கிடையில் மாட்டிக் கொண்டு தவித்தார். பின், எத் தனை நாள் தான் அறையில் அடைந்திருப்பார் என் றெண்ணி, அவர் நைசாக அனைத்தையும் எடுத்துக் கொண்டு சென்று விட,

இன்பனோ, “அறைஞ்சேன்னா தெரியும்...” என கையை ஓங்கினான்.

அவள் திரு திரு வென விழித்ததில், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, “உனக்கு வேணும்னா நீ கீழ போய் சாப்பிடு...” என்று கடுகடுப்புடன் சைகை செய்த தில்,

அவள் உதட்டைப் பிதுக்கி, “போங்க! நீங்க என் ஃப்ரெண்ட்னு சும்மா தான சொன்னீங்க...! இதே உங்க ஃப்ரெண்ட்ஸ், மகத்தும், ஷ்யாமும் சொல்விருந்தா கேட்டுருப்பீங்கள்ல? நீங்க ரூம்குள்ளேயே இருந்துக் கோங்க...! எனக்கு என்ன வந்துச்சு? ஆனால், நான் இங்க சாப்பிடவே மாட்டேன்.” என்றவள் கோபமாக பால்கனியில் சென்று நின்று கொண்டாள்.

தமிழின்பன் தான் தன்னை நொந்து, “தெரியாம பிரெண்ட்ஸ்னு சொல்விட்டோம். கருவாச்சி ஒரு முடி வோட தான் இருக்கா...! நீ எவ்ளோ நேரம் வேணா

லும் கோபமா இரு. எனக்கு என்ன வந்துச்சு..." என தோளைக் குலுக்கியவன், இரண்டு நிமிடம் புத்தகத்தில் ஏதோ படிக்க முயல, அவனின் பார்வை அவனை மீறி அவளிடமே தஞ்சம் புகுந்தது.

"ப்ச்...! இவளை..." என புத்தகத்தை தூக்கி எறிந்த வன் அவளருகில் சென்று நின்றான்.

தமிழரசியோ உர்ரென்ற முகத்துடன், அவன் அரு கில் நின்றது உணர்ந்தும், மறுபுறம் திரும்பிக் கொள்ள, இன்பா சொடுக்கிட்டு அழைத்தான். அவளோ மேலும் முதுகு காட்டி நிற்க, இப்போது கோபமாக அவள் தோளைப் பற்றித் திருப்பி நிறுத்தினான். அதில் தடுமா றியவள், அவன் மேலேயே விழப் போக, அவன் அவள் விழாமல், கரங்களை அழுந்தப் பற்றியதும், அதனை சட் டென எடுத்து விட்டவள்,

"இப்போ என்னவாம் உங்களுக்கு? அதான் என்னை அடிக்க வந்தீங்கள்ல... நான் ஒன்னும் உங்க பிரெண்ட் இல்லைல..." என மறுபடியும் ஆரம்பித்ததில், மேலும் நொந்தவன், கையை தலைக்கு மேலே கும் பிட்டு,

"போதும்!" என்றான் எரிச்சலாக.

அவள் மேலும் உதட்டைப் பிதுக்க,

அவன் கனிவாய் பார்த்து, "நீ என் பிரெண்ட் தான் அரசி..." என்றான் கண்ணை மூடித் திறந்து.

"அப்போ கீழ வாங்க..." என அவள் சிணுங்கியபடி கூறியதில்,

“எனக்கு பிடிக்கல” என கூறினான் சோர்வாக.

“ஏன் பிடிக்கல? பிடிக்கலையா? இல்ல அவங்க பேசுறது உங்களுக்கு காம்ப்ளெக்ஸா இருக்கா? நீங்க ரூமுக்குள்ளயே இருந்தா மட்டும் எல்லாம் சரி ஆகி டுமா? எத்தனை பொண்ணுங்க, எந்த தப்பும் பண்ணாம முகத்துல ஆசிட் பட்டு, அந்த முகத்தை மறைக்காம வெளிய சாதிக்கிறாங்க?” என்று பேசிக் கொண்டு போக,

தமிழின்பன் அவளை தடுத்து நிறுத்தி, “இப்போ என்ன கதையா எழுதுற? எதுக்கு இவ்ளோ டயலாக்?” என்றான் கேலியுடன் விழிகளை உயர்த்தி.

அதில் தமிழரசி தான் கடுப்பாகி விட்டாள். “நான் பேசுறது உங்களுக்கு நாடகத்துல வசனம் பேசுற மாதிரி இருக்கா?” என முறைக்க,

அவன் சட்டென தோன்றிய முறுவலுடன், மறுப் பாய் தலையசைத்து விட்டு, பின் “எனக்கு காம்ப் ளெக்ஸ்னு யாரு சொன்னா அரசி...?” என கைகட்டிக் கொண்டு கேட்டதில் அவள் புரியாமல் விழித்தாள்.

பின், அவனே லேசான கோபத்துடன், “எனக்கு காம்ப்ளெக்ஸ் எல்லாம் இல்ல. கோபம் தான். எல் லார் மேலயும் பயங்கர கோபம். எங்க வெளிய வந்தா, என்னை மீறி அதைக் காட்டி, கோபத்துல என் கண்ட் ரோல் இழந்துடுவேனோன்னு ஒரு பயம். கோபம் வந்தா யார் என்னன்னு பார்க்காம அடிச்சுடுவேன் அரசி. அதான்...” என நிறுத்தி நிதானமாக பெரிய வாக்கியமாக வாயசைத்தவன், அவள் அப்படியே நிற்பதைக் கண்டு,

“புரியுதா நான் சொன்னது...?” எனக் கேட்டான் தலையை ஆட்டி.

'வார்த்தைகள் மட்டும் தான், ஒருவரைக் கட்டி இழுக்கும் என யார் சொன்னது, அதெப்படி பாவ னையிலேயே வார்த்தைகளை கோர்த்து, கூடவே நம் மனை உறையவும் செய்கிறான்' என்ற தீவிர சிந்தனை யில் இருந்தவளுக்கு, அவன் கோபத்தில் தன்னிலை இழந்து விடுவேன் எனக் கூறியது புன்னகையைக் கொடுத்தது.

பின், அதே புன்னகையுடன், "நீங்க ஏன் கண்ட் ரோல் பண்ணனும், இன்பா? அவங்க கிட்ட காட் டுங்க. உங்களை இப்படிப் பேசுற சொந்தம், உங்களுக்கு வேணுமா என்ன? சொந்த தம்பி, அப்பா கூட புரிஞ்சுக் கலைன்னா, அப்புறம் மத்தவங்க மட்டும் எப்படி புரிஞ் சுப்பாங்க? நீங்க புரிய வைங்க. இல்ல, நீங்க யாரையும் தவிர்க்காம பேஸ் பண்ணுங்க. அப்படியும் இல்லைனா, எல்லாரையும் அவங்க அவங்க லைஃபை பார்த்துட்டு போகச் சொல்லுங்க. நீங்க ஏன் அமைதியா இருக்க ணும்?" என ஆதங்கத்துடன் குரலில் மென்மையை ஏற் றிக் கேட்டவளுக்கு, குறுநகை மட்டுமே கொடுத்தான்.

சில நொடிகள் கழித்து, "என் பாட்டி சொத்தை எல்லாம் என் பேர்ல எழுதும் போது, என் அம்மா, இங்க இருக்குற யாரையும் வெளிய அனுப்பக் கூடாதுன்னும், யாரையும் அவமானப்படுத்தற மாதிரி பேசக் கூடாதுன் னும் ப்ராமிஸ் வாங்குனாங்க. ஒருவேளை, அதுக்கு அப் புறம் அவங்க இருந்திருந்தா, நான் அதை மறந்துருப் பேன். ஆனால், அடுத்த நாள் அவங்க இறந்துட்டாங்க. அவங்க கடைசியா என்கிட்ட பேசுனது இதுதான். சோ, என்னால மீற முடியல..." என்று தோளைக் குலுக்கி, எங்கோ வெறித்துக் கொண்டு கூறியவனை, அவள் தான் வியப்பாகப் பார்த்தாள்.

பின் அவனே, "அதுனால தான், அவங்க என்னை ஏமாத்தி சொத்து எல்லாம் எழுதி வாங்கியும், பொறு மையா இருக்கேன்." என பொங்கி எழுந்த கோபத்தை அடக்கியபடி கூறிட, அவள் திகைத்து விட்டாள்.

"என்ன? சொத்தெல்லாம் எழுதி வாங்கிட்டாங் களா? எப்போ நடந்துச்சு இது? நீங்க ஏன் கொடுத் தீங்க?" என வரிசையாய் கேள்வி கேட்டவளுக்கு,

"நான் ஹாஸ்பிடல்ல இருந்தப்போ... எனக்கே தெரியாம" என்றான் விரக்தியாய் புன்னகைத்து.

"ப்ச், மனுஷங்களா இவங்க எல்லாம்? பணம் தான் முக்கியம்னா அப்புறம் எதுக்கு இந்த சொந்தமெல்லாம்? இதுக்கு உங்க அப்பாவும் உடந்தையா... சே..." என முகம் சுளித்தவள்,

பின் யோசனையுடன், "ஆமா, அப்புறம் எப்படி நீங்க இங்க மட்டும் இருக்கீங்க? இந்நேரம் உங்களை இங்க இருக்க விட்டிருக்க மாட்டாங்களே...!" என்றாள் குழப்ப மாக.

'பரவாயில்ல... அறிவு தான்!' என பாராட்டும் விதத் தில் பார்த்தவன்,

"சொத்துன்னா, எல்லா சொத்தையும் எழுதி வாங்க முடியாது. இந்த வீடு, அப்புறம் இன்னும் கொஞ் சம் ப்ராப்பர்டி எல்லாம் இன்னும் என் பேர்ல தான் இருக்கு. அதெல்லாம் நானே நினைச்சாலும் எழுதிக் கொடுக்க முடியாது. ஏன்னா எனக்கு அப்புறம், அது என் பேபிக்கு தான்..." என சைகை செய்து முடிக்கை யில், அவனுக்கு உள்ளுக்குள் சுள்ளென ஒரு வலி எழ,

“போகலாம்” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராமல் விருட்டென வெளியில் சென்றான்.

அவளுக்கு தான், சில நொடிகள் என்ன ஆனது என புரியவே இல்லை. அதான் சொத்தை எழுதி வாங்கி விட்டாங்களே, அப்புறம் எதுக்கு இங்கயே இருக்கனும். என கடுப்படித்தவளுக்கு இந்த வீடையும் விட அவர்களுக்கு மனதில்லை என்ற எண்ணம் தெளிவாகப் புரிந்தது. மேலும் அவன் முகம் திடீரென வாடிப்போனதை உணர்ந்தவள்,

அவன் பின்னே வேகமாகச் சென்று “இன்பா! இன்பா!” என தடுத்து நிறுத்தினாள். அவன் இன்னும் இறுக்கத்துடன் இருக்க, அவளோ கண்களை உருட்டி, ஹஸ்கி குரலில்,

“எதுக்கும் மெதுவா நடந்து வாங்க” எனக் கூறியதில்,

தன் கோபம் மறைந்து “ஏன்” எனப் பார்த்தான்.

“நீங்க சீரியல்லாம் பார்த்தது இல்லையா? இங்க எல்லாரும் என்மேல கொலை வெறியில இருக்காங்கல்ல. அதுனால, என்னைப் பழிவாங்க, தரையில எண்ணெய் ஊத்துறது, கேஸ் ஆன் பண்ணி வைக்கிறது, அப்புறம்...” என தீவிரமாக சிந்திக்க, அதில் பக்கென சிரித்து விட்டவன், அவள் தலையில் வலிக்காதவாறு கொட்டி,

“இதெல்லாம் நீ பண்ணாம இருந்தா சரி தான்...” என்றான் இதழோரம் மலர்ந்த புன்னகையுடன்.

“ஹைய்ய... நான் ஒன்னும் சில்லியா பண்ணமாட்டேன். பண்ணுனா பெருசா தான் பண்ணுவேன்...” என்று சிலுப்பிக் கொண்டு அவனுக்கு முன்னே சென்றவளைக் கண்டு,

‘கடவுளே! இவள் கிட்ட இருந்து என்னை காப்பாத்து...’ என மானசீகமாக வேண்டிக் கொண்டான்.

அவள் வந்ததுமே, பத்மா ஏதோ பேச வரும் போது, அழுத்தமான பார்வையுடன் தமிழின்பனும் வர, அனைவரும் ‘இவன் ஏன் வந்தான்...’ என்று பார்த்தனர். தமிழரசியோ, “செல்வம் அண்ணா, இன்னைக்கு என்ன ஸ்பெஷல்?” என்று கேட்டுக் கொண்டே, அனைவரையும் நக்கலாகப் பார்த்து விட்டு, அடுக்களைக்குள் புகுந்து ஹாட் பாக்சில் இருந்த சப்பாத்தியை எடுத்து வந்து டைனிங் டேபிளில் வைத்தாள்.

செல்வம், பிரபாகரையும் சாப்பிட அழைக்க, அவளோ “அட இருங்க அங்கிள். அவருக்கு ஏன் தோசை எல்லாம் கொடுக்குறீங்க? ஒரு தட்டுல மிக்சர் வைச்சுக் குடுங்க. அவர் பாட்டுக்கு சாப்பிட்டுக்கிட்டே இருக்கட்டும். இல்ல மாமா...” என இழுத்தபடி கேட்டதில், அவர் கோபமாக தமிழின்பனை முறைத்தார்.

அவனோ “அடிப்பாவி...” என அவளை பே வென பார்த்தான்.

லோகேஷ் “என்னடி...?” என்று பேச ஆரம்பிக்கும் முன், டேபிளை டம்மென தட்டிக்கொண்டு தமிழின்பன் இருக்கையை விட்டு எழுந்து, லோகேஷை தீப்பார்வை பார்த்திட, அவனுக்கு இன்னுமும் கூட அவன் முன் பேசும் தைரியம் இருக்கவில்லை.

ஆனாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அவள் அப்பாவை அப்படிப் பேசுறா... நீங்க வேடிக்கை பார்க்குறீங்க...?" என்று எழாத குரலில்,

கூடவே 'சே, நமக்கு இந்த தைரியம் மட்டும் வந்து தொலைய மாட்டேங்குது, இவனை பார்த்தா' என அடங் காத கோபத்துடன் கூற,

தமிழரசி, "ஓஹோ... உப்புக்கு சப்பாணியா இருக் குற, உன் அப்பாவைச் சொன்னா கோபம் வருது. ஆனால், உங்களை இவ்ளோ நாள் பார்த்துகிட்ட உங்க அண்ணன் மட்டும் உனக்கு இளக்காரமா?" என கேள் வியை தொடுத்திட,

தமிழின்பன் "ப்ச்..." என அவளைப் பார்த்து "எனக்கு இது சுத்தமா பிடிக்கல... நான் ரூமுக்கு போறேன்." என விழிகளால் பேசினான்.

"ப்ளீஸ்..." என கண்ணை சுருக்கி கெஞ்ச, அதில் பெருமூச்சு விட்டவன், தட்டை எடுத்து சாப்பிட ஆரம் பிக்க, அவனின் பெரியப்பா சண்முகம் கடுப்புடன் உள்ளே சென்றார். பிரபாகரோ 'சே!' என அவள் பேச் சில் கோபத்தைக் காட்ட இயலாமல், அவரும் உள்ளே சென்றிட, மற்றவர்களும் அவரவர் அறையில் அடைந்த னர்.

அனைவரும் சென்றது உணர்ந்தும், தலையை நிமிர்த்தாமல் இருந்தவனிடம் "இன்பா, நான் சப்பாத்தி போட்டுத் தரட்டா...?" எனக் கேட்டாள் தமிழரசி.

அவன் மிரண்டு வேண்டாம் என வேகமாகத் தலையாட்ட,

கண்ணை சுருக்கி முறைத்தவள், "அப்போ ஒழுங்கா பேசிக்கிட்டே சாப்பிடுங்க..." என்று அவனருகில் அமர,

தமிழின்பன் தட்டை எடுத்து அவளுக்குக் கொடுத்து, "பேசாம சாப்பிடு..." என்று பாவனை செய்தான் கண்ணில் கட்டளையுடன்.

அவனுக்கு அழகு காட்டியவள், கிட்டதட்ட இரண்டு மணி நேரமாக அவனை அங்கிருந்து நகரவே விடவில்லை. மற்றவர்களோ, அவள் சென்றதும் வரலாம் என அறைக்குள் இருந்திருக்க, மூச்சு முட்டியது. எவ்வளவு நேரம் உள்ளேயே இருப்பது என. தமிழரசி தான், 'இனிமே நீங்க எல்லாம் எப்படி வெளிய நடமாடுறீங்கன்னு நானும் பார்க்குறேண்டா...' என உள்ளுக்குள் குதூகலித்துக் கொண்டு, மேலும் அவனிடம் பேச்சுக் கொடுக்க, அவன், "போதும் கருவாச்சி. ரூம்க்கு போகலாம்..."

"சரி..." என சலிப்புடன் அறைக்குச் சென்றாள்.

அதற்கு மேல் விழித்திருந்தால், தன்னை பேசி பேசி இம்சை செய்வாள் என அவன் படுத்து உறங்கிவிட, விடிந்திருந்த நேரம், யாரோ தன் தோளை சுரண்டுவதை உணர்ந்து, கண்ணைக் கசக்கி விழித்தவன், அருகில் அவனருகில் அமர்ந்திருந்த தமிழரசியைக் கண்டு, "என்ன" என்றான் விழியால்.

"விடிஞ்சுருச்சு... எந்திரிங்க!" என்று மெல்லிய குரலில் கூறிட, அவன் மணியை பார்த்தான். ஆறரை தான் ஆகி இருந்ததில்,

“ப்ச்!” என கடுப்படித்தவன், போர்வையை போர்த்திக் கொண்டு மீண்டும் படுத்து விட, போர்வையை எடுத்து விட்டவள்,

“இன்பா...” என்று அவனுக்கு காதுக்கு அருகில் சென்று கத்தினாள்.

அதில் உறக்கம் முற்றும் கலைந்தவன், எழுந்து தலையணையை எடுத்து அவள் தலையில் அடித்து, “சப்புன்னு அடிச்சுடுவேன்...” என்று கோபத்துடன் வாயசைக்க,

அவளோ அதனைக் கண்டுகொள்ளாது, “வாங்க தோட்டத்துல வாக்கிங் போகலாம்...”

“ஒழுங்கா போய்டு” என்று விரல் நீட்டி எச்சரிக்க,

அவளோ உதட்டை பிதுக்கி, “உங்க பிரெண்ட் ஆ இருந்தா வந்துருப்பீங்கள்ல...” என்று கண்ணீர் வராத கண்ணை கசக்கி நீரை வரவைக்க முயல,

அவன் தான் தலையில் அடித்துக் கொண்டான். ‘உயிரை வாங்குறா...!’ என திட்டியபடி, அவளுடன் தோட்டத்துக்கு செல்ல கீழிறங்கி வந்தவன், பூக்கள் எல்லாம் பறிக்கப்பட்டு, ரேகா அதனை கட்டிக்கொண்டு இருப்பதைக் கண்டு புரியாமல் அவளைப் பார்த்தான்.

அவளோ அவன் கேள்விப் பார்வைக்கு பதில் கூறாமல், “ஆமா, அன்னைக்கு நிறைய பட்டாம்பூச்சி வரும்னு சொன்னீங்கள்ள... ஆனால் நான் பார்க்கவே இல்லை. இன்னைக்கு காட்டுறீங்களா?” என்று இரு வருடம் முன்பு சொன்னதைக் கேட்க,

'காலையிலேயே எந்திரிச்சு என்ன பண்ணி தொலைச்சான்னு தெரியல...' என உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டவன், தோட்டத்திற்குச் செல்ல, வெகு நாள் கழித்து விடியலைக் கண்டு, அந்த அதிகாலை நேர குளிரில் மலர்களின் மணத்தினை முகர்ந்து கொண்டே நடை பயின்றது, ஒரு புத்துணர்வைக் கொடுப்பதை உணர்ந்து, அருகில் நடந்து வந்தவளைப் பார்த்தான் சற்று ரசனையுடன்.

அவள், "இன்பா" என அழைத்து, "நீங்க ஏன் ஆஃபீஸ் போறது இல்ல. போனாலும் உடனே வந்துடுறீங்க..." எனக் கேட்க, சட்டென நின்று விட்டவன்,

"உன் பிளான் என்னன்னு புரியுது... பட் நான் சிக்கமாட்டேன்..." என நடைப்பயணத்தை ஜாக்கிங் ஆக மாற்றி, தோட்டத்தை சுற்றி ஓட ஆரம்பிக்க,

'ரூம் ல இருந்து தோட்டம் வரைக்கும் கூட்டிட்டு வந்த உங்களை, ஆஃபீஸ்க்கு போக வைக்க முடியாதா என்னால...?' என்று எக்களித்துக் கொண்டவள்,

அவன் பின்னே ஓடி, "இன்பா இன்பா... கேட்டதுக்கு பதில் சொல்லுங்க. நீங்க ஏன் ஆஃபீஸ் போறது இல்ல" எனக் கேட்டு மூச்சிரைக்க ஓட,

அவன் ஒரு இடத்தில் நின்று விட்டு, "நான் அங்க சேர்மன் இல்ல. ஜஸ்ட் ஷேர் ஹோல்டர் மட்டும் தான். நான் எழுதி கொடுத்த சொத்துல, என் பிசினஸ்ஸும் அடக்கம்... போதுமா?" என கரங்களை கோபத்துடன் அசைத்து கூறியவன், மீண்டும் ஓட்டத்தை தொடர, அவள் தான் அதிர்ந்தாள்.

அவனின் தொழிலில், அவன் ராஜா என்பதும், அதற்கு பின் அவனின் ஏகப்பட்ட உழைப்பு இருக்கிறது எனவும் உணர்ந்தவள், மீண்டும் அவனைத் தாண்டி ஓடி, அவன் முன் நின்று, "அது எப்படி நீங்க உங்க பிசினெஸை விட்டுக் கொடுக்கலாம். சரி அப்படிப் பார்த்தாலும் கொடுத்தது உங்க சொத்தை தான். உங்க திறமையை இல்ல." என்று அவனை மீண்டும் அலுவலகம் செல்ல வைக்க வேண்டும் என்ற ரீதியில் பேசிட,

அவளை ஒரு நொடி அமைதியாகப் பார்த்தவன், "நீ என்ன சொன்னாலும், நான் அங்கே போக மாட்டேன்... இனிமே இதை பத்தி பேசுனா, உன் ஃப்ரெண்ட்ஷிப்பை கட் பண்ணிடுவேன். பண்ணட்டா?" என தீப்பொறி பறக்க, கண்ணில் அனலுடன் கேட்டிட, திடீரென்ற அவனின் கோபத்தில், உண்மையிலேயே கண் கலங்கி உதட்டை பிதுக்கி நின்றாள், தமிழரசி.

அவன் அதனைக் கண்டுகொள்ளாமல் அதே கோபத்துடன் நான்கு அடி ஓடியவன், அதற்கு மேல் அவளை திட்டி விட்டு ஓட்டத்தை தொடர இயலாமல், "ஊஃப்" என தன்னை நொந்து இடுப்பில் கை வைத்து நின்று திரும்பி அவளைப் பார்க்க, அவள் கண்ணில் இருந்து ஒரு துளி நீர் வெளியேறியதில், மீண்டும் அவளருகில் சென்றான்.

"சாரி..." என கண்ணை சுருக்கி மன்னிப்பு கேட்டவன், விழி விரித்து "பட்டாம்பூச்சி காட்டட்டா எழுத்தாளரே?" என உதட்டசைக்க,

"போயா! நான் தான் உங்க ஃப்ரெண்ட் இல்லைல..." என ஆரம்பிக்க, அவன் தான் வெறியாகி விட்டான்.

# அத்தியாயம் - 11

நான் தான் உங்க ஃப்ரெண்ட் இல்லைல என்ற தமிழரசியின் வாசகத்தில் கடுப்பான தமிழின்பன், அவளை வெறியாய் முறைத்து “அடிங்க...” என அடிக்க கையை ஓங்க, அவள் சட்டென பின்னால் நகரந்து ஓட ஆரம்பித்தாள்.

அங்கிருந்த கல் ஒன்றை எடுத்து அவள் மேல் குறி பார்த்து எறிந்தவன், “ஒழுங்கா நில்லு” என விரல் நீட்டி எச்சரிக்க,

“நிக்க மாட்டேன். போங்க... நீங்க என் ஃப்ரெண்ட் ஷிப்ப கட் பண்ணிடுவீங்கள்ல?” என பாவமாகக் கூறிட,

அவனோ உள்ளுக்குள் பொங்கிய புன்னகையை வெளியில் காட்டாமல், “ப்ச் ப்ச்... மாட்டேன்” என மறுப் பாக தலையசைத்து அருகில் வரச் சொன்னான்.

தமிழரசி ‘இவனை நம்பி பக்கத்துல போகலாமா?’ என யோசித்தவாரே, அவன் முன் காலை எடுத்து வைக்க, அதற்குள், அவன் அவளருகில் வந்து தலையில் நறுக்கென கொட்டினான்.

"ஆஆ..." என தலையை தேய்த்தவள், அவன் அடுத்த அடி அடிக்கும் முன் வீட்டினுள் ஓடிட, எதிரில் பத்மா வருவது அறிந்து, ஓட்டத்தை முதலில் நிறுத்தத் தான் நினைத்தாள்.

ஆனால், அவளின் மூளை அதற்கு இடம் கொடுக் காமல், சர்ரென வேண்டுமென்றே அவர் மேல் இடிக் கச் சொல்ல, அதன் பேச்சை தட்ட இயலாது, படாரென மோதி விட்டாள்.

அப்பொழுது தான் குளித்து விட்டு வந்ததனால், அவரின் கால்களும் ஈரப்பதமாக இருக்க, அவர் வழுக்கி கீழேயே விழுந்து விட்டார்.

"ஐயோ! அம்மா!" என இடுப்பை பிடித்து கொண்டு முகத்தை சுருக்கிய பத்மா, அவளை தீப்பார்வை பார்க்க,

அவளோ "அச்சோச்சோ! பத்து... இப்படியா ஓடி வர்றப்ப நடுவுல வர்றது. சின்னஞ்சிறுசுங்க இருக்குற வீட்டுல, பார்த்து பக்குவமா நடக்குறது இல்ல. பாரு எப் படி விழுந்துட்டன்னு!" என்று வாயை பொத்தி பாவம் பார்க்க, அதற்குள் சத்தம் கேட்டு தமிழின்பனும் உள்ளே வந்து சற்று திகைத்தான்.

"என்ன ஆச்சு?" என தமிழரசியிடம் விழி உயர்த்தி வினவிட,

"உங்க அத்தை கீழ விழுந்துட்டாங்க, இன்பா..." என்று அவள் குற்றப்பத்திரிக்கை போல் வாசிக்க, அதற் குள் மற்றவர்களும் அங்கு வந்து அதிர்ந்தனர். பிரபாகர் வேகமாக அவரின் தங்கையைத் தூக்கி விட, அவருக்கு இடுப்போடு காலை அசைக்கவே இயலவில்லை.

ரேகாவோ, "என்னடி பண்ணுன அண்ணியை? இவள் தான் தள்ளி விட்டுருக்கணும்..." என தமிழரசியைத் திட்ட,

பத்மா, "இவள் தான் அண்ணா என் மேல வேணும்னே வந்து இடிச்சு தள்ளி விட்டா!" என்றதில், லோகேஷும், கனிகாவும் பொங்கி விட்டனர்.

கனிகா, "அப்பா, இவள் இப்போவே இவ்ளோ பண்றா. இன்னும் கொஞ்ச நாள்ல நம்மளை கொன்னுட்டு, நம்மளே தற்கொலை பண்ணிக்கிட்டோம்னு சொன்னாலும் சொல்லுவா" என சண்முகத்திடம் புகார் கூற,

லோகேஷோ "தள்ளியும் விட்டுட்டு பொய் வேற சொல்றியா?" என எகிற,

தமிழின்பன் 'என்ன நடக்குது இங்க என்று அவளை பார்த்தான் புரியாமல்.'

அவளோ தோளைக் குலுக்கி, "நான் ஏன் பொய் சொல்லணும் கொழுந்தனாரே? ஆமா, நான் தான் தள்ளி விட்டேன். வேணும்னு தான் பண்ணேன். இப்போ என்ன அதுக்கு? இந்த வீட்டுல யாருக்கு என்ன ஆனாலும் யாரும் எதுவும் கேட்க மாட்டீங்க தான. அப்புறம், இப்போ மட்டும் எதுக்கு கேட்குறீங்க. எதுக்கும் உன் அத்தை பேர்ல ஏதாவது சொத்து இருந்தா, அதை முதல்ல எழுதி வாங்குங்க. சரியா...?" என யோசனை கூறுவது போல் அவர்களை வாரிட,

தமிழின்பன், தனக்காக அவள் பேசியதிலும், அவள் செய்த செயலிலும், அவளை அமைதியாய் ஒரு பார்வை பார்த்து, "வா..." என கையை பிடித்து அறை

நோக்கி இழுத்தவன், வலியில் துடித்து கொண்டிருந்த வரை கண்டுகொள்ளாது, மேலே சென்று விட்டான்.

இதில் லோகேஷ் உச்ச பட்ச கோபத்தில் இருக்க, எப்போதும் இங்கு யாருக்கு ஒன்றென்றாலும் உடனே மருத்துவரை அழைத்து வந்து காட்டுபவன், தன்னை கண்டு கொள்ளாது சென்றது, லேசாக சுருக்கென இருந்தது பத்மாவிற்கு.

ஆனால், அதனை உணராமல், 'ஆமா இவன் வந்து தான் பார்க்கணுமா?' என எண்ணிக்கொள்ள,

கனிகாவும் ரேகாவும் தான் அவரை உள்ளே அழைத்துச் சென்று படுக்க வைத்தனர்.

இதில், ஷெண்பா அறையிலேயே அடைந்திருந் ததை யாரும் கவனிக்கவே இல்லை ரேகாவைத் தவிர.

தமிழரசியை அறைக்கு இழுத்துச் சென்றவன், இடுப்பில் கை வைத்து முறைத்தான்.

அவளோ "நீங்க என்கிட்ட சாதாரணமாவே பேச மாட்டேங்கிறீங்க. ஒன்னு அடிக்க வர்றீங்க... இல் லைன்னா முறைக்கிறீங்க. நம்ம வேணா ஃப்ரெண்ட் ஷிப் கட் பண்ணிக்கலாம்" என தலையை உருட்டி திட்டவட் டமாக பேச,

நிம்மதியான பாவம் ஒன்றைக் கொடுத்த தமிழின் பன், "ரொம்ப சந்தோசம். கட் பண்ணிடலாம்" இரு விரல் களை வைத்து சைகை செய்து விட்டு, குளியலறை நோக்கிச் செல்ல,

“போங்க! கட் பண்ணுங்க. யாரு வேணாம்னு சொன்னா? இதே நீங்க உண்மையா ஃப்ரெண்டா நினைச்சுருந்தா இப்படி நான் சொன்னதும், என்னை சமாதானம் பண்ணிருப்பீங்க. ஆனால்... நான் தான் உங்க ஃப்ரெண்ட் இல்லைல...” என்று அழு குரலில் பேசி முடிக்கும் முன், அவன் நன்றாகவே கண்ணோரம் மலர்ச் சியில் சுருங்கும் அளவு, அழகாய் சிரித்திருந்தான்.

பின், “கருவாச்சி... யூ வில் பீ மை பெஸ்ட் ஃப்ரெண்ட் ஃபார் எவர்...” என கண்ணை மூடி திறந்து மன முணர்ந்து கூறியவன்,

“ஆனால், அதுக்காக நீ என்ன சொன்னாலும் நான் கேட்பேன்னு அர்த்தம் இல்ல... ரைட்?” என புன்னகைத் தபடியே கண்ணால் எச்சரித்து விட்டு, மீண்டும் குளிக் கச் செல்ல,

அவளோ அவனை நகர விடாமல், “அதெல்லாம் முடியாது. எனக்கு ஃப்ரெண்டா இருந்தா, நான் சொல் றதை கேட்டு தான் ஆகணும்...” என்று கையைக் கட்டி விறைப்பாகக் கூறியதில், அவன் சலனமின்றிப் பார்த் தான்.

அவள் அந்த அமைதியை பயன்படுத்தி, “உங்க பிசினெஸ் உங்களுக்கு எவ்ளோ முக்கியம். அதை போய் ஏன் விட்டுக் கொடுக்குறீங்க. நீங்க ஏன் ஒதுங்கி போக ணும்னு நினைக்கிறீங்க...?” என விடாமல் பேச,

“ஒழுங்கா தள்ளிப் போ... இல்ல அடிச்சுருவேன்!” என பாவனை செய்ததில், உதட்டைச் சுளித்தவள்,

“எப்படியோ போங்க! எனக்கு என்ன வந்துச்சு?” என்றவள் பால்கனியில் சென்று அமர்ந்து கொண்டாள்.

குளித்து முடித்து வந்தவன், நேரம் ஆகியும் அவள் கல்லூரிக்குக் கிளம்பாமல் இருப்பதை உணர்ந்து போனில், "காலேஜ் கிளம்பலையா கருவாச்சி!" எனக் கேட்க,

"நான் எதுக்கு போகணும்? உங்க பிசினெஸ் பத்தி நான் அக்கறை படக்கூடாதுன்னா, அப்போ என் படிப்பை பத்தி நீங்க அக்கறைப் பட தேவை இல்ல. நான் காலேஜ் போக மாட்டேன்." என அவள் போர் கொடி தூக்க,

அவனோ அவளை நிமிர்ந்து முறைத்தான்.

"அடம்பிடிக்காத அரசி, ஒழுங்கா கிளம்பு! சொல் லிக்கிட்டே இருக்க மாட்டேன். உண்மையிலேயே அடிச் சுடுவேன்." என கண்டிப்பாய் அனுப்பி விட்டு,

அமர்ந்திருந்தவளின் கையை பிடித்து எழுப்பி, அறைக்குள் தள்ளினான், "போய் கிளம்பு போ" என்று.

"முடியாது முடியாது. நான் போக மாட்டேன். நீங்க திரும்பி ஆஃபீஸ் போறவரை, நான் படிக்கப் போக மாட் டேன்." என்று வம்படியாக நின்றதில் இடுப்பில் கை வைத்தவன், ஒரு கையால் பின்னந்தலையை அழுந்தத் தடவி விட்டு, சில நொடிகள் தன்னை அடக்கச் சிரமப் பட்டவன், அதற்கு மேல் முடியாமல் பளாரென அறைந் தான்.

அவன் உண்மையிலேயே அறைவான் என எதிர் பாராதவள், கன்னத்தில் கை வைத்து, அவனை திகைத்துப் பார்த்து விட்டு, சுள்ளென வலி எழுந்ததில் தேம்பி தேம்பி அழுதபடி, கல்லூரிப் பையை எடுத்துக் கொண்டு விருட்டென வெளியில் சென்று விட்டாள்.

தமிழின்பன் தான், அங்கேயே தலையில் கை வைத்து அமர்ந்து விட்டான். 'ஐயோ! இவளால என் பொறுமை காத்துல பறக்குது...' என நொந்தவன், வெகு நேரம் செய்வதறியாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

சிறிதுநேரத்தில், "கருவாச்சி..." என குறுஞ்செய்தி அனுப்ப, அவ்வளவு நேரம், 'என்னை அடிச்சுட்டான்...' என்று சந்தனாவிடம் அனைத்தையும் கூறி அழுது கொண்டு இருந்தவள், அவளின் கெஞ்சலில் அப்பொழுது தான் அழுகையை நிறுத்தி இருக்க,

அவனின் குறுஞ்செய்தியைக் கண்டதும் மீண்டும் கண் கலங்கி விட்டது.

சந்தனா தான், பாவம் அந்த அண்ணா என மனதில் வருத்தப்பட்டுக் கொண்டு, கூடவே தன் தோழி அழுவதிலும் வருந்தியவள், அவளுக்கு சாப்பிட ஏதாவது வாங்கிக் கொண்டு வருகிறேன் என கேன்டீன் சென்றாள்.

தமிழரசி பதில் கூறாமல் இருந்ததில், "கருவாச்சி..." என மீண்டும் அவன் குறுஞ்செய்தி அனுப்ப, அவள் அப்போதும் அமைதியாகவே இருந்தாள்.

"ப்ச், பேசுடி...! கோபத்தை கிளறாத... !" என அவன் மேலும் கோபத்துடன் அனுப்பி இருக்க,

"இப்போ என்ன பேசணும்? நான் க்ளாஸ்ல இருக்கேன். பேச முடியாது..." என மூக்கை உறிஞ்சிக் கொண்டே பதிலனுப்ப,

"பொய் சொல்லாத எழுத்தாளரே! மரத்தடியில உட்கார்ந்து, சின்ன பிள்ளை மாதிரி அழுது கிட்டு தான இருக்க?" என அவன் சரியாகக் கேட்டதில் பதறியவள்,

"அது எப்படி உங்களுக்கு தெரியும்?" என்று வாயை விட்டாள்.

அப்போது "லூசு கருவாச்சி! திரும்பி பாரு..." என குறுஞ்செய்தி வந்ததில் சட்டெனத் திரும்பியவள், அங்கு மரத்தில் சாய்ந்து, அவளை குறுகுறுவென பார்த்த படி தமிழின்பன் நிற்பதைக் கண்டு விழி விரித்தவள், உடனே கோபத்துடன் திரும்பிக் கொண்டாள்.

அவனோ, அவளருகில் சென்று அமர்ந்து, அவள் கையை பற்றி, அவன் கண்ணைப் பார்க்க வைத்தான். அவள் அவனைப் பாராமல் கையை எடுத்து விட்டு, முகத்தைத் திருப்ப,

இப்போது அழுத்தமாக அவள் முகத்தை பற்றி அவன் பக்கம் திருப்பியவன், "நீ என் மூஞ்சிய பார்த்தா தான் நான் பேசுறது தெரியும்... இல்லைன்னா நான் லூசு மாதிரி காத்துல பேச வேண்டியது தான்" என்று பல் லைக்கடித்து விழியில் கடுமையுடன் சைகை செய்ய, அதன் பிறகே அவளுக்கு அது உரைத்தது.

அதில் நன்றாக அவன் புறம் திரும்பி அமர்ந்தவள், கன்னத்தில் இருந்த கையை எடுத்து விட்டு, பாவமாக முகத்தை வைக்க,

அதில் பெருமூச்சு விட்டவன், அவள் கையை மீண்டும் எடுத்து அவன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டு, "இப்போ என்ன நான் சாரி கேட்கணுமா? அதெல்லாம் கேட்க முடியாது. நீ என் ஃப்ரெண்ட் தான,

உன்னை அடிக்க எனக்கு உரிமை இல்லையா? மகத்தும் ஷ்யாமும் எத்தனை தடவை என்கிட்ட அடி வாங்கிருக்காங்க தெரியுமா, கருவாச்சி?” என தலையைச் சாய்த்துக் கூறியவன்,

“கோபத்துல எத்தனையோ பேரை அடிச்சு சாரி கூட கேட்பேன் தான். ஆனால், உரிமையில அடிச்சது உன்னை மட்டும் தான். சோ... நான் சாரி கேட்க மாட்டேன்...” என பாவனை செய்தவன், சுஹானாவைத் தான் சொல்கிறான் என அவளும் புரிந்து கொண்டாள்.

அதிலும், “சாரி எல்லாம் கேட்க முடியாது” என கண்டிப்புடன் அவன் செய்த சைகையிலேயே அவளின் கோபம் காணாமல் போயிருக்க, அவளுக்குத் தான் ஒரு விஷயம் புரியவே இல்லை. அதெப்படி, வார்த்தைகள் அற்ற இந்த மௌன பேச்சு, தனக்குள் இத்தனை உணர்வுகளை கொண்டு வருகிறது? கோபம், நட்பு, சமாதானம், மகிழ்வு, சோகம் என இவனின் செய்கையிலேயே தான் எப்படி இவை அனைத்தையும் துல்லியமாக மனதில் ஏற்றி அதனை உணர்ந்து கொள்கிறோம்... ஏதோ ஒரு கிரேஸ் இருக்கு இவன் மேல...’ என தன் போக்கில் ஏதோ சிந்தித்தபடி அவளின் எண்ணப் போக்கை ஓட விட்டவள், அவன் நறுக்கென கையைக் கிள்ளியதும் தான் சுயநினைவு பெற்றாள்.

தமிழின்பன் அவள் இன்னும் கோபம் குறையாமல் இருக்கிறாள் போல என எண்ணி, “இன்னும் கோபம் போகலையா எழுத்தாளரே! வேணும்னா, என்னை ஒரு அடி அடிச்சுக்கோ!” என கன்னத்தைக் காட்டினான்.

அதில் அவளுக்கு லேசாக சிரிப்பு வர, “உங்களை அடிக்கல்லாம் மாட்டேன்... வலிக்கும்!” என்று சிணுங்கி

யபடி கூறியவளை, சற்று வியப்புடன் பார்த்தான். ஆனால் உடனே அவள், "அதுனால பெரிய தண்டனையா நீங்க ஆஃபீஸ் போகணும்..." என்று தான் விட்ட இடத்திலேயே நிற்க,

அவனோ தலையை ஆட்டி புன்னகைத்துக் கொண்டு "பிடிவாதம் பிடிச்சவ..." என திட்டிக் கொண் டான்.

பின் அவனே, "இப்ப நான் போய் என்ன பண்ண போறேன்? அங்க நான் தான் சேர்மன் இல்லையே! வெறும் ஷேர் ஹோல்டர். அப்போ, அப்போ மீட்டிங் அட் டென்ட் பண்ணுனா போதும். இப்போ அங்க யாருக்கும் நான் தேவை இல்ல." என்று கண்ணில் தோன்றிய சிவப் புடன் வாயசைக்க,

அவள் தான், "நம்ம அவங்களுக்கு தேவை, தேவை இல்லைன்னு நம்ம தான் முடிவு பண்ணனும் இன்பா. மறுபடியும் நீங்க அங்க சேர்மன் ஆக முடியாதா?" எனக் கேட்டாள் சற்று வருத்தத்துடன்.

அவன் அவளை கனிவாய் பார்த்து, "வாய்ப்பு இருக்கு. ஆனால் கஷ்டம். ஒரு டுவெண்டி பெர்சன்ட் சான்ஸ் இருக்கலாம். ஆனால் அது நடக்காது." என்றவ ளிடம்,

"ஏன் நடக்காது. இருபது சதவீதம் சான்ஸ் இருக் குல்ல அப்புறம் ஏன் நடக்காது இன்பா?" எனக் கேட் டாள் புரியாது.

தமிழின்பன் "நடக்காது டா... அதுக்கு நிறைய பேச னும். அதுவும் க்ளையண்ட்ஸ் கிட்ட, நம்ம பேச்சு திறமை தான் முக்கியம். அதுவும் ஒரு டம்ப்" என ஆரம்பித்தவன்,

பின் அழுத்தத்துடன் "அதுவும் ஒரு டம்ப் அண்ட் இம் போடென்ட்க்கு அவங்க பார்வையும், முக்கியத்துவமும் வேற மாதிரி தான் இருக்கும்... இப்போ சொல்லு இது நடக்குமா?" என்ற கேள்வியை வலியும் விரக்தியையும் முகத்தில் தொடுத்து, பதிலை அவளிடமே கேட்டிருக்க, சில நொடிகள் அவள் தான் பேச்சற்று திகைத்து அமர்ந் திருந்தாள்.

அவன் கூறிய சொற்கள் அவள் காதில் விழ வில்லை. ஆனால் மனம் உணர்ந்தது. ஒரு காதில் வாங் கிய வார்த்தைகள் கூட, மற்றொரு காதின் வழி செல்லக் கூடும், ஆனால், நேராக மனதினுள் சென்று நங்கூரம் பதிக்கும் அவனின் வலிகள், அவளுக்குள்ளும் பெரும் அலையை அடிக்கச் செய்தது.

அவள் நிலையை உணர்ந்த தமிழின்பன், "ரொம்ப யோசிக்காம போய் படிக்கிற வேலையை பாருங்க எழுத்தாளரே! முடிஞ்சா கவிதை எழுதுங்க..." என்று கூறும்போதே, அவளுக்கு சமோசாவும், டீயும் வாங்கிக் கொண்டு சந்தனா அங்கு வந்திருந்தாள்.

வந்தவள், அவள் கையைப் பிடித்து யாரோ அமர்ந்து இருப்பதைக் கண்டு, திரு திரு வென விழிக்க, அவனும் அவளை யாரென்று பார்த்தான்.

பின், "ம்ம்ம்?" என தமிழரசியை அழைக்க, அந்த குரலில் தான் சுயம் பெற்றவள், அப்போது தான் சந்த னாவை கண்டு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அதோடு அவளுக்கு இன்பாவையும் அறிமுகப்ப டுத்த, சந்தனாவிற்கு 'தான், இவரை நம்ம எங்கயோ பார்த்துருக்கோமே!' என்ற எண்ணம் தோன்றிட,

“நான் உங்களை எங்கயோ பார்த்திருக்கேன் அண்ணா...!” என்றாள் யோசனையாக.

சொல்லப் போனால், அவனுக்கும் அதே எண்ணம் இருக்க, ‘ம்ம்’ என லேசாக புன்னகைத்தவன், தமிழரிசி யிடம் கண்ணசைவுடன் விடை பெற்று காரில் ஏறி அமர,

அவன் பின்னே ஓட்டமும் நடையுமாக வந்த தமிழ ரசி, அவனருகில் காரில் அமர்ந்தாள்.

அவனோ என்னவென பார்க்க, “இப்போ என்ன, க்ளையண்ட்ஸ் கிட்ட, மீட்டிங்ல எல்லாம் பேசணும் அவ்ளோ தான... நீங்க என்ன பேசணும்னு சொல்லுங்க உங்களுக்குப் பதிலா நான் பேசுறேன். வெறும் பேச்சு திறமை மட்டும் இல்ல, உங்க ஐடியாஸ், ஹார்டு ஒர்க் எல் லாம் சேர்ந்து தான், உங்களுக்கு வெற்றியைத் தந்துருக் கும். அதுல உங்களுக்குப் பதிலா, நான் பேசப் போறேன். அவ்ளோ தான் வித்தியாசம்...” என்றிட, அவன் புரு வத்தை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

“அப்புறம் இன்னொன்னும் சொல்றேன். இங்க யாரும் உண்மையான ஆணா இருக்குறது இல்ல இன்பா. சுயநலத்தால, ஒரு பொண்ணை உடலாலை யும் மனசாலையும், கஷ்டப்படுத்துறதுனால, குடிச்சுட்டு சுய நினைவே இல்லாம எங்கயோ விழுந்து கிடைக் குறதுனால, பெத்த அம்மா அப்பாவைக் கூட பார்த் துக்க அருவருப்பு பட்டுட்டு முதியோர் இல்லத்துல சேர்க்கிறதுனால, பொண்டாட்டி பிரசவத்துக்கு அவள் அம்மா வீட்டுக்கு போனதும், இன்னொருத்தியை தேடிப் போய் பொண்டாட்டிக்கே துரோகம் பண்றதுனாலன்னு, இந்த மாதிரி நிறைய கேடு கெட்ட செயல்களால் ஒவ் வொரு தடவையும் இம்போடென்ட்டா தான் வாழ்ந்

துட்டு இருக்காங்க. ஆண்மைங்கிறது உடம்பில இல்ல, அந்த ஆணோட செயல்லயும், குணத்துலயும் இருக்கணும். இன்னொரு தடவை நீங்க இப்படி பேசுனீங்க. அப்புறம் உண்மையிலேயே நான் உங்க ஃப்ரெண்ட்ஷிப்ப கட் பண்ணிடுவேன்..." என தீப்பறக்க, தீர்க்கமாக அவன் கண்ணைப் பார்த்து பேசியவளை, அவன் சில நிமிடங்கள் கண்ணை அகற்ற இயலாமல் பார்த்திருந்தான்.

ஏனோ, அவள் பேச்சிற்கு மட்டும் தனக்கு ஏன் தானாய் ஒரு புன்னகை தோன்றுகிறது என புரியாது, அதனை ஆராயாமலேயே இதழோரம் சிறு சிரிப்பைத் தந்தவன்,

"எழுத்தாளர்னு அப்போ அப்போ ப்ரூவ் பண்ற..." என்றான் கேலியாய்.

அவள் மேலும் முறைத்து விட்டு, "இப்போ சொல்லுங்க. நீங்க மறுபடியும் சேர்மன் ஆகுறது நடக்குமா நடக்காதா?" என்ற கேள்விக்கணையைத் தொடுத்ததில்,

நன்றாக உதட்டைக் கடித்துச் சிரித்தவன், நேரம் ஆக ஆக, முகம் இறுகி, "இப்போவும் நடக்காது! இறங்கு!" என்றான் கண்ணை வெளியில் காட்டி.

அவள் தான், சோர்ந்து விட்டாள். "ப்ளீஸ் இன்பா! கொஞ்சம் யோசிங்க! கண்டிப்பா நடக்கும்!" என்று கெஞ்சவே ஆரம்பித்திட, அவன் முடிவாய் மறுத்து விட்டான்.

"ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ் இன்பா! எனக்காக..." என பேசும் முன்,

காரில் இருந்து இறங்கி, மறுபுறம் வந்து அவளையும் இறக்கி விட்டவன், "ஓடு கிளாசுக்கு..." என்று தோளை பற்றி லேசாக தள்ளி விட்டு, காரில் பறந்து விட்டான்.

'எனக்காக கூட நீ பண்ண மாட்டீல...' என அவன் சென்ற திசையை இனம் புரியா ஏக்கத்துடன் பார்த்திருந்தவள்,

காலம் தரும் காயத்தை

கலைக்க மனமில்லாது - வன்மிகு

கனவுகளிலும் சேமிக்காதே ரசிகா!

கடந்து வந்த காயம்

காணாமல் போகும் வரை- வலி

கொடுத்த காலத்திற்கு எதிராய்

கடும்போர் புரிந்திடு!

போரில் தோற்க நேர்ந்தாலும்

பழி சுமக்க நானிருப்பேன் - வலியவனின்

பாவனையை ரசிக்கும் ரசிகையாய்!

என்ற கவிதையை அவனுக்கு அனுப்பி விட்டு, அவன் சென்ற திசையையே பார்க்க, அறிவிப்பு வந்ததுமே காரை ஓரமாக நிறுத்தி இருந்தவன், மீண்டும் மீண்டும் அதன் வரிகளிலும், அந்த வரிகளில் வாழும் தன்

எழுத்தாளரின் வேண்டுதலிலும் தவித்தவன், குழம்பிப் போனான்.

ஆனால், அவளின் எழுத்துக்கு அமைதியாய் இருக்க இயலாது, “ரசிக்க வைக்கும் எழுத்து உனதே உனது... ரசிக்கும் உரிமையும் எனதே எனது...” என சிறு புன்னகையுடன் பதில் அனுப்பிட, அதனைக் கண்டு அவள் தான் விழி விரித்தாள்.

“ரசிகரே! அந்த உரிமை எங்களுக்கும் இருக்கு...” என்று அவள் வேகமாகக் கூறியதில், மேலும் சிரிப்பில் அவன் முகம் பிரகாசிக்க,

“காலேஜ் முடிச்சுட்டு வா! நம்ம ஆஃபீஸ் போறதைப் பத்தி பேசலாம். ஓகே வா கருவாச்சி...” என அவளின் வலி தாங்காது, தன்னை மீறி, அவன் விரல்கள் தட்டச்சு செய்து அனுப்பி இருக்க, அதனைக் கண்ட தமிழரசி, தான் இருக்கும் இடம் மறந்து துள்ளிக் குதித்தாள்.

# அத்தியாயம் - 12

வீட்டிற்கு வந்ததும் பேசலாம் என்ற தமிழின்பனின் குறுஞ்செய்தியில் துள்ளி குதித்த தமிழரசி,

“அது... யார்கிட்ட!” என சுடிதாரில் இருந்த காலரை தூக்கி விட்டுக்கொள்ள, சந்தனா தான் கையில் சமோசாவை வைத்தபடி, அவளை பே வென பார்த்திருந்தாள்.

“திடீர்னு அழுகுறா, திடீர்னு கோபப்படுறா, திடீர்னு குதிக்கிறா... என்ன தான் ஆச்சு இவளுக்கு” என குழம்பியவளை அசடு வழிந்தபடி பார்த்த தமிழரசியிடம், “தமிழு, இந்த அண்ணாவை நான் எங்கயோ பார்த்திருக்கேன்... தமிழு” என்று சிந்தித்தாள்.

“ப்ச், இதெல்லாம் யூனிக் பீஸ்டி நீ பார்த்திருக்க மாட்ட...” என தோளில் கை போட்டு அழைத்து செல்ல, அவள் தான் தீவிர சிந்தனையிலேயே இருந்தாள்.

அடித்துப் பிடித்து, வகுப்பு முடித்து, வீட்டிற்கு வந்து சேர்ந்தவள், கையில் பையுடன் இருந்த ஷெண்பாவைத் தான் கண்டாள்.

"அடடடா! போட்ட பிட்டு நச்சுன்னு யூஸ் ஆகுது போலயே!" என மனதினுள் குதூகலிக்க, ரேகா தான், இவளால் தான் எல்லாம் என்று முறைத்தார்.

ஷெண்பாவோ, "நான் வெளிநாட்டுக்கு போயே தீருவேன். என் புருஷனைப் பார்க்கணும்." என்று அடம் செய்தவள், தமிழரசியை கண்டதும் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

தமிழ், முந்தைய நாள் நடந்ததை நினைத்த படி அறைக்கு சென்றாள்.

ஷெண்பாவின் கணவரைப் பற்றிக் கூறியதும், ஷெண்பா அதிர்ந்து விட, கூடவே சிறிய பயமும் தொற்றியது. அவளின் கணவன் சேகர் திருமணத்திற்கு முன் நல்ல நிலையில் தான் இருந்தான். ஆனால் அதன்பின் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தில் சற்று நொடித்து விட, வெளிநாட்டில் சென்று வேலை பார்க்கும் நிர்பந்தம் வந்தது.

முதலில் சிந்தித்தாலும், தொழிலில் நஷ்டம் என்பது இயல்பு தான் என தமிழின்பன், இந்நிலையில் அவனை தவிர்க்கக் கூடாது என்று திருமணத்தை நடத்தச் சொல்ல, ரேகாவும் சண்முகமும் மறுத்து விட்டனர்.

ஷெண்பா அவனை விரும்பவே செய்தாள். ஆனால், முரட்டுப் பிடிவாதத்தால், தாய் தந்தை சொல்லினாலும், அவளும் அவனை மறுக்க, இறுதியில் பலவாறாகப் பேசி தான் அவளுக்கு திருமணம் செய்து வைத்திருந்தான்.

ஆனால், திருமணம் முடிந்த கையோடு மனைவியை வெளிநாட்டுக்கு உடன் அழைத்து செல்கிறேன்

என சேகர் கூறியதில், அப்போது சண்முகம் மேலும் சண் டையிட ஆரம்பித்தார்.

“இங்க கடல் மாதிரி வீடு இருக்கு, சொத்து இருக்கு... அங்க வந்து என் பொண்ணு, கஷ்டப்பட ணுமா? அதெல்லாம் அனுப்ப முடியாது.”

இவளும் புகுந்த வீட்டில் பிரச்சனை செய்ய ஆரம் பித்தாள். அதில் நொந்த சேகர், புது மனைவியை விட்டு விட்டு வெளிநாடு கிளம்ப, இதற்கு மேல் இவர்களிடம் வாதாடுவது வீண் என தமிழின்பனும் ஒதுங்கி விட்டான்.

பத்மாவிற்கு ஒரு மகன் மட்டுமே. அவனும், படிக் கும் போதே வெளிநாடு சென்று, இறுதியில் வெளிநாட்டு மோகத்தில், உறவுகளையும் பெற்ற தாயையும் மறந்து, அங்கேயே ‘செட்டில்’ ஆகி விட, கணவரும் இறந்த நிலையில், அண்ணன் வீட்டிலேயே இருந்து விட்டவரை கண் கூடாகக் கண்டவர்களுக்கு, தன் பெண்ணும் தங் களை விட்டுச் சென்று விடுவாள் என அவளை தங்கள் கைக்குள் வைக்க நினைத்ததால் வந்த வினை இது.

இதனை மேலோட்டமாக, தமிழின்பனிடம் கேட்டு அறிந்திருந்த தமிழரசி தான், இப்போது சேகர் என்ன செய்கிறான் என ஆராய்ச்சி செய்ய, அவன் சிறப்பாக பெண் தோழிகளுடன் கூத்தடித்துக் கொண்டிருப்பதை தமிழின்பன் மூலம் அறிந்தாள். முதலில் அதட்டி தமிழின் பன், பின் அவனுக்கு விபத்து ஏற்பட்டதில் மொத்தமாக எதிலும் தலையிடாமல் இருந்ததில், சேகர் இன்னும் தைரியம் வந்து, வெளிப்படையாகவே பெண் தோழிகள் வைத்திருக்க ஆரம்பித்தான்.

இதனை அறிந்த தமிழ் தான், “போடு... ஒரே ஜாலியா தான் இருக்கான்! இருடி! கேர்ள் ப்ரெண்ட் வச்

சுக்கிட்டா சுத்துற" என எண்ணி, ஷெண்பாவிடம் வந் தாள்.

"என்ன அண்ணி, இந்நேரம் உங்க ஹஸ்பண்ட் கிட்ட போன் பேசுவீங்களே பேசல..." என எகத்தாளமாக கேட்க,

ஏற்கனவே கோபத்தில் இருந்தவள் "ஒழுங்கா போய்டு" என்றாள் கடுப்பாக.

"அட, இருங்க அண்ணி, உங்களுக்கு ஒரு ஒளியும் ஒலியும் காட்டத் தான் வந்தேன்..." என்று சேகர் வெளி நாட்டில் அடிக்கும் கூத்தை, போனில் புகைப்படமாகக் காட்ட, அவளோ உறைந்து விட்டாள்.

"என்ன அண்ணி, உங்களுக்கு இது தெரியாதா என்ன? உங்க ஆம்பளை புருஷன் இதெல்லாம் சொல் லலையா..." என நக்கலாகக் கேட்டவள்,

"ஸ்ஸ்ஸ்... சாரி சாரி. அதான் உங்க ஹஸ்பண்ட் ஆம்பளை ஆச்சே. அவரு ஆண்மைத் தனத்தை காட் டனும்ல... ஒன்னு பொண்டாட்டி கிட்ட... இல்ல வப் பாட்டி கிட்ட!" என ஓரக்கண்ணில் அவளை பார்த் துக் கொண்டே பேச, அவள் மேலும் விழிகள் தெறிக்க அமர்ந்திருந்தாள்.

மேலும் தமிழ், "ஆனால் எனக்கு ஒரு டவுட்டு அண்ணி. தான் ஆண்மைத்தனத்தை பொண்டாட்டி கிட்ட காட்டுனா அவன் ஆம்பள. பொண்டாட்டி இருந் தும் வேற பொண்ணு கிட்ட காட்டுறவங்களை என்ன சொல்லுவாங்க..." என யோசனையாய் கேட்டவள்,

"அது என்ன வார்த்தை. டக்குனு ஞாபகம் வரமாட்டேங்குது... ஹான் இம்போடென்ட்! என் புருஷன், எந்த பொண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காம எனக்கு புருஷனா இருக்காரு... இப்போ உன் புருஷன் உனக்கு எந்த விதத்தில புருஷனா இருக்கான்...?" என வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் அவள் நெஞ்சில் நஞ்சை ஏற்றி விட்டு, சென்று விட்டாள்.

இதனை அறிந்த ரேகா தான், அவள் கூறியதை நம்பாது, "இதெல்லாம் நீயா சொல்ற பொய்..." என்று மல்லுக்கட்டினார்.

தமிழரசி "இந்த போட்டோவை நான் வெளிய காட்டுனா... யாரு மானம் போகும் ரேக்ஸ்... ம்ம்ம்?" என்றதில் மிரண்டவர் தான், அவள் சொல் படி, பூ கட்டி பூஜை செய்தது. ஆனால், இப்போது, கணவரிடமே செல்கிறேன் என அடம்பிடித்து, பிளைட் பிடிக்கவே சென்று விட்டாள் ஷெண்பா.

"ஒரு விக்கட் அவுட்டு...! எனக்கு ராஜாவா நான் வாழுறேன்... யாரும் இல்லைனாலும் ஆளுறேன்!" என பாடிக்கொண்டே அறைக்குள் வந்தவள் பால்கனியில் அமர்ந்திருந்த தமிழின்பனைக் கண்டு, அவன் முன் சென்று நின்றாள்.

அவளை சிறு சிரிப்புடன் பார்த்தவன், "நாரதர் வேலை எல்லாம் முடிஞ்சுதா?" என விழிகளை உருட்டி, நக்கலாக கேட்க,

"ஒரு பொண்ணை புருசனோட சேர்த்து வைச்சு நல்லது பண்ணிருக்கேன். இது உங்களுக்கு நாரதர் வேலையா?" என்றாள் முறைத்தபடி.

பின், "சரி சரி, ஆஃபீஸ் போறதை பத்தி பேச லாம்னு சொன்னீங்க... எப்போ போலாம். நான் என்ன பண்ணணும்னு சொல்லுங்க." என்று பரபரக்க,

"வெய்ட் வெய்ட்! நீ நினைக்கிறது அவ்ளோ ஈஸி இல்ல அரசி. மீட்டிங்ல நம்ம நிறைய ஐடியாஸ் கொடுக்க ணும். நிறைய இருக்கு. கண்டிப்பா பண்ணணுமா?" என்று சற்று பாவமாகவே கேட்டிட,

"கண்டிப்பா பண்ணனும். நாளைக்கு ஆஃபீஸ் போறீங்க, அவ்ளோ தான்." என்றாள் அழுத்தமாக.

"உனக்கு புரியல அரசி. நம்ம ஷேர் ஹோல்டர் எல் லாரும் நம்ம ஐடியாஸ அக்செப்ட் பண்ணனும். இதுல நிறைய விஷயம் இருக்கு. இப்ப சேர்மனா இருக்குற வங்க முதல்ல நம்மளை வளர விட மாட்டாங்க. நம்ம ஐடியா நல்லா இருந்தாக் கூட எடுக்க மாட்டாங்க. சோ, போர்டு மீட்டிங்ல சும்மா தான் இருக்கணும். இதே க்ளையண்ட் மீட்டிங்ல நம்ம அவங்களை அட்ரேக்ட் பண்ணிட்டா, ப்ராஜக்ட் க்ளிக் ஆகும்... ஆனால் அதுவும் ரொம்ப கஷ்டம். அவங்களுக்கு பேசுனாலே பொறுமை இருக்காது. இதுல நான் பேசாம எப்படி?" என்றான் கைகளை ஆட்டி, என்னை விட்டுடேன் என்ற ரீதியில்.

"சரி இப்போ ப்ராஜக்ட் க்ளிக் ஆனா என்ன பண் ணணும்?" என அதனைக் கண்டுகொள்ளாமல் அடுத்த கேள்வி கேட்க, இவளை... என பல்லைக் கடித்தவன், "நமக்கு ப்ராஜக்ட் கொடுப்பாங்க. நம்ம அதுல இருக்குற நிறைய பாசிட்டிவ் நெகட்டிவ் சொல்லி, எது அவங்களுக் குத் தேவையோ அதை தரமா பண்ணிக் கொடுக்கச் ணும்."

“நம்ம பேசுறோம். ப்ராஜக்ட் எடுக்கிறோம்...” என்றாள் முடிவாக.

“அடங்கவே மாட்டியா? எனக்கு அங்க வரப் பிடிக்கல அரசி. எனக்கு இங்க இருக்குறது தான் பிடிச்சுருக்கு. இந்த சிம்பிள் லைஃப், புக் படிக்கிறது, இதுவே எனக்குப் போதும். இப்போ யாருக்காக என்னை ப்ரூவ் பண்ணப் போறேன்?” என்றவன் முகம் கடுகடுக்க எழுந்து விட,

“நீங்க யாருக்கும் உங்களை ப்ரூவ் பண்ணத் தேவை இல்ல இன்பா! ஆனால், எத்தனை பேர் மத்தவங்க அவமான படுத்துறாங்கன்னு உள்ளேயே அடைஞ்சு இருக்காங்க. அவங்களுக்கு எல்லாம் நீங்க ஒரு இன்ஸ்பிரேஷனா ஆகலாம். எல்லாம் இருந்தா மட்டும் இல்ல. எதுவுமே இல்லைன்னாலும், சாதிக்க லாம்னு தோணும்.

அந்த எண்ணத்தை விதைக்க, ஒரு சான்ஸ் கிடைச்சிருக்கு. அவ்ளோ தான். மத்தபடி, நீங்க எவ்ளோ டேலண்ட்னு, ஆல்ரெடி எல்லாருக்கும் ப்ரூவ் பண்ணிட் டீங்க. இப்போ நீங்க பண்ணப் போறது, உங்களுக்காக!” என்று பேசி முடித்ததில், முகம் இறுகி,

“இப்போ என்ன, நான் ஆஃபீஸ் போகணும் அவ்ளோ தான...? போய் தொலையிறேன். ஆனால் எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கல. தட்ஸ் இட்.” என்று புருவத்தைச் சுருக்கி எரிச்சலானான்.

அவளோ அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து, அவனருகில் வந்து, “உண்மையிலேயே உங்களுக் குப் பிடிக்கலையா? இல்ல, வேற ஏதாவது காரணம் இருக்கா?” எனக் கேட்டாள் அவன் கண்ணைப் பார்த்து.

அதில் தடுமாறியவன், அவள் முகத்தை பாராமல், மறுப்பாகத் தலையாட்ட, அவன் கன்னத்தைப் பிடித்துத் திருப்பியவள், “இல்ல ஏதோ இருக்கு… சொல்லுங்க” என்றாள் பிடிவாதமாக.

அவனோ அவளைக் கண்டு, இதழில் பூத்த சிறு நகையுடன், “நான் சொன்னா, நீ இந்த முடிவுல இன்னும் ஸ்ட்ராங் ஆகிடுவ…” என்றான் கிண்டலாக.

ஆனால் அவன் கண்கள் மட்டும் வலியை பிரதிபலிக்க, அவன் கண்ணையே சிறிது நேரம் பார்த்தவள், “அங்க சேர்மனா இருக்குறது சுஹானாவா?” எனக் கேட்டாள் சட்டென.

அதில் வியப்புடன் விழி உயர்த்தியவன், “ஸ்மார்ட்…” என்று அவள் தலையைக் கலைத்து விட்டு, அறைக்குள் சென்றிட, அவள் தான் அவன் முகத்தில் தோன்றிய வேதனையில் திகைத்திருந்தாள்.

அதன் பின், இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவே இல்லை. மறுநாளும் விடிந்திருக்க, சீக்கிரமே கிளம்பி இருந்தவளைக் கண்டு, “என்ன இவ்ளோ சீக்கிரம் காலேஜுக்கு” என்றான் விழியசைவில்.

“ஹெலோ, நான் காலேஜ் போகல. நம்ம ரெண்டு பேரும் ஆஃபீஸ் போறோம். கெட் அப்…” என அவனை அவசரப்படுத்த, அவன் அசையாமல் அமர்ந்திருந்தான்.

“ஏன் இன்பா… சுஹானாவைப் பார்த்தா மறுபடியும் லவ் பண்ணிடுவீங்களோன்னு பயமா இருக்கா?” என தலை சாய்த்துக் கேட்டிட,

அவளை எரிக்கும் பார்வை பார்த்தவன், கோபத் துடன், "எனக்கு அவளைப் பார்க்கக் கூடப் பிடிக்கல. இதுல காதல் மண்ணாங்கட்டின்னு..." என ஆக்ரோஷத் துடன் சைகை செய்தவன், குளியலறைக்குள் புகுந்து விட,

'ஹப்பா, இவனைக் கிளப்ப, எப்படி எல்லாம் டய லாக் பேச வேண்டியதா இருக்கு...!' என நொந்து போனாள்.

ஷவரின் அடியில், நீர்த்துளிகள் அவன் மேல் விழ குளியலில் நனைந்திருந்தவனின் மனமோ, உஷ்ணம் அடங்காமல் தீயாகக் கொதித்திருந்தது.

'காதல்... இந்த ஒரு வார்த்தை தான் மனிதனுக்கு எத்தனை பெரிய ஏமாற்றத்தை தந்து விட்டுச் சென்றது. அதிலும் அவள் கடைசியாகப் பேசிச் சென்ற வார்த்தை யும், அவள் செய்த செயலும் தான், மறக்கக் கூடியதா...?

கத்தி அழக் கூட முடியாத நிலையில், மருத் துவமனை வாசம் முடிந்து அவன் அறைக்கு வந்த வனை, காதலற்ற இந்த அறை வெறுமையுடன் வரவேற் றதில் இங்கு புதைந்து போன நினைவுகளைப் புதைக்க இயலாது துடித்து இருந்தவன், அங்கிருந்த சோபாவி லும், பால்கனியிலும் மெத்தையிலும் என அவளுடன் தான் கொண்ட காதல் நினைவுகள் இறுதியில், வெறும் கானலாகிச் சென்றதில், அனைத்து பொருளையும் உடைத்து, இந்த அறையையே அவள் நினைவு வராத படி, மாற்றினானே...!

இப்போது, மீண்டும் அந்த நெருப்பிலேயே நின்று கருக சொல்கிறாளே? இவளை என்ன செய்வது?' என்று

மனதினுள் தமிழரசியைத் திட்டியவன், வெகுநேரமாக குளியலறையில் இருந்து வரவே இல்லை.

'என்ன ஆச்சு? இவரு... போய் இவ்ளோ நேரம் ஆகுது இன்னும் வரல' என தமிழுக்கு படபடப்பு எழ, சற்று யோசித்தவள்,

வேகமாக "இன்பா! இன்பா!" என குளியறைக் கதவை தட்ட ஆரம்பித்து விட்டாள். பதிலேதும் வராமல் இருந்ததில், மேலும் அவள் இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பிக்க, "இன்பா! என்ன ஆச்சு? நீங்க ஓகே தான? ஒரு ம்ம் ஆச்சு சொல்லுங்க..." என்ற அவளின் பதட்ட மான குரலில் தான்,

கண்ணைத் திறந்து ஷவரை நிறுத்தி விட்டு "ம்ம்ம்" என்றான் சுதியற்று.

அதன் பிறகே, நிம்மதியானவள், அவன் வரவுக் காக காத்திருக்க, தலை துவட்டியபடி வந்தவன், கோட் சூட் சகிதம் கிளம்ப ஆரம்பிக்க,

அவள் "சாப்பாடு" என்று பேசும் முன், காருக்குச் சென்றிருந்தான்.

அவனின் கோபமும், நிலையும் அவளுக்குப் புரி யாமல் இல்லை தான். ஆனால் மருந்து கசக்கத் தானே செய்யும். மருந்திட்டால் எரியும் என்றெண்ணி, காயத்தை கீறிடாமல் வைத்தால்...?

அவன் பின்னே சென்று அவனருகில் சென்று அமர்ந்தவள், "இன்பா" என அழைக்க, அவன் இவ ளைத் திரும்பியும் பாராமல் சாலையில் கண்ணைப் பதித்தான்.

“ப்ச்! கோபமா இருக்காரோ?” என லேசாக வாடிய வள், மீண்டும் “இன்பா” என அழைத்தாள்.

அவன் திரும்பி தீயாய் ஒரு பார்வையை வீசி விட்டு திரும்ப,

அதில் சற்று மிரண்டு, “நீங்க கோபமா இருக்கீங் கன்னு தெரியுது. அதுனால ஒரு சின்ன ஆப்ளிகே ஷன்...” என்றவள்,

“நேத்து வலது கன்னத்துல அடிச்சுட்டீங்க. சோ இன்னைக்கு இடது கன்னத்துல அடிங்க. ஒரே கன்னத் துல அடிச்சா அப்புறம், என் கருப்புக் கலரு சிவப்பா மாறி, ஒட்டி இருக்குற கன்னம் பண்ணு மாதிரி வீங்கி, கொடு ரமா ஆகிடும். அதான் முன்னாடியே சொல்லி வைக் கிறேன்...” என பாவமாகப் பேசியதில், சட்டென காரை நிறுத்தி விட்டவன், அவளை அடிக்க கையை ஓங்கி னான் சிறு நகையுடன்.

அதில் அவள் “ஐயோ” என கண்ணை மூடிக் கொள்ள, அவன் ஓங்கிய கைகளை இறக்கி, அடித்த கன்னத்தை லேசாக கிள்ளிட, ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்தாள். அவன் கோபம் மறைந்து, குறும் புடன் புன்னகைப்பதைக் கண்டு, இரு கண்ணையும் திறக்க,

“நீ எவ்ளோ அடிச்சாலும் சிவப்பாகமாட்ட கரு வாச்சி” என்று நாக்கை துருக்கி அழகு காட்ட, அவள் நெற்றிக்கண்ணைத் திறந்தாள்.

அவளை கலாய்த்த திருப்தியில் புன்னகை முகத் துடன் அலுவலகம் வந்தடைந்தான். ஆனால், அங்கு சென்றதும், மீண்டும் ஒரு இறுக்கம் அவனை வந்து

ஒட்டிக்கொள்ள, தமிழரசி தான், ஓங்கி வளர்ந்திருந்த அந்த கண்ணாடிக் கட்டடத்தை விழி விரித்து பார்த்து கொண்டே வந்தாள்.

இறுதியில், ஒரு அறைக்குள் நுழைந்தவன், அவ ளையும், அங்கு அமரச் சொல்ல, அந்த அறையையே வேடிக்கை பார்த்து கொண்டு ருந்தவளிடம்,

"போர்டு மீட்டிங் இருக்கு. நான் போயிட்டு வரேன். நீ இங்கயே இரு. எங்கயும் போயிடாத..." என விழிகளா லேயே அவளுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருந் தான், ஏதோ சிறுமியிடம் பேசும் தொனியில்.

"நான் என்ன தொலைஞ்சா போகப் போறேன்." என கண்ணைச் சுருக்கிக் கேட்டதில், பதிலேதும் கூறா மல் நகரப் போனவனிடம் "நானும் வரலாமா?" எனக் கேட்டாள்.

முடியாது எனச் சொல்ல வந்தவன், பின் "வா" என கண்ணசைக்க, அவளும் அதன் பிரம்மாண்டத்தில் வியந்த படி, மீட்டிங் நடக்கும் ஹாலுக்குள் நுழைந்தாள்.

மற்ற பங்குதாரர்களும் அங்கு இருக்க, அவர்கள் தமிழரசியை மட்டும் ஒரு மாதிரி பார்த்து விட்டு, அவர்க ளுக்குள் ஏதோ பேசிட,

அவளோ "இன்பா இன்பா..." என அவனைச் சுரண்டினாள்.

அவன் "ம்ம்" என்று முகத்தை லேசாகத் தூக்கி, "என்ன" என்றிட,

“இல்ல, இங்க எல்லாரும் சொட்டையா இருக்காங்க. நீங்க மட்டும் தான் பார்க்குற மாதிரி இருக்கீங்க. அப்போ நீங்க சேர்மனா இருந்தப்போ, எவ்ளோ கெத்தா இருந்துருப்பீங்க...” என்று ஹஸ்கி குரலில் கேட்க,

போனை எடுத்து “மூடிக்கிட்டு உட்காரல... மூஞ்சிலயே குத்துவேன்” என அவளை பார்த்த படி டைப் செய்து காட்டிட,

அவள் தான் “போயா!” என திரும்பிக் கொண்டாள்.

அந்நேரம், மாக்சி சுடி தரையில் பரவ பரவ, யூ கட் செய்திருந்த கூந்தலை முன்னால் போட்டுக்கொண்டு, ஐ லைனரை சற்று அதிகமாகவே விழியில் படர விட்டு, திமிர் தூக்கலாகவே உள்ளே நுழைந்தாள் சுஹானா.

அவளைக் கண்டதும் மரியாதை நிமித்தமாக மற்றவர்கள் எழுந்து விஷ் செய்ய, தமிழின்பன் அவள் வந்ததை சட்டை கூடச் செய்யாமல், டேபிளில் விரல்களால் தட்டிக் கொண்டி இருந்தான்.

‘எப்போதும் அவள் வந்து விட்டுச் சென்றதும், பேருக்கு ரெண்டு நிமிடம் வந்து, தலையைக் காட்டி விட்டு செல்பவன், இன்று முன்னமே வந்திருந்ததோடு கூடவே யாரையோ அழைத்து வந்திருக்கிறான்’ என வியப்புடன் எண்ணியவள்,

தமிழரசியின் முகத்தை ஆராய்ந்து விட்டு, ‘இவளைத் தான் சார் கல்யாணம் பண்ணிருக்காரோ...’ என எகத்தாளமாக எண்ணி விட்டு, அவனின் அசட்டைத் தனத்தில் லேசாக முகம் கறுத்தாள்.

“குட் மார்னிங் எவ்ரி ஒன்...” என அவள் ஆரம்பிக்க,

தமிழரசி தான், “ப்பா, அன்னைக்கு பார்த்ததை விட, இந்த பொண்ணு இவ்ளோ அழகா இருக்கு. இந்தப் பையன் கவுந்துருவானோ...?” என தீவிர சிந்தனையில் இருக்க,

அவள் முகம், அவள் எண்ணியதை, காட்டிக் கொடுத்ததில், “உன் மைண்ட் வாய்ஸ் ரொம்பக் கேவலமா இருக்கு...” என குறுஞ்செய்தி அனுப்பினான் தமிழின்பன்.

‘சே! எப்படி கண்டுபிடிச்சான்’ என்று அவனை திரும்பி ஈஈ என இளித்து வைக்க, அவர்களுக்குள் ஏதோ பேசியதை கண்ட சுஹானாவுக்கு, அதுவும் அவளின் முன்னாள் காதல் கணவன் முகம் எப்போதும் விட தெளிச்சியுடன் இருந்ததில், சுஹானாவுக்கு தான் ஏதோ ஒரு எரிச்சல் வர,

“எக்ஸ்கியூஸ் மீ... மே ஐ நோ ஹூ யூ ஆர்?” என்று தமிழரசியிடம் நேரடியாக வினவ, அவள் தான் தமிழின்பனை விழித்த படி பார்த்தாள்.

அவனோ சுஹானாவை அழுத்தமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு, தமிழைப் பார்த்து “சொல்லு” என,

“நான் நான்... இவரோட வைஃப்” என்றாள் தட்டு தடுமாறி. ஏதோ அவ்வார்த்தை அவளுக்குள் ஒரு திணறலைக் கொடுக்க, அவள் அதனை உணரத்தான் இல்லை.

“ஓ! ஆர் யூ ‘சப் டைட்டில்’ ஃபார் ஹிம்?” என நக்கலுடன் கேட்டதில், அவள் கோபமாகி விட்டாள்.

“ஆமா, இப்போ என்ன அதுக்கு?” என்று சத்தத்து டன் கேட்டு விட,

“நியூசன்ஸ்... மீட்டிங் ரூம்ல, இவ்ளோ சத்தத்தோட தான் பேசுவியா? என்ன தமிழ், உங்க புது பொண்டாட்டிக்கு இதெல்லாம் சொல்லி, கூட்டிட்டு வர் றது இல்ல...” என ஆங்கிலத்திலேயே உரையாடியவள் உடனே நிறுத்தி,

“ஓ சாரி... சொல்ல முடியலைன்னாலும் அட்லீஸ்ட், எழுதியாவது காட்டிருக்கலாம்.” என்று தோளைக் குலுக்கி கிண்டலை ஏற்றிக் கூறிட, தமிழரசி எழுந்தே விட்டாள்.

“இன்னொரு வார்த்தை பேசுன...?” என்று பல் லைக்கடித்து கோபத்தை அடக்கியவளை,

“ஹோல்டு யுவர் டங் இடியட்... மீட்டிங்ல பேசும் போது இங்கிலிஷ்ல பேசணும்னு கூட பேசிக் சென்ஸ் தெரியல. யார் உனக்கு இங்க வரதுக்கு பெர்மிஷன் கொடுத்தது...” என மேலும் நுனி நாக்கில் ஆங்கிலத்தி லேயே பேச, தமிழுக்கு அவள் பேசியது புரிந்தாலும், சட் டென ஆங்கிலத்தில் பேச வரவில்லை.

அவளை இவளும் மூஞ்சியும் என வறுத்த சுஹானா “கெட் அவுட்!” என, அவள் இன்பாவை பாவ மாகப் பார்த்தாள். அவன் எதுவும் பேசாமல், சிறிது நேரம் சுஹானாவை வெறித்து விட்டு,

தமிழரசியின் கையை பிடித்து இழுத்துக் கொண்டு, அவன் அறைக்குச் செல்ல, அவளுக்கு தான் கண் கலங்கி விட்டது.

‘சே, பேசாம இவரு வீட்லயே இருந்துருப்பாரு. நான் என்னமோ எல்லாம் தெரிஞ்ச மாதிரி, நான் பேசு றேன்னு கூட்டிட்டு வந்து இப்படி இன்சல்ட் பண்ணிட் டோம்.’ என்று மனத்தினுள்ளேயே வருத்தம் அழுத்த,

“சாரி இன்பா...” என்றாள் தலையை குனிந்து குற்ற உணர்ச்சியுடன்.

வெகு நேரம் அவன் முகத்தைப் பாரமாலே இருந் தவள், அதன் பிறகே அவனைப் பார்த்தால் தானே, அவன் பேச முடியும் என மெல்ல நிமிர, அவன் கையை கட்டிக் கொண்டு, அவளை தான் கனிவுடன் பார்த்துக் கொண்டு நின்றான். அதில் அவளுக்கு மேலும் அழுகை வர...

“ரொம்ப சாரி இன்பா... நான் தான் தேவை இல் லாம...” என்று உதட்டைக் கடிக்க,

“ம்ம்ஹூம்” என தலையை இருபுறமும் ஆட்டிய வன், அவளருகில் வந்து அவள் கன்னம் தாங்கி, “என் கருவாச்சிக்கு இப்போ என்ன ஆச்சு? ம்ம்?” என்றான் விழிகளில் கேள்வியைத் தாங்கி.

“எனக்கு அவள் பேசுனது புரிஞ்சுது. ஆனால் டக் குன்னு இங்கிலிஷ்ல எல்லாம் பேச வரல. இவள் கிட் டயே பேச வரல. உங்க க்ளையண்ட் எல்லாம் பெரிய ஆளா இருப்பாங்க. அவங்க கிட்ட சுத்தமா வராது. என் னால உங்களுக்கு தான் இன்சல்ட்... ஆகிடுச்சு. சாரி...” எனக் கூற கூற அவள் குரல் உள்ளே செல்ல,

பின், “நான் படிச்சதே ஒரு மொக்கை ஸ்கூல், ஒரு மொக்கை காலேஜ்... தினமும் பேசி எனக்கு பழக்கமும் இல்ல” என்றவளை மீண்டும் நிமிர்த்தினான்.

“நீ சின்ன பிள்ளைன்னு அப்போ அப்போ காட்டுற கருவாச்சி. எவ்ளோ பெரிய எழுத்தாளர் நீ...! கேவலம் இங்கிலிஷ்ல பதில் சொல்ல வரலைன்னு இப்படி கண்ணைக் கசக்கலாமா?” என்றான் அவள் இரு கன்னத்தையும் கிள்ளி விட்டு.

“எனக்குன்னா ஒன்னும் பிரச்சனை இல்லை. ஆனால் இப்போ உங்களுக்காக பேச வரும் போது, நான் பேசத் தெரியாம நின்னா...” என பாவமாகக் கேட்டவளை சில நொடி தன்னை மீறி ரசித்தவன், அங்கிருந்த சோபாவில் அமர வைத்து, அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு, “முதல்ல பேசும் போது, அப்படித் தான் இருக்கும் அரசி. நீ பேசப் பேச வந்துடும். நான் தான் இருக்கேன்ல. நான் சொல்லித்தரேன். அவள் எல்லாம் என்ன பேசுறா... நீ சூப்பரா பேசுவ பாரு...” என்று பாவனையுடன் அவளை ஊக்குவிக்க,

தமிழரசி தான் திரு திரு வென விழித்து, “இல்ல இன்பா... நான் பேசல. கண்டிப்பா சொதப்பிடுவேன். இதுக்கு நம்ம வேற ஐடியா பண்ணலாம். ப்ளீஸ்” என்றாள் கெஞ்சலாக.

“அடுத்த வாரம், ஒரு க்ளையண்ட் மீட்டிங் இருக்கு, அப்போ நீ பேசப் போற...” என்று விட்டு, மடிக் கணினியை எடுக்க, அவள் திகைத்து,

“இன்பா... வேணாம். நான் சொல்றதை கேளுங்க” என்றாள் கண்ணில் நீருடன்.

தமிழின்பன், புருவம் சுருக்கி, “நீ தான வீட்டுல இருந்து என்னை இங்க கூட்டிட்டு வந்த... இப்போ நான் மறுபடியும் ரூம்க்குள்ளயே இருக்குறது, உனக்கு ஓகே

வா?" என வாயசைத்து அழுத்ததுடன் ஒரு பார்வை பார்க்க, தமிழரசி மேலும் உதட்டைப் பிதுக்கினாள்.

"ப்ச், அவள் என்ன, உன்னை வெளிய போன்னு சொல்றது? நீ சூப்பரா பேசுற. ப்ராஜக்ட் பண்றோம். நான் சேர்மன் ஆகுறேன். அப்புறம் நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து அவளுக்கு கெட் அவுட் சொல்றோம்... டாட்...!" என்றான் திட்டவட்டமாக,

வீட்டில் இருந்து வரும் போது இல்லாத தெளிவு, இப்போது தமிழரசியை அவமானப் படுத்தியதும் தன் னையறியாமல் வந்ததில், அதனை உணராமலேயே. தமிழரசி தான், அவன் அவள் மேல் வைத்த நம்பிக்கை யிலும், தனக்காக அவளை அவமானப்படுத்த நினைப்ப திலும் திகைத்து அவனையே பார்த்திருந்தாள்.

# அத்தியாயம் - 13

தமிழின்பனை திகைத்த படி பார்த்திருந்த தமிழரசி, "ஒரு வேளை நான் சொதப்பிட்டா..." என முகத்தைச் சுருக்கிக் கேட்க,

அவனும் முகத்தைச் சுருக்கி, "அப்போ என்ன பண்ணலாம்... உனக்கு பெரிய தண்டனையா கொடுத் துடலாமா?" என யோசிப்பது போல் பாவனை செய்தான்.

"என்ன தண்டனை?" என விழிகளை உருட்டிய படி பார்க்க,

அதில் சுவாரஸ்யமானவன், "ம்ம்... நீ செஞ்ச சாப் பாட உன்னையவே சாப்பிட வச்சுடுவேன். அதுவும் மூணு வேளைக்கு..." என கண்ணில் குறும்புடனும், இத ழில் புன்னகையுடனும் கூற,

"அய்யோ... இதுக்காகவாவது நான் நல்லாப் பண் ணுவேன்..." என்றாள் சற்று வருத்தம் மறைந்து.

அதில் மெலிதாய் புன்னகைத்துக் கொண்டவன், அவள் கண்களை அழுத்தமாகப் பார்த்து, "நீ சொதப் புனாலும் பரவாயில்ல அரசி. ரெண்டு மூணு தடவை

சொதப்புனாத் தான கத்துக்க முடியும். ம்ம்?" என்றான் ஒரு புருவத்தை உயர்த்தி வினாவாக.

"அது சரி தான். ஆனால்...' என்று இழுத்தவளை லேசாக முறைத்து விட்டு,

மடிக்கணினியில் இதற்கு முன் நடந்த கிளை யண்ட் மீட்டிங் வீடியோவைப் போட்டுக் காட்டினான்.

அதில், தமிழின்பன், தன் கணீர் குரலில், வாடிக்கை யாளருடன் ஆங்கிலத்தில் ஏதோ பேசிய படி இருக்க, அந்த அமெரிக்காவினரும் ஆங்கிலத்தை மடை திறந்த வெள்ளமாகப் பேச,

"சுத்தம்... நீங்க பேசுறதாவது புரியுது. ஆனால் வெள்ளை மண்டையன் பேசுறது சப்டைட்டில் போட் டாக் கூட புரியாது போல. இங்கிலிஷ் பேசச் சொன்னா, இஸ் வாஸ் தவிர எதுவும் காதுல கேட்காத மாதிரி மட மடன்னு பேசுறான். இன்பா... அதுவும் ஒரு வாரத்துல நான் எப்படி புரிஞ்சுக்குறது...?" என பாவமாகக் கேட்க,

"நான் உனக்கு எக்ஸ்பிளைன் பண்றேன்" என்று லேப்டாப்பில் எதையோ தட்டி, அவளுக்கு காண்பித்து விளக்கம் சொல்ல முயல, அந்நேரம் கதவு படாரென திறக்கப் பட்டது.

அதில் தமிழரசி சட்டென நிமிர, தமிழின்பன் ஏற் கனவே இப்போது இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என உணர்ந்த படியால் அவள் முகத்தை திருப்பி, "லேப் டாப்பை பாரு" என்று சைகை செய்து, அதில் மூழ்க, இதனை கண்ட சுஹானா தான் எரிமலையாய் நின்றாள்.

'என்ன பார்க்காம ரூமுக்குள்ள அடைஞ்சு கிடந்தவன், இப்போ என்னை கண்டுக்காத அளவுக்கு வந்துட்டானா? அதுவும், என்னமோ பெரிய உலக அழகியை கல்யாணம் பண்ண ரேஞ்சுக்கு, கூட்டிக்கிட்டு கூடவே சுத்துறான்...' என்றவளுக்கு மனம் தீப்பிழம்பாய் இருக்க, ஒரு முறை, இதே மாதிரியான ஒரு போர்ட் மீட்டிங்கிற்கு தான் வருகிறேன் என்றதற்கு, அவன் மறுத்து விட்டுச் சென்றது நினைவு வந்தது.

சுஹானாவிற்கு இந்த பிசினெஸில் விருப்பம் இல்லை என்றாலும், அவ்வப்பொழுது அப்பாவிற்காக வந்து செல்வாள். திருமணத்திற்குப் பிறகும் கூட, ஒரு முறை அவருக்கு உடல் நிலை சரி இல்லாது போக, அவள் தான் வரவேண்டிய சூழல் வந்ததால், தான் வருகிறேன் என்றதற்கு அவன் தான்,

"வேணாம் சுஹா... எப்படியும் நீ அங்க வந்து தூங்க தான் போற! அதுக்கு எதுக்கு வரணும். நான் பார்த்துக்கிறேன். நீ இந்த பெயிண்ட் பிரஷை புடிச்சு, ஏதாவது கிறுக்கிட்டு இரு" என்று விளையாட்டாகக் கூறியது, அவளுக்கு சற்று எரிச்சலைக் கொடுத்தது.

"எனக்கு என்ன லூசா பிடிச்சுருக்கு. கிறுக்கிட்டு இருக்குறதுக்கு..." என கோபமாகவே கேட்டவளைக் கண்டவன்,

"ப்ச், உண்மையிலேயே நீ லூசு தான். இப்போ நீ அங்க வெறும் ஷேர் ஹோல்டர் இல்ல. சேர்மேன் ஓட வைப். நீ இனிமே எப்போ வந்தாலும், அங்க சேர்மனா தான் வரணும். உன் அப்பாவுக்கு வேணா, வீடியோ கால் அரேஞ்ச் பண்றேன். இல்ல வேற யாராவது வரட்டும்... ஓகே வா" என பொறுமையாக விளக்கம் கொடுக்க,

அப்போதைக்கு அவள் அதனை ஏற்றுக்கொண்டாலும், என் அப்பாவுக்காக நான் வரக்கூடாதுன்னு, இவன் எப்படி சொல்லலாம் என்ற எண்ணம் தான் ஓடிக்கொண்டே இருந்தது. அவன் இவளை உயர்ந்த இடத்தில் வைத்ததை, அவள் உணரவே இல்லை.

இப்போது, "தமிழ்" என அவள் அழைக்க, தமிழரசி தான் நிமிர்ந்து அவளைப் பார்த்து விட்டு, இன்பாவை பார்த்தாள்.

அவனோ அப்படி ஒருவள் எதிரில் இல்லை என்ற ரீதியில் அமர்ந்திருக்க,

சுஹானா "தமிழ்" என அழுத்தி அழைத்தவள், அப்போதும் அவன் நிமிராமல் இருந்ததில், மேலும் கோபமடைய...

"இந்த நிலைமையிலேயும் உனக்கு திமிர் குறையலைல! இவளை எதுக்கு இங்க கூட்டிட்டு வந்துருக்க? எவ்ளோ நேரம் புது பொண்டாட்டியை சும்மாவே வச்சுருக்குறது அப்படின்னா?" என குரலில் கேலி கொப்பளிக்கக் கேட்டதில், தமிழரசி வெடுக்கென எழுந்து, அவளைத் தீயாக முறைத்தாள்.

தமிழின்பன் அரசியை இழுத்து அவனருகில் அமர வைத்து விட்டு, சுஹானாவை ஒரு பார்வை பார்த்ததில், அவளுக்குத் தான் சில்லிட்டது.

அந்நேரம் அவளுக்கு போனும் வர, இன்பாவை முறைத்து விட்டு சுஹானா சென்று விட்டாள்.

"தமிழரசிக்கு தான் ஒன்றும் புரியவே இல்லை. முதலில் இவள் எப்படி இங்கு வந்தாள்? வந்தவளுக்கு, சிறிது

கூட அவளின் காதல் பற்றி அக்கறை இல்லை. அதோடு, வீட்டினரிடம் காட்டும் கோபத்தில் பாதி கூட, ஏன் இவளிடம் இவர் காட்டவில்லை. தன்னிடம் சொல்லும்போதும் கூட, அவளை பற்றி பெரியதாக தவறாகக் கூறவில்லை..." என்ற சிந்தனைகள் மூளைக்குள் குடைய,

'ஒருவேளை இப்போவும் அவரால அவளை மறக்க முடியலையோ? அதான், என்னைக் கூட அவள் கிட்டே பேச விடாம பண்றாரோ? அப்படி ஏதாவது எண்ணம் இருந்தா கண்டிப்பா அவளோட சேர்த்து வைக்கணும்... அவள் ஏதோ அப்பா பேச்சைக் கேட்டு அப்படி பண்ணிட்டா! புரிய வைச்சா புரிஞ்சுக்குவான்னு தான் தோணுது...' என மனதினுள் கணக்கிட்டவளுக்கு, ஏனோ எப்போதும் இருக்கும் ஒரு உறுதி, இப்போது இல்லையோ? என்ற எண்ணம் ஒரு ஓரத்தில் எட்டிப் பார்த்தது.

அப்போது, தமிழின்பன் அவள் கையை நறுக் கென கிள்ளிட, "ஆஆ! எதுக்கு கிள்ளுனீங்க இன்பா?" எனக் கேட்டாள் முகத்தை சுளித்து.

"இங்க பாருன்னு சொன்னேன்..." என பாவனை செய்தவன், ஏதேதோ எடுத்துக் காட்ட, அவளும் மற்றவை மறந்து சிரத்தையாக கேட்டுக்கொண்டாள்.

காலில் அடிபட்டு, நடக்க முடியாமல் இருந்த பத்மாவிற்கு வெறுப்பாக இருந்தது. இரு நாட்களாக ஒரே அறையில் அடைந்ததோடு, அவ்வப்பொழுது மற்றவர்கள் வந்து விசாரித்துக் கொண்டாலும், வெகு நேரம் தனிமையிலேயே துவண்டார். உடல் நிலை சரி இல்லாதவரோடு, எவ்வளவு நேரம் தான் இருக்க முடியும். அவ

ரவர் அவரவர் வேலையைப் பார்க்கச் சென்றிட, அவரின் மகனிற்கு போன் செய்து விவரம் கூறினார்.

அவனோ, "அப்படியா டாக்டர்கிட்ட காட்டுங்கமா! ரெஸ்ட் எடுத்தா சரி ஆகிடும்" என கூறி விட்டு, "மீட்டிங் போறேன் வைச்சுடுறேன்." என வைத்து விட, அவருக்கு மேலும் கோபமாக வந்தது.

மீண்டும் அவனுக்கு போன் செய்தவர், "ஏன் பா... இப்பயாவது ஒரு தடவை வந்து, என்னைப் பார்த்துட்டு போகக் கூடாதா? நீ கூட இருந்தா எனக்குக் கொஞ்சம் நல்லாருக்கும்." என்றவரிடம்,

"இப்போ நான் அங்க வந்து என்ன பண்ணப் போறேன்? வேணும்னா ஒரு நர்ஸ் ஏற்பாடு பண்ணிக் கோங்க. பணம் வேணா அனுப்புறேன். நீங்க பார்த்து நடக்காம, கீழ விழுந்ததுக்கு, நான் இங்க என் பொண் டாட்டியை விட்டுட்டு அங்க வரணுமா?" என சுள்ளென கேட்டுவிட்டு போனை வைக்க, அவருக்கு தான் சுருக் கென இருந்தது.

தமிழின்பனுக்கு சுஹானாவுடன் திருமணமாகி ஒரு வாரமே ஆகியிருந்த நிலையில், அவளுடன் தேனி லவு பயணம் செல்ல ஏற்பாடு செய்து கொண்டிருந்த நிலையில், திடீரென பத்மாவிற்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட, அதில், அவன் பயணத்தை ரத்து செய்து விட்டு, அவருடனே இருந்தது, தேவையே இல்லாமல் இப் போது நினைவு வர, வீட்டினரை கூட அதட்டி உருட்ட, அவருடனே அவருக்கு தனிமை தெரியாதவாறு இருக்க வைத்தது, இப்போது தான் அவருக்கு உரைத்தது.

புருவத்தை சுருக்கி சிந்தனையில் இருந்தவரை நோக்கி தமிழரசி வந்து, "என்ன பத்து? கால் வலி

லாம் பரவாயில்லையா? எங்க உன்கூட இருக்குற நண்டு சிண்டு எல்லாம் காணோம்..." என்று அவருக்கு பின்னால் தேடுவது போல் பாவனை செய்தவளை, அவர் சலனமில்லாமல் பார்க்க,

அவளோ "அது சரி, உன் பையன்கிட்ட அடி பட்டதை சொன்னியா? என்ன சொன்னாரு... அப்படியே துடிச்சுப் போய்ட்டாரா? உடனே கிளம்பி வரேன்னு சொன்னாரா?" என எகத்தாளமாகக் கேட்டவளின் குரலில் அதீத கிண்டல் இருக்க, அவர் மேலும் உர்ரென அமர்ந்திருந்தார்.

"என்ன பத்து, உன் பையன் வரலையா என்ன? அச்சோ! பெத்த அம்மாவுக்கு உடம்புக்கு முடியல, அதை கூட வந்து பார்த்துக்க முடியாத பையன். ப்ச்! ஆனால் பாரேன் பத்து, என்ன இருந்தாலும் ஆம்பளைப் பையன், அம்மாவை பார்த்துக்கணும்ல? அதான ஒரு ஆம்பளைக்கு அழகு. அப்போ உன் பையன் ஆம்பளையே இல்லையோ? அச்சோச்சோ! என் புருஷனா இருந்திருந்தா அவரு அம்மாவை அப்படி தாங்கிருப்பாரு... சோ அவரு ஆம்பளை தான். அப்போ உன் பையன் தான் இம்போடென்ட்டா?" என்று விழி விரித்து, சாட்டையாக கேள்வி கேட்க, அவர் உறைந்த நிலையில் இருந்தார்.

அவரை நக்கலாக பார்த்த படி, அவள் அறைக்குள் புகுந்திட,

அன்றும் சைகையில் மீட்டிங் பற்றி ஏதோ சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த தமிழின்பனிடம், அவள் ஏதோ கேட்க வருவதும், பின் அமைதியாவ

துமாக இருப்பதை உணர்ந்தவன், மடிக்கணினியை மூடி வைத்து விட்டு,

"என்ன கருவாச்சி?" என உதட்டசைத்தான்.

அவள் விழித்து "ஒன்னும் இல்லையே" என தலையாட்ட,

"சொல்லு" என்றான் கண்ணை மூடி திறந்து.

அவள் தயங்கிய படி, "இல்ல, அது... நீங்க இன்னும் அவளை லவ் பண்றீங்களா?" எனக் கேட்டு விட்டாள், இரு நாட்களாக மனதில் இருந்த கேள்விதனை மனதில் பூட்ட இயலாமல்.

அவளை சில நொடி அமைதியாகப் பார்த்த இன்பா, "ஏன் இந்த டவுட்?" என்றான் குழப்பமாக.

"சும்மா தான் கேட்டேன்...! அந்த பொண்ணை பத்தி நீங்க சொன்னதை கேட்கும் போது, தப்பான பொண்ணு மாதிரி தெரியல. அதோட கொஞ்சம் திமிரு இருந்தாலும், இவ்ளோ பணமும், அழகும் இருக்குற பொண்ணு கிட்ட, இது கூட இல்லைனா எப்படினு தான் தோணுது. அதுக்காக அவள் பண்ணுனதை, அன்னைக்கு ஆஃபீஸ்ல பேசுனதை நான் நியாயப்படுத்தல... தப்பு தான். ஆனால் சரிப் படுத்த முடியாத தப்பு இல்லையோன்னு தோணுது. அதோட, என்னைப் பார்த்ததும், அவங்க கண்ணுல பொஸஸீவ் நெஸ் தான் தெரிஞ்சுது... அவங்க நல்லவங்களாவே இருக்கலாம்ல" என தீவிரமாக வாதாடியவளுக்கு மனம் ஏதோ ஒரு வெறுமையை உரைக்க, தான் என்ன நினைக்கிறோம் என்றே தெரியாமல் ஏதேதோ உளறிட, அவனோ, ஒரு க்ளாசில் தண்ணீரை எடுத்து அவளுக்குக் கொடுத்தான்.

அதனைத் திரு திருவென விழித்தபடி வாங்கியவள், ஒரே மடக்கில் குடித்து விட்டு, அவனைப் பார்க்க, அவனோ தலையைச் சாய்த்து,

“எழுத்தாளருக்கு கற்பனை சக்தி இருக்கலாம். ஆனால், ரியல் லைஃப்ல அந்த கற்பனை ஒரு சதவீதம் கூட உதவாது” என்றவன், அவளை உறுத்து விழித்து விட்டு, பால்கனியில் சென்று நின்று கொள்ள, அவளுக்குத் தான் மண்டை காய்ந்தது.

அவளும் அவனருகில் சென்று நின்று, “இன்பா! நீங்க சுஹானா பத்தி, என்கிட்ட ஏதாவது மறைக்கிறீங்களா?” எனக் கேட்க,

அவன் கோப முகத்துடன் அவள் புறம் திரும்பி, “நல்லவங்க, கெட்டவங்கன்னு நீ எப்படி பிரிக்கிற அரசி?” எனக் கேட்டான் கூர்மையுடன்.

“அது... அது...” என அவன் கேட்ட கேள்விக்கு பதில் கூற தெரியாமல் விழிக்க,

“பதில் சொல்லு எழுத்தாளரே! நம்ம மேல ரொம்ப அன்பாகி, நம்மளை அவ்ளோ லவ் பண்ணி, நம்ம சக்சஸ் பார்த்து சந்தோசப்பட்டு... இந்த மாதிரி இருக்குறவங்களை நல்லவங்கன்னு சொல்றியா?” எனக் கேட்க, அவள் தலையை உருட்டினாள்.

அதில் அவன் தான் அவளை மென்மையாய் பார்த்து, “இல்ல அரசி” என மறுப்பாய் தலையசைத்து...

“அன்புன்னா வெறும், பணத்தை பார்த்தோ, நம்ம ஆட்டிட்யூட் பார்த்தோ வரக்கூடாது. லவ் நம்ம மேனரிசம் பார்த்து வரக்கூடாது. சக்சஸ்க்கு மட்டும் சந்தோசப்பட

இங்க ஆயிரம் பேர் இருக்காங்க. இதே தோல்வியை பார்த்து ஆறுதல் சொல்ல யாரும் கிடையாது. அப்படி ஒருத்தர் லைஃப்ல இருக்குறது தான ஒரு புருஷனுக்கோ, மனைவிக்கோ திருப்தி. அப்போ இவங்க நல்லவங்க இல்லையா?" என மெதுவாக வாயசைத்து, விழிகளால் வினவ,

அவள் இப்போதும் புரியாமல் "ம்ம்" என்றாள்.

அவன் அவளைப் பாராது, வேறொரு புறம் கண்ணை மட்டும் திருப்பி வெறித்து, "நமக்கு விபத்துன்னு ஒன்னு வாழ்க்கையில நடக்குற வரை, நம்ம கூட இருக்குற எல்லாருமே நல்லவங்களாத் தான் இருப்பாங்க. நம்ம மேல உண்மையான அன்போட தான் இருப்பாங்க. ஆனால், அந்த விபத்து ஏற்பட்டதுக்கு அப்புறம் தான் தெரியும். இந்த உலகத்துல நம்மளைத் தவிர, நமக்காக யாருமே இருக்க மாட்டாங்கன்னு...! அது ஆசையா காதலிச்ச பொண்டாட்டியா இருந்தாலும் சரி! அப்படி பார்த்தா இந்த உலகத்துல யாருமே நல்லவங்க கிடையாது அரசி. சூழ்நிலை மட்டும் தான் ஒருத்தரை நல்லவங்களாவோ கெட்டவங்களாவோ காட்டுது. இதே எனக்கு இந்த ஆக்சிடென்ட் நடக்காம இருந்துருந்தா, இப்போ வரை எல்லாருமே எனக்கு நல்லவங்களா தான் இருப்பாங்க. இப்போ..." என்ற வார்த்தை அவன் கருவிழியில் தொக்கி நின்று, அவளிடமே பயணிக்க முற்பட, அவளோ அதிர்ந்து நின்றாள்.

பின், தெளிந்தவள் "எந்த உறவா இருந்தாலும், எந்த நிலையிலேயும், நம்மளை விட்டு போக மாட்டாங்கன்னு ஒரு நம்பிக்கையை கொடுக்கணும். அப்படி இல்லைன்னா, அந்த உறவோட சேர்த்து மன

மும் முறிஞ்சுறும். அப்படி தான சொல்றீங்க இன்பா?" என மனம் கலங்கக் கேட்க,

"அறிவாளி புரிஞ்சுருச்சா?" என்று இதழோரம் சிறு நகை கொடுத்து விட்டுச் சென்றவனை, தன் விழியக லப் பார்த்தாள்.

சில நொடியில், அவன் பின்னே ஓடிச் சென்று அவனை நிறுத்தியவள், "இன்பா... சூழ்நிலை தான் ஒருத்தரை மாத்தும்னு ஒத்துக்குறேன். ஆனால், எல் லாரும் அப்படி கிடையாது" என ஆரம்பித்தவள்,

மெதுவாக "நான் அப்படி கிடையாது..." என முணு முணுக்க, அவளின் முக பாவத்தில் பட்டென சிரித்து விட்டவன்,

"என் கருவாச்சி தான் யூனிக் பீஸ் ஆச்சே... என்ன நடந்தாலும் என் ஃப்ரெண்ட் என் கூடவே தான் இருப்பா... நானும் இருப்பேன்..." என அவள் கன்னத் தைக் கிள்ளி, தீர்க்கமாக உரைத்திட அவள் முகம் மலர்ந்திருந்தது.

இதோ அதோ வென அன்று அவளின் முதல் வாடிக்கையாளர் மீட்டிங் இருக்க, "டென்ஷனா இருக்கு இன்பா!" என்றாள் வாடிய படி.

"டென்ஷனே வேணாம் கருவாச்சி. நான் மேனேஜ் பண்றேன். நீ ஜஸ்ட் நான் உனக்கு டைப் பண்ணித் தர் றதை எக்ஸ்பிளைன் பண்ணாப் போதும். ஓகே வா?" என்றதில் "ம்ம்" என தலையை உருட்டிட, இருவரும் மீட் டிங் ஹாலுக்குள் நுழைந்தனர்.

ஏற்கனவே வாடிக்கையாளரிடம், இன்று அவன் பேசப் போவதாக முன் பதிவு வாங்கி இருந்ததால், 'எப்ப டி பேசுறான்னு நானும் பார்க்குறேன்' என நக்கல் சிரிப்பு டன் சுஹானா அமர்ந்திருக்க,

முன்னே சென்று நின்ற தமிழரசிக்கு, வீடியோ காலில் அந்த வெளிநாட்டவரைக் கண்டதும், கையெல் லாம் கிடு கிடு வென ஆடியது.

அதில் பொங்கிய சிரிப்பை அடக்கிய இன்பா, "எதுக்குடி டான்ஸ் ஆடுற" என குறுஞ்செய்தி அனுப்பி னான்.

"ரசிகரே தெரியாம உங்க கிட்ட வாக்கு கொடுத் துட்டேன். வாங்களேன்... நம்ம வீட்டுக்கு போய் புக்கே படிக்கலாம்..." என ஜகா வாங்க முற்பட, அதில் மேலும் அவனுக்கு சிரிப்பு தான் வந்தது.

அவனுக்கு அவள் சொதப்பினாலும் எந்த கஷ்ட மும் நஷ்டமும் இல்லை தான். இது இல்லை என்றால் அடுத்த மீட்டிங் என எண்ணியவனுக்கு அவளுடனான இந்த மீட்டிங் விளையாட்டு பிடித்திருக்க, அவள் பயத் தைக் கண்டு, எந்த டென்ஷனும் இல்லாமல் அவளை கலாய்க்க முற்பட்டான்.

"சிரிச்ச... கொன்னுடுவேன்!" என அவனை விழிக ளால் மிரட்ட,

"ஏதோ, எல் கே ஜி பாப்பா ரைம் சொல்ல முன் னாடி நிக்கிற மாதிரி நிக்கிற கருவாச்சி. முதல்ல நேரா, ஆடாம நில்லுடி..." என குறுஞ்செய்தியில் அதட்டல் போட,

அவள் முயன்று நேராக நின்றாள். மேலும் அவன், "டென்ஷனா இருந்தா கையில ஒரு பேப்பர் வச்சுக்கோ, இந்த கையில போன் வச்சுக்கோ. அப்போ தான், நான் சொல்ற மெசேஜை, நீ அவர்கிட்ட சொல்ல முடியும். யாரையும் பார்க்காத முக்கியமா சுஹானாவை. என்னை மட்டும் பாரு... இல்லைன்னா சட்டுனு பேச வராம ஸ்ட்ரக் ஆகும்..." என மேலும் அவளுக்கு அறிவுரை கூற, அதற்குள் வாடிக்கையாளர் பேச ஆயத்தம் ஆனார்.

"குட் மார்னிங் டமிழ்..." என ஆரம்பித்தவர், ஏதோ கேள்வி கேட்க, ஏற்கனவே அவன் தனக்கு பதிலாக தமிழரசி பேசுவாள் என்று கூறி ஒப்புதல் வாங்கி இருந்தான். அதற்கு அவர் சம்மதிக்கவே வெகு நேரம் பிடித்தது.

"கு... குட்... மார்னிங் டேவிட்" என விஷ் செய்யவே சில நிமிடமாக,

சுஹானா தான், "உன் புது ஹஸ்பண்ட் ஊமைன்னா. நீ திக்கு வாயா?" என நல்லகடிக்க, அதில் சுறு சுறு வென கோபம் எழுந்தது அரசிக்கு.

முயன்று அவள் கவனத்தை சிதற விடாமல், டேவிட் கூறியதற்கு இன்பாவின் உதவியுடன் பதில் கூற முதலில் அவள் நிறுத்தி நிதானமாகப் பேசியது அவருக்கு எரிச்சலைக் கொடுத்தாலும், நேரம் செல்லச் செல்ல இன்பாவின் யோசனைகளுடன், அவளின் இந்த முயற்சியும் அவருக்குப் பிடித்திட, கிட்டத்தட்ட இரண்டு மணி நேர மீட்டிங்கின் முடிவில் டேவிட்,

"எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. ப்ராஜக்ட் பற்றி எம் டி யிடம் பேசி விட்டு மறுநாள் மேலும் விவாதிக்கலாம்." என நேரம் சொல்லி விட்டு வீடியோவை அணைக்க, இன்பாவிற்கு நம்பவே இயலவில்லை.

முதல் தடவையே, அவர் பேசுவது புரியவில்லை என்றாலும், தான் சொன்னதை சரியாக எடுத்துரைத்த தமிழரசியின் செயலில் அவனுக்கு “வாவ்” என கத்த வேண்டும் போல இருக்க, தமிழரசிக்கு தான் அந்த டேவிட் கடைசியாக என்ன சொன்னார் என்றே புரிய வில்லை.

திடீரென வீடியோவும் கட் ஆகியதில் அவள் பாவ மாக இன்பாவை பார்க்க, அவனோ 'ஓ மேடம் க்கு புரி யலையா' என எண்ணிவிட்டு முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான் வேண்டும் என்றே.

சுகானாவிற்கு தான் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. முகம் எல்லாம் கறுத்திருந்தது. கோபத் தில் விருட்டென அவள் வெளியில் சென்றிருக்க, அரசி அதையும் உணரவில்லை.

‘ஏதோ சொதப்பிட்டோம்...’ என்றே அழும் நிலைக் குச் சென்றவள், வேகமாக இன்பாவின் அலுவல் அறைக்குள் புக, அவனும் மனதினுள் சிரித்த படி, அங்கு வந்தான்.

அரசி, “சாரி இன்பா... நான் தான் சொன்னேன்ல. சொதப்பிடுவேன்னு... பாருங்க அந்த டேவிட் எதுவுமே சொல்லாம வீடியோவை ஆப் பண்ணிட்டாரு...” என வருத்தியபடி கூற,

அவனோ கோபமாக “என்ன சாரி? ஒழுங்கா பேச முடியாதா உன்னால? பாரு இப்போ எப்படி ஆகிடுச் சுன்னு” என்று பாவனையுடன் அதட்ட, அவ்வளவு தான் இவ்வளவு நேரம் இழுத்து பிடித்திருந்த கண்ணீர், மட மட வென அவன் திட்டியதில் வெளியில் வர, இன்பா வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான்.

அவள் பேந்த பேந்த முழிக்க, அவனோ "கரு வாச்சி... யூ மேட் இட் டி..." என டேவிட் இறுதியாகக் கூறி யதை சொல்லி விட்டு, "இதுக்குலாமா அழுவாங்க..." என அவள் கண்ணீரைத் துடைத்து விட, அவளோ முத லில் திகைத்து, பின் உற்சாகமாகமாகி, இறுதியில் இப் படி ஏமாற்றி விட்டானே என்ற கடுப்பில் அவனை தீயாக முறைத்தாள்.

"ஈஈ..." என அனைத்து பல்லையும் காட்டி இளித்த வன்,

"பல்பு வாங்குனியா?" என குறும்பாக கண் சிமிட்டி யதில்,

"யோவ்... உன்னை..." என அவனைத் துரத்த ஆரம்பிக்க, அவன் அவளிடம் சிக்காமல், அறை முழுக்க ஓட ஆரம்பித்தான்.

# அத்தியாயம் - 14

14 தமிழின்பனை அடிக்க துரத்திய தமிழரசி "இன்பா நில்லுங்க! கொஞ்ச நேரத்துல என்ன பயமு றுத்தி விட்டீங்கல்ல...? நில்லுங்க இன்பா" என கத்த கத்த, அவன் அவளின் கைச்சிறையில் சிக்காது ஓடி னான்.

இறுதியில், கதவின் அருகில் சென்றதும், சுஹானா சட்டென கதவை திறக்க, அதில் அவள் மேல் விழப் போனவன், அவன் விரல் கூட அவள் மேல் படாதவாறு பின்னே தள்ள, தமிழரசியின் மேல் மோதி நின்றான்.

அரசியும் அவன் திடீரென தன் மேல் இடிப்பான் என உணராது, நிலைதடுமாறி விழ போக, தமிழின் பன் சரியாக திரும்பி, அவளை பிடித்து விட்டான் இடை யோடு வளைத்து.

"பார்த்து கருவாச்சி..." என அவன் வாயசைக்க,

ஒரு நொடி அவனைக் கண்டு விழித்தவள், பின் "என்னை சீட் பண்ணிட்டீங்கல்ல?" என்று அவனின் தோளைக் குத்தினாள்.

அவனோ, இதழை சிறிதாய் வளைத்து, நாக்கைத் துருத்த, அவளோ பார்வையால் சுட்டாள். இருவருமே ஒருவரின் தீண்டலை மற்றவர் உணரவில்லை. ஆனால், இதனை கண்ட சுஹானாவிற்குத் தான் பரபரவென இருந்தது. ஏனென்று அறியாத ஒரு கோபம் அவளைத் தாக்க, “தமிழ்” என கத்தி அழைத்தாள்.

அப்போது தான் அவளைக் கண்ட அரசி, சட்டென நகர முற்பட, இன்பா அவளைத் திரும்பியும் பாராது, “கீழ விழுந்துறாம, நில்லு!” என அரசியிடம் எச்சரித்து விட்டு, அவன் இருக்கையில் சென்று அமர்ந்தான்.

இப்போதும் அவனின் உதாசீனம் சுஹாவிற்கு கடுங்கோபதை கிளற, “ஏதோ ஒரு மீட்டிங்ல இவ தடவி தடவி இங்கிலீஷ் பேசுனதுல, உடனே எல்லாம் ஓகே ஆகிடும்னு நினைக்காத தமிழ். ஒரு நிமிஷத்துல இதை எல்லாம் ஒன்னும் இல்லாம என்னால ஆக்க முடியும்.” என்றதில், இன்பா அரசியிடம் ஏதோ சைகை செய்தான்.

அதில் அவளோ பொங்கிய சிரிப்பை அடக்கிய படி, சுஹானாவிடம் “டைம் வேஸ்ட் பண்ணாம முதல்ல அதை போய் பண்ணுவியாம். அப்படியே போறப்ப கதவை சாத்திட்டு போ... ம்ம்!” என தலையை ஆட்டி, அவன் கூறியதை கொரியர் செய்தாள்.

அதில் சுஹானா, அவளை நக்கலாக ஒரு பார்வை பார்த்து விட்டு, “கதவை சாத்திட்டு மட்டும் ரெண்டு பெரும் என்ன பண்ணிடப் போறீங்க...? ஊமை பாஷை தான் பேசணும்...!” என்று நாக்கில் நரம்பற்று பேசி விட்டு வெளியில் செல்ல, சில நொடிகள் அவள் கூறியது புரி யாமல் திகைத்திருந்த அரசி, அதன் பிறகே சுறுசுறு

வென கோபம் எழுந்ததில் அவள் பின்னே செல்லப் போனாள்.

அந்நேரம், இன்பா டேபிளை ஒரு தட்டு தட்டி சத் தம் கொடுத்தவன், “வந்து உட்காரு!” என்று விழியில் உத்தரவிட,

“அவள் ரொம்ப ஓவரா பேசுறா இன்பா! ஓங்கி ஒரு அறை அறைஞ்சா தான் என் மனசாறும்...” என மேலும் கீழும் மூச்சு வாங்கப் பேச,

“இப்போ வர்றியா இல்லையா?” என்று அழுத்தத் துடன் பார்த்தான்.

“முடியாது!” என்று அவள் நிலையாய் நிற்க, அவன் தீப்பார்வையுடன் நோக்கியதில், “என்ன இருந்தாலும் அவள் உங்க காதல் பொண்டாட்டி தான...! அதான் அவள் என்ன சொன்னாலும் அமைதியா இருக்கீங்க! இல்லைன்னா உங்க தம்பியை அடிச்ச மாதிரி, அவ ளையும் அடிச்சு இருப்பீங்கள்ல...!” என்று சிறுபிள்ளைத் தனமாக வாயை விட, சில நிமிடம் அவளை சலனமின்றி வெறித்தவன், மடிக்கணினியில் ஏதோ பார்க்க ஆரம் பித்து விட்டான்.

தமிழரசி அவளிடம் எதுவும் பேச விடமாட்டேங்கு றானே என்ற கடுப்பில் இப்படி கேட்டுவிட்டு, நேரம் ஆக ஆக அவன் சிறிதும் பார்வையை அகற்றாமல் இருந் ததில் கையை பிசைந்து கொண்டிருந்தாள். அவனிடம் சென்று பேசலாம் என்றால், கண்டிப்பா இப்போ பக்கத் தில் சென்றால் அடி கன்பார்ம் என்று உணர்ந்தவள், “இன்பா” என குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அவன் அதனை பார்த்ததும், போனை தூக்கி சுவற்றில் எறிந்து விட்டு, மீண்டும் மடிக்கணினியில் புதைய, அந்த செல்பேசி தூள் தூளாய் நொறுங்கியது. இதைக் கண்டவளுக்கு, இதயம் ஒரு நொடி நின்று துடிக்க, நடுங்கிய குரலில் "இன்பா..." என அழைத்தாள் மீண்டும்.

நிமிர்ந்து, "வெளிய போ!" என்று அவன் விழிக ளால் வதம் செய்த படி கூற, அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"சாரி இன்பா!" என விசும்பிய படி மன்னிப்பு கேட் டவளை, சிறிதும் ஏறெடுத்து பார்க்காமல் உள்ளுக்குள் கனலாய் எரிந்து கொண்டிருந்த நெருப்பை அணைக்க வழியில்லாது, தன்னை அடக்கிப்படி அமர்ந்திருந்தவ னின் அருகில் மெல்லச் சென்றாள் தமிழரசி.

"பக்கத்துல வராத அடிச்சுடுவேன்!" என விரல் நீட்டி எச்சரித்தவனிடம்,

"நீங்க அடிச்சாலும் பரவாயில்ல. நான் உங்க ஃப் ரெண்ட் தான. அடிச்சுக் கூட சண்டை போடுங்க. ஆனால், கோபமா அமைதியா இருக்காதீங்க, ப்ளீஸ்!" என தன்னையறியாது கலங்கிய மனம் அவன் அமைதி யில் வலித்திட, அவன் முன் பாவமாக நின்றிருந்தாள்.

"இன்னொரு தடவை அவளை லவர், பொண் டாட்டின்னு சொன்ன...! அப்புறம் ப்ராஜக்டும் வேணாம் ஒன்னும் வேணாம்னு நான் பாட்டுக்கு ரூமுக்குள்ள இருந்துக்குவேன்." என்று பல்லைக் கடித்தபடி சைகை செய்ததில்,

அவள் வாயைப் பொத்தி, “ம்ம்ஹும்... சொல்லவே மாட்டேனே!” என இருபுறம் தலையை ஆட்டி, விழி தெறிக்க முணுமுணுக்க, அதில் அவனுக்கு கோபம் மறைந்து புன்னகை தான் வந்தது.

“இங்க வா!” என கனிவான பார்வையுடன் அழைத்தவன் அருகில் சென்று அமர்ந்தவள்,

“சாரி!” என்று மீண்டும் உம்மென்று கேட்க, அவள் தலையில் கை வைத்து தலையை ஆட்டியவன்,

“நாளைக்கு இன்னொரு மீட்டிங் இருக்கு! அதுக்கு ரெடி ஆகு!” என்று வேலைக்குள் அவளை இழுத்தான்.

அவளோ, அவனை முறைத்து, “அநியாயமா ஒரு ஐ போன் போச்சே...”

அவனோ “நீ தப்பிச்சன்னு சந்தோசப்படு...” என் றான் நக்கலாக.

அதில் மேலும் முறைத்தவள், பின் யோசனையு டன், “இன்பா நாளைக்கு பேசப் போறது இன்னும் பெரிய ஆளா? அவங்க கிட்டயும் நான் கரெக்டா பேசிடு வேனா?” என முதலில் இருந்து ஆரம்பிக்க,

“முதல் தடவையே ஓகே சொல்ல வைச்சுட்ட... அடுத்த தடவை இன்னும் நல்லா பண்ணுவ பாரு! ம்ம்?” என தைரியப்படுத்த, அவளும் தலையை உருட்டினாள்.

மறுநாள், கண்ணாடி முன் நின்று நீண்டு வளர்ந்தி ருந்த முடியை சீவிக்கொண்டிருந்தவன் முன், “இன்பா நான் ரெடி!” என வந்து நின்றவள், அவனை மேலும் கீழும் பார்த்தாள்.

“என்ன” என அவன் புருவம் சுருக்கிப் பார்க்க, “நான் உங்களை முதல் தடவை பார்க்கும் போது, நீங்க ஹேர் கட் பண்ணி, ஷேவ் பண்ணி நீட்டா இருந்தீங் கள்ல...? இப்போ ஏன் தேவதாஸ்க்கு ஒன்னு விட்ட அத்தை பையன் மாதிரி இருக்கீங்க?” என்று கேட்டதில்,

“உதை வாங்குவ கருவாச்சி!” என்றான் முறைப் பாய்.

“அட! இல்ல ரசிகரே! நீங்க முதல்ல மாதிரி இருந்தா தான உங்க க்ளையண்ட்ஸ்க்கும் உங்க மேல நம்பிக்கை வரும். அதோட, சும்மாவே நீங்க எது பேசு னாலும் தவிர்க்கத் தோணாது, இப்போ ஹேர் கட் பண்ணிட்டு, ஹேண்ட்ஸம்மா போனா... நான் பேசவே வேணாம்! க்ளையண்ட்டே உங்க அழகுல மயங்கி ப்ரா ஜக்ட் கொடுத்துடுவாரு” என்று கண்ணடிக்க,

அவனோ சிரிப்பை அடக்கி கொண்டு, “இங்க என்ன அழகு போட்டியா நடக்குது எழுத்தாளரே! லுக் குக்கும் திறமைக்கும் சம்பந்தம் இல்ல” என்று கூறும் முன்,

“சப்பா...! அது எங்களுக்கும் தெரியும்! அதுக்காக கே ஜி எப் ஹீரோ மாதிரி, மூஞ்சி பூரா முடியோட மீட் டிங் போனா, முதல்ல உங்க மூஞ்சியைத் தான் தேட ணும், உங்க க்ளையண்ட்டு...!” என்று ஏற்ற இறக்கத்து டன் அவனை நக்கலடித்தாள்.

‘கலாய்க்கிறியா கருவாச்சி’ என மனதினுள் வறுத் தவன்,

“நீ மட்டும் என்னவாம், ஒரு இத்து போன சுடிதார் ஒன்ன போட்டுக்கிட்டு தான் வர்ற, அதுவும் இன்

னைக்கு டார்க் கலர் வேற! எது மூஞ்சி எது ட்ரெஸ் ஸுன்னே தெரியல..." என வாரியவன், அவள் கடுப் பாவதை நிம்மதியாய் பார்த்து விட்டு, குளியலறைக்குள் புக,

"யோவ்! அப்படியே போய்டு! திரும்பி வெளிய வந்த...!" என கோபத்தில் காலை தரையில் உதைத்த வள், அவன் சொன்னதற்காகவே இருப்பதிலேயே நல்ல உடையாக அணிந்து கொண்டு, கண்ணாடி முன் நின் றாள்.

"பெரிய உலக அழகன்... எப்போ பாரு இஞ்சி தின்ன மங்கி மாதிரி மூஞ்சியை வைச்சுக்கிட்டு, என்னை கருவாச்சின்னு சொல்றான். நீ எல்லாம் ஹேர் கட் பண் ணாக் கூட ஹரித்வார் குரங்கு மாதிரி தான் இருப்ப இன்பா!" என்று சத்தமாகவே முணுமுணுத்து, அவனை வாய்க்கு வந்த படி திட்டிட,

இதனை இதழில் உறைந்த புன்னகையுடன் கேட் டிருந்த தமிழின்பன், ட்ரிம்மரின் தயவில் தலை முடியை யும், தாடியையும் சரி செய்து கொண்டிருந்தான்.

இவளோ போட்ட பௌடரை கூட அழித்து விட்டு, முகத்தை சுருக்கி அமர்ந்திருந்தவள், குளியலறையில் இருந்து வெளியில் வந்தவனைப் பார்த்து விழி விரித் தாள். இரண்டு வருடம் முன்பு அவனைப் பார்த்ததை விட, இப்போது அவன் கண்ணில் சிறிது சோகம் தென்பட்டாலும் குறும்பும், ஒரு நிம்மதியும் இருப்பதை உணர்ந்தவள், சீராக்கப்பட்ட அடர்ந்த மீசையையும், ஒட்ட வெட்டப்பட்டிருந்த தாடியையும், லேசாக அவன் நெற்றியை தொட்டு விளையாடிக் கொண்டிருந்த சிகை யையும், இன்னும் அவனின் விழிகள் மேலும் கூர்மை

யுடனும் இருப்பதைக் கண்டு, அவனையே தன்னை மறந்து பார்த்திருந்தாள்.

"என்ன எழுத்தாளரே! இது ஓகே வா?" என்று இரு புருவத்தையும் தூக்கி வினவிட, அவனின் செய்கையில் மேலும் உறைந்து நின்றவள்,

"வாவ்! ரசிகரே! செம்ம போங்க! இன்னைக்கு ப்ரா ஜக்ட்ட தட்டி தூக்கப் போறோம். உங்க ஆளு... ச்சி சாரி, அந்த சுஹானா உங்களைப் பார்த்து இன்னைக்கு வெக்ஸ் ஆகி, சூசைட் பண்ணிக்கப் போறா...! நான் ஜாலியா அதை பார்க்கப் போறேன்." என்று குதூகலித் தவளுக்கு சிறு சிரிப்பை மட்டும் தந்தவன் அதனைத் தவிர்த்து,

"போதும் கருவாச்சி! வா போலாம்... இன்னைக்கு எத்தனை கோட்டிங் போட்ட, கொஞ்சம் கலரா தெரி யுற?" என பேச்சை மாற்ற,

"ஹெலோ! நாங்க ஒன்னும் உங்களை மாதிரி ஒரு மணி நேரம் மேக்கப் எல்லாம் பண்ண மாட்டோம். எப் போவும் ரியல் அழகு தான்..." என சிலுப்பிக்கொண்டு வெளியில் சென்றதில்,

"கருவாச்சிக்கு ஓவர் குசும்பு!" என சிரித்த முகத்து டன் வெளியில் வர, அங்கிருந்த அனைவரும் அவனை ஆ வெனப் பார்த்தனர்.

அவர்களே அப்படி என்றால், சுஹானா சொல் லவா வேண்டும். எந்த தோற்றத்தில் அவனிடம் மயங்கி, கிறங்கி இருந்தாலோ, இப்போது அதே தோற்றத்தில் முன்பை விட கம்பீரத்துடன், தனக்கென ஒரு தோழி கிடைத்த நிறைவான முகத்துடன் மீட்டிங் ஹாலுக்குள்

நுழைந்தவனை கண்ணிமைக்கக் கூடத் தோன்றாது பார்த்திருந்தாள்.

இப்போது அவனுக்கு வாய் பேச முடியாது என்றும், ஏன் ஆண்மையில்லாதவன் என்றும் கூட சொல்ல முடி யாத அளவு, அவனின் ஆளுமையும், கர்வமும் அவன் செய்கையில் மினுமினுக்க, ஏதோ ஒரு ஏமாற்றம் அவ ளினுள் ஓட ஆரம்பித்தது.

“கண்ணுல கொள்ளிக்கட்டையை வைச்சு பொசுக்கணும்... எப்புடி பார்க்கிறா பாரு! முதல்ல வீட் டுக்கு போய் சுத்திப் போடணும்...” என்று இன்பாவின் காதினுள் தமிழரசி கிசுகிசுக்க, அவன் திரும்பி முறைத் தான்.

“அட உங்களுக்கு இல்ல இன்பா! உங்களை ஷேவ் பண்ண வைச்ச பெருமை என்னை தான சேரும். அப்போ என்னை தான அவள் கண்ணு வைப்பா... சோ வீட்டுக்கு போய் எனக்கு சுத்திப் போடணும்னு சொன் னேன். ஹி ஹி!” என சமாளித்தவள்,

“அவ்வ்வ்வ்! இவனோட ஒரே குஷ்டமப்பா!” என நொந்து போனாள்.

பின், மீட்டிங் ஆரம்பிக்க, முதலில் இருந்த பயம் இப்போது இல்லை. அவன் வாங்கியிருந்த புது போனில் இருந்து அவளுக்கு குறுஞ்செய்தி அனுப்பிய படி இருக்க, அவளும் ஓரளவு பேசி முடித்தாள். இறுதியில் அந்த ப்ராஜக்ட் அவனுக்கே வந்தும் விட்டதில், தமிழர சிக்கு ஏக சந்தோசம்!

"ஐயோ இன்பா என்னால நம்பவே முடியல. நிஜ மாவே ப்ராஜக்ட் தந்துட்டாங்களா? அப்போ நீங்க சீக்கி ரம் சேர்மன் ஆகிடுவீங்களா?" என துள்ளிக் குதிக்க,

அவன் "அமைதி அமைதி எழுத்தாளரே! உடனே எல்லாம் ஆக முடியாது. இன்னும் நிறைய ஸ்டெப்ஸ் இருக்கு. இந்த ப்ராஜக்ட்ட கரெக்ட்டா முடிக்கணும். நிறைய ப்ராஜக்ட்ஸ் எடுத்து கம்பெனியில நம்ம ஷேர் அதிகப்படுத்தனும்" என்று கூறிக்கொண்டே போக,

"எப்படியோ பர்ஸ்ட் ஸ்டெப்ல சக்சஸ் தான, அப் புறம் உள்ளதை அப்புறம் பார்ப்போம். ஒழுங்கா எனக்கு ட்ரீட் வச்சுடுங்க...!" என்று மிரட்டலாய் கேட்க,

"தேங்க்ஸ் அரசி!" என்றான் அவளை ஆழமாகப் பார்த்த படி.

"எது தேங்க்ஸ் ஆ? இதெல்லாம் அக்செப்ட் பண்ண முடியாது. எனக்கு பெருசா ட்ரீட் வேணும். அவ்ளோ தான்!" என்று உதட்டைச் சுளிக்க,

துளிராய் ஒரு புன்னகையைச் சிந்தியவன், "கண் டிப்பா தரேன்! நீ காலேஜ் போயிட்டு வா!" என்றான் இன்று அவளுக்கு பிராக்டிகல்ஸ் இருப்பதை மனதில் கொண்டு.

அவளும் கல்லூரிக்கு சென்று, சந்தனாவிடம் நடந்ததை எல்லாம் ரசனையுடன் கூறி விட்டு வீட்டிற்கு வர,

அங்கு சண்முகம் அவளை வழி மறித்தார். அவ ரைப் புரியாமல் பார்த்தவளிடம், "இங்க பாரு! நீ இங்க உயிரோட இருக்கணும்னா இரு. சும்மா இங்க இருக்கு

றவங்களை திருத்துற வேலை, அனுப்புற வேலை எல் லாம் பார்த்த, நான் எந்த எல்லைக்கும் போவேன்! என்னை பத்தி உனக்குத் தெரியாது." என்று அனல் பறக்க மிரட்டி விட்டுச் செல்ல,

அவரை பே வென பார்த்தவள் 'லூசா இவன்...! இது தெரியாம, இவ்ளோ நேரம் இவன் பேசுனதை கேட்டுட்டு இருந்தோமேடா!' என்ற வடிவேலு பாணியில் அவரை மனதினுள் கலாய்த்தவள்,

"உனக்கு ஒரு பூஜை போடுறேன் மாம்ஸ்!" என எண்ணிக்கொண்டு அவள் அறைக்குச் செல்ல, அங்கு வேறு ஒருவன் நிற்பதையும், அவன் அருகில் கனிகா நிற் பதையும் கண்டு திகைத்தாள்.

"ஹே... இங்க என்ன பண்ற? யாரு இவன்?" என கனிகாவிடம் புருவம் சுருக்கி வினவிட,

அவளோ ஒரு நொடி விழித்து விட்டு, "உனக்கு எதுக்கு இது? உன் வேலையை பாரு?" என்று சொல்லி முடிக்கும் முன்,

"ஹோ! இதான் உன் புது அண்ணியா கனி... உன் அண்ணி கிட்ட இந்த வீடியோ காட்டுனியா என்ன?" என்று கனிகா வைத்திருந்த போனை, அரசியிடம் நீட்டி னான் குதர்க்கமாக.

கனிகா பதறி "நவீன் சொல்றதை கேளு! நான் தான் பணம் தரேன்னு சொல்லிட்டேன்ல" என்று உளற,

தமிழரசி "இங்க என்ன நடக்குது" என்றாள் புரியா மல்.

கனிகா தன்னையே நொந்து, தான் காதலித்தவன் இப்படி செய்து விட்டானே என்ற ஆதங்கத்துடனும், அவனைத் தீயாக முறைக்க, நவீனோ, “நீயே பாரு... நானும் உன் புருசனோட தங்கச்சியும் கொஞ்சிக் குழாவுனதை” என்று போனைக் காட்டியதில், அந்த வீடியோவைப் பார்த்து அதிர்ந்து விட்டாள் தமிழரசி.

கனிகாவுக்கு கண்ணை கரித்துக் கொண்டு வர, ‘போயும் போயும் இவள் கிட்ட என் மானம் போகுதே’ என மறுகியவள், இரு வருடமாக நவீனை காதலித்து வந்தாள். அவனிடம் நெருங்கியும் பழகி இருக்க, இருவரின் தனிமையில், சிறிதான எல்லை மீறலை வீடியோ எடுத்து வைத்திருந்தான். இவனை பற்றி அறிந்ததும் தவிர்த்து வந்தவள், இன்று வீட்டிற்கே வந்து விட்டவனைக் கண்டு பதறினாள்.

அவனுடன் வாக்குவாதம் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் ஷண்முகம் வந்து விட, அவனை இழுத்துக் கொண்டு இன்பாவின் அறைக்கு அழைத்து வந்திருந்தாள்.

நவீன், “நீ மட்டும் பணத்தை ரெடி பண்ணித் தரலை. இதை உன் அப்பாவுக்கே அனுப்பி விட்டுடுவேன். அப்புறமா ஊருக்கே அனுப்புவேன்...” என்று மிரட்டலை விட்டு விட்டுச் செல்ல, கனிகா தான் செய்வதறியாது நின்றாள்.

இன்னும் அந்த போனை கையில் வைத்துக் கொண்டு வெறித்திருந்த தமிழரசி, “யாரு அவன்?” எனக் கேட்டாள் இறுகிய குரலில்.

“அது உனக்கு தேவை இல்லாதது குடு போனை” என்று போனை பிடுங்க வர, அதற்குள் இன்பாவின்

அறையில் இருந்து யாரோ ஒருவன் வெளியில் சென்றதை சண்முகமும் ரேகாவும் பார்த்து விட்டு, அவசரமாக மாடி ஏறி வந்தனர்.

கனிகா நிற்பதை உணராது, "யாரு அவன்? எதுக்கு இந்த ரூமுக்கு வந்துட்டுப் போனான்?" என்று தமிழரசியிடம் வினவ, கனிகாவிற்கு இதயம் தாறுமாறாய் துடித்தது.

அதற்குள் மற்றவர்கள் அங்கு சத்தம் கேட்டு வர, இன்பாவும் அவள் கல்லூரியில் இருந்து வந்திருப்பாள் என எண்ணி அப்போது தான் வந்தவன், குழப்பமாகப் பார்த்தான்.

தமிழரசி பதில் கூறாமல் திரு திரு வென விழிக்க, கனிகா அவள் கையில் இருந்த போனைப் பார்த்தாள்.

ஷண்முகமோ "கேட்குறேன்ல சொல்லு. யாரு அவன்? எதுக்கு வந்துட்டு போனான்?" என்று கத்திட,

தமிழரசி அந்த போனை அவளின் பின்னால் மறைத்துக் கொண்டு, "எனக்குத் தெரியாது... நான் வந்ததும் அவன் போயிட்டான்" என்றதில்,

இன்பா யாரு வந்தா யாரு போனா என்ற ரீதியில் அவளைப் பார்க்க,

ரேகா, "அதெப்படி நீ வந்த நேரத்துல சரியா இங்க இருந்து போயிருக்கான். உனக்கு தெரியாம இருக்குமா? அதுவும் ரூமுக்கு கூட்டிட்டு வர்ற அளவு, யாரு அவன்?" என்று மேலும் கேட்டார் நக்கலாக.

கனிகாவுக்குத் தான் விஷயத்தின் வீரியம் சட்டெனப் புரிய ஆரம்பிக்க, "அம்மா..." என்று பேசும் போதே,

தமிழரசி அவள் கையைப் பிடித்து, அனல் பார்வை யுடன் "வாயை மூடு!" என்று முணுமுணுக்க, அவளோ செய்வதறியாது நின்றாள்.

அரசிதான், "அதான் எனக்கு தெரியாதுன்னு சொல்றேன்ல... நீங்க வீட்டுக்குள்ள யார் வந்தாலும் விட் டுருவீங்களா? முதல்ல யார் வந்தான்னு போய் பாருங்க!" என்று கலைக்க முயல,

சண்முகம், "நான் அப்போவே நினைச்சேன். என் னடா இந்தப் பொண்ணு இங்க வந்து இவனோட ஒட்டிக்கிட்டு இருக்குதேன்னு. இப்போதான் தெரியுது!" என்று எகத்தாளமாகக் கேட்க,

"அவள் என்ன தெரியுது?" என்று பல்லைக்கடித் தாள்.

ரேகாவோ, "ம்ம்! எந்த சுகத்தையும் அனுபவிக் காம எப்படி இங்க இருக்கன்னு நினைச்சோம். இப் போதான தெரியுது வீட்டுக்குள்ளேயே இருந்தவனை, வெளிய அனுப்பி விட்டுட்டு, நீ இங்க எவன் கூடயோ கூத்தடிக்கிறது...!" என்று சுருக்கெனப் பேசி விட, சட் டென அவள் கண்கள் கலங்கி விட்டது.

கூடவே, அங்கிருந்த பொருளெல்லாம் உடையும் சத்தம் கேட்க, திரும்பிப் பார்த்தவள், அங்கு எரிமலை யாய் இன்பா நிற்பதை கண்டு, மேலும் எச்சிலை விழுங் கினாள். கனிகாவிற்க்கு தான் ஐயோ என்றிருந்தது.

இன்பாவோ சரியாக அனைத்து பொருளையும் தன் பெரியப்பா, பெரியம்மாவின் காலுக்கு அடியில் போட்டு உடைத்து, வெறியுடன் அவரின் சட்டையைப் பிடித்து, தர தர வென கீழே இழுத்துக் கொண்டு வர,

பிரபாகர் பதறி, “தமிழ் என்ன பண்ற? விடு அவரை!” என்று கத்த, அவன் அவரை பார்த்த தீப்பார்வையில் அவர் கப்சிப் என ஆகி விட்டார்.

பத்மாவோ தட்டுத் தடுமாறி வெளியில் வந்து பார்த்து அதிர, அவனோ ஷண்முகத்தையும், ரேகாவையும் வீட்டிற்கு வெளியிலேயே தள்ளி விட்டு, வீட்டை விட்டு வெளியில் செல்லச் சொன்னதில் தமிழரசி திகைத்து விட்டாள்.

மேலும் கோபமாக அவன் ஏதோ கூற, அவன் பேசியது யாருக்கும் எதுவும் புரியவில்லை. பின், தமிழரசியிடம், “இந்தக் குடும்பம், இப்போ இங்க இருக்கக் கூடாது. அப்படி அவங்களுக்கு சப்போர்ட்டுக்கு யார் வந்தாலும் அவங்களும் அடுத்த நிமிஷம் வெளிய போகணும்னு சொல்லு!” என்று அவளிடம் சைகையில் உத்தரவிட,

“இன்பா! நான் சொல்றதை கேளுங்க! அவசரப்படாதீங்க! ப்ளீஸ்!” என அவள், அவனை சமன் செய்ய முற்பட, அவனோ கோபம் சிறிதும் அடங்காமல், ஒரு பேப்பரை எடுத்து அவன் நினைத்ததை எழுதி, அவர்கள் முன் காட்டினான் கண்ணில் தீப்பிழம்புடன்.

பிரபாகர், லோகேஷ், பத்மா மூவரும் அதிர்ந்தனர்.

ஷண்முகமோ “என்னையவே வீட்டை விட்டுப் போகச் சொல்றியா?” என கொந்தளித்திருக்க,

“கடைசிவரை இந்த வீட்டுல இருக்குற செங்கலை மட்டும் தான் நீ எண்ண முடியும். உன் வாரிசுக்கும் போகாது, நீயும் எதுவும் அனுபவிக்க முடியாது!” என சாபம் விட்டு, அவரின் மனைவி மகளை கூட்டிச் செல்ல, கனிகா தான் தமிழரசியை பாவமாகப் பார்த்தாள்.

தமிழரசிக்கு சில நொடிகளில் நடந்ததை ஜீரணிக்கவே முடியவில்லை.

லோகேஷோ, 'இப்படி என் வீட்டுல இருக்குறவங்களை வீட்டை விட்டு அனுப்பிட்டீல' என வெறியாய் முறைத்திருக்க, தமிழின்பன் அறைக்குச் சென்று மேலும் கோபம் அடங்காமல், அங்கிருந்த பொருட்களை உடைக்கும் சத்தம் கேட்டது.

'இவன் இப்போ எதுக்கு கோபமா இருக்கான்' என்றே அவளுக்கு புரியவில்லை. 'அவர்கள் பேசியதற்கா? அல்லது...' என்று யோசிக்கவே பயமாக இருக்க, சற்றே நடுங்கிய படி, மேலே பார்த்திருந்தவளை, பத்மா தான் தோளைத் தொட்டு, "போ!" என கண்ணை காட்டினார்.

கிடுகிடு வென கால்கள் ஆட அறைக்கு சென்றவள் அறையே கந்திர கோலமாய் இருப்பதைக் கண்டு,

"இ இ இ இன்பா!" என அழைத்தாள். வெறும் காற்று மட்டுமே வர, உடைந்த பொருட்களைத் தாண்டி தாண்டி உள்ளே சென்றவள், கட்டிலில் மேல், மூச்சு கீழ் மூச்சு வாங்க கோபத்தை அடக்க முடியாமல் அமர்ந்திருந்தவனைக் கண்டு,

"இ இ இன்பா! நிஜமா இங்க யார் வந்தான்னு எனக்குத் தெரியாது! நான் யாரையும் வரச்சொல்லவும் இல்ல!" என்று கூறும் போதே, அவள் குரல் உடைந்திருக்க, எழுந்து அவளை அடிக்க கையை ஓங்கினான் தமிழின்பன்.

அதில் அவள் அரண்டு பார்த்திருக்க, "அறிவிருக்காடி உனக்கு? நான் போய் உன்னைத் தப்பா நினைப்

பேனா? இங்க யார் வேணா வந்துருக்கட்டும். ஆனால், என் அரசி எந்தத் தப்பும் பண்ணிருக்க மாட்டா...! அதெப்படி டி அவங்க உன்னை அப்படிச் சொல்லலாம். உன்னைத் தப்பா பேசிட்டு, அவங்க என் வீட்டுலயே இருக்க நான் அனுமதிக்கணுமா? ஹான்?" என செய் கையிலும், உதட்டசைவிலும் விழி மொழியிலும் அவ னின் கோபத்தையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி யவன் தலையை அழுந்தக் கோதி விட்டு,

"எந்த சூழ்நிலையும் நம்மளை விட்டுக் கொடுக் காத உறவு கிடைக்கிறது வரம். அப்படி ஒரு உறவா நீ கிடைச்சும் உன்னை எப்படி டி நான் விட்டுக் கொடுப் பேன்?" என அழுத்தத்துடன் சைகை செய்து,

"லூசு கருவாச்சி!" என அவள் தலையை இழுத்து, உச்சந்தலையில் மென்மையாக இதழ் ஒற்றி விட்டு பால் கனிக்கு சென்று நின்றவனின் முத்தம் ஒரு சிறு குழந் தைக்கு கொடுத்த முத்தமாகவே இருக்க, அவனின் சைகை வார்த்தையிலும் செயலிலும் தமிழரசி தான் வியந்து உறைந்து நின்றாள்.

# அத்தியாயம் - 15

15 தமிழின்பன் பேசிச் சென்றதில் உறைந்திருந்த அரசிக்கு, அவனின் நம்பிக்கை பெரும் ஆச்சர்யத்தையும், கூடவே மனம் நிறைய மகிழ்ச்சியையும் கொடுக்க, அவனருகில் சென்றவள், பேசத் தயங்கியபடி நிற்க, அவன் அவளைத் திரும்பிப் பாராமல் தமிழரசி கையில் வைத்திருந்த போனை, கொடுக்கச் சொல்லி கையை நீட்டினான்.

அதன் பிறகே, இன்னும் கனிகாவின் போன் தன் கையில் இருப்பதை உணர்ந்தவள், அதனை பின்னால் மறைத்து, “அது...அது... இன்பா” என்று திணற,

அவளை கண்ணைச் சுருக்கிப் பார்த்தவன் “குடு...” என்றான் அழுத்தமாக.

“இல்ல. இன்பா அது என் போன் தான்... வந்து...” என்று சமாளிக்கத் தெரியாமல் உளறியவளைக் கண்டு,

“இங்க யார் யார் என்ன என்ன பண்றான்னு, எனக்கு நல்லாத் தெரியும். ரெண்டு வருசத்துக்கு முன்னாடியே, அவன் கனிகா பின்னாடி சுத்துனான். நான் தான் அவனை அவளை நெருங்க விடாமல்

தடுத்து வச்சிருந்தேன். ஆனால் எனக்கு ஆக்சிடென்ட் ஆனதுல இருந்து, யாரையும் நான் கண்டுக்குறது இல்ல. அக்கறை எடுத்துக்குறதும் இல்ல. இப்போ இங்க என்ன நடந்ததுருக்கும்னு நான் கெஸ் பண்ணிட்டேன். கொடு...” என்று நிறுத்தி நிதானமாக உதட்டசைக்க, அரசி வியந்து பார்த்தாள்.

“வேணாம் இன்பா... அவன் பேர் நவீன் போல. என்ன வேலை பார்த்து வச்சிருக்கான்...” என்று பல் லைக் கடிக்க,

அவனோ கையை நீட்டிய படி இருந்தான். “ப்ச்! அதான் என்ன நடந்துருக்கும்னு கெஸ் பண்ணிட்டீங் கல்ல...? அப்புறம் எதுக்கு இது? நீங்க ஒன்னும் பார்க்க வேணாம்...” என்று முணுமுணுத்திட,

அவளை முறைத்தவன், போனை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு வெளியேறப் போனான்.

ஆனால் அவன் உடைத்த பொருளின் முனை ஒன்று, அவன் காலைப் பதம் பார்த்திட, “ஸ்ஸ்ஸ்!” என காலைப் பிடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தவ னைக் கண்டு பதறி, தமிழரசி வேகமாக அருகில் வந்து,

“என்ன ஆச்சு இன்பா?” எனக் கேட்டாள்.

“ம்ம்ஹூம்...” என தலையை மட்டும் ஆட்டியவன், உள்ளங்காலில் குத்தி இருந்த கண்ணாடித் துண்டை எடுக்க முயன்றிட,

“அச்சோ! என்ன இப்படி குத்திருக்கு. இருங்க இருங்க நீங்க கை வைக்காதீங்க. நான் எடுக்குறேன்.” என அவசரமாக, முதலுதவிப் பேட்டி ஒன்றை எடுத்து

வந்து, கண்ணாடியை எடுத்து விட்டு, அவன் காயத் துக்கு மருந்திட,

அவன் "ம்ம்ஹும்..." என முனங்கி, "நான் பார்த்துக் கிறேன்" என்று சைகை செய்தான்.

அவள் அதனைக் கண்டு கொள்ளாது, "சும்மா இருங்க! கண்டபடி கோபப்பட்டு, அத்தனையையும் போட்டு உடைக்க வேண்டியது... அப்புறம் கால்ல குத் தாம என்ன பண்ணும். இருந்தாலும் உங்களுக்கு இவ்ளோ கோபம் வரக்கூடாது இன்பா!" என விழிகளை உருட்டி அவனை அதட்டியவள், புருவம் சுருக்கி காலில் கட்டிட,

இன்பாவோ "ஸ்ஸ்ஸ்!" என்று வலியில் பல்லைக் கடித்தான்.

"நல்லா வலிக்கட்டும்..." என வாய்க்குள்ளேயே அவனை திட்டி விட்டு,

"எங்கயும் நகராதீங்க. நான் க்ளீன் பண்ணதுக்கு அப்புறம் எந்திரிங்க... சரியா?" என்று கடுகடுப்புடன் கட் டளை இட்டவள், "எவ்ளோ பெருசா கண்ணாடி குத் திருக்கு. இது தேவையா? கண்ணு மண்ணு தெரியாம அப்படி என்ன கோபம் வேண்டிக் கிடக்கு! கடைசியில நமக்கு தான் எல்லா வலியும்..." என்றவளுக்கு அவனின் ரத்தத்தை கண்டதும் ஆற்றாமை தாங்கவில்லை.

அவன் காது படவே, அறையை சுத்தம் செய் யும் வரை அவனைத் திட்டித் தீர்த்திட, இன்பா தான் அவளின் அக்கறையிலும், கோபத்திலும், தன் கோபம் மட்டுப் பட்டு, குறும்பாக அவளைச் சொடுக்கிட்டு அழைத்து,

“இப்போ காதுலையும் ரத்தம் வருது கருவாச்சி!” என்று சைகை செய்து காட்டியதில், அவள் தீயாக முறைத்தாள்.

அவனோ, அவளை புன்னகைத்தபடி பார்த்து கொண்டு எழ, “ப்ச், இப்போ எங்க போறீங்க நீங்க? கால்ல தான் அடிப்பட்டுருக்குல்ல... எதுவா இருந்தாலும் நாளைக்கு பார்த்துக்கலாம். இப்போ ரெஸ்ட் எடுங்க!” என்று சற்று கோபத்துடனே கூற,

அவளை ஒரு நொடி அமைதியாகப் பார்த்தவன், “கால் உடைஞ்சு, நடக்க முடியாம இருந்தப்பவே, உடம்புல இருந்த வலிய விட மனசுல இருந்த வலியில ரெஸ்ட் எடுக்க முடியல. கேவலம் ஒரு கண்ணாடி குத்துனதுக்கு நான் ரெஸ்ட் எடுக்கணுமா கருவாச்சி? அதோட இப்போ உடம்புல வலி இருந்தாலும் மனசுல இல்ல எழுத்தா ளரே! நான் பார்த்துக்கிறேன்.” என்று குறுஞ்செய்தி ஒன் றைத் தட்டி விட்டு, அவளைப் பாராமல் அவன் வெளி யேறிட,

அதனைக் கண்டவளுக்குத்தான் முணுக்கென தோன்றிய ஒரு துளி நீரில், சிறிதாய் புன்னகையும் மலர்ந் தது.

இரவு வெகு நேரம் கழித்தே தமிழின்பன் வர, “என்ன ஆச்சு இன்பா?” என்று பதற்றமாகக் கேட்டாள் தமிழரசி.

“பிரச்சனை முடிஞ்சுது. அவன் இனிமே அவள் வழிக்கு வரமாட்டான். வீடியோஸ் எல்லாம் டெலிட் பண் ணியாச்சு” என்று கனிகாவின் போனை, அவளிடம் கொடுத்தவனை விழி விரித்துப் பார்த்தவள்,

"எப்படி இன்பா?" என கேட்டவளிடம், தோள் குலுக்கலையே பதிலாகத் தந்தான்.

"இன்பா... அதான் பிரச்சனை முடிஞ்சுதே, உங்க பெரியப்பாவ..." என்று ஆரம்பிக்க,

"ப்ச்! தலைவலிக்குது நான் தூங்க போறேன். நீயும் தூங்குறியா? இல்ல கொட்ட கொட்ட முழிச்சுருக்கப் போறியா?" என உறுத்து விழித்தவன், படுத்ததும் உறங் கியே விட்டான்.

அடுத்த நாள், இருவரும் அலுவலகம் கிளம்பிட, இன்பா காரை எடுக்கச் சென்றதும், பின்னால் வந்த அர சியை வழி மறித்தான் லோகேஷ்.

ஆனால் அவன் பேசும் முன் "இரு இரு இரு! என்ன பன்ச் டயலாக் பேசப்போறியா? நேத்து உன் பெரி யப்பா, இப்படி பேசி தான் அடுத்த நிமிஷம் வெளிய போனாரு. சாருக்கு எப்படி வசதி!" என நக்கலாகக் கேட்டவள், "இங்க பாரு லோகேஷ்..." என்று விளக்கம் கொடுக்க வர,

அவன் அதனை காதில் வாங்காது, "இன்னும் எத் தனை நாளைக்கு நீ இங்க இருக்கன்னு நானும் பார்க்கு றேண்டி..." என்றான் கோபமாக.

"ஊஃப்... உன்னைத் திருத்த முடியாது! அப்போ நானும் உன் கல்யாணத்தை நிறுத்துறத யாராலயும் தடுக்க முடியாது கொழுந்தனாரே!" என்றாள் எகத்தாள மாக.

அன்றும் தோட்டத்தில், அவள் இதே சவாலை விட்டதில் தான் அவன் வெறியானான். இப்போதும் இத

னைக் கேட்டதும், "ஏய், உன்னால ஒரு டேஷும் பண்ண முடியாது. அதுக்குள்ள நீ இங்க இருக்கவே மாட்ட!" என்று கர்ஜிக்க,

அவளோ "அட! நான் இங்க இருந்தாலும், இல்லைனாலும் உன் கல்யாணம் நடக்காது கொழுந்தனாரே! நாங்கல்லாம் சவால் விட்டுட்டு செய்றவங்க இல்ல. செஞ்சுட்டு சவால் விடுறவங்க..." என்று பின்னப்பட்டிருந்த சடையை எடுத்து முன்னால் போட்டவள், "ஆல் தி பெஸ்ட்டு கொழுந்த்ஸ்..." என்று பல்லைக் காட்டி இளித்த படி, அவனுக்கு விடை கொடுக்க, அவனுக்குத் தான் சுறுசுறுவென இருந்தது.

அதற்குள் பல முறை இன்பா ஹார்ன் அடித்து விட, "வந்துட்டேன் வந்துட்டேன்!" என்றவாறு காரில் அமர்ந்தவளை,

"அவன் கிட்ட என்ன பேசிட்டு இருந்த?" என்றபடி முறைத்தான்.

"எனக்கும், என் கொழுந்தனாருக்கும் ஆயிரம் இருக்கும். குறைஞ்சது ஐநூறாவது இருக்கும். இதெல்லாம் போய் கேட்டுக்கிட்டு, சீக்கிரம் போங்க இன்பா!" என்று ஜன்னல் புறம் திரும்பி அமர்ந்து, 'இவனுக்கு எல்லா பக்கமும் கண்ணு இருக்கு போல! எது பண்ணாலும் கண்டுபுடுச்சுடுறான்!' என தனக்குள் புலம்பிக் கொண்டு வந்தாள்.

காரை ஓட்டியபடிய அவள் தலையில் நறுக்கெனக் கொட்டியவன், "சீட் பெல்ட் போடு கருவாச்சி!" என கையசைக்க,

“எங்களுக்கு தெரியும்!” என்றவள், சடவாய் அவன் சொன்னதைச் செய்ய, அவன் நேராக அவளைக் கல்லூரியில் விட்டு விட்டு, ப்ராக்டிகல்ஸ் முடிந்ததும் அலுவலகம் வரச் சொன்னான்.

அங்கு சென்றதும், சந்தனாவிடம் அவள் நடந்ததை நயனத்துடன் கூறிக்கொண்டிருக்க, எப்போதும் போல் அவளும் புத்தகத்தில் விழியை பதித்து விட்டு, கேட்டுக் கொண்டிருந்தாள் எதுவும் பேசாமல்.

“என்னடி நான் பேசிக்கிட்டே இருக்கேன், நீ அமைதியா இருக்க?” என புத்தகத்தைப் பிடுங்கிட,

சந்தனா பதில் பேசும் முன், தமிழரசியின் அருகில் நிழலாடியது.

அங்கு கனிகா தான் நின்றிருந்தாள். அன்றைய காலைப் பொழுதே, தமிழின்பன் நவீனை அடித்து பிரித்து மேய்ந்து, அவனின் ரோமியோ தனத்தை கேஸாக பைல் செய்து, ஜெயிலில் போட்டிருந்ததை அறிந்தவள், முந்தைய நாள் தமிழரசி அவளை காப்பாற்றியதிலும், தான் என்ன உணர்கிறோம் என்று புரியாது, கலங்கிப் போயிருந்தாள்.

ஏதோ ஒரு குற்ற உணர்வு, அவளை ஆட்டிப் படைக்க, அவளின் அண்ணனைக் காண வேண்டும் போல் இருந்ததில், இறுதியில் அதற்கு தைரியமற்று தமிழரசியைக் காண வந்தாள்.

அவளை திமிராகப் பார்த்த தமிழரசி, “என்ன மேடம் இந்த பக்கம்? ஓ காலேஜ் தேடி வந்து என்னை பழி வாங்க வந்தியா” என நக்கலாக கேட்க,

கனிகா, திணறிய படி "இல் இல்ல... தேங்க்ஸ் சொல்ல தான் வந்தேன்" என்றாள் மெல்லிய குரலில்.

"பாருடா! தேங்க்ஸ் ஆ? இது என்ன உங்க குடும் பத்துக்கு புது வார்த்தையா இருக்கு. அது எல்லாம் இருக்கட்டும். அந்த நவீனை, நீ லவ் பண்ணியா என்ன?" எனக் கேட்டாள் யோசனையுடன்.

அவளைப் பாராமல் கனிகா "ம்ம்" என தலை யாட்ட,

"ஹோ! பார்க்க பையன் வாட்ட சாட்டமா நல்லா தான் இருந்தான். ஆனால் பாரேன். தன்னை நம்பிக் காதலிச்ச பொண்ணை, தனியா கூட்டிட்டு போய் உரசி வீடியோ எடுத்து, அதை அவளுக்கே போட்டுக் காட்டு றவனை ஆம்பளைன்னு ஒத்துக்குற. ஆனால், கட்டுன பொண்டாட்டியைக் கூட தப்பா ஒரு பார்வை பார்க்காத, உன் அண்ணனுக்கு மட்டும்..." என்று ஆரம்பித்து,

"சாரி சாரி, என் புருஷன், என்னை இல்ல, எந்த பொண்ணையும் கண்ணை தாண்டி பார்த்துப் பேச மாட் டாரு. சோ அவரு ஆம்பளை தான். அப்போ, நீ லவ் பண்ண பையன் தான் இம்போடென்ட்டா கனிகா?" என பாவமாகக் கேட்டவள்,

"ஒரு ஆண்மை தன்மை இல்லாதவனையா நீ காதலிச்ச?" என்று கேள்வியைத் தொடுத்து அவள் முன் நிறுத்த. இதனை அதிர்ந்து கேட்டவளுக்குத் தான், வார்த்தையின் வீரியம் உணர, திக்கற்று அவளையே பார்த்திருந்தாள்.

தமிழரசி அவள் பேகில் வைத்திருந்த கனிகாவின் போனை எடுத்து, அவள் கையில் திணித்து, "இது உன்

போன் தான். எடுத்துட்டுப் போ!" என்றவள் அவளின் பதிலை எதிர்பாராமல் அவளை தாண்டிச் சென்றிட, அவள் பின்னே வந்த சந்தனா தான், தமிழரசியை ஓரக் கண்ணில் பார்த்த படி,

"இன்பா அண்ணா, செம்மல்ல தமிழு" என்று கேலிக்குரலில் கேட்டாள்.

அதனை உணராதவள், "ப்ச் நீ வேற சந்து. அவரு அவரோட அம்மாவுக்கு யாரையும் வீட்டை விட்டு அனுப்ப மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணிருந்தாரு. இப்போ என்னால ஒரு பிரச்சனை வந்துடுச்சேன்னு தான், வருத்தமா இருக்கு. அதோட, நேத்து நைட் முழுக்க இந்த வேலையில தான் இருந்துருப்பாரு போல, சரியா தூங்கக் கூட இல்ல தெரியுமா?" என முகத்தை உம்மென வைத்துக் கொண்டு கூற,

சந்தனா தான், "ம்ம்ம்! அதான் சொன்னேன் இன்பா, அண்ணா செம்மன்னு... நீயே பாரேன் தமிழு, அவங்க அம்மா சொன்னாங்கன்னு, அந்த அண்ணா வுக்கு அவ்ளோ பிரச்சனை கொடுத்து மனசை கஷ்டப்ப டுத்தியும் கூட இன்பா அண்ணா அவங்க மேல கோபப் பட்டு வெளிய அனுப்பல. ஆனால், உன்னை ஒரு வார்த்தை சொன்னதும், அம்மாவோட சத்தியத்தை கூட பெருசா நினைக்காம இவ்ளோ பெரிய விஷயம் பண் ணிருக்காரு. அப்போ அவருக்கு உன் மேல எவ்ளோ... லவ்..." என ஆரம்பித்தவள் சட்டென, "எவ்ளோ... பாசம், அன்பு.. இல்ல... தமிழு..." என தமிழரசி மற்றவர்களிடம் பேசிய நக்கல் குரலிலேயே ஏற்ற இறக்கத்துடன் பேசி, தன் தோழியின் காதலை உணர வைக்க முயன்ற சந் தனா, முன்னேறி நடக்க, பிரேக் அடித்தது போல், அதே இடத்தில் சடாரென திகைத்த படி நின்றாள் தமிழரசி.

ஏதேதோ குழப்பம் அவள் மூளைக்குள் ஓடி, அவளை அலைக்கழிக்க, அன்று அவர்கள் செய்ய போகும் கட்டுமான பணியின் முதல் திட்டமிடல் மீட்டிங் இருந்ததில், கல்லூரி முடிந்து அலுவலகத்திற்குள் நுழைந்த தமிழரசிக்கு அதிர்ச்சியாக, அந்த ப்ராஜக்ட் அவனிடம் இருந்து வேறொருவருக்கு கை மாறி விட்டது என்ற தகவலே வர, அதிர்ந்து விட்டாள்.

தமிழின்பனுக்கும் அது அதிர்ச்சியாக இருந்தாலும் அது அவன் எதிர்ப்பார்த்த ஒன்றே! "இன்பா நிஜமாவே ப்ராஜக்ட் நமக்கு இல்லையா?" என கலங்கிய குரலில் உதட்டை பிதுக்கிக் கேட்டவளை, பாவமாகப் பார்த்தவன்,

"ம்ம்" என்றிட,

"எப்படி ஆச்சு? அவங்க தான ஓகே சொன்னாங்க" என்று சிறுகுழந்தை போல் சிணுங்கியவளைக் கண்டவன்,

"நான் தான் சொன்னேன்ல. நம்ம ப்ராஜக்ட் எடுத்தா கூட நம்மள பண்ண விட மாட்டாங்கன்னு. ஒன்ஸ் சேர்மன் பதவி போனதுன்னா, போனது தான் அரசிம்மா... திரும்ப அந்த இடத்துக்கு வர்றது ரொம்ப கஷ்டம். அதுக்கு யாரும் விடமாட்டாங்க" என்று பொறுமையாய் அவளை சமன் படுத்தியவனை,

"போங்க இன்பா! அந்த சுஹானாவுக்கு தான் இந்த பிசினெஸ் பத்தி ஒன்னும் தெரியாதுல. அவளே இவ்ளோ பண்றான்னா. நீங்க பண்ண முடியாதா?" என்றாள் விழி நிறைய நீருடன்.

"அவள் அப்பா தான், அவளுக்கு கீ குடுக்குறா ருடி! இது இல்லைன்னா என்ன, நம்ம வேற ட்ரை பண் ணலாம்... ம்ம்? இதுக்குலாம் போய் அழுதுகிட்டு, என் கருவாச்சி வர வர அழு மூஞ்சியாவே மாறிட்டா...! எங்க என் எழுத்தாளர் பிரின்ஸ் ஆப் ஹெவனைக் காணோம் அரசிம்மா...?" என இரு புருவத்தையும் உயர்த்தி வினவி யவன், அவள் தலையை பிடித்து ஆட்டினான்.

"ச்சு!ச்சு! ரொம்ப தான் அழகா இருக்கு, உங்க ஊமை பாஷை!" என பின்னால் நின்று பாவப்படுவது போல் பேசிய சுஹானா, நக்கலாக இருவரையும் பார்த்து,

"நான் தான் சொன்னேன்ல. இதெல்லாம் ஒன் னும் இல்லாம ஆக்கிடுவேன்னு. மிஸ்டர் தமிழ். உங்க ப்ராஜக்ட் கனவை எல்லாம் தூரப் போட்டுட்டு, ஷேர் ஹோல்டரா இருக்குறதுன்னா இங்க இருங்க. இல்ல உங்க ஷேரையும் வித்துட்டு உங்க மிஸ்ஸஸ் தமிழைக் கூட்டிட்டு வெளிய போய்டுங்க. இன்னொரு தடவை இவள் ஆஃபீஸ்க்கு வந்தா, அப்புறம் சேதாரம் இன்னும் அதிகமாவே இருக்கும்." என வார்த்தையில் கோபத்தை கக்கியவளுக்கு, இருவரையும் ஒன்றாகப் பார்க்கவே பிடிக்கவில்லை.

அவளுள் எழுந்த பொறாமைத் தீயில் எந்த எல் லைக்கும் செல்வேன் என்ற ரீதியில் அவள் இருக்க, அதற்கு அச்சாரமாய் தன் சேர்மன் கனவை, அவளை வைத்து அவளின் தந்தை தீர்த்துக் கொள்வதை, அவள் அறியவில்லை.

இங்கு தமிழரசியோ இப்படி செய்து விட்டாளே என அழுவது போல் முகத்தை வைத்துக் கொண்டு,

“ஏன் செய்கூலி சேதாரம் போட்டு நகை விக்கப் போறியா... போடி லூசு! வந்து மொக்கை தனமா டயலாக் பேசுது... இன்பா எனக்கு அந்த ப்ராஜக்ட் வேணும்...” என்று கண்ணைக் கசக்கிட,

“அதென்ன சாக்லேட்டா டி...?” என்று தலையில் அடித்தவன், “கருவாச்சி!” என ஒரு முறை முறைத்திட,

‘போயா! நிம்மதியா பீல் பண்ணக் கூட விட மாட்டு றான்’ என்று அழுகையை அடக்கிக்கொண்டு அமர்ந்தி ருந்தாள்.

அவள் முகத்தில் என்ன கண்டானோ, “கொஞ்ச நேரம் அமைதியா இருடி அரசி!” என்று அவள் உச்சந் தலையில் முத்தமிட்டவன், அவளை அமைதிப்படுத்த முற்பட,

சுஹானா தான் அதில் திகைத்து, “தமிழ்” என அதட்டலாக அழைத்தாள்.

சட்டென எழுந்தவன் அவளை அடிக்க கையை ஓங்கி விட்டு, ஒரு விரலை நீட்டி தீப்பார்வையுடன் எச்ச ரித்தவன், வாசலை நோக்கி கையைக் காட்ட, அவளோ “அதெப்படி ஒண்ணுமே முடியாதுன்னாலும், அவளை கொஞ்சிக்கிட்டே இருக்க? வெளியில நீ கொஞ் சுற... வீட்டுக்குள்ள போனதும் எவனை வரச்சொல்லுவ? நேத்து அவள் ரூமுக்கு எவனையோ கூட்டிட்டு வந்த மாதிரி!” என்று பேசி முடிக்கும் முன், அவனின் ஐந்து விரல்களும் சுஹானாவின் மேல் பதிந்திருந்தது. அங்கு முந்தைய நாள் நடந்ததை அவள் ஷண்முகம் தயவில் அறிந்தே இருந்தாள்.

அவள் கன்னத்தில் அவன் கைத்தடம் பதிந்து இருக்க, அவள் பேசியதெல்லாம் தமிழரசிக்கு பெரியதாகத் தெரியவில்லை. ஆனால்,

'அடிப்பாதகத்தி இப்போ தான் அவனை மலை இறக்கினேன். இப்போ இவன் எதை எதை போட்டு உடைக்கப் போறானோ! இதை வேற, நான் தான் க்ளீன் பண்ணனுமா?' என தலையில் கை வைத்து அமர்ந்து விட,

சுஹானா தன் முன்னால் கோபக்கனலுடன் நின்றிருந்த தமிழின்பனை அதே கனலுடன் முறைத்து,

"அன்னைக்கு உன் குழந்தைக்காக என்னை அடிச்ச! இன்னைக்கு எவளோ ஒருத்திக்காக, என்னை அடிச்சுட்டல... உன் குழந்தையை அழிச்ச மாதிரி! அவளையும் அழிக்கிறேனா இல்லையான்னு பாரு..." என்று தலைக்கு ஏறிய கோபத்தில் கண்டபடி உளறியவளை, மீண்டும் சுள்ளென ஒரு அடி அடித்தவன், போனில் வேகமாக டைப் செய்தான்.

"அவள் யாரோ இல்ல! என் குழந்தை அவள்! என் உயிருல கலந்த குழந்தையை இழந்த மாதிரி, என் உணர்வோடு கலந்த இந்தக் குழந்தைக்கு, நான் எதுவும் ஆக விட மாட்டேன். அப்படி ஏதாவது பண்ணனும்னு நினைச்ச... உன்னை குடும்பத்தோட வச்சு எரிச்சுருவேன்..." என்று டைப் செய்து, அவளிடம் கண்ணை சுருக்கி, பார்வையிலேயே எரித்த படி காட்ட,

அதனைக் கண்டு சுஹானா மேலும் விழி தெறிக்க முறைத்தாள்.

அந்நேரம், மேனேஜர் வந்து கூறிய விஷயத்தில் அவள் கோபமோ இன்னும் அதிகமாகியது. அவர் கூறியது இதைத் தான். தமிழின்பனுக்கு ப்ராஜக்ட் கொடுத்த ஓனர், தமிழின்பனைத் தவிர, வேறு யாருக்கும் இதனை கொடுக்க முடியாது என்றும், அப்படி வேறொருவருக்கு நிறுவனம் கை மாற்றினால், தான் இந்நிறுவனத்திற்கு கொடுத்த அனைத்து ப்ராஜக்டையும் கென்செல் செய்து விடுவேன் என்று கூறி இருந்தவர், ஏற்கனவே அவனைப் பற்றி விசாரித்து, அவனின் வேலைத் திறனையும் அறிந்து இருந்தார்.

தான் செய்யும் கடின உழைப்பும், வேலையில் காட்டிய நேர்மையும், அர்ப்பணிப்பும் என்றாவது ஒரு நாள் இம்மாதிரி கை கொடுக்குமோ என்று உணர்ந்த தமிழின்பன் தான், சுஹானாவை வெற்றிப் பார்வை பார்க்க, அவள் வெளியில் விருட்டெனச் சென்றிருந்தாள்.

"கருவாச்சி" என அவன் தமிழரசியின் முன் புன்னகை முகத்துடன் திரும்ப, அவள் கண்ணில் வழிந்த நீருடன் தமிழின்பனையே பார்த்துக் கொண்டிருப்பதை கண்டு, சற்று தடுமாறியவன்,

"ஹே! ப்ராஜக்ட் ஓகே ஆகிடுச்சு எழுத்தாளரே!" என முயன்று வரவழைத்த புன்னகையுடன் சைகை புரிய,

அவளோ கமறிய குரலில் "இன்பா! பேபி இல்லைன்னு சொன்னீங்க. அவள் அழிச்சுட்டேன்னு சொல்றா? இதுல எது உண்மை இன்பா?" என்று கேட்டவளுக்கு மனம் ஒரு நிலையில் இல்லாமல், பெரும் வேதனையைக் கொடுத்தது.

அவனோ முகம் இறுகி "நம்ம ப்ராஜக்ட் வேலையை பார்ப்போம், அரசிம்மா... இதை பத்தி அப்பு றம் பேசலாம்!" என்று நகர,

அவனின் கையைப் பிடித்தவள், "இன்னும் என் கிட்ட என்ன மறைக்கிறீங்க இன்பா? உண்மையைச் சொல்லுங்க. என்னதான் நடந்துச்சு?" என்று தேம்பியபடி கேட்க,

"நத்திங் அரசி! எனக்கு டயர்டா இருக்கு. இதை பத்தி பேச! ப்ளீஸ் டா...! இன்னைக்கு உன் பிடிவாதத்தை விட்டுடுடேன்." என்று சோர்வாக அவனின் இருக்கை யில் சென்று அமர, அவனின் சோர்ந்த முகம், அவளுக்கு மேலும் வலியைக் கொடுத்தது.

சில நொடிகளில் தன்னை சரி செய்து கொண்ட வள், "இன்பா எப்படி அவரு ப்ராஜக்ட் ஓகே பண்ணாரு... முதல்ல என்ன பண்ணனும்." என்று இயல்பாகப் பேசிட, அதில் அவனும் சிறிது இயல்பாகி, ஒரு கட்டுமான மாடல் ஒன்றை எடுத்து அதில் ஏதோ விளக்கம் கூற, அவளோ டேபிளுக்கு அடியில், எல்லாம் பார்த்துக் கொண்டிருந் தாள்.

"என்ன பாக்குற?" என்று அவன் பார்க்க,

"இல்ல, கத்தி விஜய் மாதிரி, அடியில பார்த்தா கட் டடம் தெரியுதான்னு பார்க்குறேன் இன்பா" என்று நக்க லடித்ததில்,

அவளின் முயற்சி புரிந்தவன், சிறு சிரிப்புடன் "ம்ம், கூடவே செங்கல் மண் எல்லாம் தெரியப் போகுதுடி..." என்றான் நக்கலாக.

“ப்ச்! போங்க இன்பா நான் படிக்கிறதோ எம். ஈ கம்பியூட்டர் சைன்ஸ். நீங்க சொல்றதோ கட்டடம் கட்டு றதைப் பத்தி, இதை எக்ஸ்பிளைன் பண்ணாலும் ஒன் னும் புரியாது. நீங்க என்ன பேசணும்னு சொல்லுங்க, அதை மட்டும் பேசுறேன். ஓகே வா!” என்றவளை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்து விட்டு,

“உங்கிட்ட ஒன்னு கேட்கணும்”

“என்ன கேட்கணும் இன்பா?” என பார்க்க,

“நீ ஏன் நேத்து கனிகாவை வீட்டுல சொல்லல. நீ அந்த வீடியோவை காட்டி இருந்தாலே, தேவை இல் லாம உன் மேல இந்த பழி விழுந்துருக்காதுல. அதோட, அவங்க மேல எல்லாம் கோபமாத் தான இருந்த... என்ன திடீர்ன்னு இந்த அன்னை தெரசா அவதாரம்?” என்று கிண்டலுடன் கேட்பது போல், தீவிரமாகவே கேட்டிட, அதற்கு சிறு புன்னகை ஒன்றைக் கொடுத்தவள்,

“எனக்கும் முதல்ல எல்லார் மேலயும் கோபம் வந் தது உண்மை தான் இன்பா. எல்லாருக்கும் நல்லா தண் டனை கொடுக்கணும்னு நினைச்சேன் தான். ஆனால், என் அப்பா அம்மாவையே, நான் முதல்ல தப்பா தான் நினைச்சேன். அப்புறம் தான் அவங்க சைடுல ஒரு கார ணம் இருக்கிறதை புரிஞ்சுக்கிட்டேன்.

என்ன காரணம் சொன்னாலும், உங்க வீட்டு ஆளுங்க பண்ணது தப்பு தான். சொல்லப் போனா மன் னிக்க முடியாத தப்பு தான். ஆனால், உங்க அம்மா எல்லாரும் ஒண்ணா இருக்கணும்னு தான ஆசைப்பட் டாங்கன்னு சொன்னீங்க. அதான், அவங்க உங்க வீட்டு ஆளுங்க மேல வச்ச பாசம், எப்படியும் ஒரு துளியாவது அவங்களுக்கு இருக்கும்னு எனக்கு தோணுச்சு.

அதுனால தான், அவங்க பண்ண தப்பை அவங்களுக்கு உணர வைக்கிறேன். எல்லாரும் அதை உணருவாங்களா, இது எந்த அளவு சாத்தியம்னு எனக்குத் தெரியாது. ஆனால், அப்படி அவங்க அவங்க தப்ப உணர்ந்து, அந்த குற்ற உணர்ச்சியில இருந்து வெளிய வரமுடியாம தவிக்கிறதை விட பெரிய தண்டனை கண்டிப்பா இருக்க போறது இல்ல இன்பா. உங்க அத்தை, ஷெண்பாக்கு பண்ணது எல்லாம் என் பிளான் தான். ஆனா கனிகா விஷயத்துல...? எந்த பொண்ணுக்கும் இந்த மாதிரி பிரச்சனை வரக்கூடாதுன்னு நினைப்பேன். அதை எப்படி உங்க தங்கச்சிக்கு நடக்க விடுவேன்...?" என்று கேள்வியாய் வினவி, பேசி முடித்தவளை, கண் கொட்டாமல் பார்த்தவன் லேசாய் கண்களும் கலங்கி விட, அதனை மறைத்துக் கொண்டு, அவள் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளி

"உன் பேருக்கு ஏத்த மாதிரி, நீ பிரின்சஸ் தான் கருவாச்சி!" என்று அழகாய் ஒரு புன்னகையைக் கொடுத்த படி கூறியவன்,

"உனக்கு ஃபேர்ஸ்ட் டாஸ்க் என்ன தெரியுமா?" என வினவினான் குறும்புடன்.

அவளோ, இந்த முறை அவனின் தொடுதலில் தன்னை அறியாமல் சிவந்து விட்டு, அதனை மறைக்க முயன்று "என்ன?" என்று எங்கோ பார்த்து கேட்க,

"ம்ம்! இப்போ தம் கட்டி என்கிட்டே பேசுன டயலாக எல்லாம் இங்கிலீஸ்ல பேசணும்...! அதுவும் பாரீன் ஸ்லாங்ல..." என்றான் அவளை கை கட்டிப் பார்த்தபடி.

அதிர்ந்தவள், "எது? இங்கிலீபீஸா...? யோவ்! இந்த டயலாக்கை திரும்ப தமிழ்ல சொல்லச் சொன்னாலே

வராது. அப்புறம் எப்படி இங்கிலிஷ்ல வரும்" என்று பத றிப் போய் நியாயம் கேட்க,

"அதெல்லாம் எனக்குத் தெரியாது கருவாச்சி, போய் மனப்பாடம் பண்ணிட்டு வா! எத்தனை நாளைக்கு வெளிநாட்டுகாரன் ஸ்லாங் தெரியாம இருப்ப. நீ கொஞ்சம் கொஞ்சமா கத்துக்கிட்டு தான் ஆகணும். போ!" என்று உத்தரவிட,

"போயா! ஹரித்வார் குரங்கு!" என்று அவன் முகத் தின் முன் கை காட்டித் திட்டியவள், இன்பா அடிக்க வந் ததில் ஓடியே விட்டாள்.

வெகு நேரம் அவள் அறைக்குள் வராததால் "எங்க போனா இந்த கருவாச்சி" என தேடிக்கொண்டு அவன் பக்கத்துக்கு அறையில் தேட, அங்கோ அவள் வராத வெளிநாட்டு இங்கிலீஷை வலுக்கட்டாயமாக வரவைத் துக் கொண்டு, அங்கும் இங்கும் தலையைச் சொரிந்த படி நடந்து, நொந்து போனதில் தமிழின்பன் உதட்டை மடித்து அவளின் பாவனைகளையே பார்த்துக் கொண் டிருந்தான். மனத்திலோ,

ஸ்வரமற்ற வீணை தன்னை மீட்டும்

வேடிக்கை அறிகிறேன்...

உன்னால் நான் மீட்டப்படுவதோடு

என்னுள் நான் மீட்கப்படுகிறேன்...

என்னுயிர் அரசியே!

என்ற வார்த்தைகள் அவனறியாது அவனுள் ஓடிட, கருவிழி அவளை விட்டு நகராது அவளிடமே ரசனையுடன் தொடர்ந்தது.

# அத்தியாயம் - 16

தமிழரசியை ரசித்திருந்த தமிழின்பன் அவள் திரும்பி என்னவென்று கேட்டபிறகே சுயநினைவிற்கு வந்து, “படிச்சியா?” எனக் கேட்டான் தலையை ஆட்டி.

அவள் உதட்டை பிதுக்கி, “நான் எக்ஸாம்க்கு கூட இப்படி படிச்சது இல்ல இன்பா! ஒண்ணுமே வரமாட்டேங்குது!” என்றாள் கடுப்பாக, கூடவே என்றும் இல்லாத தமிழின்பனின் நினைவு வேறு, அவளை வேறு எங்கும் கவனத்தை திசை திருப்பவிடவில்லை .

“நான் சொல்லித்தரேன்! குடு!” என்றவன், யூ டியூபில் நிறைய வீடியோவை போட்டுக் காட்டி, அதிலிருந்து சொல்லி கொடுக்க ஆரம்பிக்க, அவள் வீடியோவை விட்டு விட்டு, அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘தனக்காக ஏன் இவன் இவ்வளவு மெனக்கெடுகிறான்? தனக்காக ஏன் இவ்வளவு கோபப்படுகிறான்? தனக்காக ஏன், தான் மாற முயற்சிக்கிறான்? இதை எல்லாம் இவன் செய்யும் போது, தனக்கு ஏன் இத்தனை

நிம்மதி! இத்தனை வியப்பு! இத்தனை பரவசம்! வெறும் நட்பினாலா?

ஆனால், ஏன் என் மனம் இவன் முன் இப்படி ஈர்க்கப் படுகிறது? இரண்டாம் திருமணம் என்ற விஷயத்தையே வெறுத்த எனக்கு, இவன் அவளைக் காதலித்தேன் என்றதிலும், திருமணம் செய்து வாழ்ந்ததைக் கூறும் போது கூட, ஏன் எனக்கு இவன் மேல் ஒரு அருவருப்பு ஏற்பட வில்லை. இவன் மேல் ஏன் தனக்கு இப்படி ஒரு அன்பும்! கா...' என்று தன் போக்கில் சிந்தித்து கொண்டே சென்றவள், சட்டென நினைப்பை நிறுத்திட, அவள் இதயத்துடிப்போ எக்கச்சக்கமாக எகிறியது.

'என்ன? இப்போ நான் என்ன நினைச்சேன்? காதலா? என்னால காதலிக்க முடியுதா? அதுவும் தன்னை காதலிக்கவே இல்லாத ஒருவனை...!' என்று உச்சகட்ட அதிர்ச்சியில் உறைந்திருந்தவள், தமிழின் பன் டேபிளை தட்டும் சத்தம் கேட்ட பின் தான்,

"என் என்ன இன்பா?"

"என்ன கனவு கண்டுக்கிட்டு இருக்க நீ? வீடியோ பாருன்னு சொன்னேன்ல?" என்று புருவத்தைச் சுருக்கி இதழை அசைக்க,

அவளோ 'அவன் இதழைக் காண முடியாது தவித்தாள். எப்போதும் இருக்கும் ஒரு இயல்புத்தன்மை இப்போது தன்னிடம் இல்லையே!' என உள்ளுக்குள் மறுகியவள்,

அவன் என்ன சொன்னான் என்று புரியாது "என்ன சொன்னீங்க?" என மீண்டும் கேட்டதில்,

அவன் "என்னைப் பார்த்தா தான, நான் என்ன சொன்னேன்னு தெரியும்...!" என்று முறைக்க, அவள் தான் வாடிப் போனாள்.

அவனைக் காண முடியாதவாறு ஏதோ ஒன்று அவளைத் தடுத்திட, அவளின் வாடிய முகம் கண்ட தமிழின் பன் தான் பதறி, அவள் கன்னத்தைப் பிடித்து,

"என்ன ஆச்சு அரசிம்மா? உடம்பு சரி இல்லையா? ஏன் டல் ஆகிட்ட!" என்றதில் அவன் தொடுதலில் மெலிதாய் நெளிந்து, மறுப்பாய் அவள் தலையசைத்திட,

'இவ்ளோ நேரம் நல்லா தான இருந்தா' என்று புரியாமல் விழித்தவன், "சரி நீ வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடு. ம்ம்?" என்று டிரைவருடன் அனுப்பி வைக்க, அவள் எதுவும் பேசாமல் கிளம்பிச் சென்றாள்.

போகும் போதே, சந்தனாவை காண வேண்டும் என்று குறுஞ்செய்தி அனுப்பியவள், அருகிலிருக்கும் காபி ஷாப்பிற்கு வரச் சொல்ல, அடுத்த பத்தாவது நிமிடம் சந்தனா அவள் முன் நின்றிருந்தாள்.

ஆனால் தமிழரசி அமைதியுடனே இருந்ததில், சிறிது நேரம் பொறுத்து பார்த்தவள், "தமிழு என்னடி குழப்பம் உனக்கு?" எனக் கேட்டிட,

"நான் குழப்பமா இருக்கேன்னு சொன்னேனா?" என்றாள் நக்கலாக.

"உன் மூஞ்சியே சொல்லுதே, உன் மனச..." என்று அவள் நிறுத்த,

அரசி பதட்டமாக, "என்ன என்ன என் மனச சொல்லுது..." என்று அவசரமாகக் கேட்டாள்.

'முகத்தில் தெரிந்தாலே தமிழின்பன் தான் நினைத்ததை கண்டு பிடித்து விடுவானே, இப்போது இது தெரிந்தால் என்ன நினைப்பானோ' என்று பதறினாள்.

அதில் கமுக்கமாக சிரித்த சந்தனா, "அட நீ குழப்பமா இருக்கன்னு உன் மூஞ்சி சொல்லுதுன்னு சொன்னேன் தமிழு" என்று கேலியாகக் கூற, அதில் தான் நிம்மதி ஆனாள். இப்போது விளையாட்டை கை விட்ட சந்தனா,

"தமிழு! உன் மனசுல என்ன இருக்கோ அதை மறைக்காம சொல்லு. உள்ளேயே வச்சு குழம்பாத! என்னன்னு சொல்லு" என்று அதட்டலுடன் கேட்க,

தமிழரசி தான் தயங்கிய படி, "நான் நான்... எனக்கு இன்பா மேல ஏதோ ஒரு... எனக்கு சொல்லத் தெரியல சந்து. ஆனால் வாழ்க்கை முழுக்க, அவரோட இருக்கணும்னு தோணுது. வெறும் ஃப்ரெண்டா மட்டும் இல்ல. எல்லாமுமா!" என்று தேய்ந்த குரலில் கூறி முடித்தாள்.

"வாவ்! இந்த வார்த்தைக்காகத் தான், நான் இத்தனை நாள் காத்திருந்தேன். சூப்பருடி! இன்னைக்குத் தான் நீ உருப்படியா யோசிச்சுருக்க!" என்று குதூகலிக்க,

"ப்ச், சந்து! எனக்கு ஒரு மாதிரி கில்டியா இருக்கு! இன்பா என்னை அவரோட ஃப்ரெண்டா நினைக்கிறாரு. அதோட, ரொம்பவே அடிபட்டுருக்காரு. இப்போ எப்படி நான்" என்று பேச்சை நிறுத்திட,

"ஏன் தமிழு இப்போ கூட உனக்கு ரெண்டா வது கல்யாணம் பண்ணது உறுத்தலா தான் இருக்கா?" என்று கேட்டிட,

வேகமாக "சே! சே! இல்ல சந்து. என்னைப் பொறுத்தவரை அது அவரோட கடந்த காலம். இப்போ இந்த நிமிஷம் அவரு அவளோட தமிழா இல்ல. என் இன்பாவா இருக்காரு. ரெண்டாவது கல்யாணம்னு அருவருப்பா சொன்னாக் கூட, அந்த முதல் கல்யா ணத்துல எவ்ளோ கஷ்டப்பட்டு, மனசு வேதனைப்பட்டு ஒரு பொண்ணோ, ஒரு பையனோ அதுல இருந்து தப் பிக்க ரெண்டாவதா கல்யாணம் பண்ணிக் கிறாங்கன்னு நினைக்கும் போது, இதை பத்தி நான் ஏன் தப்பா நினைச்சேன்னு தான் தோணுது. அப்படிப் பார்த்தா புரு ஷனை இழந்த பொண்ணுங்க, மனைவியை இழந்த பசங்க, கல்யாணம் பண்ணிக்கிறது இல்லையா. அவங்க மேட் பார் ஈச் அதரா வாழுறது இல்ல. அதே மாதிரி நானும் இன்பாவும் கண்டிப்பா இருப்போம்..." என்று கூறி விட்டு நாக்கைக் கடித்தாள் சிறிது வெட்கத்துடன்.

"அது சரி, குழப்பமா இருக்குன்னு என்னை கூப் பிட்டுட்டு நீ தெளிவா எனக்கு விளக்கம் கொடுத் துட்டு இருக்க?" என்று கிண்டலுடனும், தன் தோழியின் புரிதலில் மகிழ்வுடனும் சந்தனா அவளை கேலியாகப் பார்க்க,

"தெரியல டி... ஆனால் ஒரு மாதிரி நெர்வஸா இருக்கு. அவரைப் பார்த்துக் கூட பேச முடியல, தெரி யுமா? ஏதோ ஒரு மாதிரி இருக்கு. இப்படித் தான் இருக் குமா சந்து?" என பாவமாகக் கேட்டவளை, கொலை வெறியுடன் பார்த்த சந்தனா,

“அடியேய் நீயாவது கல்யாணம் பண்ணிட்ட. நான் லாம் முரட்டு சிங்கிளா சுத்திட்டு இருக்கேன். என்கிட்ட வந்து இதை பத்தி டவுட் கேட்குறியே? யாருக்கு தெரியும். லவ் பண்ணா இப்படி தான் இருக்கும் போல...” என்றாள் தீவிர யோசனையுடன்.

“ப்ச்! போடி! இப்ப நான் என்ன பண்றது...? எப்படி ஹாண்டில் பண்ணன்னே தெரியலையே?” என்று முகத் தைச் சுருக்க,

அதில் விளையாட்டை விட்ட சந்தனா, “இங்க பாரு தமிழு! நீ ஏன் கன்பியூஸ் ஆகுற? நீ, நீயா இரு. இதுக்கு முன்னாடியும் நீ அண்ணா மேல அன்பாத் தான இருந்த. இப்போயும் அதே அன்பு, உனக்கு காதலா மாறி இருக்கு அவ்ளோ தான். மத்தபடி நீ கில்டியா பீல் பண் ணவோ, நெர்வஸ் ஆகவோ, இதுல ஒன்னும் இல்ல. அதோட இப்போ அண்ணாவுக்கு தேவை உன் காதல் இல்ல. உன் அன்பு மட்டும் தான். அதை எந்தத் தடை யும் இல்லாமக் குடு. அப்புறம் ஒரு நாள் அண்ணாவும் புரிஞ்சுப்பாங்க. இல்லைன்னா நீ புரியவை. ஆனால், அதுக்குலாம் அவசியம் இல்லைன்னு தான் தோணுது. கண்டிப்பா அண்ணாவும் உன்னை லவ் பண்றாங்க. நான் அடிச்சு சொல்லுவேன்...” என்றதில் வெகு நேரம் அமைதியாய் இருந்த தமிழரசி, சற்று தெளிந்து மறுப்பாய் தலையசைத்தாள்.

“இல்ல சந்து. கண்டிப்பா இல்ல. அவருக்கு நான் எப்பவும் அவர் ஃப்ரெண்டு மட்டும் தான். ஆனால் நான்னா அவருக்கு உயிரு... எனக்கு அதுவே போதும். மத்தபடி அவர் காதல் எனக்கு வேணாம்... இதே மாதிரி எப்பவும் என்கூட இருந்தாலே போதும். இப்போ என்

குழப்பம் தீர்ந்துருச்சு. வா போலாம்." என்று எழுந்திட, அவளை பே வென பார்த்தவள்,

"உண்மையாவே நீ ஓகே யா?" எனக் கேட்டாள்.

அதில் "ம்ம்... ஐ ஆம் ஓகே!" என்றவள் வெளியே றிட,

"அப்போ அண்ணா கிட்ட எப்போ லவ் சொல்லப் போறீங்க மேடம்" எனக் கேட்டாள் குறும்பாக.

அக்கேள்வியில் தமிழரைசியின் கன்னங்கள் சிவப்பு பூசிட, "சீக்கிரமே... அவரு சேர்மன் ஆனதும் சொல்லுவேன்..." என்றவளின் மனதில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடித்திட, புன்னகை முகத்துடன் வீட்டிற்கு வந்தவள், அங்கு இன்பா இருப்பதைக் கண்டு,

"எப்போ வந்தீங்க இன்பா?" என்றாள் விழிகளை உருட்டி.

அவளை முறைத்தவன், "நீ எங்க போன...? ரெஸ்ட் எடுன்னு சொல்லித் தான அனுப்பி விட்டேன்..." என்று பொரிந்ததில்,

"அது... நான் சந்துவை பார்க்க போனேன். அதான்..." என்றதும்,

"ம்ம்!" என்று அமைதி ஆகி விட்டான்.

பின் சிறிது நேரத்தில், போனில் எதையோ தீவிர மாக டைப் செய்து கொண்டிருந்தவனைக் கண்டவள், நமக்கு தான் அனுப்புறாரோ என அவள் போனை எடுத்

துப் பார்க்க, எந்த குறுஞ்செய்தியும் வரவில்லை என்ற தும்,

அவனருகில் சென்று “என்ன இன்பா பண்றீங்க?” என்றாள் போனை எட்டிப் பார்த்து.

அவன் லேசாக அதனை மறைத்து, “நத்திங்! ஃப்ரெண்ட் கிட்ட பேசிட்டு இருக்கேன்.” என்றவன், சற்று தள்ளி நின்றான்.

அதனை அவள் உணராது, “ஓ! யாரு மகத்தா, ஷ்யாமா?” எனக் கேட்க,

“மகத்” என வாயசைத்தான் போனில் இருந்து விழியை எடுக்காமல்.

“ஓ!” என அமைதியானவள்,

“ரொம்பத் தீவிர டிஸ்கஷனோ? என்கிட்ட காட்ட கூடாத அளவுக்கு...” என்று சத்தமாக ஆரம்பித்து முணு முணுப்புடன் முடித்தவளுக்கு,

இதழோரம் புன்னகையைக் கொடுத்தவன், “சும்மா தான்...” என்று கண் சிமிட்டி விட்டு, மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.

அவன் கண் சிமிட்டலில் அவளுக்கு தான் உள்ளுக்குள் ஏதோ செய்திட, ‘ஐயோ!’ என நொந்தவள்,

“ஆமா, உங்களுக்கு ஆக்சிடென்ட் ஆனதும், உங்க ஃப்ரெண்ட்ஸ் வந்தாங்கன்னு சொன்னீங்க. அதுக்கு அப்புறம் அவங்க எப்ப கிளம்புனாங்க. அதுக்கு

அப்புறம் உங்களை பார்க்க வரலையா?" எனக் கேள் வியை அடுக்க, அவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"கொஞ்ச நாள் என்கூட தான் இருந்தாங்க. நான் தான் கிளம்பச் சொன்னேன்." என்றவனை ஏனென்று பார்த்தாள்.

"எத்தனை நான் என்கூட இருக்கச் சொல்ல முடி யும். மகத் அப்போ தான் ரொம்ப கஷ்டப்பட்டு பிஜி படிக்க பாரீன் போயிருந்தான். ஷ்யாமுக்கு அங்க பேமிலி இருந் துச்சு. அதான்..." என்றவன் மீண்டும் போனைப் பார்க்க,

அவன் கன்னத்தைப் பற்றி அவள் முகம் நோக்கித் திருப்பியவள், "பேபிக்கு என்ன ஆச்சு இன்பா?" என மென்மையாய் கேட்க,

அதில் முகம் சுருங்கியவன் "இன்னுமா உனக்கு அந்த மொக்கை பிளாஷ் பேக் வேணும். ஆமா, அந்த கதை என்ன ஆச்சு. முடிச்சுட்டியா?" என்று பேச்சை மாற் றினான்.

"ப்ச்! நீங்க முழுசா சொல்லுங்க அப்போ தான் அந்த கதையை முழுசா முடிப்பேன்..." என்றாள் தலை யைச் சாய்த்து.

"கருவாச்சி! டென்ஷன் பண்ணாத போ!" என்று அவன் அதட்டலைப் போட,

அதில் கண்ணில் நீர் தேங்கியதில், "நீங்க ஒன்னும் சொல்ல வேணாம். உங்க ஃப்ரெண்ட் கிட்டயே பேசுங்க" என்று கோபத்துடன் பால்கனியில் சென்று நின்றாள்.

‘எதுக்காவது அடம்பிடிச்சா விடமாட்டா...! கரு வாச்சி!’ என்று பல்லைக்கடித்துக் வாய்க்குள் திட்டிக் கொண்டவன்,

“உள்ள வா கருவாச்சி!” என குறுஞ்செய்தி அனுப் பிட,

“வரமாட்டேன்” என்றாள் வீம்பாக.

“வெளிய பனியா இருக்கு! உள்ள வரப்போறியா இல்லையா நீ இப்போ?” என கடும் கோபத்துடன் அனுப்பி இருக்க,

அவ்ளோ, அதற்கு பதிலே கூறாமல் அழுத்தமாக அங்கேயே நின்றாள்.

அதில் கோபத்துடன் பால்கனிக்குச் சென்றவன் அவள் கையை பிடித்து உள்ளே இழுக்க, தமிழரசி “ப்ச்! கையை விடுங்க! நான் பாட்டுக்கு இங்க நிக்கிறேன். உங்களுக்கு என்ன வந்துச்சு. அதான் என்கிட்ட எது வும் சொல்ல மாட்டீங்கள்ள... நான் உங்களுக்கு ஃப் ரெண்ட் கூட கிடையாதுல விடுங்க. போய் அந்த மகத், ஷ்யாம் கிட்டயே சொல்லுங்க!” என்றவளுக்கு லேசாக பொஸஸிவ்நெஸ் எட்டிப் பார்க்க, அதில் அவனுக்குத் தான், அவளை அடிப்பதா, கொஞ்சுவதா என்று தெரிய வில்லை.

“கருவாச்சி, என்னைக்கு நீ என்கிட்ட செமத்தியா வாங்கப் போறன்னு தெரியல! உள்ள போடி!” என்று தீப்பார்வையுடன் கையசைக்க, அதில் தன்னிச்சையாக அவளுக்கு கண்ணில் நீர் வழிந்திருந்தது.

மூக்கை உறிஞ்சியபடி அவள் அறைக்குள் சென்றிருக்க, அவளை பாவமாக பார்த்திருந்த தமிழின்பனுக்கு சிறிது நேரத்தில் ஒரு குறுஞ்செய்தி வந்திருந்தது.

காயம் ஆற்றும் காலம்

கண்ணெதிரே இருக்க

கண்களை கட்டிப்போடும்

கண்ணாமூச்சி எதற்கடா ரசிகா?

மனதில் மருந்திடவே

மடி சாய்க்கிறேன்...

மறைவுகளும் நமக்குள்

மடியட்டுமே...!

என்றிழல் ரசிகா!

என்ற அவளின் வரிகளை மீண்டும் மீண்டும் மனதில் அசைப் போட்டவனுக்கு, எழுத்தின் காந்தம் ஈர்க்க, தன்னிச்சையாக அவன் விரல்கள் வடுக்களை தட்டச்சு செய்ய ஆரம்பித்தது.

## பெயரிடப்படாத கதை

## அத்தியாயம் 6

சுஹானாவை காதலித்து மணம் புரிந்திருந்தாலும், அவளிடம் சிறிது எதிர் குணங்களும் இருக்கவே செய்

தது. அவளின் முதல் சறுக்கலே, அவள் தாய், தந்தை எது சொன்னாலும் கேட்பது தான். முதலில் இன்பா விற்கு அது புரியவில்லை. ஆனால், போகப் போக புரிந்து கொண்டான். அவனும் அதனை பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை. பெரியவர்களின் பேச்சைக் கேட்டால் நல்லது தானே என்று எண்ணிக் கொண்டவ னுக்கு, அவளின் தந்தை நல்லதாய் எதுவும் கூற முயல் வதில்லை என்று உணர, அதற்காகவே அவளை அவ ருக்குப் பதிலாய் மீட்டிங்கில் பங்கு பெறாதவாறு செய் தான்.

அதற்கு காரணமும் இருந்தது. ஏனென்றால், கம் பெனியில் அவனின் பங்கு அனைத்தையும், அவனைத் திருமணம் செய்து கொண்டதால், சுஹானாவிற்கு வந்து இருக்கும் என்றும், கூடவே என் பங்கும் அவளுக்கு சேர்ந்து இப்போது அவளை தான் சேர்மன் ஆக நிய மிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, நேசன் போர்ட் மீட்டிங்கில் வைக்க, அதில் கூர்மையாக அவரைப் பார்த் தவன், அதனை உறுதியாக மறுத்து விட்டான்.

வெறும், பணத்தினாலோ, அதிகாரத்தினாலோ அவன் இப்பதவியை பெறவில்லை மாடாக உழைத் திருந்தான். அந்த உழைப்பை தொழிலில் ஈடுபாடே இல்லாதவளுக்கு கொடுத்து, அவளை கை பொம்மை ஆக்க நினைப்பது இவனுக்கு அப்போது தான் புரிந்தது.

இந்த எண்ணத்தில் தான் திருமணம் செய்து கொடுத்தாரா என்றே சற்று வெறுப்பாக உணர்ந்தவன், அதனை சுஹானாவிற்கு புரிய வைக்க முயல,

அவளோ "எங்க அப்பா சொல்றதுல என்ன தப்பு இருக்கு? அவரு ஒன்னும் அவரை சேர்மன் ஆக்

கச் சொல்லலையே? என்னைத் தான ஆக்கச் சொன்னாரு!" என்று அவளின் அப்பாவிற்காக வாதாட,

முதலில் "முட்டாள் தனமா பேசாத சுஹா. உனக்கு பிசினெஸ்ல இன்டெரெஸ்ட் இருந்தாச் சொல்லு. நான் பண்றேன். ஆனா உன் கரியர் இது இல்லாதப்போ எதுக்கு இந்த தேவையில்லாத வேலை. உன் அப்பா அனாவசியமா நாரதர் வேலை பார்க்க நினைக்கிறாரு. அது உனக்கு புரியலையா என்ன?" என்று சற்றே கோபமாகப் பேசி விட்டவனுடன் அவள் மல்லுக்கு நிற்க, அதோடு அவன் வாதாடுவதை விட்டு விட்டான்.

அது கூட அவனுக்கு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. சிறு சிறு வாதங்களுடன் அதனை முடித்து விட்டவனுக்கு, குழந்தையை அழித்து விடுகிறேன் என்று சொன்னது கடுங்கோபத்தைக் கொடுக்க, அதில் அவளை அடித்தது தான் அவனுக்கு வினையாகிப் போனது.

இத்தனை நாள் இருந்தும், அவனுக்கு அவள் குணம் அடிபட்ட பின்பு தான் புரிந்தது. அவளுக்கு அவளைத் தவிர, அவன் எதையாவது முக்கியப்படுத்தி கூறினால், அது அவளுக்கு வெறுப்பை உண்டாக்குகிறது என்றும், அவனின் ஆளுமையும், அவனின் கர்வம் முழுக்க தனக்கே சொந்தம் என்று நினைத்தவளுக்கு, குழந்தை மேலும் வெறுப்பு மூண்டது.

அப்போதைக்கு அவன் கூறியதை கேட்டு மருத்துவ மனைக்குச் சென்றவளுக்கு விபத்தில் அத்தனையும் மாறி விட்டது. அவள் ரசித்த அவனின் ஆளுமை, அவனின் குரல், அவனின் கர்வம், அவனின் கம்பீரம் அனைத்தையும் இழந்து அவன் துவண்டிருக்க, இத்

தனை நாள் இருந்த அந்த ஆதிக்கம், அவன் மேல் இப்போது வர அவளுக்கு மறுத்தது.

கருவுற்றிருந்தும் குழந்தை இல்லை என்று அவனிடம் பொய்யுரைத்தவளுக்கு, அவன் வாய் திறந்து பேசாததும், ஆண்மையற்றவன் என்ற எண்ணமும் வர, ஒரு ஒதுக்கத்தை காண்பிக்க ஆர்மபித்தாள். அதற்கு தூபம் போடுவதற்கு அவளின் தந்தை அவளின் மனதை கரைக்க, அவளின் காதல் காற்றோடு கரைந்திருந்தது.

அவளின் தந்தை பேசும்போது, அவள் அமைதி காத்தது தமிழின்பனுக்கு வெகுவாய் வலிக்க, நண்பர்களுடன் மீண்டும் அறைக்குச் சென்றிருந்தான். மகத்தும், ஷ்யாமும் கோபத்தில் கொந்தளித்து இருக்க,

மகத்தோ "இந்த மனுஷனுக்கு பொண்ணு மாசமா இருக்காளேன்னு எண்ணம் இருக்கா? எப்படி பேசுறான் பாரு?" என்று உரைத்திருக்க, அதில் தமிழின்பனுக்கு மேலும் சுள்ளென இருந்தது.

'என்ன சொல்ற?' என்பது போல் பார்த்த தமிழின்பனிடம் மகத்,

"என்னடா உனக்குத் தெரியாதா? அவள் கன்சீவா இருக்கா? இவ்ளோ பெரிய ஆக்சிடெண்ட்ல, அவளும் குழந்தையும் உயிர் பிழைச்சதே பெருசு..." என்றதில் அவன் மேலும் இறுகிட, அப்போது தான், சுஹானா அவனிடம் பேச வந்தாள்.

ஆனால், 'அவள் சொல்லப் போவது அவனுக்கு முன்னமே அறிந்திருக்க, அவளைப் பேச விடாது வெளியில் அனுப்பி இருந்தான். குழந்தையை மட்டும் எப்ப

டியாவது அவளிடம் இருந்து வாங்க வேண்டும்' என்ற யோசனையோடு.

மகத் தான், "ஏய், என்னடி அவன் போக சொன்னா, நீ போய்டுவியா?" என்று கோபத்தில் கத்தி விட,

"மரியாதையா பேசு மகத்! இப்போ என்னை என்ன பண்ணச் சொல்ற? உன் ஃப்ரெண்ட தாங்கச் சொல் றியா?" என்று கேட்டாள் கடுப்பாக.

இன்பா மகத்திடம், "அவளை போகச் சொல்லு. ஆனால் என் குழந்தை எனக்கு வேணும்..." என அவனி டம் சைகை காட்டிருக்க, மகத் அவளை உறுத்து விழித் தான்.

அவளோ, "நானே வேணாம்னு சொன்னதுக்கு அப்புறம், அந்த குழந்தை உனக்கு எதுக்கு தமிழ்? கேவ லம் அந்த குழந்தைக்காகத் தான என்னை அடிச்ச? நானே உன்னை விட்டுப் போகப் போறேன்! உனக்கு நான் கஷ்டப்பட்டு குழந்தை வேற பெத்துத் தரணுமா? என்ன இருந்தாலும் எனக்கு உன்மேல போஸஸிவ் நெஸ் ஜாஸ்தி தான். இப்ப உன்னை லவ் பண்ணலைன் னாலும் அந்த பொஸஸிவ் நெஸ் மட்டும் என்னை விட் டுப் போக மாட்டேங்குது. சோ, எனக்கு அப்புறம் உன் லைஃப்ல யாருமே வரமுடியாது. நான் கொடுக்கச் முடி யாத ஒரு குழந்தையை, யாருமே கொடுக்க முடியாது. நானும் கொடுக்க மாட்டேன்..." என்றவளை,

ஷ்யாம் "பொண்ணா நீ எல்லாம்...?" என்று பல் லைக் கடித்துக் கேட்டிருக்க,

அவளோ எகத்தாளமாக "நான் பொண்ணு தான் ஷ்யாம்... என் வயித்துல உன் ஃப்ரெண்ட் ஓட குழந்தை

இருந்துமா இப்படிக் கேட்குற? ஆனால், உன் ஃப் ரெண்ட் தான் இப்போ ஆம்பளை இல்லையாம்..." என்று அவனை வார்த்தையால் வதைத்து விட்டுச் சென்றி ருக்க, அவன் மனதோடு இறந்திருந்தான்.

இந்தக் கலவரத்தில் தான், சுஹானாவின் தந்தை அவனின் பெரியப்பா சண்முகத்தை வைத்து, அவனிடம் இருந்து சொத்தை எழுதி வாங்கி, கம்பெனியைத் தன் பொறுப்பில் எடுத்து, சுஹானாவை சேர்மன் ஆக நிய மித்திருக்க, கையெழுத்து இட்டது கூடத் தெரியாமல், அவன் உயிரற்று இருந்தான்.

அதோடு, அவனை விட்டு வந்ததுமே, சுஹானா குழந்தையையும் கலைத்திருந்தாள்.

அவனின் நண்பர்கள் இருவரும், அவனுக்கு ஆறு தல் உரைக்க முயல, அவன் வலுக்கட்டாயமாக அங்கி ருந்து அவர்களைக் கிளப்பி விட்டான். மருத்துவமனை யில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி, அவன் அறைக்கு வந்த வனுக்கு, தான் உயிராய் காதலித்தவளும், தன் விந்தில் உதித்த உயிரும், தற்போது தன்னிடம் இல்லை என்ற நினைவும், எங்கு திரும்பினாலும், தன்னை வதைத்து விட்டுச் சென்றவளின் கடைசி வார்த்தைகளும், அவள் தந்து விட்டுச் சென்ற வலிகளும் அவனைக் கூறு போட, கத்தி அழக்கூட முடியாமல், தொண்டையிலும் அடிபட் டிருக்க, அவள் நினைவு வரும் அனைத்துப் பொருளை யும் அடித்து உடைத்தவனின் கண்கள், மழை நீரைப் பொழிந்து கொடுமையான தனிமையில் தவித்திருந்தது.

கிச்சு கிச் என்றது

கிட்ட வா என்றது

பேச்சு ஏதுமின்றி

பிரியமா என்றது

வானவெளி மண்ணில் நழுவி

விழுந்ததென்ன

திசையெல்லாம் மழையில் கரைந்து

தொலைந்ததென்ன

சிட்டு சிறுகுருவி

பறந்த திசையும் தெரியவில்லை

விட்டுப் பிரிந்துவிட்டேன்

பிரிந்த வேதனை சுமந்திருந்தேன்

.........................................

தமிழரசியைக் கூறி விட்டு, அந்தப் பனியில் அவன் நனைந்திருக்க, மனமோ இன்னும் நெருப்பாகவே எரிந்து கொண்டிருந்தது. இதனைப் படித்த தமிழரசிக்குத் தான் அடக்க இயலாது அழுகை வர, வெறும் யாரோவாக இருந்த போதே, அவனின் வேதனை, அவளைத் தீண்டி தோழியாக்க வைத்தது. இப்போது யாவும் அவனாக ஆகிய பிறகு, தன்னவனின் வேதனை, அவள் உயிர் வரை வலியைக் கொடுத்து விட்டுச் சென்றது.

அதற்கு மேல் அங்கு இருக்க முடியாமல் பால்கனிக்குச் சென்று, அவன் மேல் சாய்ந்து, தேம்பி தேம்பி அழ ஆரம்பித்து விட்டவளை நகர்த்தாமல், அவள்

முடியை வருடி விட்ட தமிழின்பன், அவள் தலை மேல், அவன் தலையைச் சாய்த்து, எங்கோ வெறித்திருந்தான்.

அவள் அழுகையை நிறுத்தாமல் இருக்கவும், மெல்ல விலக்கி, "இது முடிஞ்சு போனது அரசிம்மா. இப்போ தான் என் ஃப்ரெண்ட் நீ இருக்கியே... இப்போ நான் ரொம்ப ஹேப்பி கருவாச்சி..." என்றான் லேசாக முறுவலித்து.

"அவள் போனப்போ கஷ்டமா இருந்துச்சா இன்பா?" என்று அவள் காதலைப் பிரிந்த ரீதியில் கேட்டிட, அதற்கு விரக்தியான இதழ் விரிப்பு ஒன்றைக் கொடுத்தவன்,

அவள் உச்சந்தலையைப் பிடித்து லேசாக ஆட்டி விட்டு, நகரப் போக, அவன் சட்டையைப் பிடித்து இழுத்தவள், "அவள் உங்க மேல ஓவர் பொஸஸிவ் ஆ இருந்து இருக்கான்னு நினைக்கிறேன் இன்பா. ஒரு வேளை அவளுக்கு மனநோயா இருக்குமோ? அதான் அப்படி நடந்துருப்பாளோ?" என்றாள் இதயம் அடைக்க. அப்போதும் அவளைப் பிரிந்து அவன் வேதனைப்படுகிறான் என்றெண்ணி, தன் காதலை மறைத்துக் கொண்டு அவளுக்காக வாதிட முயல, அவளைச் சலனமின்றிப் பார்த்தவன்,

அவளுக்கு பக்கவாட்டில் நின்று, அவள் தோளில் தோழமையாய் சாய்ந்து கொண்டு, அவளுக்கு தெரியும் படி போனில் டைப் செய்தான். "ம்ம்... மனநோய் தான். ஆனால், என் மேல இருக்குற காதலினால் இல்ல. வெறும் வெளித் தோற்றத்துனால வந்த ஈர்ப்புனால! ஒருவேளை அவளுக்கு என்மேல காதல் இருந்திருந்தா, அதே பொஸஸிவ் ஓட, நான் உடம்பு சரி

இல்லாமல் இருந்தபோதும், என் கூட இருந்துருப்பா, அவளோட நெகட்டிவ் கூட எனக்கு ப்ளஸ்ஸா தான் தெரிஞ்சுருக்கும். ஆனால், அவள் என்னை மட்டும் இல்லாம, என் பேபியையும் கொன்னு..." என்று டைப் செய்ய முடியாமல் அந்தரத்தில் அவன் விரல்கள் நின்றிருக்க,

அவள் தோளில், அவனின் சூடான கண்ணீரை உணர்ந்தவள், அவனின் கையை, தன் கரங்களுக்குள் பிடித்துக் கொண்டு அழுத்தினாள் ஆறுதலாக.

"இன்பா!" என்று மற்றொரு கையால், அவன் முடியைக் கோதி விட, அவன் அவள் கரங்களில் இருந்த அவனின் விரல்களை எடுத்து விட்டு, மீண்டும் ஒரு கேள்வி கேட்டு டைப் செய்தான்.

"என் பேபிக்கு வலிச்சுருக்குமா கருவாச்சி, எனக்கு மாதிரியே...?" என்ற அவனின் வலி மிகுந்த வார்த்தை, அவளுக்கு கேவலை ஏற்படுத்த, அவனை வலுக்கட்டாயமாக நிமிர்த்தியவள்,

"என்ன இன்பா இது?" என பேச நினைத்திட வார்த்தை தான் வரவில்லை.

தமிழின்பனின் கண்ணில் பளபளத்த கண்ணீர், தமிழரசியைப் பிழிய, அவனின் கன்னத்தைப் பற்றியவள், "நான் ஒன்னு சொல்லட்டா இன்பா?" எனக் கேட்டாள் கேள்வியாக.

அவன் கண்ணை துடைத்த படி, "ம்ம்" என்று முனங்க,

"அப்படி ஒருத்தி கிட்ட, நம்ம குழந்தை பிறக்குற துக்கு பிறக்காமையே இருக்கலாம் இன்பா. உயிர் குடுக் குறதும் எடுக்குறதும் கடவுளோட கையில இருக்கு. அவர் அந்தக் குழந்தை பிறக்க கூடாதுன்னு நினைச்சு ருக்காரு. அதான் அவள் கையாலேயே அழிக்க வைச் சுட்டாரு. இப்போ நம்ம பேபி, நம்ம கிட்ட இருந்தா என்ன ஆகியிருக்கும். நீங்களும் அவளும் பிரிஞ்சு இருந்து ருப்பீங்க. பேபி பாவம் அங்கயும் இங்கயும் அல்லோலப் பட்டுருக்கும். இப்போ, சேஃபா கடவுள் கிட்ட இருக்கு. கொஞ்ச நாள்ல, உங்க கிட்டயே வந்துரும் பாருங்க ளேன்..." என்று சிறு குழந்தைக்கு கதை சொல்வது போல், அவனுக்கு சமாதானம் செய்ய முற்பட, அதில் கீற் றாய் ஒரு புன்னகை தோன்றியது, அவன் இதழில்.

"அது என்ன, பேபியா, இல்ல பேபி கார்னா கரு வாச்சி? உன் கற்பனை சக்திக்கு எல்லையே இல்ல போ!" என்று மனதில் இருந்த பெரும் பாரம் ஒன்று இறங்கிய நிம்மதியில், அவளை வார, தமிழரசி அவனை முறைத்தாள்.

அவனோ, சட்டென கனிந்த கண்களுடன், "ஆனால் நீ சொன்னது உண்மைதான். என் பேபி திரும்பி என்கிட்ட வந்த மாதிரி தான் இருக்கு. நீ என் கூட இருக்கும் போது. மை லிட்டில் பிரின்சஸ்..." என்று சைகை செய்து அவளின் இரு கன்னத்தையும் வலிக் கும் படி கிள்ளியதில்,

"ஸ்ஸ் வலிக்குது இன்பா..." என்று கன்னத்தை தேய்த்தவளுக்கு அவன் கூறியது சிவப்பை வரவழைக்க,

அவன் கண்ணைப் பார்க்க வெட்கி "ரொம்ப குளு ருது... உள்ள போலாம்" என்று அறைக்குள் புகுந்தாள்.

அடுத்த நாள், சீக்கிரமே இருவரும் அலுவலகம் புகுந்து, ப்ராஜக்ட் வேலையில் பிசியாக,

தமிழரசி "நான் ஆபிஸை சுத்தி பார்த்துட்டு வரவா இன்பா?" எனக் கேட்டாள் தலையை ஆட்டி. அவளை ஒரு மாதிரியாக பார்த்தவன், ம்ம் என்று மீண்டும் மடிக்க ணினியில் புதைய,

"ஐ..." என்று வெளியில் சென்றவள், ஒரு வழியாக சுஹானாவின் அறையைக் கண்டறிந்து, "எக்ஸ்கியூஸ் மீ மேடம்!" என கதவைத் தட்டினாள்.

யாரென்று பார்த்த சுஹானா, அங்கு தமிழரசி நின் றதும், "ஏய்! நீ ஏன் இங்க வந்த?" என்று காட்டமாகக் கேட்க, அவளோ, "அது... வந்து... உன் கிட்ட ஒரு விஷ யம் சொல்லணும்..." என்றாள் நெளிந்த படி.

அவளோ புரியாது என்ன என்று கேட்க, தமிழரசி மேலும் நெளிந்து, "அது... நீ அன்னைக்கு என் இன்பா கிட்ட சொன்னீல, உன் இடத்துல யாரும் வர முடி யாதுன்னு... இப்போ இப்போ... நான் வந்துட்டேனே...!" என்று முகத்தை மூடிக் கொண்டாள் வெட்கமாம்...!

ஒரு கையை மட்டும் எடுத்து ஒரு கண்ணால் சுஹானா காண்டாவதை ரசித்த தமிழரசி, "என்ன சுஹா இதுக்கே கடுப்பானா எப்படி? கொஞ்ச நாள்ல நானும் இன்பாவும் லவ் பண்ணி, வத வதன்னு குழந்தையா பெத்துக்கப் போறோம். அதுக்கு ஆயா வேலைக்கு உன்னை பிக்ஸ் பண்ணலாம்னு இருக்கேன். நீ என்ன சொல்ற...?" என்று நக்கலுடனும் எகத்தாளத்துடனும் கேட்க, இருக்கையை விட்டு எழுந்த சுஹா,

“குழந்தையா? அவனால உன்னை நெருங்கக் கூட முடியாது. எந்த சுகத்தையும்...” என்று ஆரம்பிக்க,

“ஏய் ச்சி... சொன்னதையே சொல்லிக்கிட்டு... அன்னைக்கே தற்காலிகமாக தான், அந்தப் பிரச்சனை இருந்துச்சுன்னு டாக்டரே சொன்னாரு. அப்படியே இப்போ சரி ஆகலைனாக் கூட, என் இன்பாவ சரி பண்ணி, குழந்தை பெத்துப்பேன். அப்படி இல்லைனாலும், பத்து குழந்தையை தத்து கூட எடுப்போம். எப்படியோ... நீ இருக்க வேண்டிய இடத்துல நான் உன்னை விட பல மடங்கு காதலோடயே இருக்கப் போறேன். அதை பார்த்துப் பார்த்து பொறாமையில் பொசுங்கு... நான் போய் என் இன்பாவைப் பாக்குறேன். பை பை...” என்று கோபத்துடன் ஆரம்பித்து, கிண்டலாக அவளை வெறியேற்று விட்டு, தமிழின்பனின் அறைக்குள் சென்றாள்.

அவனோ “எங்க போயிட்டு வர்ற?” என்பது போல் பார்க்க, “உங்க ஆஃபீஸ் கேன்டீன்ல காபி சாப்பிட்டேன். இன்பா! ரொம்ப மொக்கையா இருக்கு...” என்று உதட்டை சுளித்ததில்,

“சுஹானா ரூமை எப்போ கேன்டீனா மாத்துனாங்க எனக்கு தெரியவே இல்ல...” என்று விழிகளை நிமிர்த்தி லேசாய் முறைத்து, சைகை செய்தவனை பேவென பார்த்தவள்,

‘என்ன பண்ணாலும் கண்டிபிடிச்சா அப்புறம் நான் பண்றதுக்கு என்ன மரியாதை’ என்று முணுமுணுத்தபடி, அவனருகில் சென்று அமர்ந்தாள்.

கூடவே, தான் பேசியதும் தெரிந்து இருக்குமோ என்று சிறிது நடுக்கம் வேறு வர, அவன் அவள் சுஹானா

அறைக்குள் சென்ற வரை, சிசிடிவியில் காட்டி இருந் தான். ஆனால் உள்ளே சென்று அவள் என்ன பேசி னாள் என்று தெரியாது. தெரிந்திருந்தால் அவனின் மறு மொழி என்னவாக இருந்திருக்கும் என்பதை அவனே அறிவான்.

பின், இருவரும் கட்டட வேலை நடக்க இருக் கும் இடத்திற்கு செல்வதற்காகக் கிளம்ப, அந்தக் கம் பெனியின் சேர்மன் என்ற ரீதியில் சுஹானாவும் அங்கு வர வேண்டியது இருந்தது. எந்த எந்த இடத்தில் என்ன என்ன மாதிரியான அறைகள் வரும் என்று டேவிட் இடம் வீடியோ காலில் இன்பாவின் உதவியுடன் தமிழரசி பேசி விட்டு வைக்க, கூடவே பூமி பூஜையும் நடைபெற்றது.

அவன் அனைத்தையும் தமிழரசியை விட்டே செய்ய வைக்க,

அவளோ "இன்பா உங்க கன்னத்துல என்ன?" என்று அவனின் கன்னத்தை தடவி விட்டு, தூசி தட்டு வது போல் பாவனை செய்ய,

அவன் புரியாமல் 'என்ன?' என்று பார்த்தான்.

"ஏதோ தூசி போல" என்று புன்னகைத்தவள் ஓரக் கண்ணால் சுஹானாவை பார்க்க, அவள் பல்லைக்க டித்துக் கொண்டு நின்றாள்.

அதோடு, தமிழரசி "ஏன் இப்படி வேகுற வெய் யில்ல கோட்டை வேற போட்டுட்டு நிக்கிறீங்க இன்பா. குடுங்க நான் வச்சுக்குறேன்..." என்று அவன் வேண் டாம் என்றதையும் பொருட்படுத்தாது, கோட்டை கழற்ற உதவி செய்து, அவள் கையில் வைத்துக் கொண்டு

நிற்க, வேலையின் மேல் இருந்த கவனத்தில் இவளின் நடவடிக்கையின் மாற்றத்தை அவன் உணரவில்லை.

உரிமையாய் அவனின் கோட் அவள் கையில் இருக்க, சுஹானா அதற்கு மேல் அங்கு நிற்க இயலாது கிளம்பியே விட்டாள். “கிளம்பு கிளம்பு காத்து வரட்டும்...” என்று உள்ளுக்குள் குத்துப்பாட்டு பாடிக் கொண்டிருந் தவளைக் கண்ட தமிழின்பன், அவள் அருகில் வந்து,

“என்னைச் சொல்லிட்டு நீ எப்படி நிக்கிற பாரு...!” என்று முறைத்து, காற்றில் மிதந்து வந்திருந்த இறகு ஒன்று அவள் முடியில் சிக்கியபடி நிற்பதை எடுத்து விட் டவன்,

“ஒரே தூசியா இருக்கு கருவாச்சி, நீ கார்ல உட்கா ருறீயா?” என்ற பாவனையில் மொழிய, அவன் தொடுத லில் அவள் எப்போதோ தன்னிலை இழந்திருந்தாள்.

கண் மறைவில் காட்டும் காதலோடு!

ஒற்றை தொடுதலில் உயிர் குடம்

நிரம்புகிறது ரசிகனே...!

ரசிக்க வாராயோ?

# அத்தியாயம் - 17

17 தமிழின்பனின் தொடுதலில் தன்னைத் தொலைத்து நின்றிருந்த தமிழரசியை உலுக்கியவன்,

"மறுபடியும் நீ அப்போ அப்போ ஃப்ரீஸ் ஆகுற வேலையை ஆரம்பிச்சுட்டியா கருவாச்சி" என நக்கலடித்திட,

அதில் அசடு வழிந்தவள், 'இதற்கு மேல் இங்கு நின்றால் தான் மாட்டிக்கொள்வோம்' என்றெண்ணி, காரினுள் சென்று அமர்ந்தாள்.

ஆனாலும் அவள் விழி அவளவனை ரசித்த படியே இருக்க, அங்கிருந்த வேலையாட்களுக்கு கண்ணாலேயே உத்தரவு பிறப்பித்த இன்பா, அவளை அழைத்துக் கொண்டு மீண்டும் அலுவலகம் சென்றான்.

இங்கோ சுஹானா நேசனிடம் கோபத்தில் கத்திக் கொண்டிருந்தாள். "அவள் என் முன்னாடியே அவன் கூட குழந்தை பெத்துக்குவேன்னு சொல்றா... அவன் என்னடான்னா ப்ராஜக்ட் எடுத்து வேலை பார்த்துட்டு இருக்கான். இவ்ளோ நாள், நான் சொன்னதை கேட்ட க்ளையண்ட் எல்லாம், அவனைப் பார்க்கவும் அவ

னுக்கு தான் ப்ராஜக்ட் கொடுப்போம்னு சொல்லி, ஆர் கியூ பண்றாங்க. இதுல அந்த இரிட்டேடிங் பொண்ணு வேற.

எவ்ளோ தைரியம் இருந்தா, தமிழ் அவளை என் இடத்துல வச்சுருப்பான். ஏதோ கல்யாணம் பண்ணதும், அவள் தலை தெறிக்க ஓடுவாள்னு நினைச்சு தான், நான் அமைதியா இருந்தேன்... ஆனால் ஆனால்..." என்று அங்கும் இங்கும் நடந்து கொண்டு பொரிந்த வளை,

நேசன், "அமைதியா இரு சுஹானா! அவன் எவ்ளோ ப்ராஜக்ட் எடுத்தாலும், எதுவுமே அவனால முழுசா பண்ண முடியாது. அந்த கம்பெனியில எப்பவுமே சேர்மன் நீ மட்டும் தான். அப்புறம் ஏன் இவ்ளோ டென் சன்." என்றார்.

"ப்ச் டாடி... நான் இருந்த இடத்துலயும், வேற எவ ளும் இருக்க கூடாது..." என்று முகம் சிவக்கக் கூற,

"சுஹா, நீ தான் அவன்கிட்ட இருந்து பிரிஞ்சுட் டியே அதோட, அவன் இப்போ பல்லு பிடுங்கப் பட்ட் பாம்பு மாதிரி தான். வாயும் பேச வராம, அவன் வீட்டு ஆளுங்களே, அவனைப் புழுவைப் பார்க்குற மாதிரி பார்த்துட்டு இருக்காங்க. இப்போ பிசினெஸ் கூட இல்ல. ஏதோ அவன் கிட்ட இருக்குற ஷேர் வச்சு, அவன் ஏதோ பண்ண ட்ரை பண்றான். அதை ஒன்னும் இல் லாம ஆக்க, நான் ஏற்கனவே ஏற்பாடு பண்ணிட்டேன். இனிமே எவனும் அவனுக்கு ப்ராஜக்ட் கூட கொடுக்க முடியாது. அந்தப் பொண்ணும், எத்தனை நாளைக்கு அவன் கூட இருப்பா சொல்லு. ப்ரீயா விடு. நான் உனக்கு

ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கேன். முதல்ல இதைப் பாரு..." என்று ஏதோ புகைப்படம் கொடுக்க,

அவள் அதை வாங்காமல், "முதல்ல, அவனை என் முன்னாடி இருந்து அனுப்புற வேலையைப் பாருங்க. அதோட, அவள் தமிழ் கூட, இன்னொரு தடவ என் முன்னாடி கெத்தா வரக்கூடாது. எனக்கு கோபமா வருது அவனைப் பார்க்கப் பார்க்க..." என்று விட்டு அறைக்குள் நுழைந்தவளுக்கு, எதையோ இழந்து விட்ட உணர்வு.

விபத்திற்கு பிறகு மீண்டும் அவனை இப்போது தான் பார்க்கிறாள். நாட்கள் ஆக ஆக, அவன் முகத்தில் ஒரு பொலிவு ஏற்படுவதோடு, அவனின் கம்பீரம் பல மடங்காய் திரும்ப, அவனிடம் சேர்ந்திருப்பது போல் உணர்ந்த அவளுக்கு, அவன் தன்னுடைய பொருள்... என்ற எண்ணம் அவள் மூளையில் உதித்து, அவளை வெறி பிடிக்க வைக்க, அவனை விட்டுச் சென்றதும், தான் தான் என்ற எண்ணம் வர மறுத்தது.

தீவிரமாய் வேலையில் மூழ்கிய, தமிழின்பனை கன்னத்தில் கை வைத்து பார்த்திருந்த தமிழரசி, "போர் அடிக்குது!" என குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அதனைக் கண்டவன், "இங்கிலீஷ் படி. இல்லைன்னா உன் காலேஜ் புக் எடுத்து வைச்சுப் படி!" என்று பதில் அனுப்பி விட்டு, விழிகளை மடிக்கணினியில் பதிக்க,

"அதை படிக்கிறது இருக்கட்டும். எனக்கு கொஞ்சம் டௌட்ஸ் இருக்கு..." என்றாள் யோசனையுடன்.

நிமிர்ந்து அவளைப் பார்த்தவன், என்ன என்று இரு விழியையையும் தூக்கிக் காட்ட, 'போச்சு! சும்மாவே இவன் கண்ணுல நான் நீச்சல் அடிக்கணும். இப்ப மொத்தமா பிளாட்...' என்று தன்னுள் சிறிது சிறிதாய் அவனிடம் பைத்தியம் ஆகிக் கொண்டிருந்தவள், தலையைக் குனிந்த படி அமர்ந்திருக்க,

எழுந்து அவளருகில் வந்து அமர்ந்த தமிழின்பன், "என்ன டவுட் கருவாச்சி?" என கேட்டான் இதழசைவில்.

அவளோ அவனின் அருகாமையில் உருகி, முயன்று தன்னை நிலைப்படுத்தி, "இல்ல இன்பா... இப்போ நம்ம கஷ்டப்பட்டு ப்ராஜக்ட் எடுத்து, கட்டடம் கட்டுறோம். அதைப் பண்ண விடாம, இந்த சுஹாவும், அவள் அப்பாவும் ஏதாவது பண்ணா என்ன பண்றது? அதுவும் இல்லாம இப்போ இது நம்ம பண்ற முதல் ப்ராஜக்ட். சோ, ரொம்ப கவனமா எந்த மிஸ்டேக்கும் இல்லாமப் பண்ணணும்ல..." என்று சிந்தனையுடனும், சிந்தும் உழைப்பு வீணாகி விடக் கூடாது என்ற கவலையுடனும், அவனைப் பார்த்தாள்.

அதில் குறுநகை புரிந்த இன்பா, "இப்போ ரெண்டு வருஷமா தான், அவள் சேர்மன். அதுக்கு முன்னாடி, நான் நாலு வருஷம் இங்க ஜி எம் ஆ தான் இருந்தேன். அப்புறம் நாலு வருஷமும் இங்க சேர்மன். யார் யார் என்ன என்ன பண்ணுவா, எப்படி எல்லாம் அழிக்க முயற்சிப்பான்றது எல்லாம் எனக்கு அத்துப்படி எழுத்தாளரே! அவங்க அவங்க டைமை வேஸ்ட் பண்ணி, என்ன வேணா பண்ணட்டும், நம்ம இதைப் பத்தி யோசிச்சு டைம் வேஸ்ட் பண்ணாம, சீக்கிரமா ப்ராஜக்ட்ட முடிக்கலாம் டீலா?" என்று நவரசத்தையும் முகத்தில் காட்டி,

ஹை பை கொடுக்கும் ரீதியில் கையை நீட்ட, அவன் பேச்சில் அவள் தான்,

“ஹை! அப்போ, அவங்க நம்மளை எதுவும் பண்ண முடியாதா...?” என்று சோபாவிலேயே துள்ளியவளை மேலும் இதழின் விரிந்த புன்னகையுடன் பார்த்தவன்,

“ம்ம்ஹும்...!” என்றான் உறுதியுடன்.

அவளோ, முதலில் மகிழ்ந்து விட்டு, பின் “இருந் தாலும் நம்ம கேர்புல்லா இருப்போம் இன்பா!” என்று தீவிரமாக அறிவுரை கூற,

“ஆகட்டும் எழுத்தாளரே!” என்றான் தலையை லேசாகச் சாய்த்து குறும்புடன்.

அதில் அவளுக்கு வெட்கம் வேறு வர, “ரசிகரே வர வர நீங்க ரொம்ப கலாய்க்கிறீங்க...! போங்க போய் வேலையைப் பாருங்க!” என்று கண்டிப்பது போல் உத்த ரவிட, வலிக்கும் படி அவளின் கன்னத்தை கிள்ளி விட்டு தான் நகர்ந்தான்.

அதி வேகமாய், இரு வருட இடைவெளிக்கு பிற கான அவனின் முதல் கட்டட வேலை நடந்து கொண் டிருக்க, ஒவ்வொன்றையும் நுணுக்கமாய் திட்டமிட்டு, கட்டுமானத்திற்கு தேவையான ஒவ்வொரு பொருளை யும் ஆராய்ந்து, இரவு பகல் என வித்தியாசம் தெரி யாத அளவு எந்நேரமும் வேலையே என கிட்டத்தட்ட, ஒரு மாதத்தை கடத்தி இருந்தவனைக் கண்டு, தமிழரசி தான் முதலில் வருந்தி, பின் கோபத்தின் நிலைக்குச் சென்றாள்.

இதில் அவளுக்கும், கல்லூரியில் அந்தப் பரு வத்தின் தேர்வுகள் நடை பெற்றிருக்க, அவளையும் தேவைப் பட்டால் மட்டுமே அலுவலகத்திற்கு வரும் படி, பார்த்துக் கொண்டான். அன்றும், இரவு தாமதமாகவே வந்த தமிழின்பன் அறைக்குள் நுழைந்ததும்,

"என்ன இன்பா! வேலை பார்க்க வேண்டியது தான். அதுக்காக இப்படியா? சாப்பாடு தூக்கம் கூட மறந்து... உடம்பு என்ன ஆகுறது? நானும் சரி இப்போ பிரீ ஆகுவீங்க. அப்போ பிரீ ஆகுவீங்கன்னு பார்த்தா, ஒரு மாசமா, மெஷின் மாதிரி சுத்திட்டு இருக்கீங்க?" என்று அவனை சரியாக பார்க்க கூட முடியாத ஆற்றாமையை, மேலும் கீழும் மூச்சிரைக்கக் காட்டினாள் தமிழரசி.

அதில் பட்டென சிரித்து விட்டவன், அவளுக்கு நீரைக் கொண்டு வந்து அருந்தச் சொன்னான்.

"இதுக்கு ஒன்னும் குறைச்சல் இல்ல" என்று அதனை வெடுக்கென பிடுங்கிக் குடித்தவள் அவனை முறைக்க,

"நீ தான சொன்ன, நம்ம எதுக்கும் கேர்புல்லா இருக்கலாம்னு. அதான் கருவாச்சி, நான் முழுக்க முழுக்க சைட்லேயே இருக்கேன். இன்னும் ஒரு மூணு மாசத்துல அந்தக் கட்டடம், பெரிய பைவ் ஸ்டார் ஹோட்டல் ஆகிடும். இது மட்டும் பெஸ்ட்டா கொடுத் துட்டா, அடுத்து அடுத்து நம்மளை நம்பி ப்ராஜக்ட் தரு வாங்க..." என்ற அசைவுகளில் அவளுக்கு புரிய வைக்க முயல,

"எனக்கு புரியுது இன்பா. ஆனால், உங்களையும் நீங்க பார்க்கணும்..." என்று ஆரம்பித்தவள்,

"என் கிட்ட கூட நீங்க பேசுறதே இல்ல தெரியுமா. நான் உங்களை ரொம்ப மிஸ் பண்றேன்..." என்றாள் அவளை மீறி கண்ணில் தோன்றிய காதலுடன்.

ஆனால் அவனோ சாதாரணமாக, "மீ டூ மிஸ் யூ பேட்லி கருவாச்சி" என்று கன்னம் பற்றிச் செல்லமாக ஆட்டியவன்,

"உனக்கு எக்ஸாம்ஸ் நடந்துச்சுல, அதான் நான் உன்னை டிஸ்டர்ப் பண்ணல. இல்லைன்னா, உன்னை ஆஃபீஸ்க்காவது கூட்டிட்டு போவேன்..."

"சும்மா ஏதாவது சொல்லாதீங்க. நான் ஒரு மாசத்துல எத்தனை கவிதை எழுதினேன். ஒண்ணாவது பார்த்தீங்களா... இதுல ரசிகன்னு வேற பீத்திக்கிறது...! ரொம்ப ஓர்ஸ்ட் ரீடர் நீங்க!" என்று சிலுப்பிக் கொண்டவள் பால்கனியில் சென்று நின்றாள்.

அவளைத் தேடி அவளவன் வரும் முன், ஒரு குறுஞ்செய்தி பறந்து வந்தது.

வாடும் வலிகளெல்லாம்

வடுக்களானால்...!

வடுக்கள் அனைத்தையும்

வர்ணமாக்கலாம்...!

வலி துரத்தும்

வஞ்சிமகளின் ரசிகையானால்...!

என்று அவள் பல நாட்களுக்கு முன்பு அனுப்பி இருந்த குறுஞ்செய்தியை அவன் அவளுக்கே அனுப்பி இருக்க, மீண்டும்,

“எப்போவுமே உன் எழுத்துக்கு நான் ரசிகன் தான... அப்புறம் என்ன ரசிகையானால்னு ஒரு கேள்வி? ம்ம்?” என வினவி அனுப்பி இருந்தான், முறுவலுடன்.

அவளோ, முதலில் சிவந்து பின், ‘என் எழுத்துக்கு மட்டும் தான் ரசிகனா?’ என மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டவள்,

“அது சும்மா...” என சமாளித்தாள்.

தமிழின்பன் தான், நேராக அவள் அருகிலேயே வந்து, “இந்த கவிதை நீ அனுப்பி இருக்கும் போது, நான் பயங்கர டென்ஷன்ல இருந்தேன் அரசிம்மா...!” என்று விழி விரித்து, உதட்டை பிதுக்கிக் கூறிட,

அவளோ பதறி “என்ன ஆச்சு இன்பா. என்ன டென்சன். ஒன்னும் ப்ராப்ளம் இல்லைல...” என்று புருவம் சுருக்கிட,

“ம்ம்ஹும்...” என தலையை ஆட்டியவன்,

“உன் வலி போக்குற வரிகளை பார்த்ததுக்கு அப்புறமும் அந்த ப்ராப்ளம் இருக்குமா என்ன...? என்னமோ, உன் எழுத்துக்கு ஒரு பவர் இருக்கு கருவாச்சி! இல்லைன்னா, ரெண்டு வருஷமா இந்த ரூம்ல இருந்து பைத்தியம் ஆகிருப்பேன். உன் எழுத்து தான், என்னை வேற ஒரு உலகத்துல வாழ வச்சுச்சு... பிரின்சஸ்” என்று ஆழ்ந்த பார்வையுடன் உணர்ந்து கூறியவனை, வியப்பாகப் பார்த்தவளுக்கு, உள்ளுக்குள் சில்லென இருந்தது.

மூச்சு முட்டிய மகிழ்ச்சியில் பேச்சற்று நின்றிருந்த வளிடம், "அது என்ன, பிரின்ஸ் ஆப் ஹெவன். நான் முதல்ல நீ பையன்னு தான் நினைச்சேன்..." என்ற கேள் வியை விழிகளைத் தொடுக்கி கேட்டவனிடம், சிறிதாய் குறுஞ்சிரிப்பு புரிந்தவள்,

"அது... பொண்ணு ஐடின்னா ஏதாவது ப்ராப்ளம் வரும்னு தான் பிரின்ஸ்ன்னு வைச்சேன்..."

"அது சரி, எழுதுறது பசங்களோட உணர்வைப் பத்தி, ஆனால் ஐடி மட்டும்..." என்று கிண்டலாக, வீழ்த் தும் பார்வை பார்க்க,

"ஹெலோ! நான் பொதுவா தான் எழுதினேன். ம்ம்... அந்த நேரத்துல என் மனசுல என்ன தோணுதோ அதை எழுதினேன். அது உங்களுக்கு மேட்ச் ஆகி டுச்சு போல. அதுவும் போக, எல்லாரும் என் இன்பா மாதிரி டீசண்ட் ஆன ரசிகர் ஆகிடுவாங்களா என்ன...? ஒரு சேஃப்டிக்குத் தான்..." என்று உதட்டைக் கடித்தபடி அவனைப் பார்த்தாள்.

"அறிவு தான்!" என பாராட்டும் விதத்தில் பார்த்த வனை,

"சரி சரி, அப்படியே எஸ்கேப் ஆகாதீங்க. என்ன டென்சன்னு சொல்லுங்க..." என்றாள் தீவிரமாக.

"நத்திங் அரசிம்மா... அந்த நேசன் நம்ம சிமெண்ட் மெட்டீரியல்ல கலப்படம் பண்ணிட்டான். நானும் அதை கவனிக்காம விட்டுட்டேன். கரெக்ட்டா சைட்டுக்கு போய், மத்த சிமெண்ட் ஓட கலந்ததுக்கு அப்புறம் தான் தெரிஞ்சுது. பயங்கர டென்ஷன்... அப்போ தான் நீ கவிதை அனுப்புனியா, அதைப் பார்த்ததும் ரீசார்ஜ்

பண்ண மாதிரி ஆகிட்டேன். கொஞ்சம் லாஸ் ஆனாலும், அதைப் பத்தி திங்க் பண்ணாம, ப்ராஜக்ட்டுக்கு போய்டுச்சு என் கவனம்” என்று கரங்களை காற்றில் அசைத்து, அவளை அணு அணுவாக அவனிடம் உறைய வைத்தான்.

அவளோ, “என் கிட்ட ஏன் சொல்லல இன்பா... அந்த ஆளு இதை மட்டும் தான் பண்ணுனானா என்ன?” என்று கேட்டாள் சந்தேகமாக.

“அதெல்லாம் இல்ல. நிறைய பண்ணான். கொண்டு வந்த மணல்ல கலப்படம். கம்பெனியில இருந்து ப்ராஜக்ட்டுக்கு பணம் தர மாட்டேன்னு வேற பிரச்சனை பண்ணுனான்...” என்றதில், அவள் புரியாமல் பார்த்தாள்.

“நம்ம கம்பெனி மூலமாத் தான நம்ம ப்ராஜக்ட் எடுத்து இருக்கோம். முதல்ல க்ளையண்ட் முழு பணமும் கொடுக்க மாட்டாங்க. நம்ம கம்பெனியில இருக்குற நம்ம ஷேர் மூலமா, ஒரு முதல் போட்டு தான், நம்ம கட்டடம் கட்ட ஸ்டார்ட் பண்ணுவோம். இதுல இடையில நிறைய அவன் கலப்படம் பண்ணதுல, கொஞ்சம் லாஸ்ஸும் ஆகிடுச்சு. பட் மேனேஜ் பண்ணிட்டேன்...” என்று கதையாய் கூறியவனைப் பாவமாக பார்த்தவள்,

“இப்போ உங்க கிட்ட பணம் இருக்கா இல்லையா?” எனக் கேட்டாள் வருத்தமாக.

கண்ணோரம் சுருங்க புன்னகைத்தவன் “இருக்கு கருவாச்சி. லோன் போட்டுருக்கேன். அதோட என் சேவிங்ஸ் கொஞ்சம் இருந்துச்சு. ஓரளவு மேனேஜ் பண்ணிட்டேன். நெக்ஸ்ட் மந்த் க்ளையண்ட்டே அமௌன்ட் கொடுத்துடுவாங்க. சோ நோ ப்ராப்ளம்”

"ப்ச், லோன் லாம் போட்டா வாங்குன பணத்துக்கு வட்டி கட்டியே வாழ்க்கை போய்டும்... இதெல்லாம் ஏன் என்கிட்ட சொல்லல நீங்க? நான் ஏதாவது ஹெல்ப் பண்ணிருப்பேன்ல... அட்லீஸ்ட் உங்க கூடயாச்சு இருந்திருப்பேன்ல!" என்று குற்றம் சுமத்தும் பார்வையில் கேட்க,

அதில் மேலும் புன்னகைத்தவன், "அதான் உன் எழுத்து என் கூடவே இருந்துச்சே..." என்றான் ரசனையாக.

அவள் சுள்ளென, "அப்போ நான் வேணாமா?" என்ற வார்த்தையை விட்டிருக்க,

அவனோ அப்போதும் அவளின் கேள்வியை உணரவில்லை.

"அச்சோ! கருவாச்சி... நீ இல்லாம எனக்கு ஒண்ணுமே ஓடாதுடி... ஏற்கனவே நீ தான் மீட்டிங்கிலேயும் பேசி, பாரீன் இங்கிலீஷும் படிச்சுக்கிட்டு, கூடவே உன் படிப்பையும் படிச்சுட்டு இருக்க... இதுல இதையும் உன் தலையில ஏத்த வேணாம்னு தான் சொல்லல. அதுவும் லோன் வாங்குறது அப்புறம் ப்ராபிட் வந்ததும், அதை அடைக்கிறது பிசினெஸ்ல ரொம்ப காமன் அரசிம்மா...! நான் பார்த்துக்குவேன்" என்று கண்ணை மூடித் திறந்து அவளுக்கு விளக்கம் கொடுத்தான்.

பின், "ஆமா, மேடம் என்ன ஹெல்ப் பண்ணிருப்பீங்க?" என்று நக்கலாகக் கேட்டவனை முறைத்தவள்,

"என் அப்பா எனக்கு குடுத்த நகை இருந்துச்சு, அதைக் கொடுத்துருப்பேன்ல... அதோட இப்போ நான் படிக்கணும்னு ரொம்ப அவசியமா, அதுவும் அவ்ளோ பெரிய காலேஜ்ல. கொஞ்ச நாள் விட்டுட்டு, அப்பு

றம் கூட படிச்சுருப்பேன். அதுவும் உங்களுக்கு செலவு தான... இதுக்கு மேல என்கிட்ட ஹெல்ப் பண்ண எதுவும் இல்லயே...!" என்று காட்டமாக ஆரம்பித்தவள் சற்று சுணக்கத்துடன் முடித்ததில், அவனை மீறி ஏதோ ஒரு நிறைவு அவனுள் தோன்றிட, என்றும் இல்லாததொரு புது புத்துணர்வு அவனை நனைத்திட, அவள் கன்னத்தைக் கிள்ளி வைத்தவன்,

"என் பிரின்சஸ் இப்படி எல்லாம் யோசிக்கவே கூடாது. எனக்கு பணம் ஒரு பிரச்சனையே இல்ல. இப்போதைக்கு கையில இல்ல, அவ்ளோ தான். உன் கவனம் இப்போ படிப்புல தான் இருக்கணும்... ஓகே வா?" என்று சைகையிலும் கண்ணிலும் அழுத்தத்துடன் கூறினான்.

"ஆஆ இன்னொரு தடவை கிள்ளுனீங்க கன்னம் கையோட வந்துடும்..." என்று கன்னத்தைத் தேய்த்தவள்,

"சரி நான் ஒழுங்கா படிக்கிறேன். ஆனால் இனிமே என்ன நடந்தாலும் என்கிட்ட சொல்லணும். இப்போ தான் எக்ஸாம் முடிஞ்சுதுல, சோ நானும் ஆஃபீஸ் வருவேன்..." என்று கண்டிப்பாய் கூறிட,

"சரிடி கருவாச்சி! மூஞ்சியை அப்படி வைக்காத பார்க்க முடியல...!" என்று கிண்டலடித்தவன், மேலும் சில நேரம் அங்கேயே அவளுடன் பேசி விட்டு, அவள் தூக்கத்தில் கண்ணைக் கசக்கவும் தான் உறங்கச் சென்றான்.

அடுத்த நாள் கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கும் 'சைட்' க்கு தமிழின்பனுடன் சென்றவள், "ப்பா அதுக்குள்ள இவ்ளோ வேலை பார்த்துட்

டிங்களா... கட்டடம் எல்லாம் பெருசா இருக்கு" என்று அதனை விழி விரித்துப் பார்த்தவள்,

அவனுடனே ஒட்டிக்கொண்டிருக்க, அவனும் அவளை அவனின் கை வளைவிற்குள் தான் வைத்திருந்தான்.

பின், ஏதோ ஒரு மாதிரி இதயம் சற்று வேகமாகத் துடிக்க, "அரசிம்மா" என அவளைத் தட்டி அழைத்து,

"நீ கார்ல போய் இருக்கியா?" என கேட்க,

"ம்ம்" என தலையாட்டியவள் காரில் அமர்ந்திட, அவனுக்கு அப்போதும் அந்தப் படபடப்பு அடங்கவில்லை.

'என்ன இன்னைக்கு ஒரு மாதிரி இருக்கு!' என சிந்தனையுடன் இருந்தவன், தமிழரசியை ஒரு முறை பார்த்து விட்டு திரும்ப, அங்கு தூரத்தில் வந்த லாரி ஒன்று அவனின் காரை நோக்கி வந்ததைப் போன்றதொரு ஒரு பிரம்மை அவனுக்கு.

இங்கோ தமிழரசி, "சந்து, நம்ம பிளான் எல்லாம் ஓகே வா? இன்னைக்காவது அதை எக்சிகியூட் பண்ணணும்..." என்று சந்தனாவிற்கு குறுஞ்செய்தி அனுப்பிட,

அவளோ, "அடியேய்! எல்லாம் ஓகே தான். என் அத்தை கை கால்ல விழுந்து இதைப் பண்ணிருக்கேன். என் அத்தை என் அப்பா கிட்ட போட்டு குடுத்தாலும் பரவாயில்ல, எனக்குன்னு ஒரு அத்தை பையன் இருக்கு. அவன் கிட்ட போட்டுக் குடுத்தா நான் காலி. பார்த்து பதமா பண்ணுமா..." என்று கும்பிடு போட்ட ஸ்மைலியை அனுப்பி இருக்க,

அதில் குறும்பாகச் சிரித்தவள், “உன் அத்தை பையனுக்கும் வேணும்னா, அந்த சம்பவத்தை பண்ணி டுவோமா?” என கேட்டாள்.

அதில் மிரண்ட சந்தனா தான், “அடிப்பாவி, அது ஒரு அப்பிராணிடி...! நான் லோகேஷுக்கே பாவம் பார்க் குறேன். பையன் மிரளப் போறான்!” என்று பாவமாய் கூறியவள்,

“லாஸ்ட் விக்கட் அவுட் ஆகுமா தமிழு” என்ற கேள்வியை எழுப்ப, அதற்கு பதில் கூறும் முன், தமிழின் பன் வேகமாக வந்து காரைத் திறந்து அவளை வெளி யில் இழுத்தான்.

அதில் தடுமாறியவள், பூங்கொத்தாக அவன் மேல் படர்ந்திருக்க, அவன் நொடியில் அவளைத் தள்ளிக் கொண்டு நகர்ந்து நிற்க, அவன் எண்ணியது போலவே அந்த லாரி, அவனின் காரை அடித்து வீழ்த்தி விட்டுச் சென்றது.

அதனை சிலையாகிப் பார்த்திருந்த தமிழரசிக்கு, செல்லெல்லாம் பயத்தில் நிறைந்திருக்க, இன்பாவோ, அவளை இறுக்கி அணைத்த படி நின்றிருந்தான், அதிர்ச்சியுடன்.

பதட்டத்தில் வார்த்தை மட்டும் அன்றி, சைகை யில் பேசக் கூட கரம் எழாமல் இருக்க,

“இ இன்பா... என்ன ஆச்சு இப்போ? ஜஸ்ட் மிஸ்... அந்த லாரி என்னை இடிச்சுருக்கும்ல” என்று நடுக்கத் தில் அவனிடம் மேலும் ஒன்ற,

அவன் எப்போதும் போல் அவளின் உச்சந்தலையில் முத்தமிட்டு அவனின் பதற்றத்தையும் அவளின் நடுக்கத்தையும் குறைக்க முயன்றான்.

அதற்குள் அவனின் வேலையாட்கள் அங்கு கூடிவிட, அந்த லாரி மின்னல் வேகத்தில் பறந்திருந்தது. அந்த காரின் நசுங்கிய நிலையே, தமிழரசிக்கு மேலும் பயத்தைக் கூட்ட,

“இன்பா... பயமா இருக்கு” என்று மேலும் அவன் நெஞ்சில் முகத்தை அழுத்தினாள்.

“ம்ம்ஹும்...” என்ற முனங்களாலே அவளைத் தேற்ற முயன்றவன், அவள் கன்னத்தை நிமிர்த்தி, “ஒன்னும் இல்ல அரசிம்மா... நீ என் கைக்குள்ள தான் இருக்க!” என்று வாயசைவும் சரியாக வராமல், தன்னை நிறுத்தி நிதானமாக்கி, அவனின் உச்சந்தலை முத்தத்தை இப்போது நெற்றியில் இடம் மாற்றி, அழுத்தமாக அங்கு இதழ் தடத்தைப் பதித்திருந்தான். அப்போதும் தாபத்துடன் அல்ல. தன் குழந்தையை இழக்கப் போன தந்தையின் பதட்டத்தில்.

அவன் அதரங்களின் ஈரம், அவள் நெற்றி வகுட்டின் வழி ஒவ்வொரு அணுவிலும் கலந்து, அவனின் நிலையை அவளுக்கு உணர்த்தியது.

கூடவே, அவனின் திணறலும் அவளுக்குப் புரிய, தன் பயத்தில் இருந்து தன்னை மீட்டவள்,

“அப்பாடா... நல்லவேளை நீங்க வந்தீங்க... இல்லைன்னா, லாரிக்கு அடியில எலுமிச்சை பழம் மாதிரி நசுங்கி இருப்பேன்! அப்புறம் இந்த உலகம் ஒரு சிறந்த எழுத்தாளரை மிஸ் பண்ணிருக்கும்...” என்று அவனை

இயல்பாக்க, கிண்டலடித்தவளை உறுத்து விழித்தவன், இறுக்கி அணைப்பான் என்று நினைத்திருக்க, சப்பென அறைந்து விட்டு நகர்ந்ததில், கன்னத்தில் கை வைத்து தேம்பிய முகத்துடன் நின்றாள் திகைத்து.

'இந்த அடிக்கு அந்த லாரியை பரவாயில்ல... ஹரித்வார் குரங்கு. ஒன்னு கிள்ளுது, இல்லைன்னா அடிக்குது...!' என தனக்குள் வெகுவாக புலம்பியபடி இருந்தவள், உதட்டைப் பிதுக்கியபடி நிமிர, அவளுக்கு அருகில் தமிழின்பன் தான் நின்றிருந்தான்.

அவள் மேலும் முகத்தை சுருக்கியதில், அவன் விழிகளோ தண்ணீரில் நீந்திட,

"ரொம்ப வலிச்சுருச்சு, கருவாச்சி..." என நெஞ்சில் கை வைத்து, யாசகமாக பார்த்தவனின் நெஞ்சில், அடுத்த நொடி அவள் சாய்ந்திருந்தாள்.

அவனோ அவளின் கூந்தலை வருடி விட்டு, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தான். மனம் முழுக்க மையலுடன் அவள்... எண்ணம் முழுதும் தோழமையுடன் அவன்...

# அத்தியாயம் - 18

தமிழின்பனும் தமிழரசியும் மற்றொருவரின் அணைப்பில் வெவ்வேறு சிந்தனையில் சிதறி இருக்க, அவளை நகர்த்தி "இப்போ ஓகே தான டி?" எனக் கேட்டான் விழியசைவில்.

"ம்ம்!" என்று தலையை உருட்டியவள், 'அடிக்கிறதையும் அடிச்சுட்டு கேட்குற கேள்விய பாரு!' என்று மனதினுள் திட்டிக் கொண்டவளை, கண்டுகொள்ளாது, வீட்டிலிருந்த மற்றோரு காரை வரவைத்தவன், முதலில் அவளை வீட்டில் இறக்கி விட்டான்.

அதன் பிறகு, அவன் நேராகச் சென்றது போலீஸ் ஸ்டேஷனுக்கு தான். அவனுக்கு கீழ் வேலை பார்ப்பவரை வைத்து, கேஸ் ஒன்றை பைல் செய்தவன், லாரி எண்ணையும் மனதினுள் குறித்து தான் வைத்திருந்தான். இதனை யார் செய்திருப்பார்கள் என்ற கணிப்பு இருந்தாலும், உண்மையான தகவல் வரும் வரை முகத்தில் கடுகடுப்புடன் காத்திருந்தான்.

இன்னுமும் இதயம் அவனுக்கு தாறுமாறாய் துடித்திருக்க, இரவு வெகு நேரம் ஆனதில், உறங்கி இருந்த தமிழரசியின் அருகில் வந்து, அவளை வெகு நேரம்

பார்த்துக் கொண்டு இருந்தவன், மறுநாள், அந்த லாரிக் கும் நேசனுக்கும் தொடர்பு இருக்கிறது என்று அறிந்து, தமிழரசியை அழைத்துக் கொண்டு, அவர் வீட்டிற்கு விரைந்தான்.

அப்போது தான், ஷூவை மாட்டிக்கொண்டு, நேசன் ஜாக்கிங் செல்ல வெளியில் வர, காரை நிறுத் தாமல் நேராக அவரை நோக்கிச் சென்றான். அந்தக் கார் வந்த வேகத்தில் திகைத்த நேசன் உறைந்து நிற்க, அதற்குள் சுஹானாவும் வெளியில் வந்திருந்து "ஹே!" என்று கத்தினாள்.

தமிழரசியோ, "இன்பா என்ன பண்றீங்க... வண் டியை நிறுத்துங்க!" என்று பதற, அதை எல்லாம் தமி ழின்பன் காதில் வாங்காது, வந்த வேகத்தில் நேசன் மீது இடித்திருக்க,

அரசி "அய்யோ" என்று காதை பொத்தினாள்.

நேசன் தான் காலில் ஏற்பட்ட அடியில் சுருண்டு மயங்கி இருக்க,

சுஹானா "அப்பா! அப்பா!" என அவரை எழுப்பி னாள். பின் கோபமாக "தமிழ் உனக்கு என்ன பைத்தி யமா பிடிச்சுருக்கு?" என்று கத்திட,

அவன் ஆக்சிலேட்டரை முறுக்கி, அவள் மேல் மோத வந்திட, அவள் அரண்டு நின்றாள்.

தமிழரசியோ "ஐயோ இன்பா! கொஞ்சம் அமைதி ஆகுங்க! ப்ளீஸ்! முதல்ல வண்டியைத் திருப்புங்க..." என்று அவனை சரி செய்ய முயல,

அதன் பிறகே சற்று சாந்தமானவன் அவளை இடிக்காமல் நிறுத்தி விட்டு, பார்வையாலேயே அவளை எரித்தவன், இறங்கி போனை எடுத்து,

"உன்னை எல்லாம் அன்னைக்கே சாகட்டும்னு லாரில மோத வச்சிருக்கணும். உன்னைக் காப்பாத்துன பாவத்துக்கு, என் ஒரு குழந்தையை கொன்னுட்டு, இன் னொரு குழந்தையையும் கொல்லப் பாக்குறியா? இதான் உனக்கு லாஸ்ட் வார்னிங். என் கோபத்தைப் பத்தி, உனக்கு நான் சொல்ல வேண்டியது இல்ல. உன் அப்பன் மேல ஏறுன கார் உன் மேலயும் ஏறும்... ஞாபகம் வைச் சுக்கோ!" என்ற வாசகத்தை அவளிடம் காட்டி விட்டு, அவள் அதிர்ந்த முகத்தை மேலும் தீயாய் முறைத்து, விரல்களை நீட்டி எச்சரித்து விட்டு, காரைக் கிளப்பி னான்.

அப்போதும், அவனின் கோபம் கார் நகர்வதி லேயே புரிய, "இன்பா!" என அழைத்தாள் மெதுவாக.

முகத்தை திருப்பாமல் அவன் "ம்ம்" கொட்ட,

"எதுக்கு இவ்ளோ கோபம் உங்களுக்கு? அதான் எனக்கு ஒன்னும் ஆகலையே... அதோட நம்ம ப்ராஜக்ட் பண்ற நேரத்துல, இந்த பிரச்சனை தேவையா?" என்ற தும் சட்டென காரை நிறுத்தியவன், ஆத்திரத்துடன்,

"அப்போ, அவன் உன்னைக் கொலை பண்ணப் பார்ப்பான். நான் அதை கண்டுக்காம ப்ராஜக்ட்ட பண் ணனுமா? முதல்ல எனக்கு நீ முக்கியம். அப்புறம் தான் இந்த பிசினெஸ் மண்ணாங்கட்டி எல்லாம் புரியுதா?" என்று பல பாவனைகளை முகத்தில் சுமந்து, அதில் அன்பை அதிகமாய் தெளித்துப் பேசியவனை, மனதில் பூத்த மென் சாரலுடன் பார்த்தவளுக்கு,

அவன் மேல் இருந்த காதல் பன்மடங்காய் பெருகி, “லவ் யூ ரசிகரே!” என்று உள்ளுக்குள் கூவிக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு, சுஹானா அவன் மேல் புகார் கொடுக்க, அவன் காரில் பிரேக் பிடிக்கவில்லை என்று அவனின் வக்கீல் வைத்துப் பேசி, அதனை ஒன்றும் இல்லாமல் ஆக்கிட, நேசன் படுத்த படுக்கையானார்.

இதில் பிரபாகர் தான், “உன் மனசுல என்ன தான் நினைச்சுட்டு இருக்க தமிழ்” என்று எகிற,

அதற்கு அவன் பதில் கூறும் முன், “இன்பா இன்பா இதுக்கு நான் பதில் சொல்றேன். நீங்க டயர்டா இருப்பீங்க. போய் ஃப்ரெஷ் ஆகிட்டு வாங்க...” என்று அவன் தோளைத் தட்டி மேலே அனுப்பி விட்ட தமிழரசி, இப்போது பிரபாகர் முன் திரும்பினாள்.

“என்ன மாமா, எப்போவும் வேடிக்கை தான பார்ப்பீங்க. இன்னைக்கு என்ன கேள்வி எல்லாம் கேட்குறீங்க? உங்களுக்கு இன்னைக்கு மிக்சர் தரலையா என்ன?” என்று கேலியாய் வினவியவள்,

அவர் எரிச்சலாக அவளைக் கண்டதும், “உங்க பையனை எல்லாரும் ஏதோ புட் பால் விளையாடுற மாதிரி பந்தாடி இருக்காங்க. நீங்க என்னன்னா... கொஞ்சமாவது பெத்த பையன்னு பாசம் இருக்கா?” என்று பேசிக் கொண்டே போக, அவர் மனம் உலைக்களமாக கொதித்தது.

ஆனால், அவர் பேச வாய் திறக்கும் முன், “ம்ம்க்கும்” என்ற சத்தத்தை கொடுத்த தமிழின்பன், “சாப்பிட

வா!" என்று தமிழரசியை இழுத்துக் கொண்டு செல்ல, அவளுக்குத் தான் ஏதோ நெருடியது.

அந்த நெருடலைப் பெரியதாக எண்ணாமல், அவனிடம் கேட்காமல் உண்ணச் சென்றவளின் எண்ணம் இப்போது லோகேஷின் மேல் இருந்தது. இன்னைக்காவது நினைத்ததை செயல் படுத்த வேண்டும் என்று, தமிழின்பன் அறியாமல் சந்தனாவுக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

லோகேஷ், அப்போது தான், தான் திருமணம் செய்து கொள்ளப் போகும், அவனின் காதலி ஷாலினியுடன் போரம் மாலை அளந்து கொண்டிருக்க, அவளுடன் உரசிய படியே திரிந்தான். ஷாலினியும் அவன் பிடித்த கையை விடாமல், காதல் மொழி பேச, அப்போது அவளுக்கு ஒரு போன் வந்தது.

அதில் பேசியவளின் முகம் திடுக்கிட, லோகேஷ் "என்ன ஆச்சு ஷாலு!" என்றான் குழப்பமாக.

"என் ஃப்ரெண்டுக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சாம் லோகேஷ். உடனே o+ ரத்தம் தேவைப்படுதாம்... என்ன பன்னன்னு தெரியல" என்று அவள் பதற,

"ஹே! சில்! ரத்தம் தான வேணும். குடம் குடமா நான் கொடுக்குறேன்... நீ டென்சன் ஆவாத ஷாலு பேபி! கம் கம்" என்று அவளை இழுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றவன், அவளை சமன் செய்து, ரத்த சாம்பிளும் கொடுத்து விட்டு அமர்ந்தான்.

"உன் பிரெண்ட் இப்போ ஐசியூல தான் இருக்காங்களா ஷாலு?" என கேட்டவனிடம்,

“ஆமா லோகேஷ் ரொம்ப சீரியஸ் போல. பிழைச்சுக்குவா தானே?” என்று கண்ணில் நீர் தேங்கக் கேட்டவளை,

“அட! ஒன்னும் ஆகாது ஷாலு...” என அவள் கண்ணைத் துடைக்கப் போக, தாதியர் வந்து இருவரையும் மருத்துவர் அழைத்து வரச் சொன்னதாகக் கூறினார்.

இருவரும் புரியாமல் ஒரு தரம் பார்த்து விட்டு, மருத்துவர் மனோகரி என பெயரிடப்பட்டிருந்த அறைக்குள் நுழைய, அவர் தீவிரமாக ஏதோ யோசனையில் இருந்தார்.

லோகேஷ், “ஹெலோ! டாக்டர்! எங்களை கூப்புட்டு விட்டீங்களா? ஐ சி யூ ல இருக்குற பொண்ணு இப்போ எப்படி இருக்கா?” என்று நலம் விசாரிக்க,

மனோகரியோ “அவங்களை நீங்க விசாரிக்கிறது இருக்கட்டும். முதல்ல நீங்க சொல்லுங்க. நீங்க எப்படி இருக்கீங்க...?” என்று கேட்க, அவனோ குழம்பிப் போனான்.

மனோகரி மேலும், “இந்த ரிப்போர்ட்ட பாருங்க. இது உங்க ப்ளட் ரிப்போர்ட் தான்...” என்று கொடுக்க, அதனை வாங்கிப் பார்த்தவனின் இதயம் ஒரு நொடி நின்றே விட்டது.

ஷாலினி புரியாமல் “என்ன டாக்டர்? என்ன இருக்கு ரிப்போர்ட்ல?” என்று குழப்பமாகப் பார்க்க,

அவரோ, “நீங்க இவருக்கு என்ன வேணும்?” எனக் கேட்டார்.

அவள் சிறிது வெட்கி, "நாங்க லவ் பண்றோம். இன்னும் மூணு மாசத்துல கல்யாணம்" என்று கூற,

மனோகரி, கண்ணாடியை கழற்றி விட்டு "வெரி சாரி மா... உங்க காதல் நிறைவேறாது. ஒரு எய்ட்ஸ் பேஷண்ட்டை நீங்க கல்யாணம் பண்ணிக்கவும் முடியாது." என்று முகத்தில் சோகம் அப்பிடக் கூற,

ஷாலினி "வாட்?" என இருக்கையை விட்டு எழுந்தே இருந்தாள்.

லோகேஷ் தான் கைகள் நடுங்க, "இல்ல இது பொய். நான் நம்ப மாட்டேன். எனக்கு எந்த பிரச்சனையும் இல்ல" என்று கத்த,

"நீங்க எங்க வேணா போய் டெஸ்ட் பண்ணுங்க. ஆனால் இதான் உண்மை. நீங்க ஒரு எய்ட்ஸ் பேஷண்ட்" என்று கூறிட, அந்த வார்த்தை அவனுக்கு வேப்பங்காயாக கசக்க, மனம் எல்லாம் வலிக்கத் தொடங்கியது.

கண்ணில் நிறைந்த நீருடன் அவன் ஷாலினியைப் பார்க்க அவள் முகத்திலோ வெறுப்பு மின்னியது.

"ஷாலு" என்று அவன் பேசவர, அவள் அவன் கையை உதறி விட்டு,

"ச்சி! என்கிட்ட நல்லவன் மாதிரி இருந்த... எத்தனை பொண்ணோட வாழ்க்கை கூட விளையாடுன. அதான் உனக்கு இப்படி ஒரு வியாதி!" என்று அருவருப்பாய் பார்க்க, அப்பார்வை அவனை உயிரோடு கொன்றது.

“இல்ல ஷாலு! நான் நான் அப்படிபட்டவன் கிடையாது ஷாலு. நான் எந்த தப்பும் பண்ணது இல்ல” என்று கமறிய குரலில் மன்றாட,

“பேசாத லோகேஷ்... இனிமே உன் நிழல் கூட என் மேல படக்கூடாது... டிஸ்கஸ்டிங்! ஒரு எய்ட்ஸ் வந்த ஒருத்தனை நான் லவ் பண்ணேன்னு நினைக்கும் போது... ஓ மை காட். நல்லவேளை நமக்கு கல்யாணம் ஆகலை...” என்று சற்று ஆசுவாசமானவள், திரும்பியும் பாராது அங்கிருந்து சென்றிருக்க, அவன் தான் உறைந்திருந்தான்.

அப்படியே அவன் சுற்றி நடப்பதை உணராது, வெளியில் சென்றிட, அந்த அறையில் மறைந்திருந்த தமிழரசியும், சந்தனாவும் மெல்ல எட்டிப் பார்த்தனர்.

மனோகரி “ரெண்டு அடங்கா பிடாரிங்களும் வெளிய வாங்கடி!” என்று கத்திட,

சந்தனா தான், “ஆனாலும் அத்தை நீங்க கதாப் பாத்திரத்துக்கு நச்சுன்னு பொருந்திட்டீங்க. இதுல ஹை லைட்டே கண்ணாடியை கழட்டுனது தான்” என்று கல கல வென சிரிக்க,

மனோகரியோ, “அடி வாங்காத சந்து. இதுவரை நான் எந்த பொய்யும் சொன்னதே இல்லை. இப்படி என்னையவே அநியாயமா ஒரு பொய் சொல்ல வச்சுட்டீங்களே! என் பையன் வரட்டும், உன் தோளை உரிச்சு உப்புக்கண்டம் போட சொல்றேன் இரு.” என்று அவளை மிரட்ட,

தமிழரசி லோகேஷ் சென்ற திசையை யோசனை யுடன் பார்த்து விட்டு, “நான் வரேன்.” என்று வேகமாக வெளியில் சென்றாள்.

லோகேஷுக்கு உலகமே இருண்டது. அவன் மனமோ தன்னவளை முதல் முதலில் பார்த்த நாளுக்கு இடம் பெயர்ந்தது. அப்போது தான், படிப்பு முடித்து, அவனே முயன்று ஒரு கம்பியூட்டர் நிறுவனம் ஒன்று ஆரம்பித்திருந்தான். தமிழின்பனின் சொத்து அனைத் தும் அவர்கள் வாங்கி இருந்தாலும், அவனுக்கு அவன் மேல் தான் பொறாமையும் கோபமுமே தவிர, அவனின் பணம் தனக்கு தேவை இல்லை என்ற எண்ணம் தான் இருந்தது.

இதனாலேயே மொத்த சொத்தும், ஷண்முகம் மற் றும் பிரபாகரின் பேரில் இருந்ததைக் கூட அவன் பெரிய தாக நினைக்கவில்லை.

அன்று ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்தவன், ஒரு பெண் ஸ்கூட்டியில் அவளின் சுடிதார் துப்பட்டா வீலில் சுத்தப் போவது போல் ஓட்டிட, அவன்

“ஹே! ஹே! பொண்ணே... ஏய்! ஷாலு... ஏய் ஷாலுமா” என்று கத்த,

இறுதியில் அவன் கத்தியது கேட்டதும் வண்டியை நிறுத்தி விட்டு அவனிடம் கோபமாக வந்தாள்.

“ஹே! மிஸ்டர்! என்னை பேர் சொல்லி கூப்பிட்ட தும் இல்லாம ஷாலுமான்னு செல்லமா வேற கூப்புடு றியா? எப்படி மேன் உனக்கு என் பேர் தெரியும்...?” என்று கடுப்பாக கேட்க,

அவனோ சிமிட்டிய அவளின் கருவிழிகளை ரச னையுடன் பார்த்து, அவளருகில் வந்து, ஒரு பக்கம் கீழே பரவிக் கொண்டிருந்த துப்பட்டாவினை எடுத்து அவள் கையில் திணித்தான்.

அதில் பெண்ணவள், தடுமாற "அவனோ நான் ஷாலுன்னு உன்னை கூப்பிடல மேடம்! உங்க ஷாலைச் சொன்னேன்..." என்று குறும்பாகச் சொன்னவனை, ஐயோ என்று கண்ணை மூடி ஒரு நொடி நொந்து பார்த் தவளுக்கு, கன்னம் ரத்தச் சிவப்பாகி விட,

"தேங்க்ஸ்" என்றவள் அங்கிருந்து நகரப் போனாள்.

அவனோ விடாமல் "ஹெலோ! மேடம் அட்லீஸ்ட் உங்க நேம் என்னன்னு சொன்னீங்கன்னா..." என்று இழுக்க

"எதுக்கு?" என்றாள் இடுப்பில் கை வைத்து.

"இல்ல அடுத்த தடவை பார்க்கும் போது ஷாலுன்னு சொல்லாம, பேர் சொல்லி அலெர்ட் பண்ண லாம்ல அதான்..." என்றதில்,

"நீங்க ஷாலுன்னே சொல்லலாம். அதான் என் பேர்" என்று புன்முறுவலுடன் கிளம்பிச் சென்றாள். அதன் பிறகு வேண்டுமென்றே அவளுடன் சந்திப்பை உருவாக்கிக் கொண்டு, அவளை காதலுடன் கலக்க வைத்தான்.

ஆனால், இப்போது அவளின் பிரிவும், அவளின் உயிரை கொல்லும் பார்வையும், தனக்கு உயிர்கொல்லி நோய் இருக்கிறது என்ற ஆற்றாமையும், அவனை உச்ச

கட்ட அழுத்தத்திற்கு இழுத்துச் செல்ல, வெகு நேர தீவிர சிந்தனைக்குப் பிறகு, வீட்டு மொட்டை மாடிக்கு மேல் சென்றான்.

மொட்டை மாடிச் சுவற்றில் ஏறி நின்று, தன் உலகப் பயணத்தை முடித்து கொள்ள, கண்ணை இறுக்கி மூடி விழப் போனவனை, தமிழரசி பிடித்து இந்த பக்கம் இழுத்தாள்.

அவளைக் கண்டவன் கோபமாக "விடு..." என்று கர்ஜிக்க,

"இப்போ இறங்குறியா என்ன சொல்ற...?" என்ற வள் அவனை நன்றாக பிடித்து இழுத்து, தரைக்கு கொண்டு வந்தாள்.

அவன் கோபமோ மேலும் அதிகமாகி "நான் சாக போனா உனக்கும் உன் புருஷனுக்கும் சந்தோசம் தான... அப்புறம் எதுக்கு தேவையில்லாம சீன் போடுற? போ இங்க இருந்து!" என்றவன் மீண்டும் தற்கொலை செய்யப் போக, அவள் பளாரென அறைந்திருந்தாள்.

விஷயம் கேள்விப் பட்டு, தமிழின்பன் இவனைத் தேடி வர, மாடியில் சத்தம் கேட்டு அங்கு விரைந்தான். வந்தவனுக்கு அப்போது அது தமிழரசியின் நாடகம் என்று புரியவில்லை. அவளிடம் வேகமாக வந்தவன், "அவன் எங்க செக் பண்ணான்... வேற ஹாஸ்பிடல்ல காட்டலாம். அப்படி எல்லாம் எதுவும் இருக்காது. ரிப் போர்ட்ல தான் ஏதாவது குழப்பம் இருக்கும்! அவன் கிட்ட சொல்லு..." என்று உள்ளுக்குள் தோன்றிய பதற் றத்தை மறைத்துக் கொண்டு பேச,

அவள் தான், “ஏன் உங்க தம்பி என்ன பெரிய உத்தம புத்திரரா... என்ன என்ன தப்பு பண்ணாரோ...” என்று வேண்டும் என்றே வாயைப் பிடுங்க,

அதில் அவளை முறைத்த தமிழின்பன் அருகில் இருந்த லோகேஷை ஒரு முறை பார்த்து விட்டு, “அவனுக்கு அண்ணன்னா தான் பொறாமை, கெட்ட எண்ணம் எல்லாம் வரும். மத்தபடி, அவனுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. இந்த விஷயம் வெளிய தெரிய வேணாம்னு... சொல்லு” என்று அவனை நிமிர்ந்து பாராமல் தமிழரசியிடம் பேசியவன், மற்றொரு மருத்துவருக்கு போனிலேயே அப்பாயின்மென்ட் வாங்கிய படி வெளியில் சென்றான்.

அப்போது தமிழரசி தான், “ரொம்ப பொங்காதீங்க... இது என் பிளான் தான்...!” என்று குறுஞ்செய்தி அனுப்பினாள்.

அதனைக் கண்ட பிறகே, அவனுக்கு அது உரைக்கவே செய்ததில்,

“அடிப்பாவி!” என்று அனுப்பியவன், “வந்தேன் உன்னை தூக்கிப் போட்டு மிதிக்கப் போறேன்.” என்று அனுப்பி இருக்க,

“ஈஈ! ஷாக் ட்ரீட்மெண்ட் எல்லாம் ஷாக் குடுத்து தான் ரசிகரே பண்ணனும்...” என்றாள் லேசாக இதழ் விரித்து.

“பாவம் டி அவன்...” என்று தன் தம்பிக்காக பாவப் பட்ட,

"ப்ச், நீங்க போய் வேலையைப் பாருங்க. இங்க நான் பார்த்துக்கிறேன்." என்று போனை வைத்தவள் எதிரில் பார்க்க, தமிழின்பன் கூறியது புரிந்து, அவன் தான் சிலையாகி நின்றிருந்தான்.

"என்ன கொழுந்தனாரே! எய்ட்ஸ் நோயோட எப்படி டா வாழுறதுன்னு யோசிக்கிறீங்களா? இவ்ளோ நாள் உன் அண்ணா வாழல பெரிய பழியோட! அதே மாதிரி தான் நீங்களும் வாழணும்..." என்று எகத்தாளமாகக் கூறியவள், அவன் இறுகி நிற்பது கண்டு,

"சாகுறது ஈஸி லோகேஷ். ஆனால் வலியோட வாழுறது. அதுவும் சொந்த தம்பி அப்பான்னு எல்லாரும் இருந்தும், அநாதை மாதிரி வாழுறது, எவ்ளோ வேதனை தெரியுமா? பொண்டாட்டி போய், தன் குழந்தை போய், ஆம்பளை இல்லைன்ற பழியோட, பேச முடியாமல், ஆறுதலுக்குக் கூட ஆள் இல்லாம இருந்த என் புருஷனே, கோழைத்தனமா தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணல.

ஆனால், இந்த வலியோட உன்னால ஒரு ஒரு மணி நேரம் வாழ முடியலைல. இப்போ கூட, உனக்கு ஒண்ணுன்னா அவரு தான் முன்னாடி வந்து நிக்கிறாரு. உன் அப்பா கூட அப்பவும் மிக்சர் சாப்பிட்டுட்டு தான் இருப்பாரு. என்ன நடந்தாலும், எவ்ளோ அவமானப்படுத்தி இருந்தாலும் உனக்கு ஒன்னுன்னு வந்து நின்ன என் புருஷனை ஆம்பளை இல்ல, ஊமைன்னு எத்தனை பேர் கிட்ட சொல்லிருப்ப...! இப்போ இம்போடென்ட் அவர் இல்ல, நீ தான்..." என்று அவனை வார்த்தைகளில் ஊசியாக குத்திட, அவன் கண்ணில் இருந்து நீர் வழிந்தது.

அவன் வெகு நேரம் பித்து பிடித்தது போல் நின்றிருந்ததில் என்ன கண்டாளோ, "உனக்கு எந்த வியாதியும் இல்ல. இதெல்லாம் என் செட் அப் தான். நான் தான் ரிப்போர்ட் மாத்தி குடுக்கச் சொன்னேன்..." என்று அமைதியாகக் கூற, அவன் சட்டென நிமிர்ந்து அதிர்ந்து பார்த்தான்.

"உன்னைத் திருத்துறதுக்காகவோ, இல்ல உன் அண்ணன் கூட சேர்த்து வைக்கிறதுக்காகவோ, நான் இதை பண்ணல. கொஞ்சமாவது வலியோட இருக்குறவங்க இடத்துல இருந்து, நீ ஒரு நிமிஷமாவது பார்த்தால் தான், அந்த வலியை உணருவேங்கிறதுக்காகத் தான் பண்ணேன். நீ உணர்ந்தியோ இல்லையோ, உனக்கு வியாதி இருந்தாலும் இல்லைன்னாலும், இப்போ யார் ஆம்பளை யார் ஆம்பளை இல்லைன்னு உனக்கு புரிஞ்சுருக்கும்னு நினைக்கிறேன்..." என்று அங்கிருந்து நகரப் போனாள்.

அவன் தான், பேச கூட வார்த்தையற்று உறைந்தே இருக்க, மீண்டும் அவனருகில் வந்த தமிழரசி,

"அப்புறம் ஷாலினி என் ஃப்ரெண்ட் தான்... அவளும் ஆக்டிங் தான் பண்ணுனாள்." என்று ஏற்ற இறக்கத்துடன் கூறி விட்டுச் செல்ல, அவன் ஷாக் அடித்து, ஓய்ந்ததொரு நிலையில் நின்றிருந்தான்.

அதன்பிறகு, தமிழின்பனும் எதுவும் கண்டு கொள்ள வில்லை. அவன் கவனம் முழுக்க வேலையில் இருக்க, தமிழரசியும் கவனத்தைச் சிதற விடாமல், படிப்பையும் அவனுக்கு உதவி செய்வதையும் சீராக கடைபிடித்து, அவ்வப்பொழுது காதலும் செய்தாள். இதற்கிடையில், தோன்றிய பல நெருக்கடியையும் முயன்று சரி

செய்தவன், அவனின் முதல் வேலை முடியும் முன்னே, மேலும் பல ப்ராஜெக்ட்களை கையில் எடுத்தான்.

ஆனால், இப்போதும் தமிழரசி தட்டு தடுமாறி தான் வெளிநாட்டு ஆங்கிலம் பேசிட, அவள் பேசும் விதம் கூட சில வாடிக்கையாளருக்கு பிடிக்கவில்லை என்றாலும், பலருக்குப் பிடித்தது.

அடுத்த மூன்று மாதமும், ரெக்கை கட்டிப் பறந் தது இருவருக்கும். ஆறு மாதத்தில் முடிக்க வேண்டிய வேலையை மூன்று மாதத்திலேயே கச்சிதமாக முடித்தி ருந்தவனுக்கு பாராட்டுக்கள் குவிய, இவர்களை கண்டு பொறாமையிலும், எரிச்சலிலும் கூடவே தந்தையின் உடல் நிலையாலும் தொழிலில் அறிவுரை சொல்ல ஆள் இல்லாமல், சுஹானாவின் பங்குகள் சரியத் தொடங்கி யது.

ஆனாலும், தமிழின்பனைப் பார்க்கப் பார்க்க அவ ளுக்கு அவன் மேல் வெறி அதிகமாகிட, அவளால் எது வும் செய்ய முடியவில்லை என்ற எண்ணமே, அவளை மேலும் கோபப்படுத்தியது.

இந்நிலையில், அன்று போர்ட் மீட்டிங்கில் சரிந்தி ருந்த பங்குகளையும், மற்ற தொழில்களையும் சரி செய் யும் பொருட்டு விவாதம் நடக்க, அப்போதைக்கு அதிக ப்ராஜெக்ட்டுடனும், அதனை வெற்றிகரமாக நடத்தும் இடத்திலும் தமிழின்பனே இருந்தான்.

தமிழரசிக்கோ இதனைக் கேட்டு, சந்தோசத்தை அடக்க முடியவில்லை. எப்படியும் சேர்மன் ஆகி விடு வார் என்று உள்ளுக்குள் குத்தாட்டம் போட்டு கொண் டிருக்க, அவள் நினைத்தது போன்றே மற்ற பங்குதா ரர்கள் அவனிடம், சேர்மன் பதவியை பற்றிய அவனின்

அபிப்பிராயத்தை கேட்க, சுஹானா பல்லைக்கடித்து கொண்டு அமர்ந்து இருந்தாள்.

தமிழரசி தான், “வாவ்! இன்பா! நீங்க சேர்மன் ஆகு றதை பார்க்குற அந்த ஒரு செகண்ட்காக மீ வெறித்த னமா வெயிட்டிங்... ரொம்ப யோசிக்காம சீக்கிரம் சொல் லுங்க...” என்று அவன் காதில் முணுமுணுக்க,

அவளைக் கண்டு மெலிதாய் புன்னகைத்தவன், “ஓகே, நான் இந்த பிசினெஸ் எல்லாம் சரி பண்றேன். பட் சேர்மன் நான் இல்லை” என்று அவன் சைகை காட்ட, அதனை அவள் மற்றவர்களுக்கு உரைத்து விட்டு, அவனை முறைத்துப் பார்த்தாள்.

மற்றவர்களும் குழப்பமாக அவனை பார்க்க, அவனோ “எனக்குப் பதிலா இங்க சேர்மனா இருக்கப் போறது தமிழரசி தான்” என்று கையசைவில் அவளை கை காட்ட, அவளோ அவனை உறுத்து விழித்தாள்.

மற்றவர்கள் அவர்களுக்குள் பேசிக்கொண்டு ஏதோ விவாதிக்க, சுஹானாவுக்கு விழி வெளியில் வந்து விடும் போல் ரத்த சிவப்பில் எரிந்து கொண்டிருந்தது. ‘என்னை சேர்மன் ஆக்க மாட்டேன்னு சொல்லிட்டு, இவளை ஆக்குறியா?’ என்ற ரீதியில் அவனைப் பார்க்க, அவனோ அவளை இதழில் உறைந்த சிறு புன்னகையு டன் அழுத்தமாகப் பார்த்தான்.

அவன் பார்வையே சுஹானாவை கூறு போட, இழந்து விட்ட பலவற்றை மீட்கவும் முடியாமல், தனக்கா னதை விட்டு கொடுக்கவும் விருப்பம் இல்லாமல் தவித் தவள், வெளியேறியே விட்டாள்.

பின், மற்றவர்களும் ஒரு மனதாய் தமிழின்பனின் பேச்சுக்கு வழி மொழிய, தமிழரசி தான், “ஒன் மினிட்...” என அனைவரிடமும் அனுமதி கேட்டு விட்டு, இன் பாவை தர தர வென அவன் அறைக்குள் இழுத்துச் சென்று, “இன்பா இதென்ன முட்டாள்தனம். இப்போ நான் இங்க சேர்மன் ஆ இருந்து என்ன பண்ணப் போறேன். இதெல்லாம் எனக்கு ஒன்னும் தெரியாது. அதோட, இது எல்லாமே உங்களுக்கு சொந்தம் ஆனது. நீங்க கெத்தா சேர்மனா இந்த பதவிக்கு வருவீங்கன்னு பார்த்தா... என்னை இப்படி ஏமாத்தி விட்டீங்களே!” என்று முகம் சுருங்க, அவளின் ஆதங்கத்தை கொட்டித் தீர்க்க, அவளை அமைதியாகப் பார்த்தவன்,

“நீ சேர்மன் ஆனா என்ன? நான் ஆனா என்ன? நீ சேர்மன்னா நான் வைஸ் சேர்மன் கருவாச்சி. இந்த வெற்றியும், என்னோட இந்த பழைய வாழ்க்கை யும் உன்னால தான் திரும்பி வந்துச்சு. நீ கீ குடுக் கலைன்னா, நான் இதை திரும்ப அடைஞ்சு இருக்க முடியாது. சோ இது உனக்குத் தான் சொந்தம். எனக்கு வெற்றி கிடைச்சு அழகு பார்க்கணும்னு நினைச்ச என் பிரின்சஸ்ஸ நான் சேர்மன் ஆக்கி அழகு பார்க்கக் கூடாதா? ம்ம்?” என்று விழியுயர்த்தி ஆழப் பார்வையுடன் கேட்டதில், அவள் தான் அவன் கண்களில் சிதைந்து மீள வழித்தெரியாமல் இன்னும் இன்னும் அவனுள் தொலைந்து போனாள்.

ஆனாலும் இது எதுக்கு எனக்கு என்ற எண்ண மும் வராமல் இல்லை தான். இதே குழப்பத்தில் இருந் தவளை, அடுத்த இரு நாளில் சட்டப்படி அவளை சேர் மன் ஆக ஆக்கினான்.

அவளோ நெளிந்து "ஏன் இன்பா இப்படி பண் றீங்க? எனக்கு இதுல என்ன தெரியும். இன்னும் நான் இங்கிலிஷ் கூட ஒழுங்கா கத்துக்கல..." என்று சிணுங்க,

அவனோ அவள் கையைப் பிடித்து, "உனக்கு இங்கிலிஷ் தெரியணும்னு அவசியம் இல்ல அரசிம்மா. உழைச்சு முன்னேறனும்னு எண்ணம் இருந்தாலே போதும். கூட இருக்குறவங்களை கூட தோத்து போகாம பார்த்துக்குற அன்பு இருந்தாலே போதும்! என் கருவாச் சியை விட, இந்த இடத்துக்கு வர்றதுக்கு யாருக்குமே தகுதி கிடையாது அரசிம்மா..." என்று தலை சாய்த்து, கண்ணில் கனிவுடன் கூறியவன், அவளின் கன்னத் தைக் கிள்ள, அவளுக்குத் தான் அவனின் அன்பில் கண் கலங்கியது.

அங்கு இருந்தாலே, அவளின் காதலை காட்டி விடுவோமோ என்று பயந்து, "நான் வீட்டுக்கு போகட்டா..." என்று அவசரமாகக் கேட்டவளை, ஒரு நொடி புரியாமல் பார்த்தவன்,

"ஓகே டி. நீ போய் ரெஸ்ட் எடு..." என்றவன் வேலையில் மூழ்க, அறைக்கு வந்தவளுக்குத் தான், அழுகையும் புன்னகையும் சேர்ந்தே வந்தது.

அவன் தொட்ட கரங்கள் குறுகுறுக்க, பால்கனிக்கு வந்து நின்றவளுக்கு, இன்றெனப் பார்த்து திருமணம் செய்து வந்ததன் முதலான நினைவுகள் மனதில் ஆட, ஒவ்வொரு நினைவிலும் ஒரு புன்னகை அவள் அத ரத்தை வசீகரித்தது.

'இன்பா கிட்ட காதலை சொன்னா என்னை ஏத் துப்பாரா? அவர் ரியாக்ஷன் என்னவா இருக்கும்... ம்ம்?

ஒருவேளை அவரும் நான் சொல்றதுக்காக தான் வெய்ட் பண்றாரோ...?' என்று பலவாறாக சிந்தித்தவள்,

'அவருக்கு என் எழுதுன்னா ரொம்ப பிடிக்கும்ல. பேசாம என் எழுத்து மூலமே அவருக்கு காதலை சொல் விடலாமா?' என சிவந்த முகத்துடன் எண்ணியவன், போனை எடுத்து டைப் செய்தாள்.

கிறுக்கன் என்றே உன்னை நினைத்து

கிறுக்காகி விட்டேனடா!

பேசா மடந்தை என்றே உன்னை நினைத்து

பேச்சற்று நின்றேனடா!

தோழனென்றே உன்னை நினைத்து

தாரமாகி தொலைந்தேனடா!

ரசிகன் என்றே உன்னை நினைத்து

ரசிகையாகி உன்னில் கரைந்தேனடா!

என் எழுத்தை ரசிக்கும் வசியக்காரனே...

என்னை ரசிக்கவிருக்கும் காலத்தின்

ரகசியம் கூறடா...!

அக்காலத்திற்காய் காதலாகி

தவமிருக்கிறேன்...!

இப்படிக்கு,என் ரசிகனின் ரசிகை...!

என ஒவ்வொரு வார்த்தையை தட்டச்சு செய்யும் போதும், அவளின் காதல் மனம் சிறகடித்துப் பறக்க, முகமோ செவ்வானமாய் சிவந்து விட்டது. சரியாக அவ னுக்கு அதனை அனுப்பப் போகும் போது, தமிழின்பன் அவள் தோளை தட்டும் உணர்வு தோன்ற, சட்டென போனை பின்னால் மறைத்து கொண்டு திரும்பியவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தவன்,

"இங்க என்ன பண்ற கருவாச்சி?" எனக் கேட்டான் புருவ முடிச்சுடன்.

"சும்மா தான். கிளைமேட் நல்லாருக்கு அதான்..." என்று அவள் மென்று விழுங்க, அதில் வெண்பற்கள் தெரிய புன்னகைத்தவன்,

"சரி, வா வெளிய போலாம்..." என அழைத்ததில்,

"எங்க இன்பா?" என்று விழி விரித்தாள். ஏனென் றால், இதுவரை அவளுடன் அலுவலகம், கல்லூரி, கட்டட வேலை நடைபெறும் இடம் தவிர, வேறு எங்கும் அவன் சென்றதில்லை. அவளையும் அழைத்ததில்லை.

அது அவளுக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்க, அவனோ மேலும் விரிந்த புன்னகையுடன், "டின்னர்க்கு ஹோட்டல் போலாம். என் ட்ரீட்! அதுவும் என் கம்பனி சேர்மனுக்கு...!" என்று கண் சிமிட்ட, அதில் அழகாய் வெட்கம் படர, பெண்ணவள் தான் அவனைக் காண தடுமாறினாள்.

"போலாமா?" என்று தலையை ஆட்டி அவன் மீண் டும் கேட்க,

"நான் ரெடி இன்பா!" என்றாள் வேகமாக.

'எதற்கும் வெளியில் சென்று, பிறகே கவிதையை அனுப்புவோம். அப்போது தான் பொது இடத்தில் அடிக்க மாட்டான். வீட்டிற்கு வருவதற்குள் எப்படியும் சமாதானம் செய்து விடலாம்' என மனதினுள் கணக் கிட்டவள், நேர்த்தியாய் ஒரு புடவையை அணிந்து கொண்டு வர, அவனோ விழி விரித்து,

"கருவாச்சி... நானே சொல்லணும்னு நினைச் சேன் புடவை கட்டிட்டு வரச் சொல்லி... சூப்பர்!" என்று இரு விரலை மடக்கிப் பாராட்ட,

அவளோ முகத்தை மூடி, "போங்க இன்பா! எனக்கு வெட்கமா இருக்கு!" என நிலத்தில் காலை உதைத்தாள்.

அதில் பொங்கிய சிரிப்புடன், அவள் கையை எடுத்து விட்டு, "சரி சரி, ரொம்ப உதைச்சு மாடி வீட, தரைமட்டம் ஆக்கிடாத..." என்று கேலி செய்த வன் அவள் முறைப்பதை பொருட்படுத்தாமல் வெளி யில் சென்றான். ஒரு பிரம்மாண்டமான ஹோட்டலில் காரை நிறுத்தியதில், அதனை ஆ வென பார்த்தவ ளுக்கு, முதன் முதலாய் தன்னவனுடன் வெளியில் வந் ததே சிலிர்த்தது. அதுவும் தொழில், படிப்பு என எந்த பேச்சும் இன்றி ஒரு மாதிரியான அமைதியில் அவன் வர, அவளோ அந்த அமைதியை வெகுவாக ரசித்திருந்தாள்.

அவளுடன் உள்ளே வந்து கொண்டிருந்தவன், சட்டென நின்று, "ஒரு சின்ன ஓர்க் மறந்துட்டேன். ஒரு மெஸேஜ் மட்டும் அனுப்பிட்டு வரேன். டேபிள் நம்பர் 6. அங்க போய் உட்காரு நான் வரேன்..." என்று அவசரமாய் சைகை காட்டி விட்டு அவன் நகர, சரி என அவளுக்கு உள்ளே வந்தாள்.

ஆனால் ஆறாம் நம்பர் டேபிளில் ஏற்கனவே ஒருவன் அமர்ந்திருக்க, யோசனையுடன் அவன் முன் நின்றவள், அவன் நிமிர்ந்ததும் வியப்புடன் விழி விரித்தாள்.

"அட இது இன்பாவோட ஃப்ரெண்ட்ல... ஆனால் இவரு மகத்தா ஷ்யாமான்னு தெரியலையே" என்று பார்த்தவளுக்கு, இன்பாவின் போன் வால் பேப்பரில் இவர்களின் போட்டோவை பார்த்திருக்கிறாள். ஆனால் விவரம் ஏதும் கேட்டதில்லை.

தமிழரசியை கண்டதும், அவன், "ஹாய்...! உட்காருங்க!" என்று முகம் மலரக் கூற,

அவளோ 'இன்பா அவரோட ஃப்ரெண்ட்ஸ வர சொல்லி இருக்கேன்னு சொல்லவே இல்லையே' எனக் குழம்பியவள், அவனுக்கு ஒரு புன்னகையைக் கொடுத்து விட்டு அமர்ந்ததும்,

அவன் "நான் மகத்..." என்று ஆரம்பிக்க,

"ஓ தெரியுமே!" என்றாள் உடனே.

அதில் கண்கள் மின்ன, "என்னை எப்படித் தெரியும்...?" என கேட்டவனிடம்

"இன்பா தான் சொல்லிருக்காரு..." என்றாள் வெகுளியாக.

அவனோ புரியாமல் "இன்பா வா?" என்று முழிக்க,

"ம்ம் உங்க ஃப்ரெண்ட் தமிழின்பன் தான்..." என்றதில்,

அவளின் அழைப்பு அவனுக்கு விசித்திரமாக இருந்தாலும் "ஓ!" என சில நொடி அமைதியானவன், "உங்க கிட்ட அவன் வேற எதுவும் சொன்னானா?" என்று கேட்டான் தயக்கமாக.

அவளோ, வேற என்ன சொல்லணும் என்று தலையை சொரிந்தபடி பார்க்க,

மகத் "ஓகே ஓகே! நானே சொல்றேன். உங்ககிட்ட மேரேஜ் ப்ரொபோசல் பத்தி சொன்னானான்னு கேட்டேன்..." என்றதில் அவள் திடுக்கிட்டு,

"என்ன மேரேஜ் ப்ரொபோசல்? எனக்குப் புரியல..." என்றாள் மனம் லேசாக நடுங்கிய படி.

அவன் "உங்களுக்கு எனக்கும் மேரேஜ்..." என்று ஆரம்பிக்க, சட்டென இடத்தை விட்டு எழுந்திருந்தவள், அவனைத் தீயாக முறைக்க, அந்நேரம் அவளுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது.

"ஒய்! கருவாச்சி... நான் சொன்ன ட்ரீட் இது தான். உனக்கு நல்ல லைஃப் அமைச்சு குடுப்பேன்னு ப்ராமிஸ் பண்ண மாதிரி, உனக்கு சூப்பரா ஒரு மாப்பிள்ளை கூட பார்த்துட்டேன். அதுவும் எனக்கு திருப்தியா என் ஃப்ரெண்ட்டே மாப்பிள்ளை... ஐ ஆம் சோ ஹேப்பி. உனக்கு அவனை பிடிச்சிருக்கா கருவாச்சி? உங்கிட்ட முன்னாடியே சொல்லிருக்கணும் தான். ஆனால் ஒரு சர்ப்ரைஸா இருக்கட்டும்ன்னு தான் சொல்லல... உன் ரிப்ளைக் காக வெயிட்டிங்..." என்று அனுப்பி இருந்தவனின் வார்த்தைகள் அவளுள் அமிலத்தை ஊற்ற, இதயம் பலமாய் நடுங்கி வெளியில் வந்து விடும் போல் இருந்தது.

தன்னிச்சையாக கண்கள் கண்ணீரைச் சுரந்து ஆறாக பெருக்கெடுக்க,

மகத்தோ அவள் கண்ணீரைக் கண்டு பதறி “ஹே!” என்று பேச ஆரம்பிக்கும் முன், அவர்களின் திரும ணத்தன்று யாரோ எடுத்த புகைப்படம் ஒன்று, அவள் போனில் இருந்ததை எடுத்து, மகத்திடம் காட்டினாள்.

அந்தப் புகைப்படத்தை கண்டு அவன் வெகுவாய் அதிர, அவனைப் பார்க்க கூட செய்யாமல் தன்னை சுற்றி நடப்பது கூட உணராமல், உயிரற்று அந்த ஹோட் டலில் இருந்து வெளி வந்தவளுக்கு, அவனுக்கு அனுப் பவிருந்த குறுஞ்செய்தி நினைவு வர, அதனை சலன மின்றிப் பார்த்தாள்.

விரல் நடுங்க, அதனைக் கேவலுடன் அழித்து விட்டவள், வாயைப் பொத்தி அங்கேயே அமர்ந்து, தேம் பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

# அத்தியாயம் - 19

அழுது அழுது சோர்ந்து போன தமிழரசிக்கு, மீண்டும் தமிழின்பனிடம் இருந்து குறுஞ்செய்தி வந்தது.

"கருவாச்சி என்ன ஆச்சு? உனக்கு ஓகே வா? ஏதாவது சொல்லு... உனக்கு அவனை பிடிக்கலைன்னாலும் ஓகே தான். உனக்கு பிடிச்ச மாதிரி ஒருத்தனை உன் முன்னாடி கூட்டிட்டு வரேன். ம்ம்? பட் எதாவது சொல்லு. எனக்கு ரொம்ப நெர்வஸ்ஸா இருக்கு!" என்றவனின் குறுஞ்செய்தி ஒரு பதற்றத்தை தாங்கி இருந்தது.

அதில் மேலும் அவளுக்கு கண்ணீரே வர, கோபத்துடன் வீட்டிற்கு விரைந்தாள்.

'இவள் ஏன் ரிப்ளை பண்ணவே இல்லை' என்ற யோசனையுடன் பால்கனியில் நின்று, அந்த கடும் இருட்டை வெறித்திருந்தவன், பின்னால் அரவம் கேட்டுத் திரும்ப, அங்கு தமிழரசியைக் கண்டு திகைத்தான்.

"என்ன கருவாச்சி! இவ்ளோ சீக்கிரம் வந்துட்ட? அவன் உன்னை டிராப் பண்ணுனானா?" என்று விழியால் அவளை சிதைப்பது புரியாமல் வினா எழுப்ப,

அவனருகில் வந்து நின்றவள், ஓங்கி ஒரு அறை அறைந்தாள். அந்த அறையே அவளின் உச்ச பட்ச கோபத்தை வெளிக்காட்ட, புருவம் சுருக்கி குழப்பமாக அவளைப் பார்த்திருந்தவனுக்கு, மகத் போன் செய்து இருந்தான்.

அதனை எடுத்து காதில் வைத்தவனிடம், எதிர்மு னையில் மகத்,

“டேய் அசிங்க அசிங்கமா வாயில வருது. மவனே அங்க வந்தேன்... இருக்குற கோபத்துல உன்னைக் கொலையே பண்ணிடுவேன். கல்யாணம் ஆனதையும் சொல்லாம இருந்துட்டு, கட்டுன பொண்டாட்டியை...!” என்று கோபத்தில் வார்த்தை வராமல் தடுமாறியவன்,

“கிறுக்கு பிடிச்சுருச்சாடா உனக்கு?” என்ற கேள் வியை எழுப்ப,

போனை கட் செய்த இன்பா, “நான் நாளைக்கு பேசுறேன்.” என்று குறுஞ்செய்தி அனுப்பி விட்டு,

தமிழரசியைப் பார்த்து “என்ன ஆச்சு?” எனக் கேட் டான் அமைதியாக.

இங்கோ மகத் தலையில் கை வைத்து நொந்து போய் அமர்ந்திருக்க,

“ஏன்டா! வெண்ணை! ஃப்ரெண்ட் பொண்டாட்டி யைப் போய் நீ போட்டோ எடுத்து, போன்ல வைச்சுருந் ததால தான் இவ்ளோ குழப்பமும். உனக்கு என்ன நட்டு கழன்றுருச்சா?” என்று ஷ்யாம் மகத்தை வெகுவாய் வறுத்துக் கொண்டிருக்க, அவனை அடிபட்ட பார்வை பார்த்த மகத்,

“என்ன நடந்துச்சுன்னு தெரியாம பேசாத டா! அந்தப் பொண்ணை நான் தமிழோட ரிசெப்ஷன் அப்போ பார்த்திருக்கேன். நான் செல்ஃபி எடுக்கும் போது எதார்த்தமா அவள் பின்னாடி நிக்கிற மாதிரி, போட்டோ விழுந்துடுச்சு” என்று தயங்கியவன்,

பின் “ஒத்துக்குறேன் டா. அந்த பொண்ணை எனக்கு பிடிச்சுருந்துச்சு தான். அதான் அந்த போட்டோவை அழிக்காம வச்சுருந்தேன். அன்னைக்கு தெரியாம, வாட்ஸ் அப் டிபில அந்த போட்டோ வச்சுட்டேன். அதுல இருந்து தமிழ் என்கிட்ட அந்த போட்டோ பத்தியும். அந்தப் பொண்ணைப் பத்தியும் பேசி, என் வாயை பிடுங்கிட்டான். எனக்கு என்னடா தெரியும். அந்த லூசுப் பையன் கல்யாணம் பண்ணது. அதுவும் அந்தப் பொண்ணையே?” என்று கலங்கிப் போனவன்,

“அவளை லவ் பண்றியா, லவ் பன்றியான்னு கிட்ட தட்ட ஒரு மாசமா பேசி பேசி கடைசியில, மேரேஜ் பத்தி பேசுற அளவு கொண்டு வந்துட்டான். ஆனால் அவன் அப்பவும் சொன்னான் டா...! அந்த பொண்ணுக்கு ஒரு வேலை விபத்தா ஒரு மேரேஜ் ஆகி, விவாகரத்து ஆகிருந்தா, அப்பாவும் இதே மாதிரி அன்போட இருப்பியான்னு கேட்டான். நான் தான் அதைப் புரிஞ்சுக்கல. அப்பவே எனக்கு உறுத்துச்சு... அப்படிப் பார்த்தா அவன் கூட விவாகரத்து ஆனவன் தான், நான் இந்தப் பொண்ணை கல்யாணம் பண்றதைப் பார்த்தாவது, அவன் கல்யாணம் பண்ணிப்பான்னு நினைச்சேன். ஆனால்... சே!” என மேலும் நெக்குருகிப் போனவனுக்கு,

தமிழரசியின் கண்ணீர் முகமே கண் முன் வந்து சென்றது.

ஷ்யாம் தான், "என் பொண்டாட்டி டெலிவரின்னு ஒரு மூணு மாசம் உங்க கிட்ட சரியா பேசல. அதுக்குள்ள என்ன பண்ண முடியுமோ, அதை சிறப்பா பண்ணிட்டீங் கடா! நாளைக்கு இருக்கு அவனுக்கு... நீ பீல் பண்ணா தடா..." என்று அவனைத் தேற்ற முயன்றான்.

"கட்டுன பொண்டாட்டியை வேற ஒருத்தன கல் யாணம் பண்ண சொல்லி அனுப்பிருக்கீங்க. வெட்கமா இல்ல உங்களுக்கு?" என்று கண்ணில் நெருப்புடன் கேட்டவளை,

அவனும் சற்று கோபத்துடன் பார்த்து, "நான் என் னைக்காவது உன்னை வைப் னு சொல்லிருக்கேனா?" எனக் கேட்டான் கண்ணைச் சுருக்கி.

அதில் அவளுக்கு தான் தொண்டை வறண்டிட, அவனைக் கடுமையாக முறைத்தவளிடம், சற்று சாந்த மாகி, "இங்க பாரு அரசிம்மா. நான் என்ன பண்ணாலும் உன் நல்லதுக்கு தான் பண்ணுவேன். அதோட..." என்று பேசத் தொடரும் முன்,

"எது நல்லது... என்னை வேற ஒருத்தனுக்கு கல் யாணம் பண்ணிக் கொடுக்குறதா?" என்று ஆக்ரோஷத் துடன் கேட்டவள்,

"ஏன் இப்படி பண்றீங்க இன்பா?' என கண்ணில் நீர் திரையிட அவனைப் பார்த்தாள்.

"ப்ச்! அரசி, இது இப்போ இல்ல. நான் உன்னை கல்யாணம் பண்ணும் போதே, பிளான் பண்ணது தான். அப்போ இருந்தே, நான் உனக்கு மாப்பிள்ளை பார்த்துட்டு தான் இருந்தேன். ஆனால், நீ எனக்கு பிடிச்ச எழுத்தாளர்னு தெரியவும், இன்னும் பொறு

மையா உன்னை கையில வைச்சு தாங்குறவனா பார்க் கனுன்னு தான், இவ்ளோ நாள் எடுத்துக்கிட்டேன்.

ஆனால், இப்போ மகத்க்கும் உன்னை பிடிச்சு ருக்கு. இவனை விட உனக்கு கரெக்ட் மேட்ச் இருக்க முடியுமான்னு தெரியல அரசிம்மா. அதான்..." என்று அவன் பிடியிலேயே நிற்க,

அவளோ பல்லைக்கடித்து கொண்டு, "நீங்க பேசுறது கொஞ்சமாவது நியாயமா இருக்கா இன்பா...? சரி! இப்போ இதை பத்தி பேச வேணாம். முதல்ல டைவர்ஸ் அப்ளை பண்ணுங்க. அப்புறம் பார்க்கலாம்." என்றாள் முடிவாக. அவன் பேசும் தோரணையே சிறிதளவும் அவள் மேல் அவனுக்கு எந்த அபிப்பிராயமும் இல்லை என்று உணர்த்த, அந்த வலியே அவளை அதிகமாய் கொன்றது. அவ்வலியுடன் அவனிடம் வாதம் செய்ய அவளால் இயலவில்லை என்றே சற்று விட்டுப் பிடிக்க எண்ணி இவ்வாறு சொல்ல, அவனோ சிறிது நொடி அமைதியாகி இருந்து விட்டு,

"உனக்கும் எனக்கும் மேரேஜ் ரிஜிஸ்டர் பண்ணவே இல்லை அரசி. அன்னைக்கு ஜஸ்ட் தாலி தான் கட்டிருந்தேன். மத்தபடி சட்டப்பூர்வமாக நம்ம கல்யாணம் பண்ணல..." என்று மிகப்பெரிய குண்டை, அவள் தலையில் போட அவள் இடிந்து விட்டாள்.

அதிர்ந்த விழிகளுடன் அவனைக் கண்டவள், அவள் அணிந்திருந்த மஞ்சள் கயிறை வெளியில் எடுத்து, "அப்போ இதுக்கு பேர் என்ன இன்பா?" என்று கேட்டாள் ஏக்கத்துடனும் நடுங்கிய மனதுடனும்.

கூடவே, எதிலுமே தான் கையெழுத்து இடவில்லை என்ற எண்ணமே அவளுக்கு அப்போது தான்

வர, அவன் ஏன் விவாகரத்து கொடுக்கவில்லை என்ற காரணமும் தெளிவாகப் புரிந்தது. ஆனால் அதற்காக, கட்டிய தாலி வெறும் கயிறாகி விடுமா?

அவனோ சற்று எரிச்சலாகி, "காதலிச்சு, முழு மனசோட கல்யாணம் பண்ண அவளே இதை வெறும் செயினாத் தான் பார்த்தா. உனக்கு எப்படி இது தாலி ஆகும் அரசி. அதுவும் இத உன் கழுத்துல கட்டுன நிமிஷம், சத்தியமா எனக்கு ஞாபகம் இல்லை. கண்டிப்பா உனக்கும் இருக்காது." என்றான் அழுத்தம் திருத்தமாய் வாயையும் கையையும் அசைத்து.

அவனை வெறுமையாய் வெறித்துப் பார்த்தவள், "இப்போ என்ன தான் சொல்ல வர்றீங்க?" என்று இறுக்கத்துடன் கேட்க,

அவன் அவளருகில் வந்து, அவளின் கையைப் பிடித்து, "நீ மகத்தை  கல்யாணம் பண்ணிக்கோ கருவாச்சி..'" என்று கூறிட,

அவள், அவன் கண்ணைப் பார்த்து "ஐ லவ் யூ இன்பா!" என்றாள் சட்டென.

சரட்டென அவள் கையை விட்டிருந்தவன், "என் என்ன என்ன?" என்று எதுவும் புரியாமலே அவளிடம் வினவ,

அவளோ அவனை அழுத்தமாகப் பார்த்து, "நான் உங்களை லவ் பண்றேன்னு சொன்னேன். உங்களைத் தவிர வேற யாரையும், என்னால ஹஸ்பண்டா நினைச்சுக் கூட பார்க்க முடியாது!" என்று கூறும் போதே அவள் குரல் கமறிட, சில நொடிகள் அவன் முகம் திகைப்பையே தாங்கி இருந்தது.

அவளிடம் இருந்து இப்படி ஒரு வார்த்தையை அவன் எதிர்பார்த்து இருக்கவில்லை. 'என்னைப் போய் காதலிக்கிறேன் என்கிறாளே! இந்த முட்டாள் சிறு பெண்' என்று ஆர்ப்பரித்தவன்,

"என்ன பேசுறோம்னு தெரிஞ்சு தான் பேசுறியா, அரசி? உங்கிட்ட இருந்து இதை நான் எதிர்பார்க்கல. அன்னைக்கு உன் அப்பா கிட்ட எனக்கு எப்போவுமே நல்ல ஃப்ரெண்டா இருப்பன்னு தான சொன்ன..." என்ற அவனின் பார்வை அவளைக் குற்றம் சுமத்த,

அவளோ அவன் விழியில் இருந்து அவள் கருவிழியை நகற்றாமல், "அது எப்படி உங்களுக்குத் தெரியும்" என்றாள்.

"நான் அப்போ அங்க இருந்தேன். நீ பேசுனதை கேட்டதுக்கு அப்புறம் தான், உங்கிட்ட ஃப்ரெண்ட் ஆனேன். உன்னை என் குழந்தை மாதிரி நினைச்சேன்..." என்று சைகை புரிந்தவனை,

"நிறுத்துறீங்களா..." என்று கத்தலுடன் அதட்டியவள்,

"ஆமா, நான் அன்னைக்கு என் அப்பா கிட்ட சொன்னேன். எப்போவும் உன் ஃப்ரெண்டா இருப்பேன்னு. ஆனால் உங்களை விட்டுட்டு போய், வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிப்பேன்னு நான் சொல்லல இன்பா. இப்போவும் கடைசிவரை உங்க கூட தான் இருப்பேன்... எல்லாமுமா! என்னை இப்படி ஹர்ட் பண்ணாதீங்க இன்பா ப்ளீஸ்!" என்று மன்றாடலுடன் அவள் முடித்திருக்க, அவனோ தலையைப் பிடித்தான்.

“கடவுளே!” என்று நொந்து போனவன், சில நொடி அமைதியாகி விட்டு, ஏதோ எழுதுவது போல் சைகை புரிய, கண்ணில் மறைத்த நீருடன் அவனைப் பார்த்தவளுக்கு, அவன் பேசுவது புரியவில்லை.

“என்ன சொல்றீங்க...?” என்று புருவம் சுருக்கி அவனைப் பார்க்க,

அவளை லேசான நக்கல் இதழ் விரிப்புடன் பார்த்தவன், போனை எடுத்து, “நான் பேசுறதே உனக்குப் புரியல. இதுல என்னை லவ் பண்ணி, காலம் பூரா ஊமை பாஷை பேசப் போறியா? இது ஒன்னும் நீ எழுதுற கதை இல்ல அரசி. நிஜ வாழ்க்கை” என்று அனுப்பிவிட்டு, அவளைப் பார்வையால் சுட்டெரித்தான்.

அதனைக் கண்டு மேலும் கடுப்பானவள், “அது சரி! எத்தனை தடவை நீங்க பேசுனது புரியலைன்னு உங்க கிட்ட நான் கேட்டிருப்பேன். ஒரு தடவை இல்ல ரெண்டு தடவை. உங்களை என்னை விட புரிஞ்சுக்குற ஆள் வேற யாராவது இருக்காங்களா இன்பா? ஏன், அந்த சுஹானா கூட கிடையாது” என்றவள்,

பின், “ஆமா, இது கதை இல்லை இன்பா. அதைத் தான் நானும் சொல்றேன். கட்டுன பொண்டாட்டியை வேற ஒருத்தனுக்கு கல்யாணம் பண்றது கதையில வேணா நடக்கலாம். ஆனால், நிஜ வாழ்க்கையில அது ரொம்ப வலிக்குது இன்பா...” என்னும் போதே, அவள் தேம்பிய படி வார்த்தைகளைத் தேய்ந்தாள்.

அவள் கண்ணீரில் அவனுக்கு தான் மண்டை காய்ந்தது. பின், வேகமாக “என்ன நினைப்புல நீ என்னை லவ் பன்றேன்னு சொல்லிட்டு இருக்க அரசி? உனக்கு தான் ரெண்டாவது கல்யாணம் பிடிக்காதே...!

உன் கதையில கூட எழுதி இருந்தீல... யாரோ விட்டுப் போன சொந்தத்தை அவள் தொடரனும்... ஒரு மாதிரி குமட்டலைக் கொடுக்கும் ன்னு... அப்ப இப்போ மட்டும் என்ன?" என்று அவன் போனில் டைப் செய்து காட்ட, அதில் அதிர்ந்தவள், 'உண்மையில் அப்படி எழுதியது மட்டும் அல்ல, அவனை திருமணம் செய்த போதும், அதை தான் நினைத்தாள். ஆனாலும் இப்போது அவன் அவளின் உயிரல்லவோ!'

அவனைப் பாவமாகப் பார்த்தவள், "இன்பா... நான் கதையில என்ன வேணா எழுதியிருப்பேன். ஆனால் நான் வேற. என் எழுத்து வேற... அது ஏன் உங்களுக்கு புரியல இன்பா!" என்றாள் சோர்வாக.

"எப்படினாலும் அது உன் மனசுல இருந்து வந்தது தானடி? அத உன்னால மறுக்க முடியாது தான...?" என்று கண்ணாலேயே அவளை உருக்குலைத்தவனைப் பேச்சற்று பார்த்தாள்.

அதோடு அவன், "அது மட்டும் இல்ல அரசி. எனக்கு ஆக்சிடென்ட் ஆனதுக்கு அப்புறம், என்ன வேணா நடந்திருக்கலாம். ஆனால், அதுக்கு முன்னாடி நான் அவளை காதலிச்சதும் உண்மை. அவள் கூட மன சாலையும், உடம்பாலையும் மனப்பூர்வமா வாழ்ந்ததும் உண்மை...! நான் உனக்கானவன் இல்ல அரசி. உன் கூட என்னால எப்படி டி... உன்னால அதை ஏத்துக்க முடியாது அரசிம்மா. அருவருப்பா தான் இருக்கும்." என்றவனின் கண்கள் நீரில் நிறைந்திருக்க, முகமோ சொல்லொணா வேதனையை தாங்கி இருக்க,

"அப்படியே ஆனாலும், என்னால உன்னை லவ் பண்ண முடியாது. என்னைக்கும் நீ என் எழுத்தாளர், ஃப்

ரெண்ட் மட்டும் தான். இந்த நினைப்பை எல்லாம் தூக்கி எரிஞ்சுட்டு..." என்று கூறி முடிக்கும் முன், அவன் பேச்சில் திகைத்திருந்தவள், அவனை இறுக்கி அணைத்திருந்தாள்.

"என் இன்பாகிட்ட எனக்கு எந்த அருவருப்பும் இருக்காது இன்பா. ஐ லவ் யூ இன்பா! ஐ லவ் யூ சோ மச்!" என்றவளின் அணைப்பும், வதங்கிய குரலும், காதலும் தமிழின்பனை வெகுவாகப் பிழிய, கைகள் எல்லாம் நடுங்கியது.

தன்னை அடக்கிக் கொண்டு, அவளை படாரெனத் தள்ளி விட்டவன், சப்பென அடித்து, "ஒரு தடவை சொன்னா புரியாதா உனக்கு? என்னால உன் கூட வாழ முடியாதுடி. எல்லாரும் சொல்ற மாதிரி, நான் நான் இம்போடென்ட் தான். ப்ளீஸ் டி! உன்னையும் கஷ்டப்படுத்தி என்னையும் கஷ்டப்படுத்தாத..." என்று கிட்டத்தட்ட கெஞ்சும் நிலைக்கு சென்றவனிடம்,

"சும்மா ஏதாவது சொல்லாதீங்க. அதான் சரி ஆகிடும்ன்னு டாக்டர் சொல்லிருந்தாங்களே, அப்படியே ஆகலை என்றாலும் பரவாயில்ல. நம்ம குழந்தை தத்து எடுத்து வளர்க்கலாம். இப்போ மாதிரியே அப்புறமும் இருக்கலாம். எனக்கு உங்க கூட இருக்கணும். அவ்ளோ தான்..." என்று திட்டவட்டமாகக் கூறியவளை, செய்வதறியாது பார்த்தான்.

"சொல்லிக்கிட்டே இருக்கேன். நீ சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிட்டு இருக்க. ஒழுங்கா கல்யாணம் பண்ணிட்டு இங்க இருந்து கிளம்பு! இல்ல..." என்று அனலாய் அவளை எச்சரித்தவன் கண்கள் சிவப்பேறி இருக்க,

அவளோ பொங்கிய அழுகையை அடக்கிக் கொண்டு, "என்னை போக சொல்றதுக்கு, எதுக்கு சேர் மன் ஆக்கணும்? ஹான்?" என்றாள் கோபமாக.

"என் ஃப்ரெண்டா இருந்தாலும், உன்னைக் குறைவா நினைக்கக் கூடாது அரசி. உன்கிட்ட எல்லாமே இருக்கணும்னு நினைச்சேன். அதான்..." என்று கடும் கோபத்துடன் குறுஞ்செய்தி அனுப்பி விட்டு, அவளை பாராமல் திரும்பி நின்றான்.

தமிழரசியோ, அவனின் உதாசீனத்தில் நிலை குலைந்து, அப்படியே சரிந்தவள், முகத்தை மூடி தேம்பி தேம்பி அழுதிட, அவனால் அவளின் கதறலைக் கேட்க இயல வில்லை.

சில நொடி பொறுத்தவன், அவளருகில் முட்டி போட்டு அமர்ந்து, அவள் முகத்தை அவனை பார்க்கும் படி செய்ததில், அவள் உதட்டை பிதுக்கி தேம்பலுடன் அவனைப் பார்த்தாள்.

அவனோ, "திடீர்னு என்ன ஆச்சு அரசிம்மா உனக்கு...? நீ என் செல்ல கருவாச்சி தான? நான் சொன்னா கேட்ப தான... பிளீஸ் அரசிம்மா. நீ கல்யாணம் பண்ணிக்கோயேன்..." என்று கெஞ்சலுடன் கொஞ்சலாய் உதட்டசைவிலும், கண்ணில் நீருடனும் அவளை சமன் செய்ய முற்பட,

அவளோ அவன் சட்டையைப் பிடித்து,

"போ... நான் ஒன்னும் உன் கருவாச்சி இல்ல. போ..!" என்று அவனைத் தள்ளி விட்டவள்...

“என்னை ஏமாத்துறல்ல நீ? ஏன்டா இப்படி பண்ற...? என்னை போகச் சொல்லாத இன்பா...” என்று வீடு அதிரக் கத்தியவள்,

இறுதியில் “என்னைப் போகச் சொல்லாத இன்பா...” என்று அவன் மேலேயே சாய்ந்து அழுது தீர்த்தாள்.

அவளின் காதல், அவனை உருக்குலைக்க, மீண்டும் அவள் முகத்தை திருப்பி, அவனைப் பார்க்க வைக்க, அவள் தான், “உன்னை பார்க்க மாட்டேன் போ... உன்னை பார்த்தா என்னை ரொம்ப ஹர்ட் பண்ற. நான் பார்க்க மாட்டேன்...” என்று கண்ணையும் முகத்தையும் இறுக்கி மூடிக்கொள்ள,

அவன் சிறிது நேரம் அவள் தலையை வருடி விட்டு அவளை அமைதி படுத்த முயன்று பின் முடியாமல், அவளை விட்டு விலகினான்.

“நீ என்னைக்குமே எனக்கு ஃப்ரெண்ட் மட்டும் தான் அரசி. உன்னால என்னை ஏத்துக்க முடிஞ்சாலும், என்னால உன்னை ஏத்துக்க முடியாது!” என்று தீர்க்கமாக குறுஞ்செய்தி அனுப்பியவன், குளியலறைக்குள் புகுந்து கொண்டான்.

ஷவரைத் திறந்து விட்டு, தன் மனதில் எழுந்த சூட்டை குறைக்க, தண்ணீரில் நனைந்தவன், கண்ணீரிலும் ஒரு சேர நனைந்தான்.

முட்டாள்தனமாக அவளின் மனதை கலைத்து விட்டு, அவள் கண்ணீருக்கு தானே காரணம் ஆகி விட்டோமே என்று தன்னையே வெறுத்தவனின் மனம், ஏனோ அவள் முதல் முதலில் பட்டாம்பூச்சி பிடித்த

கணத்தில் நின்று, அவளுடனான நினைவுகளிலேயே பயணிக்க, இறுதியில் “உன்னால என்கூட வாழ முடி யாது கருவாச்சி...” என்று ஏக்கத்துடன் முடித்திருந்த வன், சுருண்டு அங்கேயே அமர்ந்து விட்டான்.

# அத்தியாயம் - 20

20 தேய்ந்த நிலவுடன் கன்னியவளும் அந்த மையிருட்டில் தலைவனின் புறக்கணிப்பில், கண்ணீரில் தேய, சில நாழிகை பால்கனியின் கம்பியில் தலை சாய்த்து, உறையும் பனியைப் பொருட்படுத்தாது, காய்ந்த நீர் சருகுகள் கன்னத்தில் தடமேற்றிட, தன்னையும் மீறி கண்ணயர்ந்தாள் தமிழரசி.

வெடுக்கென விழிப்பு தட்டியதின் பிறகே, சுற்றம் உணர்ந்தவளுக்கு மீண்டும் நீர்ச்சுரப்பிகள் விழியை பதம் பார்க்க, முயன்று அடக்கிக் கொண்டு, உள்ளே வந்தவள் தமிழின்பனைத் தேடினாள். அறையில் அவன் இல்லாதது, அவளுக்கு ஒரு பதற்றத்தைக் கொடுக்க, போனை தேடிப் பார்த்தவளுக்கு அதுவும் கட்டில் மேலேயே இருப்பதைக் கண்டு, நெஞ்சம் படபடத்தது.

பின், குளியலறையில் இருந்து நீர் சொட்டும் சத்தம் கேட்பது போல் இருக்க, குளியலறைக் கதவைத் தட்டினாள். “இன்பா! உள்ள இருக்கீங்களா?” என்று சத்தம் கொடுக்க, அவளுக்கு அப்போதும் நீர் சொட்டும் பதிலே வந்தது.

நல்லவேளையாக, அவன் சரியாக தாழ் போடாத தால், கதவை லேசாக அழுத்தியதும் திறந்து விட, தயக் கத்துடன் உள்ளே சென்று பார்த்தவள் அதிர்ந்து விட் டாள்.

ஷவரின் அடியில், சுவற்றில் சாய்ந்து அமர்ந்தபடி, உடை எல்லாம் ஈரத்துடன், குளிரில் பற்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டு இருக்க, கண்களோ மயக்கத்தில் மூடி இருந்தது அவளின் உயிரானவனுக்கு.

வெகு நேரம் தண்ணீரை திறந்து விட்டிருந்ததால், டேங்கில் தண்ணீர் காலியாகி அதுவும் தன் ஓட்டத்தை நிறுத்தி இருந்திருக்கிறது என்று உணர்ந்தவள், வேக மாக அவனருகில் சென்று, ஷவரை நிறுத்தி விட்டு, அவனை எழுப்பினாள்.

“இன்பா! இன்பா!” என்று அவன் கன்னத்தை அவள் தட்டிட, அவனின் உடலோ குளிரில் தூக்கிப் போட்டது.

“ஐயோ! இப்படி ஈரமா இருக்காரே? எவ்ளோ நேரம் இப்படி இருக்காரோ தெரியல?” என்று நொந்தவளுக்கு, அவன் கொளுத்தும் வெயிலிலேயே ஹீட்டர் போட்டு, சுடு தண்ணீரில் தான் குளிப்பான் என்று தெரியும். ஆனால், இப்போது பச்சைத் தண்ணீரில், அதுவும் இந்த மழைக் காலத்திற்கு ஏதுவாய், அது இன்னும் குளிர்க் கட்டியாக இருந்த தண்ணீருக்கு அடியில் நின்றது, அவனை மயங்கச் செய்திருந்தது.

“இன்பா! எந்திரிங்க இன்பா! ஏன் இன்பா இப்படி பண்றீங்க!” என்று அழுகுரலில் அவனை நகர்த்த முயன் றவள்,

“என்னமோ நீங்க லவ் சொல்லி, நான் ஒத்துக்காத மாதிரி, நீங்க இங்க வந்து உங்களை கஷ்டப்படுத்திட்டு இருக்கீங்க. நியாயமா இதெல்லாம் நான் பண்ணனும்? திமிரு பிடிச்சவன்...” என்று சத்தமாகவே தமிழின்பனை திட்டிய அரசி,

“கண்ணை திறங்க இன்பா! ஐயோ... உடம்பு இப் படி சுடுதே!” என வெகுவாய் காயப்பட்டுப் போனவள், அவனை தூக்க முயன்று தோற்றுப் போனாள்.

“எருமை மாடு மாதிரி வளர்ந்துருக்க இன்பா! உன்னை நான் இழுத்துட்டு கூட போக முடியாது போல! இப்போ நான் என்ன பண்ணுவேன்!” என்று திணறிப் போனவள்,

துவாலையை கொண்டு வந்து, அவன் முகத்தை யும் தலையையும் அழுந்த துடைத்து விட்டவள், அவன் சட்டையை கழற்றி விட்டு, அவனின் நெஞ்சில் அவளின் உள்ளங்கை சூட்டைக் காட்ட, அவனின் நடுக்கம் அப் போதும் நிற்காமல், கண்கள் சொருகியே இருந்தது.

என்ன செய்வதென்று அறியாமல் தவித்து போன பேதையவளுக்கு, கண்டிப்பாக உதவிக்கு ஆள் வேண் டும் என்று தோன்ற, வீட்டினரையும் கூப்பிட தோன்றாமல் சிந்தித்தவள், பின் ஒரு முடிவெடுத்து, தமிழின்பனின் போனை எடுத்து, மகத்திற்கு போன் செய்தாள்.

அவ்வளவு நேரம் வரையிலும், மகத்தும் ஷ்யாமும் உறங்காமல் பேசியபடியே இருக்க, தமிழின் எண்ணை கண்டு கடுப்பானான்.

“அந்த நாய் தாண்டா போன் பண்றான்” என்று கடுப்படித்த மகத், போனை எடுத்து,

"டேய்! இப்போ என்னடா உனக்கு... என்கிட்ட செருப்படி வாங்கப் போற" என தன்னை மறந்து கத்த,

"ஹெலோ!" என்றாள் தமிழரசி.

அதில் தடுமாறியவன், "ஹ ஹலோ!" என,

"நான் உங்க ஃப்ரெண்ட்டோட வைஃப் பேசுறேன்" என்றவள், "வைஃப்" என்பதை அழுத்திச் சொல்ல, அதில் எச்சிலை விழுங்கியவன்,

"சொல்லுங்க" என்றான் சுதியிழந்த குரலில்.

"இங்க உங்க ஃப்ரண்டு பாத்ரூம்ல மயங்கி இருக் காரு. கொஞ்சம் சீக்கிரம் யாராவது ஹெல்ப்க்கு வாங்க... ப்ளீஸ்..." என்ற உத்தரவில் சிறியதாக கெஞ்சலை கலந்து விட்டு போனை வைத்தவள், மீண்டும் இன்பா வின் அருகில் சென்று அவனை எழுப்ப முயன்றாள்.

அவள் சொன்னதில் திகைத்த மகத் தான், ஷ்யாமை கூட்டிக்கொண்டு உடனே கிளம்ப, இவர் கள் எப்போது வந்து இவனை எப்போது வெளியில் அழைத்து வர,

"பேசாம மாமா, லோகேஷையே கூப்பிடலாம்..." என்று சட்டென அறைக்கதவை திறந்து வெளியில் வரப் போனவள்,

தமிழின்பனின் அறை வாசலில் கதவை தட்டு வோமா வேண்டாமா என்று தனக்குள் தர்ணா போராட் டம் செய்து தயங்கி நின்று கொண்டிருந்த லோகேஷைக் கண்டாள்.

இவளை கண்டதும், அவன் திரு திரு விழிக்க, அவள் என்னவென்று பார்த்தாள்.

“இல்ல, ஏதோ சத்தம் கேட்டுச்சு அதான்...” என்றவனுக்கு அப்போதிருந்து தமிழரசி அழும் சத்தம் கேட்டது. அப்போவே வந்து பார்க்கலாம் என்றால், அவனின் குற்ற உணர்ச்சி அவனை பிடித்து அழுக்க, இறுதியில் எந்தச் சத்தமும் இல்லையே என்ன ஆச்சு என்று மிகவும் பதறி விட்டான்.

அரசி தான், “ஓ! இந்த ரூம்ல இருந்து பேசுனா வெளிய கூட கேக்குமா... நான் கூட சவுண்ட் ப்ரூப் ரூம்ன்னு நினைச்சேன்” என அப்போது கூட அவனைச் சுட்டு வைக்க, அவன் சுருங்கிய முகத்துடன் திரும்பி நடக்கப் போனான்.

பின் அவளே, “ஒரு நிமிஷம்” என அழைத்து, விவரம் சொன்னவள், “அவரை தூக்க ஹெல்ப் பண்ணு...” என்று கூறி முடிக்கும் முன்,

“என்ன ஆச்சு?” என்று விருட்டென அறைக்குள் நுழைந்தவன், தமிழின்பன் கிடந்த கோலம் கண்டு, முதன் முதலில் உள்ளுக்குள் ஏதோ உடைவது போல் உணர்ந்தான்.

அவனை “அண்ணா” என்று அழைக்கக் கூட, அவனுக்கு கூசிப் போக, உதட்டை கடித்த படி அப்படியே நின்றவனை,

“டேய்! வேடிக்கை பார்க்கவா உன்னை வரச் சொன்னேன். வந்து தூக்கு...” என்று தமிழின்பனின் ஒரு கையை எடுத்து அவள் தோளில் போட்டுக் கொண்டவள் லோகேஷை அதட்ட, அவன் வேகமாக வந்து அவ

னின் மற்றொரு கையை அவன் தோளில் போட்டுக் கொண்டான்.

இருவருமாக, அவனை கட்டிலில் கிடத்தி இருக்க, உடனே, வேறு உடையை எடுத்து லோகேஷிடம் கொடுத்தவள், "அவருக்கு ட்ரெஸ் மாத்தி விடு..." என்று கூறி விட்டு, கசாயம் வைப்பதற்காக அடுக்களைக்குள் சென்றாள்.

ஆனால், எப்படி என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல், வேகமாக அவளின் அம்மா ரேவதிக்கு போன் செய்ய,

அர்த்த ராத்திரியில் அவளின் எண்ணைக் கண்டு, பதறியவர், "என்ன ஆச்சு தமிழு? உனக்கு ஒன்னும் இல் லைல" என்று கேட்க,

அவளோ "இல்லைம்மா, கசாயம் எப்படி வைக் கன்னு சொல்லு! அவர்க்கு காய்ச்சல் அடிக்குது!" என நேரடியாக விஷயத்திற்கு வர, அவளின் குரலிலே ஒரு அவசரத்தை உணர்ந்தவர், கேள்வியேதும் கேட்காமல் செய்முறையைச் சொன்னார்.

தட்டு தடுமாறி அவள் ஒவ்வொரு பொருளாக தேடிக் கொண்டிருக்க, நடக்கும் கலவரம் அறிந்து பத்மா அங்கு வந்து விட்டார். இப்போது கால் நன்றாக குண மாகி இருக்க,

"என்ன பண்ணப் போற?" எனக் கேட்டார் தமிழி டம்.

அவள், போனை கட் செய்து விட்டு, "ம்ம், ஒரு டம்ளர் விஷம் வைக்கப் போறேன். வேணுமா?" என்று சுள்ளென கேட்டுவிட, அதில் அவருக்கு முகம் கறுத்தாலும்,

"நீ சாதா தண்ணி வைச்சு கொடுத்தாலே அப்படி தான் இருக்கும்" என்று முணுமுணுத்திட, அதில் அவரை முறைத்தாள்.

பின், அவரே, "தள்ளு" என அவளை நகர்ந்து நிற்க சொல்லி விட்டு, பக்குவமாக கஷாயத்தை வைக்க, அவள் தான் இது எதையும் உணரும் நிலையில் இல்லை.

இன்பா எப்போது கண் விழிப்பான் என்ற கேள்வியே, அவளைப் போட்டு வாட்ட, அந்த கஷாயத்தை ஆற வைக்கக் கூட பொறுமையற்று, "போதும் போதும் குடுங்க. அப்படியே கொஞ்சம் சுடு தண்ணி வைச்சுக் கொண்டு வாங்க" என்று போற போக்கில் கட்டளையையும் கொடுத்து விட்டுச் சென்றாள்.

அதற்குள், லோகேஷ் தன் தமையனின் உடையை மாற்றி விட்டு, சோர்ந்து போயிருந்த அவனின் முகத்தையே பார்த்தான். தன் தாய் இறந்த பிறகு, தந்தையாக அவன் காட்டிய பாசமும் கண்டிப்பும், அந்த வயதில் அவனுக்கு சிறையாக தோன்றியது ஏனோ, இப்போது மனதை வலிக்கச் செய்ய, 'தம்பியா இல்ல, சாதாரண மனுஷனாக் கூட தான் இல்லையே' என்ற சிந்தையில் ஆழ்ந்தவனை

"டேய்! நகருடா!" என்று தள்ளி விட்ட அரசி, கஷாயத்தை ஒரு ஓரமாக ஆற வைத்து விட்டு, தைலத்தை எடுத்து தன்னவனின் உள்ளங்கையில் சூடு பறக்கத் தேய்த்தாள்.

"இன்பா! என்னை பாருங்க இன்பா!" என்று புலம்பிக் கொண்டு, அவன் நெற்றியிலும் தேய்த்தவள், திரும்பி லோகேஷை ஒரு பார்வை பார்த்தாள்.

அவனோ இப்போ என்ன செய்ய என்று புரியாமல் அவளையே பே வென பார்த்திருக்க, இப்போது அவளின் ஒரு பார்வையிலேயே, அவனும் கொஞ்சம் தைலத்தை எடுத்து, தமிழின்பனின் உள்ளங்காலில் நன்றாக தேய்க்க ஆரம்பிக்க, அதற்குள் சுடு நீருடன் பத்மாவும் உள்ளே வந்து விட்டார்.

அவரிடம் நீரை வாங்கியவள், அவனை தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு, நடுங்கிக் கொண்டிருந்த அவனின் கன்னத்தை பிடித்து, அவன் வாயில் சிறிது சிறிதாகப் புகட்டினாள். மற்றொரு கையோ அவன் முதுகை ஆதூரமாக தேய்த்த படி இருக்க, அவளின் உடல் சூட்டில் அவனுக்கும் தற்போது நடுக்கம் குறைந்திருந்தது.

இப்போது, கசாயத்தை எடுத்து அவனின் உதட்டில் வைத்தவள், "எந்திரிங்க இன்பா!" என்ற படி கொடுக்க, அந்த கசப்பில் அவன் முகம் சற்று சுளித்திருந்தான்.

கண்ணை திறக்க முடியாதவாறு கண்கள் வேறு எரிந்திருக்க, கஷாயத்தை குடிக்காமல் உறக்கத்திலேயே மறுத்தான்.

"ப்ச்! கொஞ்சம் குடிங்க இன்பா! அப்போ தான் சரி ஆகும்!" என்று அதட்டலைப் போட்டவள், வம்படியாக அவனுக்கு ஊற்றி விட,

இப்போது நிற்பதா போவதா என்ற ரீதியில் பத்மாவும் லோகேஷும் நின்றிருந்தனர்.

அந்நேரம் மகத் மற்றும் ஷ்யாம் அங்கு வந்து அவனை பார்த்து பதறிட,

மகத் “என்ன ஆச்சு?” என்றான் அதிர்ந்து.

அவளோ, “ம்ம் நொண்ண ஆச்சு!” என்று அவனை எரிக்கும் பார்வை பார்த்தவள்,

தன்னவனுக்கு மருந்திடுவதில் கவனமாக, மகத் தான் செய்வதறியாது மருண்டு நின்றான்.

ஷ்யாமோ, அங்கு அவனின் தம்பியும் அத்தையும் நிற்பதை ஏதோ எட்டாவது அதிசயம் போல் பார்த்து விட்டு,

‘இப்ப என்ன ஆச்சுன்னு கேட்டா நமக்கும் இதே பதில் தான் கிடைக்குமோ’ என்றெண்ணி அமைதியாக நிற்க, அவள் தான் ஷ்யாமை முறைத்து,

“இப்படி வந்து வேடிக்கை பார்க்க தான் உங் களை வரச் சொன்னேனா? இவருக்கு பீவர் எவ்ளோ இருக்குன்னு பார்த்து ஊசி போடச் சொல்லுங்க உங்க ஃப்ரெண்ட...” என்று அவனையும் விட்டு வைக்காது அதட்ட,

லோகேஷுக்கு சிரிப்பு முட்டிக்கொண்டு வந்தது. சிரித்தால் செத்தோம் என்றுணர்ந்தவன், அமைதியாக நிற்க,

மகத், அடுத்த நொடி தன் நண்பனின் அருகில் வந்து அவனைச் சோதித்தான். அப்போதும் தமிழின்பன் அரசியில் நெஞ்சிலேயே இருக்க,

மகத், "அவனை தலைகாணில படுக்கை வைங்க..." என்றான் மெதுவாக.

"ப்ச்" என்றவள், அவன் கையில் வைத்திருந்த தெர்மாமீட்டரைப் பிடுங்கி, அவனைச் சற்றும் அவளை விட்டு நகர்த்தாமல், இன்பாவின் வாய்க்குள் திணித்து உடல் சூட்டைப் பார்த்தவள்,

"103 இருக்கு... சீக்கிரம் ஏதாவது ஊசி போடுங்க. கொண்டு வந்துருக்கீங்களா...? இல்ல வெறும் கையை வீசிட்டு தான் வந்தீங்களா?" என்று எடக்கு மடக்காகப் பேச,

எதற்கும் இருக்கட்டும் என்று அவன் தேவையா னதை எடுத்து தான் வந்திருந்ததால் "இருக்கே" என்று தலையாட்டினான்.

"ம்ம்" என்றவள், இன்பாவின் முடியைக் கோதி விட, "ரொம்ப பண்றாளே! நல்லவேளை இவள் கிட்ட இருந்து தப்பிச்சோம்..." என்று எண்ணியவனுக்கு, தன் நண்பனுக்கு நல்ல வாழ்க்கையே அமைந்திருக்கிறது என்று திருப்தியாய் உணர்ந்தான். சிறிதும், அவன் மன தில் கலங்கமோ, அவளை பார்த்ததும் ஒரு ஏக்கமோ வரவில்லை. அப்பொழுதே உணர்ந்து கொண்டான், தான் பிடிக்கும் என்றது, வெறும் ஒரு ஈர்ப்பே என்று.

இப்போது, இன்பாவிற்கு மயக்கம் மாறி ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்று விட, மகத் ஏதோ கேட்க வரும் முன், "எல்லாரும் போய் தூங்குங்க! நாளைக்கு பேசிக்க லாம் எதுவா இருந்தாலும்" என்று உத்தரவிட்டவள்.

கூடவே, "அந்தக் கதவை சாத்திட்டு போய்டுங்க..." என்று சேர்த்துக் கூற,

ஷ்யாம் தான், 'இவளை எப்படி இவன் கல்யாணம் பண்ணுனான்...! அநியாயமா மாட்டிக்கிட்டேயே மச்சான்...' என்று இன்பாவை சற்று பாவமாகப் பார்த்தவனுக்கு, ஏனோ பல நாள் மனதில் இருந்த நண்பனின் வாழ்க்கையைப் பற்றிய பாரம் இறங்கி இருந்தது.

நால்வருமே அவளை லேசாக முறைத்து விட்டு, வெளியில் செல்ல,

இன்பாவைப் பார்த்த அரசி, "அப்படி என்னடா உன்னை கஷ்டப்படுத்திருக்கிற அளவு உனக்கு கோபம் வருது. மூஞ்சிலேயே குத்தணும் உன்ன...! சாருக்கு நாங்க வெறும் ஃப்ரெண்ட் தானோ?" என்று அவனின் கன்னத்தை செல்லமாகக் கிள்ளியவள், அவனை இறுக்கி அணைத்துக் கொண்டு,

"எனக்கு புரியுது இன்பா உன்னோட பீலிங்ஸ். அதுவும் நான் செகண்ட் மேரேஜ் பத்தி எழுதுன வாசகம் கண்டிப்பா உன்னை கஷ்டப்படுத்திருக்கும். ஆனால், இன்பா நீ அவள் கூட மனப்பூர்வமா வாழ்ந்துருந்தாலும் அது, உன்னோட கடந்த காலம் தான். நிகழ்காலத்துல அவள் ஞாபகம் கூட உனக்கு வராது இன்பா! அது உனக்குப் புரியுதா இல்லையா?" என்று கேள்வியாய் கேட்டிட,

உறக்க கலக்கத்தில் "ம்ம்" மட்டும் கொட்டினான்.

அதில் ஆர்வமாக அவன் புறம் திரும்பிப் படுத்தவள், "என்ன ம்ம்? உன் இந்த 'ம்ம்' அ நான் எப்படி எடுத்துக்கட்டும் ரசிகரே!" என்று அவன் கன்னம் வருடியபடி அவனை ரசித்துக் கொண்டு கேட்க,

“கருவாச்சி” என உதட்டசைத்து, அவளை மேலும் நெருக்கி, அவள் கழுத்தில் புதைந்து இறுக்கி அணைத்துக் கொண்டு இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அவனின் வாசத்தை சுவாசித்தபடி அவளும் உறங்கி விட, மறுநாள் முதலில் உறக்கம் கலைந்தது தமிழின்பனுக்கு தான். முந்தைய நாள் அரசி சூடி இருந்த பன்னீர் பூவின் வாசம், அவன் மூக்கைத் துளைக்க, அந்த மணத்தின் சுகந்தத்தை லேசான முறுவலுடன் அனுபவித்தவன், அதன் பிறகே நன்றாக விழித்து, அவனின் அரவணைப்பில் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்த தமிழரசியை கண்டு திகைத்தான்.

‘நான் எப்படி பெட்டுக்கு வந்தேன். பாத்ரூம்ல தான இருந்தேன்.’ என்று அதி தீவிரத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தவன், அப்போது தான், தன் உடை மாற்றி இருந்ததையும் கண்டு அதிர்ந்து, அவளை உலுக்கி னான்.

கண்ணைக் கசக்கியபடி விழித்த தமிழரசி, “குட் மார்னிங் இன்பா! காய்ச்சல் இப்போ எப்படி இருக்கு?” என்று அவன் நெற்றியில் கை வைத்து வினவ, அதனை தட்டி விட்டவன்,

“நேத்து நைட் என்ன ஆச்சு?” எனக் கேட்டான் கோபத்துடன் கூடிய சைகையில்.

அவளோ, “நேத்து நைட் மட்டும் இல்ல இன்பா... எல்லா நைட்டும் இருட்டானா தூங்க தான் செய்வோம். ஒரு சில புத்தர்கள் மட்டும் தான், அர்த்த ராத்திரி யில ஷவர்க்கு அடியில நின்னு தியானம் பண்ணுவாங்க” என்று நக்கலுடன் கூறிட, அதில் அவளை முறைத்த வன்,

“என் ட்ரெஸ் யாரு மாத்தி விட்டா?” எனக் கேட்டான் பல்லைக்கடித்த படி.

அவளோ, “ம்ம்! ஓடிப்போன உங்க பொண்டாட்டி தான்!” என்று திமிராக பதில் கூற, அவன் நெற்றிக் கண்ணை திறந்திருந்தான்.

அவள் சலிக்காமல் அவனை முறைத்து விட்டு, குளிக்கச் செல்ல, அவனுக்கு தான் தலை வலித்தது. அறைக்குள் இருக்கவே மூச்சு முட்டிட,

கீழிறங்கி வந்தவனை கண்ட, பத்மா, “இப்போ எப்படி இருக்கு தமிழ்” எனக் கேட்க, அவன் அவருக்கு பதில் கூறாமல் தோட்டத்துக்கு வந்து விட, அவர் தான் வாடி போனார்.

அங்கு ஏற்கனவே, ஏதோ சிந்தனையில் இருந்த லோகேஷ் தமையனைக் கண்டதும், அவன் கண்ணை பார்க்க இயலாமல், “இப்போ ஓகே வா அண்ணா!” எனக் கேட்க, அவன்தான் வீட்டினரை விசித்திரமாகப் பார்த்து விட்டு, மீண்டும் அறைக்கே சென்றான்.

கூடவே, ‘எதுக்கு என்னை இப்படி விசாரிக்குறாங்க?’ என்று குழப்பமும் வர,

அதன் பிறகே, அரசி அவனுக்கு காய்ச்சல் பற்றி கேட்டது நினைவு வர, தண்ணீரில் நனைந்ததால் காய்ச்சல் வந்திருக்கிறது என்று புரிந்து கொண்டான்.

இதில் ஷ்யாம் வேறு, குறுஞ்செய்தி அனுப்பி,

“மச்சான் எந்திரிச்சுட்டியா? காய்ச்சல் பரவாயில்லையா?” என்று கேட்க,

'வீட்டுல இருக்கிறவங்களுக்கு தெரிஞ்சா அதுல ஒரு நியாயம் இருக்கு. இவனுங்களுக்கு எப்படி தெரிஞ் சுது...?' என்று குழம்பியவன்,

குளித்து முடித்து, சரசரக்கும் பிங்க் நிற காட்டன் புடவை ஒன்றைக் கட்டிக்கொண்டு, தலை துவட்டியபடி வெளியில் வந்தவளை, அப்படியே பார்த்துக் கொண்டு நின்றவனுக்கு ஏனோ அவளை எப்போதும் போல் பார்க்க இயலவில்லை. ஒரு தடுமாற்றம் அவனை மீறித் தோன்றிட, அதனை மறைத்துக் கொண்டு,

"என் ஃப்ரெண்ட்ஸ்க்கு எப்படித் தெரியும்?" எனக் கேட்டான்.

அதற்கு அவள், "அதை உங்க ஃப்ரெண்ட்ஸ் கிட் டயே கேளுங்க? ஏன் அந்த வீணாப் போனவனுங்க ளுக்கு வாய் இல்லையா?" என்று துடுக்காய் பேசிவிட்டு, அவனை இடித்த படி அவனைத் தாண்டிச் செல்ல, அவன் கடுப்பில் பல்லை கடிக்கும் சத்தம் இங்கு வரைக் கேட்டது.

அதன் பிறகே, ஷ்யாம் மூலம் முந்தைய நாள் அவள் அடித்த கொட்டத்தை அறிந்து கொண்டவ னுக்கு,

லோகேஷ்ஷும், பத்மாவும் உதவி செய்தது தான் பெரிய ஆச்சர்யத்தைக் கொடுத்தது.

பின், அவளைக் கண்டு கொள்ளாது கிளம்பி வெளியில் வர, அங்கோ கோபாலனும் ரேவதியும் வந்தி ருந்தனர் கையில் பழத்துடன்.

அவர்களைப் புரியாமல் அவன் பார்த்திட, கோபாலன், "தம்பி உங்களுக்கு இப்போ காய்ச்சல் பரவாயில்லையா? நைட்டு தமிழு போன் பண்ணவும், ஒரே பதட்டமா போச்சு. அதான் காலைலயே நேரத்துல உங்கள பார்த்துட்டு போலாம்னு வந்தோம்!" என்று கூறியதில்,

'அடிப்பாவி! எல்லார்கிட்டயும் இப்படி தம்பட்டம் அடிச்சு வச்சுருக்கியே?' என அவனின் பார்வை அரசியை மொய்த்தது.

# அத்தியாயம் - 21

'எல்லார்கிட்டயும் சொல்லி வச்சுருக்கா' என்று தமிழின்பன் அரசியை முறைக்க, அவள் அவனைக் கண்டு உதட்டைச் சுளித்தாள்.

சிறிது நேரம் கழித்து, அவளின் பெற்றோர் விடை பெற்றதும், "உள்ள வா!" என கண்ணை காட்டி விட்டு, அவன் அறைக்குள் புக, அவளும் உள்ளே வந்து என்னவெனப் பார்த்தாள்.

"உன் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டு இருக்க?" என்று எரிக்கும் பார்வையுடன் அவன் வினவ,

அவளோ தோளை குலுக்கி "உங்களை தான்! அதான் நேத்தே சொன்னேனே!" என்றாள் சாதாரணமாக.

அரும்பாடு பட்டு தன்னுள் கோபத்தை அடக்கிய இன்பா, "சின்ன பொண்ணு மாதிரி பேசு! நான் காலேஜ் முடிக்கும் போது, நீ ஒன்பதாவது தான் படிச்சுட்டு இருந்த அரசி! இப்ப வரை அதே குட்டிப் பொண்ணா தான் எனக்குத் தெரியுற? சொன்னாப் புரிஞ்சுக்கோ!" என்று தீர்க்

கமான பார்வையில் அவளை எச்சரித்தான் பொறுமை யாக.

அவளோ, கையை கட்டிக்கொண்டு "ஹோ! நீங்க குழந்தை குழந்தைன்னு சொல்லி, நான் உங்களுக்கு குழந்தையா தான் தெரியுறேனா? நிஜமா நான் காதலை சொன்னதுக்கு அப்புறமும் கூட, நீங்க என்னை குழந் தையா தான் பார்க்குறீங்க அப்படித்தான?" என்று நக்க லுடன் கூடிய குரலில் கேட்டிட,

இன்பா, "ஆமா!" என்று தலையசைத்தான் உறுதி யாக.

"அப்புறம் எதுக்கு ரசிகரே! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னை வச்ச கண்ணு வாங்காம பார்த் தீங்க?" என இரு விழி புருவத்தையும் உயர்த்தி, சிறு நகையுடன் கேட்டிட,

அதில் திடுக்கிட்டவன், "நான் எப்போ பார்த்தேன்? உளறாத...!" என்று வெளியில் செல்லப் போனான்.

அவன் கையைப் பிடித்த தமிழரசி, அவனருகில் நெருங்கி நின்று, "சரி இவ்ளோ நாள் நீங்க என்னைப் பார்த்த பார்வை வேறயா இருக்கட்டும். இப்போ இந்த செகண்ட் என்னைப் பார்த்து சொல்லுங்க...! இப்போ கூட என்னை குட்டி பொண்ணா, உங்க ஃப்ரெண்டா, உங்க எழுத்தாளரா மட்டும் தான் நினைக்கிறீங்களா இன்பா'?" என அவளை ஊடுருவிக் கொண்டிருந்த இன்பாவின் கருவிழிகளை தன் பார்வையால் காயம் செய்த படி, கேட்டவளை அதிர்ந்து பார்த்தான்.

'எப்படி சொல்வான் தன் குழந்தை என மட் டும்? அவளின் கண்களில் அவனுக்கான காதலைக்

கண்ட நொடியே, அவன் மனம் இது வரை தனக்குள் போட்டிருந்த அத்தனை வேலிகளையும் தூள் தூளாக நொறுக்கி இருந்ததே! அவளுக்கு இரண்டாம் திரும ணம் பிடிக்காததோடு, தன்னுடன் இருந்தால் அவளுக் கும் தேவையில்லாத அவப் பெயர், என்று மனதினுள் லேசாக அவளின் மேல் ஒரு ஓரத்தில் தோன்றிய காத லையும், அணை வைத்து தடுத்து, தன் சிறிய எண் ணங்களுக்கும் முட்டுக்கட்டை போட்டு, மனதைக் கட் டுப்படுத்தி அல்லவா வைத்திருந்தான். இப்போது எப் படிக் கூற முடியும் வெறும் தோழியென்று... எப்போதோ அவள் அவனின் உணர்வாகிவிட்டாளே!' என தனக் குள் வெள்ளமாய் பாய்ந்த மனவலைகளை வெளிக்கூற இயலாமல், அதனை கண்ணிலும் காட்டாமல் அவளை வெறுமையாகப் பார்த்தவன், அவளிடம் நேரடியாக பேச முடியாமல் குறுஞ்செய்தி அனுப்பினான்.

"இப்போவும் நீ என் குட்டி பொண்ணு தான் கரு வாச்சி! உன் மேல எனக்கு அக்கறை இருக்கு. அன்பு இருக்கு. பாசம் இருக்கு. ஆனால் காதல் இல்ல. சில உணர்வுகள் சில காயத்தால மரத்து போறது மட்டும் இல்ல, மரணித்துக் கூட போயிடுது...! என்னோட மர ணித்த உணர்வுகளோட உன்னால வாழ முடியாது அரசிம்மா! எனக்கு உன் லைஃப் ரொம்ப முக்கியம். தயவு செஞ்சு என்னைப் புரிஞ்சுக்கோ!" என்ற அவனின் கெஞ்சல் வார்த்தைகளைப் பார்த்த அவளுக்கு, நீர் வரி கள் கன்னத்தில் தெரிய, மீண்டும் அவனருகில் வந்த வள்,

"நீங்களும் புரிஞ்சுக்கோங்க இன்பா! சில உணர் வுகள் காயத்தால மட்டும் இல்ல, நேசத்தால கூட மர ணித்துப் போயிடுது...! என் உணர்வுகளும் உங்களோட நேசத்துல மட்டும் தான் உயிர் பெறும் இன்பா! என்

லைஃப் முக்கியமா தெரியுற உங்களுக்கு, என் மனசு எப்படி முக்கியம் இல்லாம போச்சு இன்பா?" என்று கேள்வி கணைகளை ஆதங்கத்துடன் கொட்டியவளை, அவனும் பாவமாகவே பார்த்தான்.

பின், சற்று கோபத்துடன், "உன்னை எல்லாரும் ரெண்டாவது பொண்டாட்டின்னு சொல்லுவாங்கடி அது ஓகே வா உனக்கு..." என்று காற்றில் கையசைத்து, உதட்டில் வலியைத் தாங்கி அவன் கேட்க,

"இப்போ வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணா மட்டும் என்ன சொல்லுவாங்க இன்பா? அப்பவும் அது எனக்கு ரெண்டாவது கல்யாணம் தான...? இந்த கல்யாணம் சட்ட பூர்வமா பதியலைன்னா மனைவி இல்லைன்னு உங்களுக்குத் தான் தெரியும் இன்பா. ஆனால், இந்தத் தாலி என் கழுத்துக்கு எப்ப வந்துச்சோ, அப்போவே எல்லார் முன்னாடியும் நான் உங்க மனைவி ஆகிட்டேன்.

சத்தியமா இங்க வரும் போது, நீங்க சொன்ன தாலி எனக்கு பெருசா தெரியல. இங்க இருந்து போகணும்னு மட்டும் தான் நினைச்சேன். ஏன் உங்க பாஸ்ட் பத்தி சொன்னப்போ கூட, நான் உங்களை மனசார என் நண்பனா மட்டும் தான் நினைச்சேன்...! ஆனால் எப்போ உங்களை நான் காதலிக்க ஆரம்பிச்சேனோ அப்போவே, ரெண்டாவது கல்யாணத்தை பத்தின என்னோட எண்ணம் சுத்தமா மாறிடுச்சு. சில மாற்றங்கள் தான மனிதர்களே! ஏன் அந்த சுஹா மாறலையா? சரி, நான் தெரியாம தான் கேக்குறேன்... ஒருவேளை, நம்ம ரெண்டு பேருக்கும் முன்னாடியே கல்யாணம் ஆகி, உங்களுக்கு சுஹாக்கும் நடந்த ஆக்சிடென்ட் எனக்கும் உங்களுக்

கும் நடந்துருந்தா, அப்போ நீங்க என்னை விட்டு போயி ருந்துருப்பீங்களா இன்பா?" எனக் கேட்டாள் தவிப்பாக.

அவனோ அவள் பேச்சில் திக்கற்று நிற்க, என்ன சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாளே என நொந்தவன், பின் இறுகிய முகத்துடனும், விரக்தி புன்னகையுடனும் அவளைப் பார்த்தவன் விறு விறு வென அவளைத் தாண்டிச் சென்றான். அந்நேரம் அவ னின் குறுஞ்செய்தி அவளைத் தழுவியது.

"அவள் அன்னைக்கு எடுத்த அந்த புத்திசாலித் தனமான முடிவை தான் நானும் எடுத்துருப்பேன்... நீ சொன்ன மாதிரி சில மாற்றங்கள் தான மனிதர்களே! நானும் அப்படி போயிருப்பேனோ என்னவோ! எல்லா ரும் யோசிச்ச மாதிரி நீயும் புத்திசாலித்தனமா முடிவெடு அரசி. நான் உனக்கு வேணாம்னு!"

இதனை பார்த்தவளுக்கு கண்ணீர் பொத்துக் கொண்டு வர, வேகமாக அவனை துரத்திச் சென்று அவன் முன் நின்றாள். அதற்குள் அவன் கீழேயே இறங்கி இருக்க, "புத்திசாலித்தனத்துக்கும் சுயநலத் துக்கும் நூலளவு தான் வித்தியாசம் இன்பா. அவங்கள் லாம் புத்திசாலித்தனம்னு நினைச்சு சுயநலமா நடந்துக் கிட்டாங்க. ஆனால், நான் புத்திசாலியா இல்ல, சுயந லக்காரியாவே இருந்துட்டுப் போறேன். எனக்கு நீங்க வேணும் இன்பா! எந்தக் காரணத்தைக் கொண்டும், என்னால உங்களை விட்டுப் போக முடியாது. நீங்க என்னை விட்டுப் போனாலும்!" என்று உறுதியாக நிற்க,

அவளை அடிக்க கையை ஓங்கியவன், அரு கில் லோகேஷும் பத்மாவும் இருப்பதோடு, அப்போது தான் அவனின் நண்பர்கள் இருவரும் வந்திருப்பதைக்

கண்டு, தன்னை அடக்கிக் கொண்டு, அவளின் கையை இழுத்து நகர்த்தி நிற்க வைத்து விட்டு வெளியில் சென் றான்.

அவன் அடிக்கப் போனது மேலும் அழுகையை கொடுக்க, யார் முகத்தையும் பார்க்காமல் மீண்டும் அறைக்குள் தஞ்சம் புகுந்தவள், கண்ணீரில் கரைந் தாள்.

ஷ்யாம், “டேய் அவனை போய் நாலு வார்த்தை கேட்போம் டா!” என்று மகத்திடம் கூற,

“இருடா! பாவம் இந்தப் பொண்ணு. முதல்ல இவங்களுக்குள்ள என்ன பிரச்சனைன்னு கேட்போம். அவன் சொல்லவே மாட்டான்...”

ஏண்டா நைட் வாங்குன பேச்சுலாம் பத்தாதா என் பது போல் அவனைப் பார்த்தான். இருவரும் யோசனை யில் நிற்க,

பத்மாவிற்கு ஒன்றும் புரியவில்லை.

லோகேஷோ உள்ளே சென்று போனை எடுக்க வும், வைக்கவுமாக இருந்தான். ஷாலினிக்கு போன் செய்யத் தான் இந்த அக்கப்போர்.

அன்று அவளை அந்த மருத்துவமனையில் பார்த் தது தான். அதன்பிறகு அவளும் பேசவில்லை. அவனும் பேசவில்லை. இந்த மூன்று மாத இடைவெளியும் அவ ளின் பிரிவும், குற்ற உணர்ச்சியும், அவனுக்கு வேறொரு நரகத்தைக் காட்டி இருக்க, ஏதோ ஒரு தவிப்பில் அவ ளிடம் பேசாமல் தவித்தான்.

இங்கு ஷாலினியும் தான். தன் மேல் கோபமாக இருக்கிறானோ? என்று மேனி மெலிந்திருந்தவள், தமிழியரசியின் கல்லூரியில் தான் முதுநிலை கல்வி இரண்டாம் வருடம் பயில்கிறாள். லோகேஷிற்காகவே அவளிடம் தோழியான தமிழரசிக்கு, ஏனோ அவளை தவறாக நினைக்க முடியவில்லை. பணக்காரியாக இருந்தாலும் அவளும் அரசியிடம் இயல்பாகப் பேசி, அன்பாக இருந்தது அவளுக்கு உறுத்தலைக் கொடுக்க, அவளிடம் நடந்ததைக் கூறி விட்டாள்.

"நீயே சொல்லு ஷாலு! ஒருவேளை, உன் ஹஸ்பண்டை யாராவது இந்த மாதிரி சொன்னா உனக்கு எப்படி இருக்கும்... அதே மாதிரி கோபம் தான எனக்கும் வரும்! அதுவும் அவரோட சொந்தத் தம்பியே!" என்று குத்தலுடன் கேட்க, அவள் அதிர்ந்து போனாள். அவனுக்குள் இப்படி ஒரு குணம் இருப்பதே அறியாமல் இருந்தவளுக்கு, அவனை இழக்கவும் மனம் இல்லை.

ஆனால், அவனின் எண்ணத்தை மாற்றியே ஆக வேண்டும் என்றே, அரசிக்கு உதவி செய்தாள். இப்போது அவனின் பாராமுகம் அவளுக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், மேற்கொண்டு என்ன செய்ய என்று அறியாமலேயே இருந்தாள்.

இதற்கு மேல் முடியாதென்று லோகேஷ் ஷாலினிக்கு போன் செய்து விட, அவன் எண்ணைக் கண்டவள் அடுத்த நொடி எடுத்து இருந்தாள். ஆனால், சில நொடிகள் அங்கு அமைதியே நிலவ, லோகேஷ் தான் அதனைக் கலைத்தான்.

"அது... உன் ஃப்ரெண்ட்க்கு என்ன பிரச்சனைன்னு தெரியலை. அழுதுட்டு இருக்கா! நீ என்

னன்னு வந்து கேட்குறீயா?" என மேம்போக்காக பேசிய வனின் மனம் அவளைக் காண வேண்டும் என அடித் துக் கொள்ள, இன்னொரு குற்ற மனமோ இத்தன் டனை தேவை தான் என எக்களித்தது.

அதில் புருவம் சுருக்கியவள், "தமிழுக்கு இன் னொரு க்ளோஸ் ஃப்ரெண்ட் இருக்கா. அவளை வேணா வரச் சொல்லவா?" எனக் கேட்க, மனமோ என்னை 'வா' ன்னு சொல்லேன் என்று மன்றாடியது அவளுக்கு.

அவள் பேச்சில் முகம் சுருங்கியவன், "ஓ! எதுனா லும் ஓகே தான்" என கூறியதில், ஒன்றும் சொல்லாமல் போனை வைக்க போனாள் கனத்த மனதுடன்.

பின், அவனே, "ஷாலு" என அழைக்க, போனை வைக்காமல், "கூப்டீங்களா?" எனக் கேட்டாள் ஆர்வ மாக.

"ம்ம்! உனக்கு என் மேல நம்பிக்கை இருந்தா நீயும் வா...! என் அண்ணனை விட்ட மாதிரி, என்னை நம்பி வந்த பொண்ணையும் விட்டுட மாட்டேன்." என்று கூறும் போதே அவன் குரல் கலங்கி இருக்க, உடனே போனை வைத்து விட்டான் விழியில் நீர்த்திரையுடன்.

"கடைசியில இந்த பேய் பங்களாவுக்கு நம்மளை யும் வரவைச்சுட்டாளே!" என்று நொந்து கொண்டு, தமி ழின் வீட்டிற்குள் வந்தாள் சந்தனா ஷாலினியுடன்.

ஷாலினிக்கு விழிகள் இரண்டும் தன்னவனையே தேட, அவன் பேசிய கடைசி வார்த்தை அவளை வதைத்தது.

பத்மா, ஷாலினியை வரவேற்று தமிழின் அறையைக் காட்ட, இருவரும் அங்கு சென்றனர்.

அரசி எங்கோ வெறித்த படி இருக்க, அவளைக் கண்ட இருவரும் பதறி,

"என்ன ஆச்சுடி? ஏன் இப்படி இருக்க...?" என்று கேட்டதில்,

அவள் இருவரையும் ஒரு நொடி விழித்துப் பார்த்து விட்டு, "நீங்க ஏன் வந்தீங்க" எனக் கேட்டாள்.

சந்தனா தான், "இந்த மாதிரி லவ்வர்ஸ சேர்த்து வைக்கிற வேலை எல்லாம் என்னை மாதிரி முரட்டு சிங்கிள் ஃப்ரெண்ட் தான பண்ணியாகணும். அதான் வந்தேன். ஆனால், இவள் ஏன் வந்தாள்னு நான் காரணம் சொல்லனுமா என்ன?" என்று ஷாலினியையும் வாரியவளை முறைத்தவள்,

"என்ன ஆச்சு தமிழு?" எனக் கேட்க,

அவள் "ப்ச்!" என்று மனதில் இருந்த அனைத்தையும் கொட்டி இருந்தாள்.

"இப்போ இன்பா மகத்தை கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி சொல்றாரு சந்து... இவருக்கு கிறுக்கு தான் புடிச்சிருக்கு!" என்று மூக்கை உறிஞ்ச,

ஷாலினி அதிர்ந்தாள். கூடவே சந்தனாவும், "ஐயோ!" என்று தலையில் கை வைத்தாள்.

"தமிழு, எனக்கு தெரிஞ்சுச்சு. நான் சொன்னேன்ல இன்பா அண்ணாவை எங்கயோ பார்த்த மாதிரி இருக்

குன்னு... கடவுளே! அவரு நம்ம டாக்டர் மனோகரி அத்தை இருக்காங்கள்ள அவங்க பையனோட ஃப்ரெண்டு. நான் ஸ்கூல் லீவ்ல அத்தை வீட்டிற்கு வரும் போது, இன்பா அண்ணாவைப் பார்த்திருக்கேன். இப்போ தான் ஞாபகமே வருது" என்று விழித்தவளிடம்,

"யாரு உன் அத்தை பையன்" என்று கேட்டாள் ஒரு மார்க்கமாக.

அதில் அவள் தான் கப்சிப் என ஆகி விட்டாள்.

"அது... அது... நீ சொன்ன மகத் தான். அவன் தான் ஆஸ்திரேலியால இருந்து நேத்து வந்ததா அத்தை சொன்னாங்க!" என்று குரலில் வலு இல்லாமல் கூற,

"சுத்தம்...! ஏண்டி இவ்ளோ நாளா உனக்கு ஞாபகமே வரலையா?" என அவள் கோபமாக கேட்க,

"அட, அவன் காலேஜ் முடிச்சதுமே, ஆஸ்திரேலியா போய்ட்டான். படிச்சான் படிச்சான் படிச்சான்... இப்போ வரை மேற்படிப்பு படிச்சுட்டே இருந்துட்டு, ஸ்பெசலிஸ்ட் ஆகி தான், இந்தியா வந்து இறங்கி இருக்கான். புள்ள படிப்ஸ் வேற. அவனைப் பார்த்தா ஏதாவது அட்வைஸ் சொல்லிக் கிட்டே இருப்பான். அதுனால அவன் நம்பர் கூட நான் வாங்கி வைக்கல" என்று கையை விரிக்க,

"உன் நொத்தை பையன் கீழ தான் இருந்தான்" என்றாள் நக்கலாக.

"ஆத்தி இது வேறயா? அப்போ இது பேய் பங்களா மட்டும் இல்ல தமிழு. கௌன்சிலிங் பண்ற இடமும் இது தான்" என்று மிரண்டவளை,

“இவ ஒருத்தி” என்று அடக்கிய ஷாலினி,

“இப்போ என்ன தான் தமிழு பண்றது? மாம்ஸ் கிட்ட எப்படியாவது பேசி கரெக்ட் பண்ணு தமிழு!” என்றாள்.

“நீ லோகேஷ எப்படி கரெக்ட் பண்ணன்னு அவள் கிட்ட டிப்ஸ் குடு. யூஸ் ஆகும்ல...!” என்று அவளை வார,

சிறிதாய் வெட்கப்பட்டவள், “நான் கோபம் வந்தா அமைதி ஆகிடுவேன். அதுலயே அவர் வந்து பேசிடுவாரு” என்று நெளிய,

சந்து, “அப்போ மூணு மாசமா அவன் என்ன கோமால இருந்தானா...? பேச வேண்டியது தான...!” என்றாள் சுள்ளென. அவள் உள்ளுக்குள்ளேயே மறுகுவது அவர்களுக்கும் தெரியும் தானே!

அரசியோ, கண்ணீரைத் துடைத்து விட்டு, “மேடம் அதான் என்ன சமாதானம் பண்ற சாக்குல சைட் அடிக்க வந்துருக்காங்க, இல்ல ஷாலு” என்று கலாய்த்தவள்,

“அவன் மாறிட்டான் ஷாலு” என்றாள் மென்மையாக.

அந்நேரம், ஷ்யாமும் மகத்தும் தான் லோகேஷிடம் பேசி விட்டு, பத்மாவுடன் தமிழரசியின் அறைக்கு வந்தனர்.

லோகேஷிற்கு பல நாள் கழித்து கண்ட தன் காதலியின் முகம் மனதில் கல்வெட்டாக, அவளும் அவனையே பார்த்திருந்தாள்.

இங்கோ மகத் சந்தனாவை கண்டு, "தனு இங்க என்ன பண்ற?" என்று புருவ முடிச்சிடுடன் கேட்க,

அவளோ, "சார் என்ன பண்றீங்க இங்க?" எனக் கேட்டவள், "அந்த தமிழ் உங்க ஃப்ரெண்டுன்னா இந்தத் தமிழ் என் ஃப்ரெண்ட்!" என்றாள் அவனைக் குறுகுறு வெனப் பார்த்து.

'கொய்யால, அத்தைக்கே தெரியாம பொண்ணு பார்க்குறியா? இருடி உன்னைப் போட்டுக் குடுக்குறது தான் என் அடுத்த வேலை...' என்று அவனை வறுத் திருந்தவளை திகைத்து தயங்கியபடி பார்த்தவன், இப் போது அரசியைப் பார்த்தான்.

அவள் எந்த பாவனையும் அற்று அமைதியாக இருக்க,

அவனோ நேராக "சாரி மா! அவன் உன்னை கல் யாணம் பண்ண விஷயமே எனக்குத் தெரியாது. அவன் யாரோ ஒரு பொண்ணுன்னு சொல்லித்தான் என்னை வரசொன்னான். அவன் வைப் என்று தெரிஞ்சதுக்கு அப்புறமும் அப்படி செய்ற அளவு நான் மோசமான வன் இல்ல..." என்று முகத்தில் வேதனையைத் தாங்கிக் கூறிட, சந்தனாவுக்கு தான் என்னவோ போல் ஆகி விட் டது.

அவனை பற்றி நன்கு அறிந்திருந்தவளோ, "ஆமா தமிழு, ஏதோ தெரியாம பண்ணிருப்பான்" என்று அத்தை மகனுக்கு வக்காலத்து வாங்க,

அரசி "உன் சப்போர்ட்டை கொஞ்சம் நிறுத்து றியா? எனக்கு தெரியும் கண்டிப்பா இவர்கிட்ட இன்பா கல்யாணம் ஆனதை சொல்லிருக்க மாட்டாருன்னு.

அப்படி சொல்லிருந்தா இவரும் வந்திருக்க மாட்டாரு. என் இன்பா யாரும் இல்லாம தவிச்சப்போ கூட இருந்து பார்த்துக் கிட்டது இவங்க ரெண்டு பேர் தான். கண் டிப்பா இவங்க அவருக்கு துரோகம் நினைக்க மாட்டாங் கன்னு தெரிஞ்சதுனால தான், நேத்து உன் நொத்தை பையன் கிட்ட எங்க கல்யாண போட்டோவை காட்டிட்டு வந்தேன். அப்போவாவது அவருக்கு நடக்குறது புரியட் டுமேன்னு...!" என்று சடசடவென பொரிய, அவளின் புரி தலில் ஆண்கள் இருவரும் தான் சிலிர்த்தபடி நின்றனர்.

லோகேஷோ அவள் வார்த்தையில் மேலும் காயம்பட்ட மனதுடன் இறுக, பத்மாவிற்கு தர்ம சங்கட மாக இருந்தது.

ஷ்யாம் தான், "நீ கவலையே படாத சிஸ்டர். உன்னை அவன் கூட சேர்த்து வைக்க வேண்டியது எங்க பொறுப்பு. இல்லடா!" என்று மகத்திடம் அபிப்ராயம் கேட்க,

"ம்ம்... கண்டிப்பா! ஆனால் அவன் என்ன ஐடியால இருக்கான்னே தெரியலையே..." என்று குழம்பினான்.

லோகேஷ், "நான்... நான் வேணா ஏதாவது ஐடியா சொல்லவா?" என சிறிய குரலில் கேட்க,

தமிழரசி, "ப்ச், இப்போ எனக்கு யாரும் ஹெல்ப் பண்ண வேணாம். அவரை நானே பிக் அப் பண்ணிக்கி றேன்." என்று யோசனையில் மூழ்க,

லோகேஷ், மேலும் வதங்கிய குரலில், "நான் பண்ண ஒரு தப்பை சரி பண்ண, ஒரு சான்ஸ் குடுங்க அண்ணி... ப்ளீஸ்!" என தலையைக் குனிந்த படி கேட்ட தில்,

“அடேய், நீங்க போடுறதுல்லாம் மொக்க பிளானா இருக்கும். அதான் வேணாம்னு சொல்றேன். இப்போ எதுக்கு நீ ஒரு செண்டிமெண்ட் சீன் போட்டுக்கிட்டு இருக்க...! அப்புறம் இந்த அண்ணி நொண்ணி எல் லாம் வேணாம். உன் அண்ணாவுக்கு எப்ப உங்க மேல கோபம் போகுதோ, அப்போ தான் இந்த உறவு முறையை என்னால ஏத்துக்க முடியும்” என்று திட்டவட் டமாக கூறி விட்டவளுக்கு, அவர்களைப் பார்த்தாலும் பாவமாக தான் இருந்தது. ஆனால், இன்பாவின் மன நிலை இந்த விஷயத்தில் அவளுக்குப் புரியவில்லை.

பின், ஷாலினி சங்கடப்படுவதை உணர்ந்து, “சரி சொல்லு உன் ஐடியாவை...” எனக் கேட்க,

அதில் கண்கள் மின்ன, “பெரியப்பா உன்னைத் திட்டுனதுக்கு அண்ணா கோபப்பட்டாருல, அதே மாதிரி அத்தை உன்னைத் திட்டுனா, அப்போ கோபப்பட்டு, இன்னும் உன் மேல பாசம் ஆகிடுவாரு, எப்படி?” என்று பெருமையாய் கேட்க,

“அட அட அட! உன் அத்தையை வீட்டை விட்டு வெளிய போன்னு எவ்ளோ நேக்கா சொல்ற” என்றாள் நக்கலுடன்.

அதில் அவளை முறைத்தவன், பத்மாவின் புறம் திரும்ப, அவர் “அவன் என்னை வெளிய அனுப்புனா லும் பரவாயில்ல, இதை ட்ரை பண்ணிப் பார்க்கலாம்...” என்று கூறியதில்,

மகத் தான், “எனக்கு லேசா தலை சுத்துது மச் சான்...” என்று ஷ்யாமை பிடித்தான்.

அதில் சந்தனா பதறி, “என்ன ஆச்சு அத்தான்...?” என அவனருகில் சென்று பிடிக்க, வெகு நாட்களுக்கு பிறகு அவளின் “அத்தான்” என்ற அழைப்பு, அவனுக்கு புன்னகையை தந்தது.

“ம்ம்... இவங்க பேசுற டயலாக் கேட்டு தான் மயக்கம் வருது...” என அவன் கேலியாக உரைத்திட,

ஷ்யாமோ “உனக்காவது மயக்கம் தான் வருது... எனக்கு ரெண்டு ஹார்ட் அட்டேக் வந்துருச்சு...” என்று மொக்கை போட, மற்றவர்கள் தான் இருவரையும் தீயாக முறைத்தனர்.

பின், தமிழின்பனின் கார் சத்தம் கேட்க, அனைவரும் கீழே ஆஜராகி இருந்தனர். தாங்கள் இருந்தால் கண்டுபிடித்து விடுவான் என்று ஷ்யாமும் மகத்தும் கிளம்பி இருக்க, கூடவே பெண்கள் இருவரும் அவர்களுடன் கிளம்பி இருந்தனர்.

லோகேஷ் “ம்ம் ஸ்டார்ட்” என்று கண்ணைக் காட்ட,

பத்மா, “அறிவில்லை உனக்கு... இப்படி தான் இன்டீசண்டா நடந்துப்பியா” என்று வசனம் வராமல் தன் போக்கில் கத்த,

அரசி லோகேஷிடம், “ஐயோ! உன் அத்தை பேசுறது கொஞ்சம் கூட ரியலா இல்லடா... உன் அண்ணாவுக்கு கோபம் வர்ற மாதிரி பேசச் சொன்னா, இது சிரிப்பு வர்ற மாதிரி பேசுது...” என்று நொந்து போக,

அவனோ “இதுக்காக ஆக்டிங் பண்ண சௌகார் ஜானகியையா வரச் சொல்ல முடியும்... இருக்கிறதை

வைச்சு அட்ஜஸ்ட் பண்ணு அண்ணி...” என்று முணுமுணுக்கும் போதே, தமிழின்பன் வந்து விட, பத்மா மேலும் திட்ட ஆரம்பித்தார்.

“உன்னால தான் என் வீட்டுல ஒரு குடும்பம் பிரிஞ்சுது... எப்போ தமிழே உன்னை அடிக்க கை ஓங்குனானோ அப்போவே நீ இங்க வீட்டுல இருக்கக் கூடாது... வெளிய போ!” என்று அவள் கையை பிடித்து இழுக்க, கவனிக்க வேண்டியவனோ இதனைக் கண்டு கொள்ளவே இல்லை.

“இன்பா! உன் அத்தை என்னை வெளியே போக சொல்லுது” என இன்பாவை பார்த்து உதட்டை பிதுக்கினாள்.

அவனோ தோளை குலுக்கி “வெளிய போ!” என்று விட்டு அறைக்குள் செல்ல, உண்மையிலேயே அவள் கண்ணில் நீர் ஊற்றெடுத்தது.

லோகேஷும் பத்மாவும் அவளை இப்படி சொதப்பிடுச்சே என நொந்து பார்க்க, அவள் பொங்கிய நீருடன் விறு விறு வென இன்பவைத் தேடிச் சென்றாள்.

“அவங்க என்னை வெளிய போகச் சொன்னா, போ ன்னு சொல்ற இன்பா! நான் உனக்கு அவ்ளோ தானா?” என்று அவன் சட்டையை பிடித்து கேள்வி கேட்டவளிடம்,

“ஆமா! அவ்ளோ தான்” என்ற விழிமொழியில் பதிலளித்தவனை, மேலும் கீழும் மூச்சு வாங்கப் பார்த்தவள், குளியலறைக்குள் சென்று கதவை அடைத்து கொண்டு, ஷவரை திறந்து விட்டு அதில் நனைந்தாள்.

"பயபுள்ளைங்க! என்கிட்டயே நடிக்குதுங்க... இவளுக்கு வீட்டுல இருக்குற ஆளுங்க ஒத்து ஊதுதுங்க...! எல்லாரையும் இவள் கைக்குள்ள போட்டு வைச்சுருக்கா! கருவாச்சி" என மனதினுள் அவளை திட்டிக் கொண்டு இருந்தவனுக்கு அவளை கஷ்டப்படுத்துவது வேதனையாக இருந்தது. ஆனாலும், அவளை ஏற்றுக் கொள்ள மட்டும் மனம் வரவில்லை.

வெகுநேரமாக அவள் வராமல் இருந்தது அவனுக்கு பயத்தை கொடுக்க, நெஞ்சம் படபடவென துடிக்க ஆரம்பித்து விட்டது. வேகமாக குளியலறைக் கதவை தட்டியவன், "ம்ம்ம்! ம்ம்ம்!" என்று சத்தம் கொடுக்க, உள்ளிருந்து பதிலே இல்லை.

அதில் மொத்த பலத்தையும் திரட்டி கதவு உடையும் அளவு பட பட வென தட்டியவன், "ம்ம்ம்ம்ம்.... ம்ம்ம்ம்...." என முனகிக் கொண்டே இருக்க, கை கால் எல்லாம் நடுங்கியது.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதில், லோகேஷ் அடித்து பிடித்து மேல வர, இப்போது அவள் உள்ளே இருக்கிறாள் என்று உணர்ந்தவன்,

'இதுங்களுக்கு லவ்வ ஒத்துக்க வைக்க வேற இடமே கிடைக்கலையா?' என தலையில் அடித்து கொண்டான். இவனை கண்டுவிட்ட, இன்பா அவனை சைகையால் அழைத்து கத்த சொல்ல, அவன் தன்னிடம் பேசியதிலேயே மகிழ்ச்சியாக உணர்ந்தவன், "அண்ணி அண்ணி!" என கத்தினான்.

"அதான் என்னை வீட்டை விட்டு வெளிய போக சொல்லிட்டாருல. நான் எப்படி போனா அவருக்கு என்ன? நான் இங்கயே இருந்து சாகுறேன்...!" என்று

உள்ளிருந்து குரல் கொடுத்தவள் மேல் இன்பாவிற்கு கடும் கோபம் எழ, மேலும் இடியாக கதவை இடித் தான். கூடவே, அவளின் பிடிவாதத்தால் எழுந்த முரட்டு கோபத்தில், அங்கிருந்த பொருட்களை போட்டு நங் நங் என உடைத்தவன், "ம்ம்ம்ம் ம்ம்ம் ம்ம்ம்" என்று ரீங்கா ரமிட்டபடியே இருக்க, அவள் காதை இறுக பொத்திக் கொண்டாள்.

முந்தைய நாள் பனியில் நனைந்தது ஏற்கனவே அவளுக்கு சிறிது உடல் சூட்டைக் கொடுத்திருந்தது. இப்போது இந்த குளிர் தண்ணீர் அவளை லேசாக நடுங்க வைக்க தொடங்கியதில் கூடவே, வயிற்று வலி யும் சேர்ந்து கொள்ள, பல்லைக்கடித்தபடி அங்கேயே அமர்ந்தாள்.

இன்பா தான், கதவை உடைத்தே ஆக வேண்டும் என்ற வெறியுடன், தோட்டத்திற்கு ஓடியவன் கடப்பா ரையை கொண்டு வந்து கைப்பிடியை உடைத்தான் சில நொடி முயற்சிக்கு பிறகு, அக்கதவு திறந்து விட, லோகே ஷிடம் திரும்பி "டாக்டர்..." என்று வாயசைத்து விட்டு, அவன் உள்ளே சென்றான்.

லோகேஷுக்கு அவளுக்கு என்ன ஆனது என்ற பயம் எழுந்தாலும், வேகமாக வெளியே சென்று மகத் திற்கே போன் செய்தான்.

உள்ளே சென்ற இன்பாவோ குளிரில் நடுங் கியபடி கூடவே ரத்தப்போக்குடன் வயிற்றை பிடித்து கொண்டு அமர்ந்திருந்த தமிழரசியைக் கண்டு வெகு வாய் திகைத்து விட்டவன், கோபம் முற்றிலும் மறைந்து, ஷவரை நிறுத்தி விட்டு, அவளை எழுப்பினான்.

“என்ன ஆச்சு கருவாச்சி? ஏன் இப்படி ரத்தமா இருக்கு?” என்று பேச முடியாமல் தவித்தவன், துவாலையை எடுத்து வந்து அவள் முகத்தை துடைத்து விட்டான்.

“ஏன்டி?” என்று வேதனை பாவனையுடன் வாயசைத்தவன்,

“படுத்தாத அரசிம்மா! என்ன பண்ணுது உனக்கு?” என்று அவள் கூந்தலை அவிழ்த்து விட்டு துடைத்து விட்டவன், முகத்தில் விழுந்த முடியை பின்னால் வருடி விட்ட படியே கேட்டான்.

அவளோ நடுங்கி கொண்டு, “அதான், எனக்கு என்ன ஆனாலும் விட்டுட்டு போய்டுவேன்னு சொன்னீங்களே இன்பா இப்போ மட்டும் எதுக்கு பதறுநீங்க?” என தேம்பி கொண்டு கேட்டவளை விழி கலங்கப் பார்த்தவன்,

“பண்ணிருப்பேன்னு தான் சொன்னேன். பண்ணுவேன்னு சொல்லலையேடி...!” என்று ஒரு நொடி அவள் கண்ணை ஆழமாய் பார்த்திட,

“என்னை பிளாக் மெயில் பண்றியாடி?” என கடுப்பாகக் கேட்டவன், உதட்டைக் கடித்தபடி, அவள் உடையைத் தளர்த்தினான்.

அவள் அதனை தடுக்காமல், “இல்ல இன்பா, உங்களை புரிய வைக்க முயற்சி பண்றேன்! நீங்க நேத்து இங்க மயங்கிக் கிடந்தப்போ இப்படி தான் வலிச்சுச்சு. இப்போ உங்களுக்கு அப்படி தான் இருக்குன்னா... வெறும் ஃப்ரெண்டா மட்டும் தானா?” என்று கூர்மை

யாகப் பார்த்தவள் வயிற்றைப் பிடித்து மேலும் இறுக்க, அவள் பேச்சில் அதிர்ந்தவன், அதற்கு பதில் கூறாமல்,

"என்ன செய்யுது? வயிறு வலிக்குதா?" எனக் கேட்க,

"ம்ம்" என்றாள் தலையை ஆட்டி.

"இந்த நேரத்துல ரெஸ்ட் எடுக்காம ஏன்டி அநியாயம் பண்ற?" என்று சோர்வாக அவளை பார்த்தவன், வேகமாக உடையை எடுத்து அவளுக்கு தேவையானவற்றையும் எடுக்க, அதற்குள் இன்னைக்கும் ஒரு கஷாயமா என எண்ணியபடி கையில் கஷாயத்துடன் பத்மா வந்திருந்தார்.

அவரைக் கண்டவன், அந்த டம்பளரை வாங்கி விட்டு, அவரிடம் உடையை கொடுத்து அவளுக்கு மாற்றி விடச் சொல்லி விட்டு, பால்கனியில் சென்று நின்றான் ஆதங்கத்துடன்.

அவரின் உதவியுடன் உடையை மாற்றியவள், குளியலறையில் இருந்து வராமல் உள்ளேயே இருக்க, பத்மா தான், "தமிழ் அவள் வரமாட்டேங்குறா" என்றார் அவனிடம்.

"இவளை..." என்றபடி உள்ளே வந்தவன்,

"என்னடி உனக்கு இப்போ?" என்று ஆத்திரத்துடன் கேட்க, அவள் பாவமாக முகத்தை வைத்து,

"வயிறு வலிக்குது தூக்கிட்டு போ!" என்று இரு கையையும் நீட்டினாள்.

அவனுக்கோ கோபம் என்ற உணர்வே இரண்டு நிமிடத்திற்கு மேல் தன்னிடம் நிற்க மாட்டேன் என்கி றதே என வெந்து, அடுத்த நொடி, அவளைக் கையில் அள்ளி இருந்தான்.

நன்றாக உடல் வேறு கொதிக்க, தூக்கியபடியே அவள் நெற்றியில் இதழ் பதித்தவன், “உடம்பு நல்லா சுடுது அரசிம்மா...” என்று கண்ணில் நீர்கோர்த்தபடியே, அவள் முகத்தோடு முகம் வைத்தபடி, கட்டிலில் கிடத்தி னான். லோகேஷ்ஷும் வந்து அங்கு நிற்க,

இன்பா, “குளிருதாடா...” என கேட்டான் சைகை யில்.

அவள் “ம்ம்...” என்று தலையாட்டியதில், தைலத்தை எடுத்து அவள் செய்தது போலவே அவள் கரங்களிலும் கால்களிலும் பர பர வென தேய்த்து விட்ட வன், பத்மாவை முறைத்துப் பார்க்க,

அவர் “நானும் ஹெல்ப் பண்றேன்...” என்று அவ ரும் தேய்த்து விட்டார்.

லோகேஷ் தான், ‘அடேய், என்னங்கடா ரிப்பீட் மோட்ல சீன் ஓட்டிக்கிட்டு இருக்கீங்க...?’ என்று விரிந்த புன்னகையுடன் அவன் அண்ணனின் பதற்றத்தை சுவா ரஸ்யமாகவே பார்த்திருந்தான்.

பின், கஷாயத்தை எடுத்து அவளுக்குப் புகட்டிய வன், அவள் வேண்டாம் என்றதும், கண்ணைச் சுருக்கி ஒரு பார்வை தான் பார்த்தவன், “அடி வாங்கிட்டு போய் டுவ... குடிடி!” என்று தன் நெஞ்சில் சாய்த்து கொண்டு,

அவளை குடிக்க வைக்கும் நேரத்தில், மகத்தும் ஷ்யாமும் வந்து திரு திரு வென விழித்தனர்.

லோகேஷிடம், என்னடா என்று கண்களால் இரு வரும் வினவ,

அவனோ "ம்ம் இன்னைக்கு பார்ட் 2 நடக்குது" என்றான் கிசுகிசுப்பாக.

இவர்கள் வந்ததை அறிந்ததும் இன்பா நிமிர்ந்து, மகத்தை முறைத்து, "இவ்ளோ நேரம் கழிச்சு தான் வரு வியா? முன்னாடியே வர்றதுக்கு என்ன?" என்று விழிக ளிலேயே நெருப்பை கக்க,

அதில் அரசிக்கு தான் புரை ஏறியது. "ஸ்ஸ்ஸ்... ம்ம்ம்ம்! ம்ம்ம்!" என்று அமைதி படுத்தியவன் அவள் முதுகை தடவி விட்டு, "மெதுவாடி..." என ஆசுவாசப்ப டுத்தியவன்,

ஷ்யாம் நின்ற இடத்தின் அருகில் தான் தண்ணீர் ஜக் இருந்ததில், "தண்ணீர்" என்றான் சைகையில்.

பத்மா "கீழ போய் எடுத்துட்டு வரேன்..." என்று விரைய,

இன்பா "ப்ச், ஷ்யாம்... உன் பக்கத்துல தண்ணி இருக்கு. கண்ணு தெரியலையா எடு..." என உதட்டசை வில் அதட்டலைப் போட, அவர்களுக்கும் அவன் பேசு வது புரியும் ஆதலால்,

ஷ்யாம் "ஆமா எனக்கு கண்ணு தெரியல... நான் குருடு..." என்று முணுமுணுப்புடன் ஒப்புக்கொண்டு நீரை எடுத்துக் கொடுக்க,

இதனை கேட்ட லோகேஷும், மகத்துமோ முகத்தில் சிரிப்பை காட்டாமல் நிற்க பிரம்ம பிரயத்தனப் பட்டனர்.

அதோடு நில்லாமல், மகத்தை மீண்டும் முறைத்தவனிடம், “ஊசி எல்லாம் கொண்டு வந்துருக்கேன் டா... நீ செக் பண்ண விட்டா தான், நான் பீவர் பார்க்க முடியும்” என்றான் பாவமாக.

“ம்ம்...” என்றவன், நகரப் போக, அவளின் பிடி தான் விடவே இல்லை.

தன்னவனின் அருகாமையில் தன்னை இழந்து, அவனின் காதலில் கரைந்து கொண்டு இருந்தவள் அவன் பிரிவது அறிந்து “போகாத” என்று பார்க்க, அவளின் ஏக்க பார்வை அவனை உயிரோடு கொன்றது.

இழுத்து நெஞ்சில் அவள் முகத்தை அழுந்தப் புதைத்தவன், “நான் போகல அரசிம்மா...” என அவள் முகம் நிமிர்த்தி அவளுக்கு தெரியும் படி வாயசைத்தவனின் முத்தம் இப்போது கன்னத்திற்கு இடம் மாறி இருந்தது.

இதனைக் கண்ட மகத் தான், “ஒரு ஊசி தானடா போடுறேன்னு சொன்னேன். நான் என்னமோ இவனை ஊரை விட்டுப் போக சொன்ன மாதிரி, இவள் இந்த அலும்பு பண்றாள்” என்று சற்று வாய் விட்டே புலம்பிட, ஷ்யாமும் லோகேஷும் பக்கென சிரித்து விட்டனர்.

# அத்தியாயம் - 22

மகத்தின் புலம்பலில் ஷ்யாமும், லோகேஷும் சிரித்து விட, தமிழின்பன் நிமிர்ந்து மூவரையும் பார்வையால் எரித்தான். தமிழரசியோ, கன்னத்தில் மீசை உரச அவனிட்ட முத்தத்திலேயே மொத்தமாக சிதைந்து விட்டவள், கண்ணை மூடி இன்னும் அதனை அனுபவித்திருந்தாள்.

அவள் கண் மூடி இருந்ததில், மேலும் பயந்து போன இன்பா, அவள் கன்னத்தை தட்டி "ரொம்ப வலிக்குதாடி?" என பார்வையால் வினவ, அவளோ அவனைக் காண இயலாமல் குங்குமமாய் சிவந்து விட, அதன் பிறகே அவன் கொடுத்த முத்தமே அவனுக்கு உரைத்தது.

ஏதோ ஒரு வேகத்தில் கொடுத்து விட்டாலும், 'அய்யோ! அவளை என்னை விட்டுப் போக வைக்கணும்னு நினைச்சா, நானே இப்படி சொதப்புறேனே' என நொந்து போனவன், கீழ்க்கண்ணால் அவள் சிவப்பை ரசிக்கவும் தவறவில்லை.

பொறுத்துப் பார்த்த ஷ்யாம் தான், "மச்சான்! நாங்க வேணா வெளிய நிக்கட்டுமாடா... நீ கொஞ்சி முடிச்சுட்டு கூப்புடுறீயா?" என்று நக்கலாகக் கேட்க,

அரசியும் அவனை முறைத்தாள். 'இன்னுமாடா நீங்க நிக்கிறீங்க வெட்கங்கெட்டவங்களா...!' என்ற ரீதி யில்.

பின், மகத் அவளை சோதித்து விட்டு, மாத்தி ரையை மட்டும் கொடுத்தான்.

கூடவே, "டேய் லோகேஷ், நாளைக்கு வரைக்கும் வீட்டுல மோட்டர் போடாத. ரெண்டு நாளைக்கு தண் ணியவே ரெண்டு பேர் கண்ணுலையும் காட்டாத...!" என்று இருவரையும் முறைத்த படி கூற,

இன்பா அவனைப் பார்க்கவே இல்லை.

லோகேஷோ நமுட்டுச் சிரிப்புடன் தலையை ஆட்ட, மூவரும் வெளியில் நகரும் வேளையில் ஷ்யாம், "மச்சான் கதவை சாத்திட்டு போகணுமாடா..." என்று ஏற்ற இறக்கத்துடன் கேட்க,

அரசி, "அட ச்சே! கிளம்புங்க முதல்ல!" என்றாள் இன்பாவின் மேல் வாகாக சாய்ந்து கொண்டு.

ஷ்யாமோ "எல்லாம் நேரம்! பாரீன் பிகரை கல் யாணம் பண்ணியே இப்படி எல்லார் முன்னாடியும் ரொமான்ஸ் பண்ணது இல்லடா!" என மகத்திடம் புலம்பி கொண்டே வெளியில் வர,

மகத் தான், "குழந்தையே பிறந்துருச்சு இன்னும் பொண்டாட்டியை பிகருன்னு சொல்லிட்டு இருக்கான்

பாரு..." என தலையில் அடித்து விட்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

ஷ்யாமுக்கு ஒரு மாதம் முன்பு தான் ஆண் குழந்தை பிறந்தது. இருவரையும் அழைத்துக் கொண்டு, மகத்துடன், விடுமுறையை கழிக்க இந்தியா வந்திருந்தவனுக்கு, தந்தை மட்டும் தான். எனவே, அவருடன் இங்கு இருக்கிறான்.

வீட்டிற்கு சென்ற மகத் முன் அவசரமாக சந்தனா வந்து நின்று, "என்ன ஆச்சு அத்தான். அவசரமா போனீங்க? எதுவும் ப்ராப்லம் இல்லைல?" என்று கேட்டாள் பதற்றமாக.

அவனோ, "ம்ம்ஹூம்!" என்றவன் அங்கு நடந்ததை கூற,

"இருந்தாலும் இவ்ளோ பல்பு வாங்கி இருக்க வேண்டாம் அத்தான்...!" என்றாள் பொங்கிய சிரிப்புடன்.

"என்ன நக்கலா? ஆமா நீ இங்க என்ன பண்ற? உன் வீட்டுக்கு போகாம?" என்று மேலும் கீழும் பார்த்து கேட்க, அவளோ ரகசிய குரலில் "அதுவா, நீ பொண்ணு பார்த்த மேட்டரை அத்தை மாமா கிட்ட போட்டு குடுக்க வந்தேன்..." என்று கண்ணடித்து "அத்தை..." என கத்த போக,

அவள் வாயைப் பொத்தியவன், "ஏய் அரை வேக்காடு! எதையாவது உளறுன... விஷ ஊசி போட்டு விட்டுருவேன்!" என்று மிரட்டினான் விழிகளை உருட்டி.

சந்தனா தான் அவன் கையை எடுத்து விட முயன்று அது முடியாமல், அவன் தோளை சரமாரியா

கக் குத்திட, அவன் அசையாமல், "ப்ளீஸ் தனு! தமிழ் சொன்னதும் என்னால தட்ட முடியல. அவன் தான் பொண்ணை பார்த்துட்டு அவளுக்கு ஓகேன்னா வீட்டுல பேச சொன்னான். அதான், நான் அம்மா கிட்ட கூட சொல்லல. ஆனால் இப்படி இருக்கும்னு நானே எதிர் பார்க்கல. இந்த விஷயத்துல விளையாடாத... எனக்கு கில்டியா இருக்கு!" என்று வருத்தம் தோய்ந்த முகத்துடன் கூறியவனை ஒரு நொடி விழியகற்றாமல் பார்த்தவள் அமைதியாக இருக்கவும்,

"சொல்லதே தனு..." என்று கெஞ்சலுடன் கையை எடுத்த அடுத்த நொடி "அத்தை" என்று வீடு அதிர அலறி இருந்தாள்.

அதில் அவன் முகம் கடுகடுவென ஆக, அதற்குள் மனோகரி வெளியில் வந்திருந்தார்.

"என்னடி எதுக்கு கத்துற?" எனக் கேட்க,

"அத்தான் என்ன பண்ணான்னு உனக்கு தெரியுமா அத்தை?" என்று விழியை விரித்து அவள் கோள் மூட்ட,

அவனோ "சந்தனா!" என்றான் பல்லைக்கடித்து.

மனோகரியோ புரியாமல், "என்ன பண்ணான்?" என பார்க்க,

அவள் அவனின் அதட்டலை கண்டுகொள்ளாமல், "அத்தான் அத்தான்... என்னை கல்யாணம் பண்ணிக்கிறயான்னு கேட்குறான்!" என பாவமாகக் கூறியதில், இப்போது அவன் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் சூழ்ந்தது.

“கொஞ்ச நேரம் தூங்கு!” என்று தமிழரசியை தலையணையில் படுக்க வைத்து விட்டு இன்பா நகர போக, அவள் அவன் நெஞ்சிலே வந்து படுத்துக் கொண்டாள் வம்பாக.

“ப்ச்! அங்க போய் படு!” என்று இன்பா கடுப்பாக பார்க்க,

அவள் மறுப்பாக தலையை ஆட்டி, “இங்கயே படுத்துக்குறேன். இதான் என் ப்ளேஸ்!” என்றவளிடம் அவன் ஏதோ பேச வர,

“ரொம்ப வயிறு வலிக்குது இன்பா!” என்று சோர் வாக கூறியதில், அவன் கரங்கள் ஆதரவாக அவளை சுற்றி வளைத்திருந்தது.

“சரி ஆகிடும் கருவாச்சி!” என்று அவள் தலை யில் அவன் தலையை சாய்த்த படி, அவளை தட்டிக் கொடுக்க, அதில் அவள் நன்றாக உறங்கி இருந்தாள்.

அன்றைய பொழுது இப்படியே கழிய, மறுநாள் தமி ழரசி கண் விழித்தது, தீவிர யோசனையில் புதைந்தி ருந்த இன்பாவின் முகத்தில் தான். அவன் முகத்தை சிறிது நேரம் பார்த்தவள், அவனுக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள்.

உயிர் பிரிந்தினும்

என்னுணர்வை சுவாசிக்கும் ரசிகனே!

உயிராய் நேசிக்க நானிருந்தும்

நேசமில்லையென்ற நாடகம் ஏனடா?

என்ற கவிதை அவன் கண்களில் படர, அதனை வெறுமையாய் பார்த்தவன்,

"இப்போ பெயின் எப்படி இருக்கு?" எனக் கேட்டான் குறுஞ்செய்தியில். அதில் அகமகிழ்ந்தவள்,

"ம்ம் இப்போ பரவாயில்ல இன்பா!" என்று நேரடியாக பதில் கூற,

அவன் "சரி கிளம்பு" என்று வாயசைத்து விட்டு வெளியில் சென்றான்.

எங்க கிளம்ப சொல்றான் என புரியாமல், கிளம்பி கீழே வந்தவளை அவன் காரில் ஏற்றி அமைதியாக காரை செலுத்த, முதலில் அலுவலகம் அல்லது கல்லூரிக்கு போகிறான் என்று நினைத்தவள், அவன் அவள் வீடு செல்லும் பாதையில் செல்வதை கண்டு,

"இப்போ எங்க போறீங்க?" எனக் கேட்டாள் குழப்பமாக.

அவன் அப்போதும் பதில் கூறாமல் இருக்க, "இன்பா உங்களை தான் கேக்குறேன். இது என் வீட்டுக்கு போற வழி. இங்க ஏன் போறீங்க?" என்று கத்தி கேட்க,

இன்பா திரும்பி அவளை முறைத்து, "உன்னை உன் வீட்டுல விடப் போறேன்!" என்று தீர்க்கமாய் கூறி விட்டு, சாலையில் கவனத்தை பதிக்க அவளோ திகைத்தாள்.

"இப்போ நீங்க காரை நிறுத்த போறீங்களா இல்லையா? நான் எங்கயும் போக மாட்டேன்... நிறுத்துங்க இன்பா" என்று அவனைப் பிடித்து உலுக்கினாள்.

அவனோ, லேசாய் துளிர்த்த நீர் துளியை அடக்கி விட்டு, பயணத்தை தொடர,

அவள் தான், தேம்பலுடன் கூடிய கத்தலில், "நீங்க கொண்டு போய் விட்டா, எனக்கு வர்றதுக்கு வழி தெரியாதா?" என்றாள் அழுகையுடன்.

"நீ எத்தனை தடவை வந்தாலும் அத்தனை தடவையும் உன்னை கொண்டு போய் விடுவேன்...!" என்று ஒரு கையால் போனில் தட்டச்சு செய்து அவளிடம் காண்பித்தவன், அறியாமல் கூட அவள் அழும் முகத்தை பார்க்க முயலவில்லை.

"உங்களுக்கு என்ன தான் இன்பா பிரச்சனை? என்னை ஏன் இப்படி கொல்றீங்க? ஐ லவ் யூ இன்பா! எனக்கு நீங்க வேணும்...!" என்று கண்ணீரில் கரைந்தவளிடம், அவன் பதில் பேசாமல் இறுக்கத்துடன் வர, சில நொடிகளில் அவன் முகம் பதற்றத்தைத் தாங்கி இருந்தது.

அப்போதும், தன்னவனின் முக மாறுதலை உணர்ந்த அரசி, "என்ன ஆச்சு?" என்று அழுது கொண்டே கேட்க,

அவனோ "பிரேக் பிடிக்கல..." என்றான் உச்ச கட்ட பதற்றத்தில்.

அதில் அதிர்ந்தவள், "என்ன பிரேக் பிடிக்க லையா?" என செய்வதறியாது அமர,

அவனோ வேகத்தையும் குறைக்க இயலாமல், பிரேக்கும் வேலை செய்யாமல் ஹார்ன் அடித்து முன்னே சென்ற காரை நகர சொல்லியபடி ஓட்டினான். ஆனால் உள்ளுக்குள் பயப்பந்து உருண்டு அவனை மிரட்ட, முத லில் தன்னவளை காக்க வேண்டும் என்ற எண்ணம் தான் ஓடியது.

அருகில் அமர்ந்திருந்தவளோ சீட் பெல்ட்டை எடுத்து விட, அதில் மேலும் திகைத்தவன், "சீட் பெல்ட் போடு என்ன பண்ற?" என சாலையில் பார்த்தபடியே அவளுக்கு சைகையும் செய்ய, அவளோ அவனுக்கு மிக அருகில் வந்து, அவனின் கையை இறுக பற்றி, தோளில் சாய்ந்து கொண்டு, "இப்போ இந்த நிமிஷம் நமக்கு என்ன ஆக போகுதுன்னு தெரியல இன்பா! ஆனால் என்ன ஆனாலும் ரெண்டு பேருக்கும் ஒன் னாவே ஆகட்டும். அஃப் கோர்ஸ் இது கதை இல்ல. கடைசி நேரத்துல வசனம் பேச. ஆனால் நிஜ வாழ்க் கையில என் காதல் வெறும் கதையா தான் ஆக போகுது இல்ல" என்று ஏக்கத்துடன் அவனை பார்த்து கேட்டவள் அவன் தோளில் முகத்தை புதைத்திருக்க, அவனோ சிலையாகி இருந்தான்.

மனதோ வலியில் துடிக்க, அவன் போட்டிருந்த சீட் பெல்ட்டை அவளுக்கும் சேர்த்து போட்டு விட்டு, ஒரு கையால் அவளை இறுக்கி தன்னுள் பிடித்து கொண்டு, கண்ணை இறுகி மூடிய படி, நேராக ஒரு மரத்தில் சென்று மோதினான்.

கார் வந்து இடித்த வேகத்தில் அங்கு புழுதி பறக்க, முன்னால் இருந்த கண்ணாடி நொறுங்கியது.

சில நொடிகளில் கண் திறந்து பார்த்தவன், பெரிய ஆபத்திலிருந்து தப்பி இருக்கிறோம் என்று சற்று ஆசுவாசமாகி, அருகில் இருந்த தமிழரசியை நிமிர்த்த, அவளோ மயங்கி இருந்தாள்.

“ம்ம்...ம்ம்” என சத்தம் கொடுத்த படி, அவளை தட்டி எழுப்பியவன், அவள் மேனியை ஆராய, அவள் மேலும் எந்த காயமும் இல்லை. ஆனால் ஏன் மயங்கி இருக்கிறாள்... ஒருவேளை பயந்து விட்டாளோ என்று எண்ணி, அவளை இழுத்து வந்து, வெளியில் கிடத்தியவன், மடியில் போட்டு, அவள் கன்னத்தை தட்டி, வேகமாக மகத்திற்கு லொகேஷனை அனுப்பி, ஆம்புலன்ஸ் வரச் சொல்லி இருந்தவன், அப்போது தான் கவனித்தான் அவனவளின் வாயில் இருந்து ரத்தம் வழிவதை.

முழுதாய் ஒரு நிமிடம் அவளை திக்கற்று பார்த்திருந்தவன், வேக வேகமாக அவளை உலுக்கினான். “ம்ம்ம்... ம்ம்ம்ம்... ஆஆஆ...” என்று கத்தி, அவளை எழுப்ப முயன்றவன்,

மனதினுள் “கருவாச்சி என்னடி ஆச்சு உனக்கு எந்திரிடி எந்திரிடி!” என்ற அலறல் அவன் செல்லெங்கும் அதிர, அவன் மனதின் பாஷை எதுவும் அவள் காதில் தான் விழவில்லை.

உடனே, மகத் ஆம்புலன்ஸுடன் அங்கு வந்திருக்க, இன்பாவோ அவளைக் கட்டிக்கொண்டு அரற்றியபடி இருந்தான் கண்ணீருடன்.

மகத் அவளை சோதித்ததில், அவளின் பல்ஸ் குறைவாக இருப்பதை உணர்ந்து, அரண்டு அவசரமாக மருத்துவமனை அழைத்து சென்று ஐ சி யூ வில் சேர்க்க, தமிழின்பனுக்கு அவள் கூறிய வார்த்தையே வலியைக் கொடுத்து வதைத்தது.

“கூடவே எந்த அடியும் படவே இல்லைடி. அப்புறம் என்னடி ஆச்சு உனக்கு? நரகமா இருக்கு அரசிம்மா நீ இல்லாம! இது கதை எல்லாம் இல்லடி கருவாச்சி. உன் காதலை நம்ம காதலா நிஜமாவே ஆக்கலாம். எந்தி ரிச்சுருடி... ப்ளீஸ்! கருவாச்சி...!” என்ற வாசகங்கள் எல் லாம் அவனுள் பெரும் எரிமலையை ஏற்படுத்தி இருக்க, அவ்வார்த்தைகளை வெளியில் கூற குரல் ஒத்துழைக் காமல் கண்ணீரில் வெளிப்படுத்தினான்.

அப்போது, விவரம் அறிந்து அனைவருமே அங்கு வந்திருக்க, கூடவே கனிகாவும், தமிழரசியும் பெற்றோ ரும் வந்திருந்தனர். ஷ்யாமும் லோகேஷும் இன்பாவை கண்டு திகைத்து அவனருகில் சென்று நின்றனர். அவனோ ஷ்யாமின் மடியில் படுத்து வாய் விட்டே அழுது இருக்க,

லோகேஷுக்கு தான் வேதனையாக இருந்தது அவனின் உதாசீனம். ஆனாலும் அவனை விட்டு அவன் நகரவே இல்லை.

ஷ்யாம், “ஐயோ என்னடா இது... அவளுக்கு ஒன் னும் ஆகிருக்காதுடா! முதல்ல என்ன ஆச்சுன்னு சொல்லு மச்சான்...” என அவனை நிமிர்த்த,

அவனோ விழி நீருடன், “பிரேக் பிடிக்கலடா. நான் காரை மரத்துல மோதினேன். எங்க ரெண்டு பேருக்கும் எந்த காயமும் ஆகல. ஆனால் அவள் எந்திரிக்க மாட்

டுறாடா! வாயில இருந்து ரத்தம் வேற..." என்று மூச்சு வாங்கியபடி, கையை ஆட்டி விழியில் வலியைத் தேக்கி, பாவனை செய்ய, அவனை அந்நிலையில் காண இயலாமல், அனைவரின் உள்ளமும் ஊமையாய் அழுதது.

மனதின் எண்ணங்களை வார்த்தையில் கூற இயலாதது தான், எவ்வளவு பெரிய கொடுமை! அதனை தன் நண்பனுக்கே கொடுத்த விதியை நினைத்து ஷ்யாமுக்கு கோபமே வந்தது.

அந்நேரம் தான், மகத் அவசரமாக வெளியில் வந்து, "டேய் என்னடா பிரச்சனை உனக்கும் அவளுக்கும். நேத்துலாம் நல்லா தானடா இருந்த...? என்ன சொன்ன அவளை?" என்று காட்டு கத்தாக கத்த, இன்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அவளுக்கு என்ன? நான் பார்க்கணும்..." என அவனின் கண்கள் ஐசியூவில் பதிய,

"ப்ச், நான் கேட்டதுக்கு பதில் சொல்லு... என்ன பேசி தொலைச்ச அவள் கிட்ட. ஏதோ சின்ன பிள்ளை தனமா தண்ணியில நனைஞ்சு காய்ச்சலை இழுத்துக் கிறீங்கன்னு நினைச்சுட்டு இருந்தா, விஷம் குடிக்கிற அளவு அவளை என்னடா சொன்ன?" என கேட்டிருக்க,

தமிழின்பனுக்கு தான் தன் காதில் கேட்ட வார்த்தை உரைக்கவே வெகு நேரம் பிடித்தது.

புருவம் சுருக்கி, "என்ன சொல்ற?" என பார்த்தவனிடம்

மகத், "அவள் விஷம் குடிச்சுருக்காடா! ஆக்சிடென்ட்ல எந்த காயமும் இல்ல. ஆனால், ரொம்ப

நேரம் கழிச்சு வந்ததால, அவள் பல்ஸ் நார்மல் ஆகவே இல்லை. பாய்சன் எல்லாம் வெளிய எடுத் தாச்சு ஆனால், பவர்புல் பாய்சன் போல. அவள் ப்ளட்ல கலந்து..." என்று அவன் கூறுவதற்கே திணற, இன்பா வின் முகம் உணர்ச்சியற்று இருந்தது.

"இப்போ அவள் என்கிட்ட வருவாளா மாட்டாளா!" என்று கேட்டவனை கண்டு,

மகத் தான் "இப்போதைக்கு எதுவும் சொல்ல முடி யாது மச்சான்! சாரிடா!" என்றான் அவனைப் பாராமல்.

சில நொடிகளில் சிறிது சிறிதாக அவன் முகம் கோபத்தை ஏற்றி, கண்கள் சிவந்து, பொங்கிய ஆத்தி ரத்துடன் பத்மாவின் அருகில் வந்தவன்,

"நீங்க தான காலைல அவள் கிளம்பும் போது காபி குடுத்தீங்க...? என்ன கலந்தீங்க அதுல?" என்று பார்வை யில் அனலை கக்கி, அவரிடம் வினா எழுப்ப,

அவரோ கண் கலங்கி, "என்ன தமிழ் நீ இப் படி கேட்டுட்ட... உன் மேல எனக்கு கோபம் இருந்தது உண்மை தான். ஏன் சுஹா கிட்ட குழந்தை பெத்துக்க வேணாம்னு அட்வைஸ் பண்ணது கூட உண்மை தான். ஆனால், அரசி எப்போ நம்ம வீட்டுக்கு வந்தாளோ, அப்போவே அன்புன்னா என்னன்னு புரிய வைச்சுட்டா. அவளை போய் நான்..." என்று அவனை உதட்டை கடித்து வேதனையாகப் பார்க்க, அவனின் பார்வை இப் போது லோகேஷை எரித்தது.

கோபாலனோ, "நீ தான என் பொண்ணை கொன் னுடுவேன்னு சொன்ன... என்னையா பண்ண என் பொண்ணை" என்று அழ,

அவன் தன்னை நொந்து, இன்பாவிடம் "அவங்க என் அண்ணி ண்ணா... அவங்களை வீட்டை விட்டு போக வைக்கணும்னு நினைச்சது உண்மை தான், ஆனால் சத்தியமா நான் எதுவும் பண்ணலண்ணா..." என்னும் போதே நீர் உருண்டு அவன் கன்னத்தை நனைத்தது.

"காலையில வேற யாராவது வீட்டுக்கு வந்தாங்களா?" என்று கூர்மையுடன் வாயசைக்க, இருவரும் இல்லை என தலையாட்டினர்.

அவன் கனிகாவை இப்போது ஒரு பார்வை பார்க்க, அவள் அழுதே விட்டாள்.

இன்பா புருவம் சுருக்கி "உங்க அப்பா ரெண்டு பேரும் எங்க?" என்று கேட்டான் லோகேஷ் மற்றும் கனி காவிடம். அதில் அவன் புரியாமல் 'அது என்ன என் அப்பா' என்று எண்ணிக்கொண்டு,

"தெரியல அண்ணா, நான் பார்க்கல அவரை!" என்று பதிலுரைத்ததும், கனிகா, நானும் அப்பாவை பார்க்கல அண்ணா. என்றாள் பயத்துடன்.

"அந்த ரெண்டு பேரும் எங்க இருந்தாலும் என் கண்ணு முன்னாடி மட்டும் வரக்கூடாது. வந்தா கொலை பண்ணிடுவேன். போங்க இங்க இருந்து..." என்று அவன் குடும்பத்தினரை பார்த்து ஆத்திரத்துடன் சைகை செய் தவனை அவர்கள் தான் அதிர்ந்து பார்த்தனர்.

ஷாலினி, சந்தனாவோ நடப்பது புரியாமல் குழம்ப, ஷ்யாமும் மகத்தும் மேலும் மண்டையை பிய்த்து கொண்டனர்.

இன்பாவோ அவன் குடும்பத்தினர் நிற்க நிற்க இன்னும் வெறியாக, லோகேஷை பிடித்து வெளியில் தள்ளி விட்டான் கோபத்துடன்.

“அவனோ அண்ணா, எனக்கு ஒன்னும் புரியல! அப்பா என்ன பண்ணாரு!” என்றான் புரியாமல்.

இன்பாவோ அமைதியாய் வெறித்து, “எனக்கும் சுஹாவுக்கும் ஆக்சிடென்ட் ஆனது அவரால தான். என் கார் பிரேக் வயரை கட் பண்ணிருந்தது உன் அப்பாவும், பெரியப்பாவும் தான்னு எனக்கு அப்போவே தெரியும்” என்றதில் அனைவரும் அதிர்ந்திருக்க,

பத்மா “அவரு ஏன் அப்படி பண்ணனும் தமிழ். அதுவும் உன் அப்பா போய் அப்படி பண்ணுவாரா... நீ தப்பா நினைச்சுருக்க” என்றார் படபடத்த மனதுடன்.

“அதை அவர் கிட்டயே கேளுங்க. ஆனால் கார ணம் எனக்குத் தெரியும்...” என்றவன் அவர்களை மேலும் முறைக்க, அதில் லோகேஷ் அவனை ஏக்கத் துடன் பார்த்து விட்டு, மற்றவர்களையும் கிளப்பி கூட்டிச் சென்றவன், நேராக பிரபாகரைத் தான் பார்க்கச் சென் றான்.

அவர் அறையில் அங்கும் இங்கும் நடந்து கொண் டிருக்க, லோகேஷைக் கண்டவர்,

“ஏதோ ஆக்சிடெண்ட்டாம்ல... ரெண்டு பேருக்கும் எப்படி இருக்கு?” என்று முகத்தில் லேசான பதட்டத்து டன் கேட்க, அவரை அமைதியாக பார்த்தவன்,

“நாங்க கிளம்பும்போது நீங்க இங்கயே இல்ல. அப்புறம் எப்படி ஆக்சிடென்ட்ன்னு தெரியும்...?” என்றான் வினவலாக.

அதில் திணறிய பிரபாகரன், “நம்ம வாட்ச்மேன் தான் சொன்னான். நீங்க கிளம்புனதை...!” என்றார்.

அவனோ விடாமல், “நாங்க அவன்கிட்ட எதுவுமே சொல்லலையே...! அப்புறம் எப்படி சொல்லிருப்பான் அதோட, ஆக்சிடென்ட் எல்லாம் எதுவுமே ஆகலையே. சும்மா தான் நாங்க வெளிய போனோம்” என்று அவரை ஆழம் பார்க்க, அவர் முகத்திலோ பெரும் குழப்பம்.

“ஆக்சிடென்ட் இல்லையா? அந்த பொண்ணு எங்க இருக்கா... அவள் நல்லாத்தான் இருக்காளா!” என அவர் வாயாலையே வார்த்தையை விட, லோகேஷ் அவர் சட்டையை பிடித்தான்.

“ஏன் பா... ஏன் பா... இப்படி பண்ணுனீங்க. அண்ணா கோபப்படும் போது கூட ஏதோ தப்பா நினைச்சு பண்றான்னு தான் நினைச்சேன். இப்போ கூட உங்க மேல ஒரு நம்பிக்கை இருந்துச்சு. ஆனால் ஏன் பா. அண்ணா உங்களுக்கு என்ன பண்ணான்? அவனோட இந்த நிலைமைக்கு நீங்க தான் காரணமாப்பா...” என்றான் குரல் நடுங்க.

அவரோ முதலில் அதிர்ந்து பின் புருவ முடிச்சுடன், “என்னடா பெரிய அண்ணன். அவன் என்னைக்கு பிறந்தானோ, அன்னைல இருந்து எனக்கு தான் தொல்லை. சின்ன பையனை நம்பி தொழிலை குடுத்த என் அம்மா, என்னை கடைசி வரை நம்பவே இல்லை. என் அண்ணனையும் கூட. இதுல இவனுக்கு அப்புறம், இவன் சொத்து கூட இவன் பிள்ளைக்கு தான் போகுமாம்.

அப்போ நாங்க என்ன குப்பை தொட்டியில இருந்தா வந்தோம். என் அப்பா, அம்மா தான் முட்டாள் தனமா இருந்து இருக்காங்கன்னா, உங்க அம்மா அவங்க ளுக்கு மேல, என்னமோ அவள் தான் இந்த வீட்டை ஆள வந்த மாதிரி, அன்புன்ற பேர்ல இம்சை தான் பண்ணுனாள். எனக்குன்னு சொந்த வீட்டுல சுதந்தி ரம் இல்ல. இதுல கூட்டுக் குடும்பமா இருக்கணும்னு, அவன் வேற எல்லாரையும் கட்டிக்கிட்டு அழுதான். அதான், எல்லாரையும், ஏன் உன்னைக் கூட பேசி பேசி அவனை பிடிக்காத மாதிரி மாத்துனேன். எல்லாமே நான் நினைச்ச மாதிரி தான் ஆச்சு. ஆனால் நீ பண்ண இம்சைல அவனுக்கு ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணி வைச்சது தான் பெரிய தப்பா ஆகிருச்சு. எங்க இருந்தோ வந்தவள், அவனை மொத்தமா மாத்தி..." என்று பேசும் போதே, அவர் கண்களில் ஈ பறந்தது.

பத்மா தான் அவரை அறைந்திருந்தார். "ச்சி! மனு ஷனா நீ! சொந்தப் பையனையே ஏதோ எதிரி மாதிரி நினைச்சு. அவனுக்கு எதிரா எங்களையும் திருப்பி விட்டு... நீங்கல்லாம் ஆம்பளைங்களா?" என்று தன்னை நொந்து தலையில் கை வைத்தார்.

லோகேஷோ இன்னும் அவர் பேசியதை ஜீர ணிக்க இயலவில்லை. பணம் பத்தும் செய்யும். பெத்த பிள்ளையையும் நடைபிணமாக்கும்...! என்ற வாசகம் தான் அவன் மனதில் ஓட, மனம் வெறுத்துப் போனது அவனுக்கு.

சுஹானாவுடன் அன்று செல்லும் போது நடந்த விபத்திற்கு சில மாதங்களுக்கு பிறகு, 'பிரேக் வயர் எப் படி அறுந்தது என்று இன்பா ஆராய்ந்த போது தான் தெரிந்தது. இது சண்முகமும், பிரபாகரும் செய்த சதி

என்று. அப்போதே மனம் முழுக்க கோபம் வந்தாலும், என்ன நடந்திருந்தாலும் அவள் உடன் இருந்திருந்தால் அப்போதே, அவர்களை உண்டு இல்லை என ஆக்கி இருப்பான்.'

ஆனால், அவன் நடைப்பிணமாக இருந்ததில், வாழ்ந்தாலும் செத்தாலும் தன் தாய் இருந்த இடத்தி லேயே இருந்து விடுவோம் என்றெண்ணி தான், யார் முகத்தையும் பாராமல் அறையில் அடைந்தான்.

தமிழரசியை திருமணம் செய்த பிறகு, எப்படியும் அவளுக்கு வேறு வாழ்க்கை அமைத்துக் கொடுத்து விடலாம் என்று நம்பி இருந்தவனுக்கு, அவளால் தன் வாழ்க்கை இப்படி மாறும் என்று எண்ணவில்லை. ஆனால் தன்னுடன் இருந்தால், என்றுமே அவளுக்கு நிம்மதி இருக்காது என்றே அவளைத் தவிர்த்தான்.

முந்தைய நாள் அவள் மேல் அவன் காட்டிய காதலை கண்ட பிரபாகருக்கு, இதை வளர விடுவது சரி அல்ல, என எண்ணி, பத்மா தயாரித்த காபியில் விஷத்தை கலந்து இருந்தார். அதோடு, இன்பா செல் லும் காரில் பிரேக் வயரையும் பிடுங்கி இருந்தார்.

நெற்றியில் இரு கரங்களையும் வைத்து, தந்தை யாகி போனவர்களை அடித்து, கோபத்தையும் காட்ட இயலாது, அதே நேரம், எள்ளளவும் மன்னிக்க இயலாது கோபத்தின் உச்சியிலும் தன் உயிரானவளின் நிலையி லும் வெதும்பி இருந்த இன்பாவைக் கண்ட, அவனின் தோழர்களும், அவளின் தோழிகளும் தான் பேரமைதியு டன் அவனின் தந்தை செய்த காரியத்தில் வேதனையுட னும் நின்றிருந்தனர்.

மகத், "மச்சான் உள்ள போய் அவளை பார்க்க லையாடா?" என மெல்லிய குரலில் கேட்க,

அவன் அவனை கண்ணில் நீருடன் "எப்படிடா! அவள் இப்படி இருக்கிறதை பார்க்க முடியும்" என்ற ரீதி யில் பார்க்க,

"போய் பாரு மச்சான்..." என்றான் மீண்டும்.

எழும்ப கூட கால்கள் நடுங்க, மெல்ல நடந்து, ஐ சி யூ கதவை திறந்தவன், அங்கு வயிற்றைப் பிடித்த படி, தமிழரசி அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ந்தான். வேக மாக அவளின் அருகில் சென்று,

"அரசிம்மா, நீ எந்திரிச்சுட்டியா? நிஜமாவே எந் திரிச்சுட்டியா? உனக்கு ஒன்னு இல்லையாடா...? கரு வாச்சி...!" என்று அவள் கன்னம் கைகள் என அனைத் தையும் தடவிப் பார்த்து, மொத்தப் பதட்டத்தையும் காட் டிக் கேட்க,

"யோவ், அது என்ன கருமாந்திரம் விஷம்னு தெரி யல. ஒரே வாந்தியா வருது. வயிறு வேற வலிச்சுத் தொலையுது. இதுல உன் ஃப்ரெண்ட் ரெண்டு மணி நேரத்துக்கு எதுவும் சாப்பிடக் கூடாதுன்னு கண்டிஷன் போட்டுட்டு போயிருக்கான். மயக்க மருந்தாவது குடுடா, கொஞ்சம் நேரம் தூங்குறேன்னு சொன்னேன். ஆனால், முழிச்சுருந்து வாந்தி வந்தா, எடுத்துட்டே இருந்தா தான் சரியாகும்னு சொல்றான்.

சரி, கண்ணு முழிச்சுதும் நீயாவது வருவ, ஒரு க்ளைமேக்ஸ் லவ் சீன் ஓட்டலாம்னு பார்த்தா, நீ என் னமோ ஆடி அசைஞ்சு வர்ற...!" என்று தன்னை நொந்து,

அவனின் எண்ண அலைகள் புரியாது, அவள் பாட்டிற்குப் புலம்ப ஆரம்பித்தாள் வயிற்று வலியில்.

வெளியில் மகத்தோ, "ஐயோ போச்சு போச்சு! அவள் சீரியஸா இருக்கான்னு பொய் வேற சொல் லிட்டேன். ஏற்கனவே கொலை வெறியில இருக்கான். இப்போ என்னை சாவடிக்கப் போறான்." என்று உளறிட, மற்ற மூவரும் அவனைப் புரியாமல் பார்த்தனர்.

"அவளுக்கு பல்ஸ் கம்மியா இருந்தாலும் ஹாஸ்பிடல் கூட்டிட்டு வந்து விஷத்தை வெளிய எடுக்கவும், முழிப்பு வந்துருச்சு டா... நான் தான் சீரியஸா இருக்கான்னு சொன்னா, இவன் பீல் ஆகி லவ்வை ஒத்துப்பான்னு நினைச்சேன். ஆனால், இங்க குடும்ப பிரச்சனை ஓடி அவனை டென்ஷன் ஆக்கும்னு தெரியாமப் போச்சு மச்சான். இன்னைக்கு சாவு கன்பார்ம்." என மிரண்டு பேசியவனை கொலை வெறியுடன் முறைத்த ஷ்யாமும், சந்தனாவும் தான்,

"சே சே! அவன் சாவடிக்க மாட்டான்... அத தான் நாங்க பண்ண போறோம்ல" என்று கோரஸாக அவனை அடிக்க துரத்தினர்.

அரசிக்கு ஒன்றும் இல்லை என நிம்மதியான ஷாலினி மனம் முழுதும் லோகேஷின் வேதனை முகமே தாக்க, அவள் கால்களும் அவன் திசையை நோக்கிப் பயணித்தது.

ஒரு சில நிமிடம், அவள் பேசியது எதுவும் தமிழின்பன் காதில் விழவே இல்லை. அவளுக்கு ஒன்றும் இல்லை என்று உணரவே அவனுக்கு மிகவும் நேரம் பிடித்தது.

“உண்மையாவே நீ நீ முழிச்சு தான் இருக்கியா? நான் நான் கனவு எதுவும் காணலைல அரசிம்மா... நீ நீ என்கூட தான இருக்க...?” என்று மேலும் திக்கி திணறி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தடுமாறியபடி வாயசைத் தவனின் பாவனைகள் அவளுக்கு சுவாரஸ்யத்தைக் கொடுக்க,

“ஏன் இன்பா எனக்கு ஏதாவது ஆகி, உங்க முன்னாடி இல்லாமப் போனா தான், என்னை லவ் பண்றேன்னு ஒத்துப்பீங்களா?” என்றாள் தலையைச் சாய்த்து.

அவளை ஏங்கிய முகத்துடன் பார்த்தவன், “போடி கருவாச்சி!” என்று முகம் சுருங்கி, துடித்த உதடுகளு டன் அவளை மூச்சு முட்ட அணைத்து, வரைமுறை யின்றி அவள் முகம் முழுதும் இதழ் நீரால் ஈரப்படுத்தத் தொடங்கினான்.

# அத்தியாயம் - 23

தமிழின்பனின் அதிரடி முத்தங்களில் திகைத்த தமிழரசிக்கு, அதனை அனுபவிக்கத் தான் இயலவில்லை. வயிற்றைப் பிரட்டி வாந்தி வருவது போல் இருக்க, ஏக்கத்துடன் முத்தமிட்டுக் கொண்டிருந்தவனின் நெஞ்சில் கை வைத்துத் தள்ளினாள்.

அவனோ புரியாமல், "கோபமா கருவாச்சி? பிடிக்கலையா? அருவருப்பா இருக்கா? நான் தான் சொன்னேன்ல!" என்று மனம் வலிக்க, அதனை கண்களில் பிரதிபலித்து தன் போக்கில் காயப்பட்டு சைகை செய்தவனை அதிர்ந்து பார்த்தவள்,

"லூசா இன்பா நீங்க...?" என்று கத்த ஆரம்பித்து,

பின், வாயை பொத்திக் கொண்டு "வாமிட் வருது" என்றாள் கையசைவில்.

உடனே, அங்கிருந்த ட்ரே ஒன்றை எடுத்து வந்து, "எடுடி!" என்று அவள் முன் காட்ட, பொலபொலவென வாந்தி எடுக்க ஆரம்பித்தாள். ஒரு கையால் அவள் தலையை அமுக்கிய படி சமன் செய்தவன், அவள் சற்று

அமைதியாகவும் நீரைக் கொண்டு வந்து, அவள் வாயை யும் முகத்தையும் துடைத்து விட்டு,

“இப்போ ஓகே வா டி?” எனக் கேட்டான் கண் கலங்கி.

“ம்ம்...” என்றவள், சுருண்டு அமர்ந்து, “வயிறு வலிக்குது இன்பா!” என உதட்டைப் பிதுக்க,

அவள் கஷ்டப்படுவதை பார்க்க பார்க்க, அவ னின் தந்தையர்கள் மேல் தீராத கோபம் வளர்பிறையாய் வளர்ந்து கொண்டே சென்றது அவனுக்கு.

“ஒன்னும் இல்ல அரசிம்மா... சீக்கிரம் ரெகவர் ஆகிடும். இரு வரேன்...!” என்று வேகமாக வெளியில் சென்றவன்,

சந்தனா மற்றும் ஷ்யாமிடம் தர்ம அடி வாங்கிக் கொண்டிருந்த மகத் முன் நின்று,

“அவளுக்கு ஏதாவது மருந்து குடுக்காம இங்க என்ன பண்ற? ரொம்ப வாமிட் பண்றா வா...” என்று அதட்டலாக அழைக்க, கோபாலனும் ரேவதியும் அவ ளைப் பார்க்கச் சென்றனர்.

மகத், “அப்பாடா, அவளுக்கு உடம்பு சரி இல்லாத துனால நான் சொன்னதை மறந்துட்டான்” என்று ஆசு வாசமாக,

“ரொம்ப சந்தோசப்படாத அத்தான், அவளுக்கு சரியானதும் முதல் அடி உனக்கு தான்...” என கேலி செய்ய, அவன் அவளை முறைத்து விட்டுச் சென்றான்.

பின்னே, தேவை இல்லாமல் ஒரு பொய்யை சொல்லி, நேத்து மனோகரியின் கேலி கிண்டலுக்குத் தான் ஆளாகி, இதில் அவன் திருமணம் செய்யலாம் என கேட்டதாக சந்தனா சொன்ன செய்தி, அவளின் தாய் தந்தைக்கும் பரவி, என வீடே ஒரு மார்க்கமாக இருந்த தில் ஏற்கனவே கடுப்பில் அல்லவா இருந்தான்.

கோபாலனும் ரேவதியும் தமிழரிசியின் அருகில் ஆளுக்கு ஒரு பக்கத்தில் அமர்ந்து அவளை நலம் விசா ரித்து, கண்ணீர் சிந்த, இன்பா வந்தவன், புருவம் சுருக்கி கோபாலனை ஒரு முறை முறைத்தான். அவருக்கு தான் ஒன்றும் புரியவில்லை.

“ம்ம்...” என்று கண்ணால் அவரை நகரச் சொல்ல, சட்டென அவர் எழுந்திருந்தார் அவரே அறியாமல்.

இப்போது அவளருகில் சென்று அமர்ந்து, அவளை தன் மேல் சாய்த்து கொண்டு, “ரொம்ப வலிக் குதாடி...” என்று அவள் வயிற்றை தடவிய படி அவள் முகத்தை நிமிர்த்தி கேட்க,

“ரொம்ப!” என்றாள் அவனுடன் நன்றாக ஒன்றிக் கொண்டு. அவன் வரவும் சங்கடப்பட்டு ரேவதியும் வேறு வழி இல்லாது நகர்ந்து நின்று விட, உண்மையில் வலி யின் வேதனை அவள் முகத்தில் தெரிந்ததில், இன்பா தான் வெகுவாய் ரணப்பட்டுப் போனவன்,

அவளின் நெற்றியிலும் கன்னத்திலும் முத்தமிட் டுக் கொண்டே இருந்தான்.

அங்கு நின்ற மற்றவர்கள் தான், இவனின் செய் கையில் நெளிந்தனர். அவளின் பெற்றோர் வெளியி லேயே சென்று விட,

மகத் தலையில் அடித்து, சந்தனாவை வெளியில் போகச் சொன்னான்.

அவளோ "இங்க எவ்ளோ கண் கொள்ளா காட்சி நடக்குது நான் வெளிய போகணுமா? நோ வே!" என்று அங்கேயே நிற்க,

மகத், "வெளிய போடி அரை வேக்காடு. முளைச்சு மூணு இலை விடல, பேசுறது எல்லாம் அதிகப்பிரசங் கித்தனம் தான்!" என்று நறுக்கென அவள் தலையில் கொட்ட,

"ஆஆ" என்று அலறினாள்.

ஷ்யாம் தான், "ஏன்டா? ஆயிரம் தான் இருந்தாலும் அத்தை பொண்ணு இல்லையா?" என்று அவளுக்கு வக்காலத்து வாங்க,

இவளின் சத்தத்தில் தான், நிமிர்ந்த இன்பா மூவ ரையும் புரியாமல் பார்த்தான்.

உடனே சந்தனா, "அண்ணா, உங்களை எங் கயோ பார்த்த மாதிரி இருக்குன்னு சொல்லிட்டே இருந் தேன்ல... அப்புறம் தான் ஞாபகம் வந்துச்சு. இந்த படிப்ஸ் ஓட ஃப்ரெண்ட்ன்னு... நீங்க அத்தான் வீட்டுக்கு வரும் போது நான் உங்களை பார்த்திருக்கேன். உங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கா" என கேட்க,

அவன் அதனை நினைவு படுத்தி, ம்ம் என்றான் லேசாக இதழ் விரித்து.

அவளோ சும்மா இல்லாமல், "அது மட்டும் இல்ல அண்ணா, அத்தானும் நானும் கல்யாணம் பண்ணிக்கப்

போறோம். சோ, நீங்க ரெண்டு பேரும் தான், எங்க கல்யாணத்துல முன்னாடி நிக்கணும். ஓகே வா...?" என பிட்டைப் போட,

மகத், 'அடிப்பாவி...! என்ன நினைப்புல இவள் சுத்திட்டு இருக்கா' என்று மேலும் முறைத்தான்.

அவள் கூறியதில் விழிகள் மின்ன அரசி தான், "இந்த சம்பவம் எப்படி நடந்துச்சு?" என்று கேட்டாள் நக்கலாக.

சந்துவோ, "சில சம்பவங்கள் நடக்குற வரை வெய்ட் பண்ணக் கூடாது, நம்மளே நடத்திடனும்!" என கண்ணடிக்க, இன்பா மகத்தை யோசனையாகப் பார்த்தான்.

இதில் ஷ்யாம் தான், "அது சரி, அவன் மட்டும் முன்னாடி நிக்கனும்னா அப்போ நாங்க என்ன பின்னாடி நிக்கணுமா?" என முறைத்த படி கேட்க,

அவளோ "அட ஷ்யாம் அண்ணா, நீங்க வேணா சைடுல நின்னுக்கோங்க. இதுலாம் ஒரு கேள்வியா?" என கேலியாய் நகைக்க,

மகத் நர்ஸை அழைத்து, தமிழரசிக்கு ஊசி போடச் சொல்லி விட்டு, சந்தனாவை இழுத்துக் கொண்டு வெளியில் சென்றான்.

"தனு நீ என்கிட்ட அடி தான் வாங்க போற...! இது என்ன விளையாட்டா? எதுக்கு இப்படி முட்டாள் தனமா உளறிட்டு இருக்க?" என்றான் அதட்டலாக.

அவளோ அதில் முகம் சுருங்கி "நான் ஒன்னும் உளறல!" என்றாள் முணுமுணுத்தபடி.

அதில் அவன் தீப்பார்வை பார்த்ததும், "நான் சொன்னது உனக்கு உளறுற மாதிரி இருக்கா அத்தான்...! நான் என் மனசுல இருந்ததை தான் சொன்னேன். தப்பா சொல்லிருந்தா சாரி. இனிமே சொல்லல!" என்றவள் தன்னை மீறி விழைந்த நீர் துளி ஒன்றை அடக்கிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தவளுக்கு, ஏனோ இத்தனை வருடம் கழித்து அவனை பார்த்ததோடு, அவனின் வருத்தம் அவளைத் தாக்கி, அவன் மேல் மெலிதான காதலையும் கொண்டு வந்திருந்தது.

ஷ்யாம் அவர்களுக்கு தனிமை கொடுத்து வெளியில் செல்ல,

இன்பா, அரசியிடம் "டூ மினிட்ஸ்!" என கையை காட்டி விட்டு, விறுவிறு வென மகத் இருந்த திசை நோக்கிச் சென்றான்.

அவன் தன் அத்தை மகளின் பேச்சில் உறைந்து நிற்பதைக் கண்டு, தயங்கியபடி "சாரிடா! தேவை இல்லாம உன்னை தர்ம சங்கடத்துக்கு ஆளாக்கிட்டேன். உன் மனசையும் கலைச்சு... நீ உண்மையா அரசியை" என்று சைகை செய்து முடிக்கும் முன்,

அவனைத் தடுத்த மகத் "அடேய்! ஒரு எழவும் இல்லடா. தெரியாம, நான் நிக்கிற போட்டோல அந்த பொண்ணு இருந்துட்டா. ஸ்டில் நல்லாருந்துச்சேன்னு வச்சுருந்தேன். ஆனால் ஒன்னுடா, இனிமே கட்டுன பொண்டாட்டி கூடக் கூட நான் செல்ஃபீ எடுக்கவே மாட்டேன்..." என்று அரண்டு தீர்மானமாய் சொன்னவனை, சிறு புன்னகையுடன் பார்த்தவன், தூரத்தில் நின்றிருந்த

சந்தனாவைப் பார்த்து விட்டு, அவனையும் பார்த்தான் கேலியாக.

"அவள் உன் அத்தை பொண்ணு தான. உனக்கு அவளை பிடிக்கலையா?" என்று கேள்வியாய் வினவ,

மகத்தோ "யப்பா ராசா! நீ அடுத்து என்னை ப்ரெய்ன் வாஷ் பண்ண ஆரம்பிக்காத. ஆல்ரெடி, நான் அவள் கிட்ட விழுந்து கிடக்குறேன்." என்று அவசரப் பட்டு தன் மனதை வெளிப்படுத்தி விட்டு, திரு திரு வென விழித்தான்.

அதில் இன்பா இரு புருவத்தையும் உயர்த்தி அவனை அர்த்தப் பார்வை பார்த்து விட்டு, "உண் மையை ஒத்துக்கோடா" என்றான் அவன் தோளில் தட்டி.

"ஒத்துப்போம் ஒத்துப்போம். நீ அடுத்த வில்லன் வர்றதுக்குள்ள போய் லவ்வை சொல்லு போ!" என்று அவனைத் தள்ளினான்.

அரசியின் அறை நோக்கி செல்லப் போன இன்பா, திரும்பி மகத்தை ஓங்கி ஒரு அறை அறைந்து, "இது பொய் சொன்னதுக்கு" என்று விட்டுப் போக,

அவனோ "ஆ ஆ..." என கன்னத்தில் கை வைத்து, "அப்படி பார்த்தா உன் பொண்டாட்டி கிட்ட எனக்கு செருப்படி வாங்கி குடுக்க பார்த்ததுக்கு, நா உன்னை கொலை பண்ணனும்டா" என கத்தினான்.

ஆனால் அதனை காதில் வாங்க அவன் தான் எதி ரில் இல்லை.

சரியாக அறைக் கதவை திறக்கப் போகையில்,

“என்ன மிஸ்டர் தமிழின்பன். உங்க மிஸஸ். தமிழ்க்கு வேற கல்யாணம் பண்ண பார்க்குறீங்களாமே? எனக்கு தெரியும் தமிழ். உன்னால என்னைத் தவிர வேற எவளையும் லவ் பண்ண முடியாதுன்னு. இதுல அவள் என்கிட்ட சவால் வேற விட்டா, உன்னை லவ் பண்ணி, வத வதன்னு குழந்தை பெத்துப்பாளாம். இங்க உன்னால அவளை தொடவே முடியாது. அப்படியே தொட்டாலும்... உன்னால...” என இளக்காரமாக சிரித்த சுஹானாவுக்கு,

அவன் மாப்பிள்ளை பார்த்த வரை தான், பிரபாகர் கூறி இருந்தார். பின், அவர்களுக்கு விபத்து ஏற்படப் போகிறது என்று மேம்போக்காகக் கூறி இருந்ததைக் கேட்டு விட்டு, அவள் நேரடியாக அவன் இருக்கும் இடம் அறிந்து இங்கயே வந்திருக்க, அவள் பேசியதை கை கட்டி சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருந்தான், தமிழின்பன்.

இதில், தெனாவெட்டாக, அரசி அவளிடம் விட்ட சவால் அறிந்தவனுக்கு, ‘கருவாச்சிக்கு வாய் ரொம்ப அதிகம் தான்...’ என உள்ளுக்குள் ரசித்துக் கொண்டவன்,

“உள்ளே போ!” என அரசி அறையை கண் காட்டி விட்டு உள்ளே சென்றான்.

சுஹானா புரியாமல் உள்ளே வர, ஊசி போட்டதில் கொஞ்சம் வயிற்று வலி குறைவது போல் உணர்ந்த அரசி, எழுந்து அமர்ந்திருக்க,

இன்பாவை கண்டு, "எங்க போனீங்க இன்பா?" என்றாள் முறைத்து.

பின்னால் சுஹானா வேறு வர, ஒரு நொடி புரியா மலும் தவிப்புடனும், மறுபடியும் முதலில் இருந்து ஆரம் பிப்பானோ என்ற பதற்றத்துடனும், அவளின் கண்கள் ஏக்கத்தை தாங்கி இன்பாவை பார்த்திருக்க,

இன்பா, "லவ் பண்ண முடியாதா? என்னாலயா?" என்று சுஹானாவை எகத்தாளமாய் பார்த்து விட்டு, பேந்த பேந்த விழித்திருந்த அரசியின் கன்னத்தைத் தாங்கி, அவள் இதழுடன் இதழ் பதித்திருந்தான், மனம் எங்கும் பூத்த தெவிட்டாத காதலுடன்.

அரசிக்கு தான் உச்சி முதல் உள்ளங்கால் வரை சிலிர்த்துப் போக, அவனின் பின்னந்தலை முடியை இறுக்கமாக பற்றிக் கொண்டாள். வயிறு வலி கூட காணாமல் போக, ஏதோ ஒரு புது உணர்வு அடி வயிற் றில் எழுந்து, அவள் மேனியை சிவக்கச் செய்தது.

பின் ஏதோ தோன்ற, அவனைத் தள்ளி விட்டவள், அவன் முகத்தைக் காண இயலாமல்,

"என்ன பண்றீங்க இன்பா? நான் இப்போ தான வாமிட் பண்ணேன். கருமம் கருமம்..." என்று முகத்தை மூடிக்கொள்ள, குறுஞ்சிரிப்புடன் அவள் கையை எடுத்து விட்டவன்,

"ப்ச்..." என்று கண்ணை சிமிட்டி, "பரவாயில்லை கருவாச்சி! நீ எப்படி இருந்தாலும் நான் கிஸ் பண்ணு வேன்... பிகாஸ் ஐ லவ் யூ...!" என்று மொத்தக் காதலை யும் விழிகளில் காட்டி, காற்றில் வாயசைத்த அவனின் வெளிவராத வார்த்தைகள், அவளை திக்கித் திணற

வைக்க, கருவிழியில் இருந்து திரவம் ஒன்று வழிந்தது அவளுக்கு.

அதில், மீண்டும் அவளின் இதழை தன் வசம் இழுத்தவன், அவளின் அதரங்களில் மொத்த கவனத்தையும் பதிக்க, இதனை பார்த்த சுஹானாவுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது. கூடவே கடும் கோபமும். சே! என ஆத்திரத்துடன் அவள் வெளியில் சென்று விட, இங்கோ, தன்னவனின் அணைப்பிலும் முத்தத்திலும் பேதையவள் சிதைந்து போனாள்.

தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று கூட உணராமல் முட்டாளாய் இருந்திருக்கிறோமே என்ற பெரும் வேதனை லோகேஷின் நெஞ்சை அடைக்கச் செய்ய, அவனின் அத்தனை வலியும் கண்ணீராய் வழிந்திருந்தது.

திடீரென அவன் அருகில் நிழலாட, அந்நிழலிலேயே அது தன்னவள் என்று உணர்ந்தவன், தலையை நிமிர்த்தாமல் இருக்க, ஷாலினி அவன் அருகில் அமர்ந்து, அவனின் கரங்களை பிடித்தாள்.

“கஷ்டமா இருக்கா?” என்ற அவளின் கேள்வி அவனை மேலும் கண்ணீரை வரவழைக்க,

அவனோ “உயிரே போகுது குற்ற உணர்ச்சியில...” என்றான் அவளைப் பாவமாகப் பார்த்து.

அதில் திகைத்தவள், “ஐயோ! என்ன லோகேஷ் நீங்க! யார் தான் தப்பு பண்ணல. நீங்க தெரிஞ்சு பண்ணாலும் தெரியாம பண்ணாலும் இப்போ தப்புன்னு உணர்ந்துட்டீங்கள்ள. உங்க அண்ணா கிட்ட சாரி

கேளுங்க! கண்டிப்பா மன்னிப்பாரு" என்று தோளில் சாய்ந்து கொண்டு, அவனை சமன் செய்ய முற்பட,

அவன் "நிஜமா மன்னிப்பாரா...?" என்றான் ஏக்கத் துடன்.

"நிஜ்ஜம்மா...! அவரு மன்னிச்சாலும் இல்லைனா லும் நான் எப்போவும் உங்க கூட தான் இருப்பேன். நிறைகள் மட்டும் இல்ல குறைகள் கூட எல்லாருக்கும் இருக்குறது தான். உங்க லவ்வரா, நீங்க பண்ண தப்பை உணர வைக்கணும்னு நினைச்சேன். இப்போ ஒரு வைஃபா உங்க குற்ற உணர்ச்சியில் இருந்தும் வெளிய வர வைப்பேன்!" என்று தலையைச் சாய்த்து, அவனை நேசத்துடன் பார்க்க, அவளின் அன்பில் உருகியவன்,

"இப்போ கூட நீ என்னை முன்னாடி மாதிரி தான் லவ் பண்றியா ஷாலு?" எனக் கேட்டான் ஆதங்கத்துடன்.

"இல்ல... முன்ன விட அதிகமா...!" என்றவள், அவன் கண்ணீரைத் துடைத்து விட்டு, அவன் கரங் களில் முத்திரையைப் பதிக்க, மனதில் இருந்த பாரம் இறங்கி, அவளின் காதலுடன் எதையும் சமாளிக்கலாம் என்ற உத்வேகம் எழுந்தது அவனுக்கு.

அதில் குறும்பாய் அவளைப் பார்த்தவன், "முன்ன விட அதிகமா லவ் பண்றவங்க, கையில தான் கிஸ் பண் ணுவாங்களா?" என கண்கள் மின்ன அவளின் கன்னம் நோக்கி வர, அவள் தான் வெட்கத்துடன் கண்ணை மூடிக் கொண்டாள்.

தன் கருவாச்சியின் தளிர் விரல்களை தன் கரங் களுக்குள் அடக்கி கொண்டு, அவளின் கூந்தலில்

முகத்தை புதைத்து, தன்னை மறந்திருந்த இன்பாவின் மடியில் சாய்ந்து கொண்ட அரசி,

"இன்பா!" என அழைத்தாள் மெல்லிய குரலில். அவன் ம்ம்ம் என,

"நான் போய் சுஹானாவுக்கு ஒரு தேங்க்ஸ் சொல் விட்டு வரவா" என்று கேட்டவளை புரியாமல் ஏனென்று பார்த்தான்.

"ஆமா, அவளால தான வீம்புக்காவது என்னை கிஸ் பண்ணி, லவ் பண்றேன்னு ஒத்துக்கிட்டீங்க. இல் லைன்னா மறுபடியும் வயித்து வலி சரியாகவும் என்னை வீட்டுல தான விட்டுருப்பீங்க" என்று சற்று நக்கலுடனும் லேசான ஆதங்கத்துடனும் கேட்க, இன்பா தான், கடுக டுவென ஆனான்.

கோபத்துடன் அவளின் இரு கன்னத்தையும் ஒரு கையால் அழுத்திப் பிடித்து, "அவளுக்காக வீம்புக்குத் தான் நான் உன்னை கிஸ் பண்ணணும்னா, நான் எப் பவோ இதை பண்ணிருப்பேன். ஏன் இதுக்கு மேலயும் பண்ணிருப்பேன். கொஞ்ச நேரம், உன்னைப் பிரிஞ்சு நான் எவ்ளோ துடிச்சுட்டேன் தெரியுமாடி? மறுபடியும் உன்னைப் பார்த்த நிமிஷம், உன் மேல இருக்குற காதலைக் கத்திச் சொல்லணும் போல இருந்துச்சுடி...! அதைச் சொல்ல முடியாம தான், உனக்கு உடம்பு சரி இல்லாதது கூட புரியாம, உன்னை கிஸ் பண்ணேன். அப்புறமும் திரும்ப சொல்ல வரையில சுஹானா வந் துட்டா, அதான் அவள் முன்னாடி ப்ரொபோஸ் பண் ணேன்!" என்று அவளுக்கு புரியும் படி பேசி முடித்த பிறகே, பிடித்த பிடியை விட்டவன், அவளை தலைய

ணையில் படுக்க வைத்து விட்டு, ஜன்னலுக்கு அருகில் சென்று நின்றான் வெளியில் வெறித்துக் கொண்டு.

‘சோ ஸ்வீட் ரசிகரே!’ என மனதினுள் கொஞ்சிக் கொண்டவள்,

அவனருகில் அவனை உரசிய படி நின்று, “அது சரி, என்ன திடீர்னு லவ் வந்துருக்கு. இவ்ளோ நாள் ஏதோ மாப்பிள்ளை பார்க்க போறேன், வீட்டுல விடப் போறேன்னு சபதம் விட்டுட்டு இருந்தீங்க... இப்போ மட்டும் என்னவாம்...?” என கேலியாகக் கேட்டவளை, மேலும் தீயாக முறைத்தான்.

அவள் இடையை இறுக்கிப் பிடித்தவன், “ஆமாடி! உன்னை என்னை விட்டுப் போக வைக்கணும்னு தான் நினச்சேன். உன்னால என்கூட இருக்க முடியாதுன்னு நினைச்சேன். ஆனால், உன்னோட எதிர்பாராத காதல் என்னை கிறுக்கு பிடிக்க வைச்சுருச்சுடி...! ஏன்டி! நான் உன்னை லவ் பண்றேன்னு நம்ப முடியலையா? இல்ல, நான் பக்கத்துல வரும் போது, உனக்கு உனக்கு...” என்று அதற்குமேல் சைகை புரிய இயலாமல் தயக்கத்துடனும், அவளுக்கு தன்னை ஏற்றுக்கொள்ள எப்படி முடிகிறதோ என்ற குறுகுறுப்புடனும் வேறு புறம் திரும்பிட,

அவளோ, அவள் கைகளை அவன் கழுத்தில் மாலை ஆக்கி, அவன் கன்னத்தைப் பிடித்து, அவள் முகம் பார்க்க வைத்தாள்.

“லூசு ரசிகரே! உங்க வாயால என் மேல எவ்ளோ லவ் இருக்குன்னு தெரிஞ்சுக்கலாம்னு கேட்டா, நீங்க என்ன ஏதேதோ பேசுறீங்க...? முதல்ல ஒரு விஷயம் புரிஞ்சுக் கோங்க... மனசாலையும் உடம்பாலையும் நீங்க அவள் கூட மனப்பூர்வமா வாழ்ந்துருக்கலாம்! ஆனால்

அது எல்லாம் கடைசி வரை உங்களுக்கு சந்தோசத்தை குடுத்து இப்போ வரை அவள் உங்க மனசுல இருந்தா தான், நான் வேதனைப் படணும். நீங்க சொன்ன மாதிரி, நீங்க என்னை தொட்டா அருவருப்பு படணும். நடந்த எதுவுமே உங்களுக்கு இப்போ இந்த நிமிஷம் எந்த சந் தோஷமும் தராது. அவள் நினைப்பும் உங்க மனசுல இல்ல.

அதோட, இப்போ இந்த நிமிஷம் நான் உங்க பக்கத்துல இருக்குறது, இன்னும் எத்தனை வருஷம் ஆனாலும் நம்ம மனசுல அப்படியே தான் இருக் கப் போகுது. எப்போவுமே மறக்காத இனிமையான நினைவா. அப்படி இருக்கும் போது இப்போவும் எப்பவும் நான் மட்டும் தான், உங்க மனசுலயும் இருப்பேன். இன் னொரு தடவை இப்படி பேசுனீங்க...! நான் கடுப்பாகி என் அம்மா வீட்டுக்குப் போய்டுவேன். அப்புறம் சார் தனியா தான் இருக்கணும்! பார்த்துக்கோங்க!" என்று சிலிப்பிக்கொண்டு மிரட்டலை விடுக்க,

அவன், அவள் பேச்சில் கனிந்து, சிதைந்து அவள் காதலில் இதுவரை பட்ட காயங்கள் அனைத்தும் மறந்து, புதிதாய் பிறந்தது போல் உணர்ந்தான்.

ஆனாலும் வெளியில், "எழுத்தாளர் அவர்களே, உங்க வசனத்தை விஷம் குடிச்சாலும் விட மாட்டிங் களா?" என்று நக்கலாய் குறும்புடன் கேட்டவனை,

"யோவ்" என்றாள் முறைப்படன்.

அவனோ, "இரு இரு இரு! என்ன சொன்ன, என் வாயால எவ்ளோ லவ் பண்றேன்னு தெரிஞ்சுக்க கேட்டியா? என் வாயால எவ்ளோ லவ் பண்றேன்னு சொல்லவா கருவாச்சி!" என்று வாயசைத்து விழிகளால்

அவளை வதம் செய்தபடி கேட்டவனின் பார்வை மாற்றம், கன்னியின் கருவண்டு விழியை மயக்கம் கொள்ளச் செய்ய, அவனின் அதரங்கள் தான், இப்போது வண்டாய் உருமாறி அவளை மொய்க்க ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில், அவள் உடல் நிலையை கருத்தில் கொண்டு, அவளைக் கையில் அள்ளி கட்டிலில் படுக்க வைத்தவன், கொஞ்சி கெஞ்சி அவளை உறங்க வைத்தான். அன்று முழுதும், அவளை விழி யெடுக்காமல் பார்த்துக் கொண்டும், வாந்தி எடுக்கும் போது தாங்கிக் கொண்டும், என உண்மையில் தன் குழந்தை போல பார்த்துக் கொண்டவன், மகத் மறுநாள் டிஸ்சார்ஜ் செய்யலாம் என்றதில் சற்று யோசனைக்குச் சென்றான்.

மறுநாள், லோகேஷும் வந்து, "கிளம்பலாமா அண்ணா!" என்று இயல்பாக பேச முற்பட, இன்பா அவனிடம் பேசாமல், மகத் மற்றும் ஷ்யாமிடம்,

"நான் பக்கத்துல வேற வீடு பார்த்திருக்கேன். திங்ஸ் எல்லாம் கொண்டு போய் அங்க வைக்க சொல்லிட்டேன். நீங்க ஒருதடவை போய் பார்த்துட்டு எல்லாம் ஓகேன்னா போன் பண்ணுங்க. நான் இவளை கூட்டிட்டு வரேன்." என்றிட,

பத்மாவும் லோகேஷும் அதிர்ந்து விட்டனர்.

லோகேஷ் கண்ணில் நீர் திரையிட, தமிழரசியைப் பாவமாக பார்க்க, அவள் தான், அவனைக் கண்ணால் சமன் செய்து விட்டு,

"என்ன ஆச்சு இன்பா? எதுக்கு புது வீடு? நம்ம எல்லாரும் இப்போ அங்க தான் போக போறோமா?" எனக் கேட்டாள் தயக்கத்துடன்.

புருவம் சுருக்கி அவளைப் பார்த்தவன் "எல்லா ரும் இல்லை. நம்ம ரெண்டு பேர் மட்டும் தான்." என்றான் தோளைக் குலுக்கி.

அவளோ "இன்பா!" என்று பேச வர, அவன் அவ ளைத் தடுத்து,

"எல்லாரும் அவங்க அவங்க வாழ்க்கையை தனி தனியா பார்க்குற அளவு, வளர்ந்துட்டாங்க. சோ, நான் யாரையும் இனிமே கூட இருந்து பார்க்கணும்னு அவ சியம் இல்லை. நான் திரும்ப அந்த வீட்டுக்கு போகப் போறதும் இல்ல" என்று உறுதியாய் மறுத்தவனை செய் வதறியாது பார்த்தாள்.

லோகேஷ் தான், "அதான் அப்பாவையும் பெரியப் பாவையும் போலீஸ் புடிச்சுட்டு போக வைச்சுட்டீங்களே அண்ணா. உங்களுக்கு நாங்க அங்க இருக்குறது பிடிக் கலைன்னா, நாங்க வேணா வெளிய போயிடுறோம். நீங்க அந்த வீட்டுல இருங்க. அது உங்களோடது" என் றான் கமறிய குரலில்.

இன்பாவோ, "சொத்தும் வேணாம், வீடும் வேணாம் யாரோட சொந்தமும் எனக்கு வேணாம். நான் உழைச்சதும், நான் ரசிச்சதும் என்கிட்ட இருந்தா போதும்." என்று அவனை அழுத்தமாய் பார்த்து வாய சைத்து விட்டு, அவனின் நண்பர்களை ஒரு பார்வை பார்க்க, அவர்களும் இவன் முடிவை எதிர்த்துப் பேச இயலாமல், கிளம்பி விட, நெஞ்செங்கும் பரவிய ஏக்கத் துடன் லோகேஷும், பத்மாவும் கிளம்பி விட்டனர்.

அரசி தான், "மாமாவை போலீஸ்ல புடிச்சு குடுத்து டீங்களா இன்பா?" எனக் கேட்டாள் பாவமாக.

"ம்ம்... கொலை பண்ணிருக்கனும் நியாயமா...! ஆனால் சொந்த அப்பாவா போய்ட்ட ஒரு காரணத்து னால இப்போ வரை அந்த ஆளு உயிரோட இருக் காரு..." என்றவன் கோபத்தை அடக்கிக்கொண்டு,

"நீ சாப்பிடுறியா அரசிம்மா?" என்று கனிந்து கேட்க,

அவள், "லோகேஷும், அத்தையும்..." என்று பேச முடியாமல் இழுத்தாள்.

"ப்ச்!" என அவளருகில் வந்தவன்,

"தேவையான நேரத்துல கிடைக்காத அன்பும் துரோகம் தான் அரசிம்மா! என்னால யாரையும் மன் னிக்க முடியல. நான் பண்றது தப்பா கருவாச்சி...?" எனக் கேட்டான் விழிகளை உருட்டி, சிறு துளி நீருடன்.

சில நொடி அவனையே பார்த்திருந்தவள், "இல்ல இன்பா! உங்க மனசுக்கு என்ன தோணுதோ அதைப் பண்ணுங்க. அதை நானும் அக்செப்ட் பண்ணிப்பேன்..." என்று சிறு புன்னகையுடன் கூற, அதில் அவன் இதழி லும் ரசனை புன்னகை பூத்தது.

# அத்தியாயம் - 24

தமிழின்பன் கூறிய முகவரியில், சென்று வீட்டைப் பார்த்த மகத், ஷ்யாம், மற்றும் தமிழரசியின் பெற்றோரும் வேலைகளை இழுத்துப் போட்டு செய்ய, அங்கு ஷாலினியும் சந்தனாவும் வந்தனர்.

மகத் தான் “நீ காலேஜ்க்கே போக மாட்டியா” என கேட்க,

சந்தனா எதுவும் பேசாமல் ஷ்யாமிடம், “அண்ணா நாங்க எங்க ஃப்ரெண்ட் சார்பா வந்துருக்கோம். வேற யாருக்காகவும் வரல” என அடுக்களையில் புகுந்து அனைத்தையும் சீரமைக்க,

மகத், அவளைச் சின்ன சிரிப்புடன் பார்த்தான்.

ஷாலினியோ உம்மென இருக்க,

சந்தனா, “வருத்தப்படாத ஷாலு... சீக்கிரம் எல் லாம் சரி ஆகும்!” என அவளை சமன்செய்தாள்.

தன்னை விட்டு தன் அண்ணன் செல்ல போகி றான் என சிறிது நேரம் முன்பு அவளிடம் தவித்து துடித்

திருந்தான் லோகேஷ். அதிலேயே அவள் மனம் வெகு வாய் வாடி இருக்க, பின், அவனே,

"நான் தான் வர முடியல. நீயாவது போய் அவங்க கூட ஹெல்ப்க்கு இருக்கியா எனக்காக" என தயங்கி தயங்கி அவளிடம் உதவியாய் கேட்டிருக்க,

"என்ன லோகேஷ் என்கிட்ட போய் இவ்ளோ தயக்கம்? போடின்னா போகப் போறேன்" என்று சந்த னாவை அழைத்து கொண்டு வந்திருந்தாள்.

இரு பெண்களும் ஓரளவு சுத்தம் செய்து விட, மகத் இன்பாவிற்கு குறுஞ்செய்தி அனுப்பினான். அதன்பி றகே, அவன் அவனின் மனையாளுடன் புது மனையில் காலை வைத்திட, அந்த வீட்டைப் பார்த்து அரசி தான் விழி விரித்தாள்.

அவனின் பழைய வீடு போன்று பெரியதாக இல்லை என்றாலும் அதுவும் குட்டி பங்களாவாகவே இருக்க,

"நம்ம ரெண்டு பேருக்கு எதுக்கு இன்பா இவ்ளோ பெரிய வீடு" என்றவள், "ஆனால் அழகா இருக்கு!" என் றாள் ரசித்து.

அவனோ, "ம்ம்ஹும்... கம்பெனி சேர்மன் சின்ன வீட்டுல இருக்கலாமா என்ன?" என்று குறும்பாய் கேட்க, அவள் தான் வெட்கத்துடன் அழகு காட்டினாள்.

ஆனால், அவளை இருக்கையை விட்டே அவன் நகரவிடவில்லை. "முழுசா குணம் ஆனதுக்கு அப்பு றம், இந்த வீட்டுல நீ என்ன பண்ணணுமோ பண்ணு.

இப்போ ஃபுல் ரெஸ்ட் தான்" என்று கண்டிப்பாய் கூறி விட்டான் இன்பா.

பின், ஷாலினியும் சந்தனாவுமே ரேவதியுடன் பாலைக் காய்ச்ச, ஷாலினி தான் அனைவருக்கும் பாலை கொண்டு வந்து கொடுத்தாள்.

இன்பாவிடம் ட்ரேயை நீட்ட, அவன் அதனை பெரியதாக கண்டுகொள்ளாமல் எடுத்து கொண்டான்.

அவள் தயங்கி விட்டு, "நான் உங்க தம்பி லவரா இங்க வரல. என் ஃப்ரெண்ட் வீட்டுக்கு தான் வந்துருக் கேன். நான் வரலாம்ல..." என்று உதட்டை கடித்து கேள் வியாய் வினவ,

அவளை ஒரு பார்வை பார்த்தவன், புருவம் சுருக்கி அரசியிடம் திரும்பி,

"நான் அங்க தான் வர மாட்டேன்னு சொன்னேன். இங்க யாரும் வரவேணாம்னு நான் சொல்லவே இல் லைல கருவாச்சி..." என்று இதழையசைக்க,

அரசியோ "அப்போ உங்க தம்பி, அத்தை எப்போ னாலும் இங்க வரலாம்னு சொல்றீங்க! அப்படித்தான...!" என்றாள் கண்ணடித்து.

இன்பா தான், எந்த பாவனையும் அற்று தோளைக் குலுக்க, ஷாலினி இது போதும் என எண்ணிக் கொண்டு, முதலில் அவன் கூறியதை லோகேஷிடம் தான் கூறினாள்.

நேரம் ஆக ஆக, சந்தனா பேசாமல் இருந்தது மகத்திற்கு தான் ஏதோ போல ஆகி விட, தோட்டத்தில்

நின்று மலர்களை பார்த்து கொண்டிருந்தவளின் அருகில் வந்தான். "தனு!" என அவன் அழைக்க, அவள் காதில் வாங்காதவாறு நின்றாள்.

"ப்ச், ஏய் அரை வேக்காடு உங்கிட்ட தான பேசுறேன். திரும்பு!" என அவளை அவன் புறம் திருப்பியவன்,

"இப்போ என்ன உனக்கு?" என்றான் கடுப்பாக.

"நான் தெரியாம சொல்லிட்டேன் மகத். நீங்க எங்களை மாதிரி அத்தை பொண்ணு மாமா பொண்ணை எல்லாம் லவ் பண்ணுவீங்களா? எவளாவது வெளிநாட்டுக்காரி, இல்லைன்னா, கிழிஞ்ச பேண்ட் போட்டுட்டு எவளாவது வருவா... அவளை தான் தேடி தேடி லவ் பண்ணுவீங்க. நான் தெரியாம சொல்லிட்டேன் சாமி. நான் உங்களை லவ் பண்ணவும் இல்லை. திடீர்னு உங்க மேல லவ் வந்ததுல உங்க கிட்ட சொல்ல முடியாமல், அத்தை கிட்ட சொல்லவும் இல்லை. நீங்க பிடிக்காத மாதிரி பேசுறதுல ஹர்ட் ஆகவும் இல்ல" என்று இல்லை இல்லை என அவள் மனதில் இருந்ததைக் கூறி இருந்தவளை, இடுப்பில் கை வைத்துப் பார்த்தான்.

"அரை வேக்காடு... ஸ்கூல்ல படிக்கிறதை தான் அரைகுறையா பண்ணி மார்க் கம்மியா வாங்குவ. லவ் கூட ஒழுங்கா பண்ண மாட்டியா... இதுலயும் அரை குறையா தான் இருக்குற...?" என்று அவள் தலையில் தட்டியவன்,

"கல்யாண விஷயத்துல என் மாமா பொண்ணுக்கு தான் முன்னுரிமை குடுக்கலாம்னு இருக்கேன் தனு. நீ என்ன நினைக்கிற அரை வேக்காடு?" என அவளை நெருங்கிக் கொண்டே கேட்க,

அவள் பின்னால் நகர்ந்த படி, “ஓ! இதுல முன்னு ரிமை வேறயோ? அப்படி எந்த உரிமையும் எங்களுக்கு தேவை இல்ல” என்றவள் நகர்ந்து நகர்ந்து அங்கிருந்த ஸ்டோன் பெஞ்சில் தடுமாறி அமர்ந்து விட,

அவன் அப்போதும் முன்னேறி, “உரிமையை வேணாம்னு சொல்றது உன் உரிமை தனு. ஆனால் வேணாம்னு சொன்னாலும் உரிமையை தர்றது என் உரிமை...” என்றவனை பே வென பார்த்தாள்.

“என்ன சொல்ற?” என்று தலையைச் சொறிந்த வளை, பொங்கிய சிரிப்புடன் பார்த்தவன்,

“ம்ம்! உரிமை தரப் போறேன்னு சொல்றேன்...” என்றவன் நின்ற படியே அவள் நெற்றியில் இதழ் பதித் தான்.

அவளோ மலங்க மலங்க விழித்து, “இப்போ என்ன பண்ற?” என்று கேள்வியாக கேட்க,

“ஏய்! இப்படி கிஸ் பண்ணா வெட்கப்படனும்டி. நீ என்ன பண்ற நொண்ண பண்றன்னு விளக்கம் கேட் டுட்டு இருக்க?” என்று தலையில் அடித்தவன், “அரை வேக்காடு! எனக்காக நீ உன் ஃப்ரெண்ட் கிட்ட பேசு னப்போவே எனக்கு ரொம்ப ஹேப்பி. அதுவும் ரொம்ப வருஷத்துக்கு அப்புறம் உன்னை பார்த்ததும், அப்ப டியே ஸ்டன் ஆகிட்டேன். ஆனால், ஏற்கனவே, ஸ்டுபிட் மாதிரி ஏதோ ஒரு ஈர்ப்புல உன் ஃப்ரெண்ட் கிட்ட கல் யாணம் அது இதுன்னு பேசிட்டு... குழப்பத்துல இருந் தேனா... அதான் உன்மேல இருக்குற ரியல் லவ் கூட வெறும் அன்பு தானோன்னு பயமா இருந்துச்சு. ஆனால், உன் மனசுல நான் இருக்கேன்னு தெரிஞ்சதும், எனக்கு ரொம்ப ஹேப்பி ஆகிடுச்சு...” என சொல்லிக் கொண்டே

சென்றவன், அவளை எழுப்பி, அவன் கை வளைவுக்குள் வைத்திருக்க, அவளோ அவனின் வார்த்தைகளில் கரைந்து, அவனைக் காதலாகப் பார்த்தாள்.

“அப்புறம் ஏன் என்மேல கோபமா இருந்தீங்களாம்...” என்று அவனின் சட்டை பட்டனைத் திருகியபடியே குற்றம் சுமத்த,

அவனோ சிறு புன்னகையுடன், “பின்ன, என்னை லவ் பண்றன்னா என்கிட்ட வந்து சொல்லுவாளா... ஊரு முழுக்க சொல்லுறா அதான் கடுப்பானேன்!” என அவளை மேலும் அவனின் நெருக்கத்தில் கொண்டு வர,

அவளோ தன் அத்தானின் நெருக்கத்தில் சிவந்து, “அத்தான்... விடுங்க!” என்றாள் நெளிந்து கொண்டு.

“இன்னொரு தடவை அத்தான் சொல்லு... விடுறேன்” என அவளை ரசித்தபடி கேட்க,

“ம்ம் சட்டை பொத்தான்னு வேணா நான் சொல்லவா?” என அங்கு முறைத்தபடி ஷ்யாமும் ஷாலினியும் நிற்க, இருவரும் பதட்டமாக விலகினர்.

பின் கேலி, கிண்டலுடன் நால்வரும் கிளம்பி விட, இரவு வரை தமிழரசியின் பெற்றோர் மட்டும் அங்கு இருந்தனர். அவளுக்கு உடல் நிலை சரி இல்லை என ரேவதியே அவளுக்கு சமைத்தும் கொடுக்க,

அரசி, “எனக்கு ஒன்னும் இல்ல இன்பா... இப்போ பெயின் கூட பரவாயில்ல...” என்று கூறிக்கொண்டே, அவன் அசந்த நேரம் அடுக்களையில் சென்று நின்றாள்.

“உன்னை நான் ரெஸ்ட் எடுன்னு சொன்னேன்.” என அவன் கன்னத்தைப் பிடித்து கிள்ளி முறைக்க,

அவளோ “ஆஆ... ரெஸ்ட் எடுக்கலாம். பால் காய்ச்சிட்டு வரேன்.” என்று பாலை அடுப்பில் வைத்து விட்டு, அங்கேயே நின்றாள்.

பின் அவனே, “நாளைக்கு செல்வத்தை வரச் சொல்லி விடலாம் சமைக்க. வீட்டு வேலைக்கும் ஆள் வரச் சொல்றேன்.”

“ம்ம்” என்றவள், பாலில் கவனமானாள்.

ஏனோ அவன் அருகாமையும், நம் வீடு என்ற உரிமையும், இந்தத் தனிமையும் அவளுக்கு ஏதோ ஒரு பதற்றத்தைக் கொடுக்க, அவளை உரசியபடியே நின்றவன், சரியாக பால் பொங்கும் வேளையில் அடுப்பை அணைத்து விட,

“ஏன் இன்பா ஆஃப் பண்ணீங்க” என்றாள் முறைப்புடன்.

“அதான் பொங்கிடுச்சுல கருவாச்சி...?” என அவன் புரியாமல் பார்க்க,

“ப்ச், அது எங்களுக்கு தெரியாதா... என் பங்குக்கு நான் பால் காய்ச்சவே இல்லைல, சோ நல்லா பொங்கி வழியட்டும்” என்று மீண்டும் அடுப்பை ஆன் செய்ய,

அவள் கன்னத்தை மீண்டும் பிடித்து கிள்ளியவன்,

“உலகத்துலயே நைட் நேரத்துல பால் காச்சுறது நீயா தான் இருப்ப எழுத்தாளரே...” என்றான் முகம் முழுதும் மலர்வுடன்.

“எழுத்தாளர்னா கொஞ்சம் வித்தியாசமா இருக்க வேணாமா? அதான்...” என்றவளை மேலும் உரசியவன்,

அவள் கன்னம் நோக்கி வரப்போக “தமிழு” என்று அழைத்த படி ரேவதி வந்து விட்டதில்,

சட்டென பின்னால் நகர்ந்து வேறு எங்கோ பார்த்திருந்தான்.

ரேவதி தான், நெளிந்து கொண்டு, “இல்ல நாங்க வீட்டுக்கு போயிட்டு நாளைக்கு வரட்டா... இல்ல ஒத்தாசைக்கு இருக்கவான்னு கேட்கத்தான் வந்தேன்...” என்றதில்,

“நான் பாத்துக்குறேன் மா. நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க” என்றிட, சரி என விடை பெற்று இருவரும் கிளம்பி விட்டனர்.

இப்போது பெரும் தனிமை இருவரையும் சூழ, பேரமைதியும் நிலவியது. அவள் அவனைப் பாராமல் அறைக்குள் புகுந்தாள். அங்கும் அவன் அறை போல் ஒரு பெரிய பால்கனியும், அதில் பூச்செடிகளும் இருந்ததில், அங்கு சென்று நின்றவளின் பின்னால் வந்து நின்றான் இன்பா.

அதில் புன்னகைத்தவள், “இந்த இடம் ரொம்ப பிளசன்ட் ஆ இருக்குல இன்பா...” என்றதில்,

அவளைப் பின்னிருந்து அணைத்துக் கொண்டு, ஒரு கையில் அவளுக்குத் தெரியும் படி போனை வைத்து, “ம்ம், எனக்கும் பிடிச்சுருக்கு. அதுவும் உன் கூட இருக்குறது...” என்று தட்டச்சு செய்ய,

அதில் சிவந்தவள், “இப்போ கூட எனக்கு இதெல் லாம் ஏதோ கனவு மாதிரி இருக்கு இன்பா... என்னால நம்பவே முடியல. ஏதோ மாதிரி ஒரு பீல் மனசுல!” என்று ரசித்துக் கூற,

அவன் அவள் கழுத்தில் அழுத்தமாய் ஒரு முத்த மிட்டு, “எனக்கும் கருவாச்சி. எப்படி நீ என் லைஃப்ல வந்த, எப்படி நான் இப்படி மாறுனேன்னு என்னால நம்பவே முடியல. ஆனால், இப்போ என் எண்ணமும் வாழ்க்கையும் முழுக்க முழுக்க, உன்னை சுத்தி மட்டுமே இருக்கு கருவாச்சி...” என்றவனின் முத்தத்தில் நெளிந் தவள்,

“இன்பா, கூச்சமா இருக்கு!” என தவிக்க, அவனோ குறுஞ்சிரிப்புடன், மீண்டும் கழுத்தில் இதழ் பதித்தான்.

“நீ என்னை பார்க்க வெட்கப்படுவன்னு தான்டி, இந்த செட் அப்... எப்படி?” என்று போனில் டைப் செய்து காட்டியவனை, முகத்தை திருப்பி முறைத்தவள், உண் மையில் அவன் பார்வையில் வெட்கி திரும்பிக்கொண் டாள்.

பின் அவனே, “கருவாச்சி, உனக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு என்னன்னு தெரியுமா?”

“என்ன இன்பா?”

“ம்ம் தமிழ் தான் ஒற்றுமை...”

“ஓ நம்ம நேம்ல தமிழ் இருக்குறதை சொல்றீங் களா?”

“அதுவும் தான், அதோட, நீ எழுதுற தமிழினால் தான நம்ம நல்லா பேச ஆரம்பிச்சோம்... சோ தமிழுக் கும் நமக்கும் ஏதோ ஒரு கனெக்ஷன் இருக்கு!” என்ற வன், அவள் கன்னத்தில் மீசையை வைத்து உரசியதில், அவள் மேலும் கிறங்கி நின்றாள்.

“கருவாச்சி...” என அழைத்தவனிடம்,

“ம்ம்” என்ற பதிலை கொடுக்க,

“எனக்கு கொஞ்சம் டைம் தர்றியா? நீ சொன்ன மாதிரி நம்ம நிறைய குழந்தை பெத்துக்கலாம். பட் ஐ நீட் டைம்! ப்ளீஸ் கருவாச்சி...” என டைப் செய்திட,

இப்போது அவள் திரும்பி அவன் முன்நெற்றி முடி களை கலைத்து விட்டு, “ம்ம்... டைம் தான கொடுக்கு றேன். ஆனால் ஒரு கண்டிஷன்...!” என்றாள் குறும்பாக.

அவன் குழப்பமாக “என்ன?” என பார்க்க,

“இந்த பால்கனியில் நின்னு நம்ம ரெண்டு பேரும் ஐஸ் க்ரீம் சாப்புடுறோம். டீல்?” என்றவள் அவனை ஆழ மாய் பார்த்தாள்.

அன்று சுஹானாவின் நினைவிலேயே அவள் கொடுத்த ஐஸ் க்ரீம் வேண்டாம் என்று மறுத்தவனை அவள் லாக் செய்து இருக்க,

"அதுக்கு என்ன தாராளமா!" என்றான் அவள் நெற்றியில் முட்டி.

"ஆனால், என்னை அந்த வீட்டுக்கு மட்டும் கூப்பி டாத" என்றான் உறுதியாக.

அவளும் அவனை உணர்ந்து "கூப்பிடவே மாட் டேன்..." என்று தலையை ஆட்டினாள்.

வெறும் வீட்டினர் மேல் இருந்த கோபம் மட்டும் அல்ல, அங்கு சுஹானாவுடன் வாழ்ந்து விட்டு, அதே இடத்தில் இவளுடன் வாழ, அவளுக்கு பெரியதாக தெரியவில்லை என்றாலும், அவனுக்கு ஒப்பவில்லை. அதனாலேயே வம்படியாக அவளை இங்கு இழுத்து வந் தான்.

நாட்கள் தெளிந்த நீரோடையாய், அவ்வப்பொ ழுது அவளின் கவிதைகளுடனும், அவனின் பாராட் டுதலுடனும், இருவரின் ரசிப்புடனும் கல்லூரி அலுவ லகம் என மாறி மாறி ஓடிக் கொண்டிருக்க, ஒரு முறை அவனை முழு உடல் செக் அப் செய்தவனுக்கு, விபத்தின் மூலம் ஏற்பட்ட காயங்கள் இப்போது பாதிக் காது எனவும், மேலும் சத்து மாத்திரைகளை மட்டும் கொடுத்து இருக்க, சிரத்தையாய் தன் சிகிச்சையையும் மேற்கொண்டவனுக்கு, குரல் மட்டும் வர வாய்ப்பில்லை என்ற மருத்துவரின் வார்த்தை சிறிதான வருத்தத் தைக் கொடுக்கவே செய்தது. ஆனால், அவள் இதனை எல்லாம் கண்டுகொள்ளவே இல்லை. அவனையும் இதனை நினைத்து வருத்தப்பட விடவும் இல்லை.

ஒரு முறை கல்லூரியில் நடந்த சம்பவம் ஒன்றை ரசனையுடன் தமிழரசி கூறிக் கொண்டிருக்க,

அவனோ அமைதியாக, "இப்படி வாழ்க்கை முழுக்க, மெஸேஜ்லையும், சைகைலயும் பேசுறது உனக்கு கஷ்டமா இல்லையா கருவாச்சி? அன்னைக்கு ஆக்சிடென்ட்ல நீ மயங்கி இருந்தப்போ, என்னால கத்தி உன்னை எழுப்ப கூட முடியல. நான் உன்னை நல்லா பார்த்துக்குவேனா?" என்று அவள் விழிகளை, தன் விழி களால் மோத விட்டு, சற்று வலியுடன் கேட்டவனை, ஒரு நொடி சலனமின்றி பார்த்தவள், எழுந்து பால்கனியில் சென்று நின்றாள்.

இன்பா அவள் சென்ற திசையையே ஏக்கத்துடன் பார்த்திருக்க, அவன் போனில் ஒரு குறுஞ்செய்தி வந் தது.

வாதம் செய்யவே

வார்த்தை தேவையடா!

வர்ண எண்ணங்களை உரைக்க

வலியவனின் பாவனை போதுமடா!

ஆயிரம் சொற்கள் கூறாததை

அழகு அபிநயம் அழகாய் உணர்த்திட

அலைக்கழிப்பு ஏனோ

இன்னுயிர் ரசிகா?

அவளின் எண்ண ஓட்டத்தையும், மனதையும் எப் போதும் போல் அவனை இழுக்கும் அவளின் வார்த்தை கள் மூலம் பார்த்தவனுக்கு, கண் கலங்கிட, அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான் பின்னிருந்து.

கூடவே, "நைஸ் எழுத்தாளரே!" என அவளை அணைத்தபடியே அனுப்பிட,

"வேற ஏதாவது சொல்லுங்களேன் ரசிகரே! எல்லாத்துக்கும் ஒரே நைஸ் தானா?" என்று உதட்டை சிலுப்ப,

அவள் முகத்திற்கு அருகில் நெருங்கியவன், "என் எழுத்தாளர நான் பாராட்டுற விதமே வேற எழுத்தாளரே!" என்றவன், அவள் இதழில் அவன் இதழால் கவி வரைந்து, பாராட்டை தெரிவிக்க, அவள் தான் இன்பத்தில் தொய்ந்து போனாள்.

பின், சில நொடி கழித்து அவன் இதயத்துடிப்பை கேட்கும் படி, அவன் நெஞ்சில் சாய்ந்திருந்தவள், "இன்பா, நீங்க என்கிட்ட வாய் திறந்து பேச முடியாதுன்னு யார் சொன்னா...? இதோ இந்த நெஞ்சில துடிக்கிற இதயத்துடிப்பு என் காதுல கேக்குற வரை, இதை கேட்க நான் இருக்குற வரை, நீங்களும் நானும் பேசிக்கிட்டே தான் இருப்போம். மௌனமாவே... என் ரசிகரை ரசிச்சுக்கிட்டே...." என்று அவனை இறுக்கி அணைக்க, அவனோ அணை மீறிய காதலில் தமிழரசியை இன்னும் இறுக்கியவன், சற்று விலகி,

"ஐஸ் க்ரீம் சாப்பிடுவோமா?" எனக் கேட்டான் குறும்பாய்.

விழி விரித்தவள், "சாப்பிடலாமே, ஆனால் இந்த நைட் நேரத்துல ஐஸ்க்ரீமுக்கு எங்க போறது?" என அவள் சிந்திக்க,

அவளைக் கள்ளப்பார்வை பார்த்து விட்டு, வேகமாக வெளியில் சென்றவன், குளிர்சாதனப் பெட்டியில்

வாங்கி வைத்திருந்த ஐஸ்க்ரீமை எடுத்துக் கொண்டு வர,

"ஐ! இது எப்போ வாங்குனீங்க... நான் பார்க்கவே இல்லை..." என்று தீவிரமாக அதை சாப்பிட விழைந்தவளைத் தடுத்து, அவன் கையில் இருந்த கப்பில் இருந்து ஒரு ஸ்பூன் எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான்.

புன்னகை முகத்துடன் அதனை வாங்கிக் கொண்டவள், இப்போது அவனுக்கு ஊட்ட, அவனும் சிரித்தபடி அவளை ரசனையாக பார்த்து கொண்டே வாங்கியவன், முகத்தை சுளித்து,

"இந்த பிளேவர் நல்லாவே இல்ல, நீயே வச்சுக்கோ" என்று இதழ் மூலம் அவளுக்கு பரிமாறி இருந்தான்.

அதில் பெண்ணவளின் தேகம் நடுங்க, அந்நடுக்கத்தை குறைக்கவே மேலும் நடுங்கச் செய்தவன், சிறிது சிறிதாய் அவளுள் கரையத் தொடங்கினான்.

தான் நேசிக்கும் எழுத்தைக் கொண்ட எழுத்தாளரின் எழுத்துக்கு மட்டும் இன்றி, அந்த எழுத்தாளருக்கும் ரசிகனானான்.

தன்னில் கிறங்கி நின்றவளை, அள்ளிக் கட்டிலில் போட்டவன், அவள் தன் முகம் பார்க்காமல் கண் மூடி இருந்ததில், லேசாக தட்டிப் பார்த்தான். அவனின் சீண்டலில் அவள் அப்போதும் விழிக்காமல் இருக்க, சிறு சிரிப்புடன் போனை எடுத்து டைப் செய்து, அவள் கண்ணில் வெளிச்சம் படர வைக்க, அவளோ என்னவென பார்த்தாள், அப்போது தான்.

“உனக்கு கம்ஃபர்ட்டபிளா இல்லைன்னா, என்னை ஸ்டாப் பண்ணு கருவாச்சி...” என்று எழுதி இருந்ததில்,

அதனைக் கண்டவள் அவனை அன்பாய் பார்த்திட, அவன் “ம்ம்?” எனக் கேட்டான் தலையை ஆட்டி.

அரசி அவனை இழுத்து முத்தத்தில் நனைய விட, அவனின் “ம்ம்?” என்ற கேள்வியில் தொடங்கி,

அவளின் “ம்ம்...!” என்ற திணறலோடு அவளுடன் சங்கமித்தான்.

இருவருக்கும், நாட்கள் வெகு அழகாய் நகர, இன்பாவின் கண்களுக்கு, அரசி தவிர வேற ஒன்றும் தெரியவில்லை. விடியும் போதும், அடையும் போதும் அவள் மட்டுமே அவனுக்கு அனைத்துமாகிப் போக, அன்று அலுவலகம் விட்டு வந்தவன், அரசியைத் தான் தேடினான்.

“எங்க போனா இவள், இந்நேரம் காலேஜ் முடிச்சு வந்துருப்பாளே?” என்று தனக்குள் எண்ணிக்கொண்டு பால்கனியில் சென்று தேடியவன், திரும்பப் போக, அங்கிருந்த பொருளைக் கண்டு, சில நிமிடம் சலனமின்றி அப்படியே நின்றான்.

கைகள் நடுங்க அதனை எடுத்துப் பார்த்தவன் கண்களுக்கு, அப்பொருள் அவன் தந்தையாகி விட்டதை உணர்த்த, அவனுக்குள் ஏதேதோ உணர்வு ஆட்டுவித்தது.

அழுவதா? சிரிப்பதா? இரண்டும் கலந்து செய்வதா? எனப் புரியாது சஞ்சலம் கொண்டவனை, அவ

னின் கருவாச்சி பின்னிருந்து அணைத்துக் கொண் டாள்.

அவளை இழுத்து தனக்கு முன் கொண்டு வந்த வன், "ம்ம்?" என ஆவலாய் கேட்க,

அவளோ முகம் முழுதும் சிவந்து, "நான் சொன் னேன்ல நம்ம பேபி நம்ம கிட்டயே வந்துடும்னு இப்போ வந்துருச்சு!" என்றாள் தலையை சாய்த்து.

அவன், அவள் கழுத்தில் புதைந்து தேம்ப ஆரம் பித்து இருந்தான்.

தான் இழந்த அனைத்தையும், இன்று தன் முன் நிறுத்தி விட்டவளை, அவன் கண்ணெடுக்காமல் பார்க்க, ஐந்து மாதக் கருவை சுமந்து, அக்குழந்தைக்கே காது வலிக்கும் அளவு அதனுடன் பேசிக் கொண்டிருந் தவள், "என்ன" எனப் பார்த்தாள் அவனை.

அவன் மறுப்பாய் தலையாட்டி "நீ கன்டின்யூ பண்ணு" என்று சைகை காட்ட, அவளோ மீண்டும் பேச ஆரம்பித்திருந்தாள். சட்டென வயிற்றில் ஏதோ அசைவு தெரிய,

"இன்பா இன்பா இன்பா... சீக்கிரம் வாங்களேன்... பேபி மூவ் ஆகுது..." என கத்தலுடன் அழைக்க,

அவன் அடுத்த நொடி அவளருகில் வந்து வயிற் றில் கை வைத்துப் பார்த்தான்.

ஆனால் அவனுக்குத் தான் எதுவும் உணர வில்லை.

“ப்ச், போங்க இன்பா, இந்த தடவையும் நீங்க மிஸ் பண்ணிட்டீங்க. கரெக்ட்டா, நீங்க வரவும் உங்க பேபி ஆஃப் ஆகிடுது. நீங்க தான் பயமுறுத்தி வச்சிருக்கீங்க” என்று அவனை விளையாட்டாய் கேலி செய்தவளை, வலிக்காத வாறு கிள்ளினான்.

“தூங்கு!” என்று உறங்க வைத்தவன், அவள் உறங்கியதும், எப்போதும் போல் அவளின் வயிற்றில் கை வைத்து, சில நிமிடம் விடாமல் தன் உயிருக்கு முத்தமிட்டவனுக்கு,

“நான் பேசுனா தான என் பேபிக்கு என்னைத் தெரியும்...?” என்ற எண்ணம் வாட்ட,

“ம்ம்?” என்றான் வயிற்றைப் பார்த்து. ஒருமுறை இப்படி கேட்டு செமத்தியாக அரசியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டவன், அவளிடம் இதனை வெளிக்காட்டாமலே இருந்தான்.

ஆனால், அவள் உறங்கியதும், அவன் குழந்தையிடம் மௌன மொழிப் பேச்சைத் தொடர்வான். அவனின் “ம்ம்” என்ற ரீங்காரம், அக்குழந்தைக்கு கேட்குமோ? கேட்காதோ? ஆனால் இவன் அருகில் வந்ததும், குழந்தை அமைதியாகி விடும்.

இதனிடையில் தான், சந்தனா, மகத் இருவரின் திருமண வைபவம் இருக்க, “சாப்பிட முடியல. கல்யாணத்துக்கு வேற லேட் ஆச்சு” என்று அடம்பிடித்துக் கொண்டிருந்த தமிழரசியை அதட்டி மிரட்டி சாப்பிட வைத்துக் கொண்டு இருந்தான், இன்பா.

கூடவே, "நீ சரியாவே சாப்புடுறது இல்ல அரசிம்மா. இப்படி இருந்தா எப்படி சத்து இருக்கும்...?" என்று அதட்டியவனிடம்

"சாப்பிட முடிஞ்சா சாப்பிட மாட்டோமா?" என முணுமுணுத்துக் கொண்டே கொரித்து விட்டு எழுந்தவளை, திருமணத்திற்கு அழைத்துச் சென்றான்.

லோகேஷுக்கும் ஷாலினிக்கும் சில மாதங்களுக்கு முன்பு தான், திருமணம் ஆகி இருக்க, அதற்கும் விருந்தாளியாய் தான் இன்பா வந்திருந்தான். பத்மா இன்னும் லோகேஷுடன் தான் இருக்க, ஆனால், மூவரும் விடுமுறை நாட்களில் இன்பாவின் வீட்டிற்கு வந்து விடுவர். தமிழரசி அவர்களுடன் அரட்டை அடித்து, அவன் பேசவில்லை என்று வருந்தினாலும் சமன் செய்து அனுப்புவாள்.

இன்று வெகு நாள் கழித்து அனைவரும் கூடி இருக்க, ஒரே கலாட்டாவாகத் தான் இருந்தது. சந்தனாவும் மகத்தும் மேடையில் நின்று கண்களால் காதல் கதை பேசினர்.

ஷ்யாம் அவனின் ஒரு வயது மகளை கையில் வைத்திருக்க, அப்போது தான் அவனின் மனைவி ரேச்சலையும் அறிமுகப்படுத்தினான். அதோடு அவனின் பெண் அழுது கொண்டே இருக்க, ரேச்சல் அவளை வெளியில் வைத்திருக்கிறேன் என்று மண்டபத்திற்கு வெளியில் செல்ல,

"இன்பா, நானும் அவங்க கூட ஹெல்ப்க்கு நிக்கிறேன் கொஞ்சம் நேரம் வெளியில" என்றவளுக்கு உள்ளே கூட்டமாக இருந்ததில் மூச்சடைத்தது.

சரி என இரு ஆண்களும் மேடையில் ஏறி, மகத்தை ஒரு வழியாக்க, திடீரென இன்பாவின் இதயம் தாறுமாறாய் துடிக்க ஆரம்பித்தது. அவன் கண்கள் தன்னவளையே தேட, வேகமாக அவள் நிற்கும் திசையை நோக்கிச் சென்றவன், அதிர்ந்து விட்டான்.

அங்கு சுஹானாவின் கார் தான் சீரில்லாமல், அதி வேகத்தில் தமிழரசியை நோக்கி வர, அவள் அதனை கவனியாமல் ரேச்சல் கையில் இருந்த குழந்தையை கொஞ்சிக் கொண்டிருந்தவள், அந்த கார் வெகு அருகில் வரவும் அதிர்ந்து அப்படியே நின்று விட்டாள்.

“என்னோட வாழ்க்கையை நீ எப்படி வாழலாம்” என்ற கோபத்திலும், அவள் குழந்தையை சுமந்ததிலும் மன ரீதியாக பாதிக்கப்பட்டவள், அவளை கொலை செய்யவே துணிந்திருந்தாள்.

அந்நேரம், இன்பா ஒரு கல்லை எடுத்து, சரியாக குறி பார்த்து சுஹானாவை நோக்கி ஏறிய, அதில் தடுமாறியவளின் மகிழுந்து சீரில்லாமல், அங்கும் இங்கும் அலைந்து பின், தமிழரசியின் பக்கவாட்டில் சென்று, ஒரு மரத்தில் சடாரென மோதியது.

சில நிமிடத்தில் நடந்து விட்ட நிகழ்வில் தமிழரசி சற்று அதிர்ச்சியாகி விட, அந்த திகைப்பில் மயங்கியே விட்டாள்.

பதறிய இன்பா, “ம்ம்ம்ம்... ம்ம்ம்!” என அவளைத் தட்டி எழுப்பி, அவன் நெஞ்சில் சாய்த்து அவனின் இதயத் துடிப்பை கேட்க வைத்தான் கண்ணில் நீருடன்.

ஷ்யாம் வெளியில் வந்தவன் இதனை கண்டு வேகமாக ஆம்புலன்சிற்கு போன் செய்ய, அடுத்த சில நிமிடத்தில் மருத்துவமனைக்குச் சென்றிருந்தான்.

அதற்குள், லேசாக தமிழரசியே விழித்து விட, எதிரில் பயத்துடன் நின்றிருந்த இன்பாவைக் கண்டு, "ஒன்னும் இல்ல இன்பா... கொஞ்சம் பயந்துட்டேன், அவ்ளோ தான்" என்று சோர்வாய் சொல்ல,

குழந்தையை பரிசோதித்த மருத்துவர் தான், சற்று பதட்டத்துடன் இருந்தார்.

"குழந்தைகிட்ட எந்த அசைவும் இல்ல. டீஹைட் ரேஷன் அண்ட் ஷாக்ல இந்த பேனிக் ஏற்பட்டு இருக் கலாம். இந்த மாதிரி அசைவு இல்லைன்னா, குழந்தை உயிரோட இருக்கான்னா தெரியல, ஸ்கேன் எடுத்து தான் பாக்கணும்..." என்றவர் ஏதேதோ செய்திட, அர சிக்குத் தான் உயிரே இல்லை.

"இன்பா... எனக்கு பயமா இருக்கு. நம்ம பேபிக்கு ஒன்னும் இல்லை தான..." என்று அவள் தேம்பிப் தேம்பி அழத் தொடங்க,

அவனோ நடுக்கத்தை மறைத்துக் கொண்டு, "இல்லடா... நீ டென்ஷன் ஆகாத. ரிலாக்ஸ், ஒன்னும் இல்ல, ம்ம்?" என அவளை ஆசுவாசப்படுத்தியவன், அவள் வயிற்றையே ஏக்கமாகப் பார்த்தான்.

வேகமாக, அவள் வயிற்றில் முத்தமிடத் தொடங் கியவன், அவனின் முகத்தை வைத்து உரசி, "ம்ம்ம்! ம்ம்ம்ம்!" என்று வேதனையுடன் முனக, அரசிக்கு அவ னைப் பார்க்கவே முடியவில்லை.

‘கடவுளே! என் இன்பாக்காகவாவது என் பேபியை எங்ககிட்ட குடுத்துடு’ என மானசீகமாய் வேண்டியவள், அவன் தலை முடியை, அழுகையை அடக்கிக் கொண்டு கோதி விட, சட்டென ஒரு அசைவை உணர்ந்தாள்.

“இன்பா! பேபி பேபி! மூவ் ஆச்சு தெரிஞ்சுதா?” என விழி விரித்துக் கேட்க,

அவனும் இந்த முறை தான் அதனை உணர்ந் தான். “ம்ம்...!” என்றவன் மீண்டும் மீண்டும் முத்தமிட, இப்போது நன்றாகவே அசைவை உணர்ந்தவன், அர சியைப் பார்க்க, இருவர் கண்களிலும் நீர் நிறைந்தே இருந்தது.

சில்லென குளிர்ந்த காற்று, சாளரத்தின் வழியே ஹாலில் இருந்த திரைச்சீலையை பறக்க விட, தமிழரசி ஜன்னலை அடைத்து விட்டு,

“இன்பா...! எங்க இருக்கீங்க ரூம்லயா?” என சத்தம் கொடுத்தாள். அடுக்களையில் நிற்கும் போதே அலுவ லகம் விட்டு வந்து, அவளுக்கு ஒரு முத்தத்தை கொடுத் தவன், அதன் பிறகு கண்ணிலேயே படவில்லை.

அவளுக்கு தெரியும் இந்நேரம், அவனின் மூன்று மாத மகனுடன் தான் கொஞ்சிக் கொண்டிருப்பான் என்று.

ஆனாலும், கொஞ்ச நேரம் எங்களை கொஞ்சுனா தான் என்னவாம் என சிலுப்பிக் கொண்டு, அறைக்குள் செல்ல, அங்கு அவள் நினைத்தது போன்றே தளிர் விரல்களை கொண்ட தன் பிஞ்சு ஆண் மகனை மடி யில் வைத்து, மௌனமாய் இன்பா கொஞ்சிக் கொண்டி ருக்க, அவனின் மகனான தமிழினியனுக்கு என்ன புரிந்

ததோ, அவனை பார்த்துப் பார்த்து சிரித்த படி இருந்தான்.

அவனே, தன் மகனுக்கு புட்டி பாலையும் கொடுத்து உறங்க வைத்திருக்க, இருவரையும் ரசனையாய் பார்த்திருந்த தமிழரசி இதழில் உறைந்த புன்னகையுடனே, மடிக்கணினியின் முன் சென்று அமர்ந்தாள்.

## பெயரிடப்படாத கதை:

## இறுதி அத்தியாயம்:

நம் பொறாமைகளும், 'தான்' என்ற தலைக்கணமுமே நம்மை அடியோடு அழித்து விடும் என்பது உண்மை போல. அன்று நடந்த விபத்தில் தமிழரசியை கொல்ல வந்த சுஹானா தான், தலையில் அடிபட்டு, தன் சுயத்தை இழந்து போனாள். இன்று அவள் இருப்பது ஒரு மனநல மருத்துவமனையில்.

தமிழின்பன் தான், அவள் மேல் பயங்கர கோபம் வந்தாலும், அவளின் இந்நிலையில் கோபத்தைக் காட்ட இயலாது, கடவுளே தண்டனை கொடுத்து விட்டார் என்றெண்ணி மனதை அமைதிப் படுத்தி கொண்டான். அதோடு, தன் குழந்தையின் அசைவை உணர்ந்த நிமிடம் அல்லவா அது...!

இன்னும், அவன் வீட்டினரிடம் மட்டும் அவன் காட்டும் ஒதுக்கம் சற்று வருத்தமளித்தாலும், அதுவும் என்றோ ஒரு நாள் மாறித் தான் ஆகும். சில மாற்றங்கள் தானே மனிதர்களே!

இப்போது, தமிழின்பன் மற்றும் தமிழரசியுடன் இன்னொரு தமிழும் இணைந்து, முத்தமிழுடன் இன்னும் இன்னும், பல தமிழ்களை பெற்று வாழ்வார்கள் என வாழ்த்தி விடை பெறுவோம்...

முற்றும்...

**என தமிழின்பனால் ஆரம்பிக்கப்பட்ட கதையை, அவளின் காதல்**"டன் அவள் முடித்து வைக்க, திடீரென அவள் முதுகில் இன்பாவின் மீசை உரச ஆரம்பித்தது. "ஐயோ இன்பா!" என நெளிந்தவளின் முன் நின்றவன்,

"என்ன மேடம் பண்றீங்க?" எனக் கேட்டான் விழியசைவில்.

"ம்ம்! ஒருவழியா கதையை முடிச்சுட்டேன் ரசிகரே! முதல்ல நீங்க தான் படிச்சு சொல்லணும். நாளைக்கு உங்க பர்த்டேக்கு இதான் என்னோட கிப்ட்" என்று கண்ணடிக்க,

அவனோ "ஐ ஆம் வெயிட்டிங்!" என்றான் குறும்பாக.

அவர்கள் வாழ்க்கையில் நடந்த அனைத்தையும் கதையாக எழுதி இருந்தவளை ரசித்துப் பார்த்தவன், இறுதியாக அவனின் வீட்டாரை பற்றி எழுதியதையும், சில நொடி நிறுத்தி படித்தான்.

அப்பொழுதே மணி 12 ஆகி இருக்க, லோகேஷி டம் இருந்து "ஹேப்பி பர்த்டே அண்ணா" என்ற வாழ்த்து வந்திருந்தது.

அவன் போனையும், அரசியையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, "தேங்க்ஸ் டா!" என திருப்பி அனுப்ப, அங்கு லோகேஷ் துள்ளிக் குதிக்காத குறை தான். இங்கு அரசியும் மென்மையாய், திருப்தியாய் ஒரு புன்ன கையை சிந்திக் கொண்டாள்.

பின், அவன் தான், "அதென்ன பெயரிடப்படாத கதை. இன்னுமா நீ பேர் வைக்கல?" என புருவத்தை சுருக்கிப் பார்க்க,

அவளோ, "பேர் தான் யோசிச்சுக்கிட்டே இருக் கேன்... என்ன வைக்கலாம்?" என்று சிந்தித்தவள்,

குறும்புடன், "என் ரசிகனின் ரசிகை நானே...! அப் படின்னு வைக்கலாமா?" எனக் கேட்டாள் தலையைச் சாய்த்து.

அவன் "ம்ம்ஹூம் நல்லா இல்ல!" என்று விட,

"ம்ம்ம் வேற என்ன வைக்கலாம்..." என்று மேலே பார்த்து யோசித்தவளை குறுகுறுவென பார்த்தவன்,

"நான் வைக்கவா?" எனக் கேட்டான்.

"வைங்க..." என்றதும்,

அந்த பெயரிடப்படாத கதை என்று தலைப்பை அழித்து விட்டு, "உன் ரசிகன் நானல்லவா" என தமி

ழரசியை பார்த்தபடியே டைப் செய்ய, அவளோ கீழ் வானமாய் சிவந்து நிற்க, அவனோ எப்போதும் போல் அவளை ரசித்திருந்தான்.

ரசிகன் முற்றும்...

மேகா